# FORCED MIGRATION review

விசேட வெளியீடு
ஆவணி 2005

# சுனாமி : மனித நேயப் பதிலிறுப்பிலிருந்து கற்றல்



Refugee Studies Centre

Forced Migration Review: அகதிகள் மற்றும் உள்ளக இடப்பெயர்வுப் பிரச்சனைகளை அறிய உலகில் மிகவும் பரந்தளவில் வாசிக்கப்படும் சஞ்சிகை.

# பதிப்பாசிரியர்களிடமிருந்து


Corinne Owen

மார்கழி 26, 2005 இல் இந்து சமுத்திரத்துக்கு குறுக்கே அடித்துச் சென்ற சுனாமி, இணையற்ற மனித நேய பதிலிறுப்புக்கு அடியெடுத்துக் கொடுத்துள்ளது. 300,000 க்கும் அதிகமென கணிக்கப்பட்ட மரணங்களின் இறுதி எண்ணிக்கை தடுமாறச் செய்யும் அளவிற்கிருந்த போதிலும் அது கொங்கோ ஜனனாயக குடியரசு, ருவாண்டா, அல்லது சூடானில் அண்மைக் காலங்களில் இறந்துள்ளவர்களின் எண்னிக்கையில் ஒரு தசம பின்னமேயாகும். சுனாமி உலக கவனத்தை ஈர்த்துள்ளதுடன் பிரமிக்கத்தக்க வகையில் உலக ஒருமைப்பாடு, இரக்கத்தை பொழிய வும் வைத்துள்ளது. அதே வேளை அதிகம் கண்ணுக்குப் புலப்படாத இடம் பெயர் மக்களின் தேவைகள் அதுவும் ஏராளமானோரின் பாரிய தேவைகள் பூர்த்தியாக்கப்படாமலே இருந்து வருகிறன.

யுத்தம் தூண்டிய இடப்பெயர்வை ஏற்கெனவே எதிர்வு கொண்ட நாடுகளை சுனாமி முதலில் அழித்தது என்ற உண்மையும் மனித நேயப் பணிச் சமூகம் எப்போதும் கடந்த காலங்களில் கற்ற படிப்பினைகளில் கவனம் செலுத்தாமல் நடவடிக்கைக்குள் இறங்கிவிடும் வேதனைமிகு யதார்த்தமும் நிவாரண நடவடிக்கையின் மிகச் சரியான அளவுகோலாகி எமது சஞ்சிகையின் இந்தப் பிரத்தியேக வெயியீட்டை பிரசுரிக்கும் எமது தீர்மானத்தை ஊக்குவித்தது.

சுனாமி தாக்கிய நாடுகளில் உள்ள அரச சார்பற்ற, உள்;ர் நிறுவனங்களின் பார்வைகளையும் சுனாமிக்கு பின்னான நிவாரண மீட்சி நடவடிக்கைகளுக்கு பிரதான தலைமையேற்போரின் பிரதிபலிப்புக்களையும் ஒன்றாகத்திரட்டி ஒரு அற்புதமான கட்டுரைகளின் தொகுப்பினை தேர்ந்தெடுத்ததில் நாம் மகிழ்வு கொள்கின்றோம்.

இவ்வெளியீட்டை சாத்தியப்பட வைத்த கீழ்காணும் நிதிவழங்குனர்களுக்கும் எமது சக பணியாளர்களான ஆசிரிய ஆலோசனை வழங்கிய ஈவா லொற்றா ஹெட்மன் மற்றும் கொழும்பில் வெளியீட்டை அச்சிட்டு வினியோகிப்பதை ஒருங்கிணைக்கும் சைமன் ஹாரிஸ் ஆகியோருக்கும் நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

பலவந்தப் புலம்பெயர்வு மீள்நோக்கு (எப்.எம்.ஆர்) இலங்கையிலிருந்தே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன் அது ஆங்கில, தமிழ், சிங்களத்திலும் இம்முறை இந்தோனேசிய பாகசி, மொழியிலும் அச்சிடப்பட்டுள்ளது.

முதல் தடைவையாக இச்சஞ்சிகையை வாசிப்போர் எமது வழமையான ஆங்கிலம், அரபிக், ஸ்பானிய, பிரன்சிய மொழிகளில் வெளிவரும் அதேவேளை இனி வரவுள்ள வெளியீடுகளை பெற சிலவேளை ஆர்வம் கொள்ளலாம். இவ் எப்.எம்.ஆர். சஞ்சிகை ஒக்போட் பல்கலைக்கழக அகதிகள் கற்கைகளுக்கான நிலையத்தால் பிரசுரிக்கப்பட்டு நாடுகளில் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் அகதிகள் மற்றும் உள்ளக இடம் பெயர்ந்தோரின் பிரச்சனைகளை தாங்கி வரும் உலகில் அதிகமானோர் வாசிக்கும் சஞ்சிகையாகவும் உள்ளது.

அடுத்துவரும் எப்.எம்.ஆர். வெளியீட்டின் கருப்பொருள் “சூடானில் சமாதானத்துக்கான எதிர்பார்ப்புக்கள்” என்பதாகும். உள்ளக இடம் பெயர்ந்தோரை பாதுகாக்க உதவும் சர்வதேச சமூகத்தின் கொள்தகுதிறனை கவனிக்கவுள்ள மனித நேய அலுவலகர்களுக்கான ஐ.நா. வின் அலுவலகத்தினது, நிறுவனங்களுக்கிடையிலான உள்ளக இடம்பெயர்வுக்கான பிரிவின் கூட்டிணைவினால் வெளியிடப்படும் இணைப்பிதழையும் தாங்கி, இப்புதிய எப்.எம்.ஆர். வெளியீடு ஐப்பசி மாதத்தில் விநியோகத்துக்கு வரவுள்ளது.

இவ்வெளியீடோ சுனாமியினால் சொல்லொணாத் துயரத்துக்குட்பட்டு எதிர்காலத்துக்காக எதிர்பார்த்து காத்திருப்போருக்கு சமர்ப்பணம். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் பணிக்கு பொருத்தமானதாக இருப்பதை நீங்கள் உணர்வீர்கள் என்பதுடன் பேரனர்த்தம் ஏற்படுத்திய இடம்பெயர்வுக்கு இன்னுமதிகமான வினைத்திறனுடன் மனிதநேய பணிச் சமூகம் பதிலிறுக்க இதிலுள்ள பரிந்துரைகள் உதவும் எனவும் நாம் எதிர்பார்க்கின்றோம். நான்கு மொழிகளிலும் உள்ள முழு கட்டுரைகளும் பின்வரும் இணையத்தளத்தில் கிடைக்கும். www.fmreview.org.tsunami.htm எமது அஞ்சல் பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெறச் செய்ய மேலதிக தகவல்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளலாம் (எதிர்பக்கத்தில் விபரம் காண்க).

நல்வாழ்த்துக்களுடன்
மேரியன் கௌல்ட்றீ - ரிம் மொறிஸ்


**பதிப்புரிமையும் மறுப்பும்**

எப். எம். ஆர். இன் கருத்துக்கள் பதிப்பாசிரியர் அல்லது அகதி கற்கைகள் நிலையத்தின் பார்வையை பிரிதிபலிக்கவில்லை. இவ்வெளியீட்டிலிருந்து எந்தவொரு பகுதியையும் மூலத்தைப்பற்றிய குறிப்புரையுடன் இலவசமாக மீள்பதிப்பு செய்ய முடியும். உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்பு பற்றிய கருத்துக் குறிப்புக்களையும் தகவல் கருவியாக எவ்வாறு இதனை அபிவிருத்தி செய்யலாம் என்ற ஆலோசனைகளையும் வரவேற்கிறோம்.


மட்டக்களப்பு மாவட்டத்தைச்சேர்ந்த இலங்கைக் குழந்தையால் தீட்டப்பட்டது (பின்பக்கத்தைப் பார்க்கவும்)


## Forced Migration Review

“பலவந்தப் புலம்பெயர்வு மீள்நோக்கு” சஞ்சிகையானது, ஆய்வாளர்கள், அகதிகள், உள்ளக இடம்பெயர்ந்தோர் மேலும் இவர்களுடன் பணிபுரிவோர் என பலதரப்பட்டோரின் வழமையான நடைமுறை அனுபவம், தகவல்கள் மற்றும் கருத்துக்கள், என்பனவற்றிற்கிடையிலான பரிமாற்றத்தின் பொது மன்றமொன்றை ஏற்படுத்தித் தருகிறது.
இச்சஞ்சிகையை ஆங்கிலம், ஸ்பானிஸ், அரபிக், பிரஞ்சு ஆகிய மொழிகளில், அகதிகள் கற்கை நிலையம்/ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம், நோர்வேஜியன் அகதிகள் பேரவையுடன் இணைந்து வெளியிடுகிறது. ஸ்பானிய பதிப்பான ரிவிஸ்ரா டி மைகிறசியன்ஸ் போர்ஸாடஸ், கௌத்தமாலாவில் ஐ.டி.ஈ.ஜ. இனால் வெளியிடப்படுகிறது.

### ஆசிரியர்கள்
Marion Couldrey & Dr Tim Morris

### சந்தாக்கள் உதவுனர்
Sharon Ellis

### Forced Migration Review
Refugee Studies Centre, Queen Elizabeth House,
21 St Giles, Oxford, OX1 3LA, UK
**Email: fmr@qeh.ox.ac.uk**
Tel: +44 (0)1865 280700 · Fax: +44 (0)1865 270721

### இணையதளம்
www.fmreview.org

### தமிழாக்கம்
Rajan Arulappu Iruthaynathan

### இவ்விடே வெளியீட்டிற்கான நிதி வழங்குனர்கள்

AUSTCARE

Concern

Brookings-Bern Project on Internal Displacement

Christian Aid

Consortium of Humanitarian Agencies, Sri Lanka

Department for International Development (UK)

UN Office for the Coordination of Humanitarian Affairs (OCHA)

World Vision Australia

World Vision Canada

World Vision USA

UNICEF

UNHCR Sri Lanka

Designed by Colophon Media.
Printed by Lazergraphic (pvt) Ltd
Sri Lanka

ISSN 1460-9819

Refugee Studies Centre

The Queen's Anniversary Prizes For Higher and Further Education 2002

# உள்ளடக்கம்




**சுனாமி பதிலிறுப்பு பணியின் அரசியல்**
ஈவா லொற்றா ஹெட்மன்........04

**சுனாமி பதிலிறுப்பை ஐநா கணிப்பிடுகிறது**
மரியன் கௌலட்ற்றி, ரிம் மொறிஸ்........06

**இயற்கை பேரழிவுகளும் உள்ளக இடம் பெயர்ந்தோர் உரிமைகளும்**
வோல்டர் கலின்........10

**சுனாமிக்கு பொது சுகாதார பதிலிறுப்பு. நாம் என்ன கற்றுள்ளோம்?**
மனுவல் கார்பல்லோ, பிறயன் ஹீல்........12

**மிகப் பெரிய நிலத்திருட்டு**
ஸ்கொட் லியுகி........15

**ஏனைய நெருக்கடிகளுக்கான நிதியளித்தலை சுனாமி பாதித்துள்ளதா?**
ரோபி லான்ஸர்........17

**ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் சுனாமி பதிலிறுப்பை மீளாய்வு செய்கிறது**
டேவிட் ஹொரோபின்........18

இந்தோனேசியா

**சுனாமிக்குப் பின்னான ஆச்சேயில் உள்ளக இடம் பெயர்ந்தோரினை கணிப்பிடல்**
குளெடியா ஹட்ஸ்பெத்........19

**ஆச்சேயில் உள்ளக இடம் பெயர்ந்தோர் முகாமுக்குள் முடக்கம்**
லூக்மன் ஏஜ்........22

**குறைந்தபட்ச நியமங்களை இனவிருத்தி ஆரோக்கியப் பராமரிப்பில் உறுதிப்படுத்தல்**
சான்றா கிறவ்சி........24

**இந்தோனேசியாவில் மனித நேய ஒருங்கிணைப்பு: ஒரு என் ஜீ ஓ பார்வை**
கார்ஸ்ரின் வூல்ஸ........26

**ஆச்சேயில் சுனாமிக்குப் பின்னான பாதுகாப்புசார் கவலைகள்**
FMR ஆசிரியர்கள்........28

**வலுவற்ற பாதிப்புற்றோர் அல்லது பலமுள்ள உயிர்பிழைத்தோர்**
இன்ங்வைல்ட் சொல்வாங்........29

இலங்கை

**இன முரண்பாடு, இலங்கை அரசு மற்றும் சுனாமி**
ஜயதேவ உயங்கொட........30

**சுனாமிக்குப் பின்னான உளச்சமூக வேலைத்திட்டத்தின் மீதான பிரதிபலிப்புக்கள்**
ஆனந்த கலபதி........32

**சுனாமிக்குப் பின்னான இலங்கையில் ஜீவனோபாயம்**
சைமன் ஹாரிஸ்........34

**ஆறு மாதங்கள் கடந்தும் பயத்துக்கு முகம் கொடுத்தல்**
லின்டன் ஜுபீல்ஸ்........36

**சேவைகள் - விநியோக ஒழுங்குபடுத்தலில் சவால்கள்**
ஸ்ரீவ் மத்தியூஸ்........38

**சுனாமிக்குப் பின்னான நெருக்குவாரத்தில் மிதியுண்ட சின்ன மீன்கள்**
ஜரின் பிறேஸர்........39

தாய்லாந்து

**பர்மிய புலம் பெயர் தொழிலாளர்கள் மட்டில் மனித நேயப் பதிலிறுப்பு**
பையா ஒபரோய........40

இந்தியா

**இந்திய கருத்தரங்கு சுனாமி பதிலிறுப்பை மீளாய்வு செய்கிறது**
போலா பனர்ஜு, சப்யாசாச்சி பாசு ராய் சவுத்ரி........42

**தமிழ்நாட்டில் பலவீனமான, குழுக்களுக்கான ஒரு குரல்**
மெக்ஸ் மார்ட்டின்........44

**பதிலிறுப்பின் வினைத்திறன்மிகு விளைவுத் தாக்கம் : பாதிப்புற்ற மக்களின் எண்ணங்கள்**
அனிஸ்யா தோமஸ், விமலா இராமலிங்கம் ........46

மாலைதீவு

**தொலைந்த அப்பாவித்தனம்: மாலைதீவில் சுனாமி**
ஹேய்டி பிறவுன........48

ஆபிரிக்கா

**சுனாமி பற்றிய ஓர் ஆபிரிக்க கருத்து நிலை**
பகாமி ரொம் நயன்டுகா........50

**சோமாலியாவின் தற்போதைய பிரச்சினைகளை சுனாமி மேலும் மோசமடையச் செய்கின்றது.**
மனித நேய அலுவல்களை ஒன்றிணைக்கும் ஐ. நா. அலுவலகம், சோமாலியா........51

# சுனாமி பதிலிறுப்புப் பணியின் அரசியல்

ஈவா - லொற்டா ஹெட்மன்

2004 மார்கழி 26 இல் அடித்த ஆசிய சுனாமி, ஒட்டுமொத்த இந்து சமுத்திர கரையோர சமூகங்களையும், அவற்றின் வாழ்க்கையையும் அழித்தது. இந்தோனேசியாவின் வட சுமாத்ரா கரையை ஒரு சில நிமிடத்திற்குள் தாக்கிய 9.0 ரிச்டர் அளவைக் கொண்ட பூமியதிர்ச்சி, முதலாவதாக பாரிய சுனாமியை உருவாக்கி, பண்டா ஆச்சேக்கும் மியூலபோ ஆச்சேக்கும் இடையில் உள்ள கரையை தாக்கி பாரிய பேரழிவுத் தாக்கத்தை உண்டு பண்ணியது. கடல் படுகையில் இடம்பெற்ற மேல் நோக்கிய பாரிய நகர்வானது மேலும் சுனாமிகளை உருவாக்கி, ஆபிரிக்க கரையை அடையும் முன்னர், மேற்கு தாய்லாந்து, பர்மா, மலேசியா, இலங்கை, கிழக்கு இந்தியா, மாலைதீவு போன்ற நாடுகளின் பகுதிகளில் வாழ்ந்த கரையோர சமூகங்களையும் தாக்கியது. உயிருக்கும் உடைமைக்கும் சேதத்தை உண்டுபண்ணியது. இந்த பாரிய இயற்கை பேரனர்த்தத்துக்குப் பின்னான காலத்தில் பாதிக்கப்பட்ட 12 நாடுகளிலும் கிட்டத்தட்ட 290,000க்குமதிகமானவர்கள் இறந்தனர் அல்லது காணாமற் போயினர். ஒரு மில்லியனுக்குமதிகமானவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இயற்கைப் பேரனர்த்தம் பற்றிய செய்தி பரவிய கையுடன், அது வழமைக்கு மாறாக, பாதிக்கப்பட்ட நாடுகளுக்குள்ளும் வெளியி லும், பொதுமக்களாலும் அமைப்புக்களாலும் நிறுவனங்களாலும் அரசுகளாலும் மனித நேய நிவாரண உதவிகளுக்கான வள அணிதிரட்டலுக்குரிய பொறியைப் பற்றவைத்தது. ஒரு சிக்கல்மிக்க மனிதநேய அவசகால நிலைமைகளின் நிமித்தம், நிவாரண மற்றும் உதவிகளின் ஒருங்கிணைப்பு வினியோகத்துக்கான, பரந்துபட்ட சர்வதேச நிபுணத்துவ இயந்திரம் பாதிப்புற்ற பிரதேசங்களில் உயிர்ப்பிக்கப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டது. பாதிப்புற்ற மக்களுக்கு அடிப்படை மனிதநேய நிவாரண வினியோகம் செய்வதற்கு, சேவைகள் வினியோகங்களை ஒழுங்கமைப்பதில் கடினமான பிரச்சனைகளை பரந்த அளவிலான பயங்கரப் பேரழிவு ஏற்படுத்தியது. பல சந்தர்ப்பங்களிலும், தேசிய வெளிநாட்டு இராணுவ படைகள் பாதிப்புற்ற மக்களை சென்றடைவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தத் தேவைப்பட்டன. பாதிப்புற்ற பிரதேசங்களைச் சேர்ந்த உயிர்பிழைத்தோர், மாறிமாறி பொது அல்லது சமூகப் பொதுமையங்கள், பொறுப்பேற்கும் குடும்பங்கள், கூடார முகாம்கள் ஏனைய தற்கலிக குடியிருப்புக்கள் என்பவற்றுக்கிடையில் நகர்ந்து கொண்டிருந்ததே ஆச்சேயின் விசேட சூழ்நிலையாக இருந்தது.

சூழ்நிலையை வரைபாக்கம் செய்வதும் உயிர்பிழைத்தோரை மீள்குடியமர்த்துவதும் அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை. தேசிய அரசுகள், சர்வதேச நிதி வழங்குனர்கள், மனித நேய நிறுவனங்கள் என்பன இணைந்து சுனாமியால் அழிந்த இல்லங்கள், ஜீவனோபாயம், ஜீவாதாரம், கால்நடை, சொத்து இழப்பு, நில உறுதி ஏனைய ஆவணங்கள், பொது உள்ளக கட்டுமானங்களின் பாதிப்பு என்பவற்றில் தமது சக்தியை இட்டு, மீளக்கட்டியெழுப்ப முயல்கின்றன. நிதி வழங்குனர்களினதும் தேசிய அரசுகளினதும் புனர்வாழ்வு மீள்கட்டுமானத் திட்டங்களை வடிவமைப்பதற்கென, வல்லுனர்களின் அறிவை பெற்றுச் செய்யப்பட்ட சேதக் கணிப்பீடுகள், விபரத்திரட்டல், வரைபுகள் என்பன நல்ல வழிகாட்டல்களை வழங்கின.

சிக்கல் வாய்ந்த அவசரகால நிலமைகளில், ஒருங்கிணைப்பு-நிபுணத்துவம் சார்ந்த பிரச்சனைகளுக்கப்பால், பாதிப்புற்ற இடங்களிலுள்ள தேசிய மற்றும் உள்ளூர் அரசியலால் வார்க்கப்பட்டுள்ள சிக்கல்மிகு அதிகாரத் தொடர்புகளுக்குள் பதிக்கப்பட்டிருக்கும் மீள்கட்டுமான முயற்சிகள், நிவாரணம், இயற்தன்மை, இயக்கம் போன்றவற்றின்மீது மீள் கவனக் குவிப்பை செய்வது அவசியமாகிறது. முற்றிலும் வேறான தமது சமூக அரசியல் பொருளாதார உள்விசைகளுடன் காணப்பட்ட 12 வித்தியாசமான நாடுகளிலும் இடம்பெற்ற இந்தப் பாரிய ஒற்றை பேரழிவின் நேரடி தாக்கத்துக்கு கொடுக்கப்பட்ட பரந்து விரிந்த பதிலிறுப்புக்கள், சாதாரணமானதோ அன்றி நன்கு தொழில்சார் தகைமை பொருந்தியதோ எத்தகையதென்றாலும், அன்றாட அரசியலின் மிகக் கடுமையான தாக்கங்கள் மனிதநேய செயல்பாட்டு முயற்சிகள் மீதிருப்பதை அடிக் கோடிட்டுக் காட்டுகின்றன. சுனாமியால் பாதிப்புற்ற பிரதேசங்கள் முழுவதும் இடம்பெறும் மனிதநேய நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானச் செயற்பாடுகளைப் பாதிக்கும், அரசியல் உள்விசைகளினதும் வழமையான கோலங்களினதும் அடையாளங்களையோ அல்லது பாத்திரத்தையோ ஆய்ந்தறிவதற்கு, இன்று வரையிலும் ஒழுங்குமுறையான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இயற்கைப் பேரழிவிற்கும் ஏற்கனவே உள்ள சிக்கல் வாய்ந்த மனிதநேய அவசரகால நிலைகளுக்கும் இடையில் அல்லது நடுவிலுள்ள, ஏராளமான சுனாமியில் உயிர் பிழைத்தவர்கள், தொடரான தடைகள் பற்றிய பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டி இருந்தது. இடம்பெற்ற போராட்டம், வன்முறை, பிரிவினைவாதிகளுக்கெதிரான பாரிய கலக எதிர்ப்பு நடவடிக்கைகள் என்பன ஆச்சேயைப் பொறுத்தமட்டில், 1999 இல் இருந்து, 300,000 பேரை இடம்பெயர வைத்துள்ளதுடன், சுனாமியில் தப்பிப் பிழைத்தோரின் ஐடிபி எனும் அடையாளம் அரசியல் ரீதியில் உணர்தகுதி நிலைக்கும் வாதப்பிரதிவாதத்துக்கும் உட்பட வைத்தும் உள்ளது.

ஐடிபி என்னும் சொற்பதம், வரைவிலக்கணத்தின்மட்டில், இயற்கை அனர்த்தங்களால் தமது வீடு வாசல்களை விட்டு வெளியேற கட்டாயப்படுத்தப்பட்டோரையும் உள்ளடக்குகிறது. இருந்தும், இந்தோனேசிய அரச அதிகாரிகள், சர்வதேச மனிதநேய நிறுவனங்கள் போன்றன சில வேளைகளில் இத்தகையோரை “வீடற்றவர்கள்” என்றே விழிக்கின்றனர். பாதிப்புற்றோரின் பாதுகாப்பு, உதவி போன்றவற்றுக்கான கடப்பாடுகளையும் பாத்திரத்தையும் இனம் காண்பதில், இத்தகைய சொற்பதங்களின் வித்தியாசங்கள் பல்வேறு சிக்கல் வாய்ந்த பின்விளைவுகளைக் கொண்டுள்ளன. அத்துடன், உள்ளக இடம்பெயர்வுமட்டில் ஐநாவின் வழிகாட்டல் கோட்பாடுகள் கூறும், உள்ளூர் தேசிய ஆட்சியாளர்களின் கடப்பாடுகள் பாத்திரம் என்பனவற்றில் கூட சிக்கல்களை கொண்டு வருகின்றன. அயல் நாடான பர்மாவைச் சேர்ந்த அகதிகள் புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான தண்டிக்கும் அணுகுமுறையைக் கொண்டுள்ள தாய்லாந்தில், சுனாமியால் பாதிப்புற்ற தென் மாகாணங்களில் வாழும் பர்மிய சுனாமி தாக்கத்திற்குள்ளானவர்கள் மீது, உள்ளூர் தாய் அரச அதிகாரிகளும் குடிமக்களும் இளைக்கும் ஒருதலைப்பட்சமான பாரபட்சங்கள் பற்றிய பல ஆதாரங்கள் உள்ளன. 2005 மாசி 6ம் திகதி தேர்தலுக்கான பிரச்சாரத்துக்கு ஒரு வாய்ப்பாக்க முயலும் பிரதமர் தகஸின் சினவற்றாவினதும் அவரது “தாய் நேசிக்கும் தாய்” கட்சியினதும் முயற்சியாக சுனாமிக்குப் பின்னான அவசரகால நிவாரண ஒருங்கிணைப்பு மற்றும் வழங்கலிலும் தன்னிலேயே தங்கியிருக்கும் நிலைப்பாட்டை தாய்லாந்து அரசு பிரகடணப்படுத்தியுள்ளதால், பர்மிய புலம்பெயர் தொழிலாளர்கள் உதவிக்கும் ஆதரவுக்குமான மாற்று வழிகளை காண்பதில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களது இராணுவ அரசுகூட அவர்களை ஒதுக்கி வைத்துள்ளது. தாய்லாந்து அரசின் உள்ளூர் அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் உதவி நிகழ்ச்சித் திட்ட அமுலாக்கங்களிலும் அவசரகால நிவாரண வினியோகத்திலும் பர்மிய புலம்பெயர் தொழிலாளிகள் விலக்கப்பட்டுள்ளனர். அத்துடன், சட்ட விரோத புலம்பெயர்ந்தோரை ஒடுக்கும் சுனாமிக்குப் பின்னான உள்ளூர் பொலிசாரின் நடவடிக்கை, அவர்களை கைது செய்ய இலக்கு வைத்துள்ளதுடன், ஈற்றில் பர்மாவுக்கு மீண்டும் நாடு கடத்துவதற்கும் இட்டுச் சென்றுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச மனிதநேய அவசரகாலப் பதிலிறுப்புக்கான உதவி வழங்கலை அரசு சரிவு காணச் செய்த இந்தியாவின் விடையத்திலும், சுனாமி பாதித்த பிரதேசங்களில் தீண்டத்தகாதோர் அல்லது தலித்துகளுக்கெதிராக உள்ளூர் அதிகாரிகளால் பாரபட்ச நடைமுறைகள் கைக்கொள்ளப்படுவதற்கான ஆதாரங்கள் உள்ளன. சாதி மைய மேலாண்மைத் தலைமைத்துவம் சார்ந்த சமூகக் கட்டமைப்புக்குள் அகப்பட்டுள்ள, கரையோர மீன்பிடி சமூகங்களைச் சேர்ந்த ஐடிபிக்கள், அவர்கள் தங்கியுள்ள முகாம்களிலும் தற்காலிக நலன்புரி நிலையங்களிலும் தற்காலிக தங்குமிடங்களிலும் மிகவும் தயக்கத்துடன் விருப்பமற்ற நிலையில் இடம் கொடுக்கப்பட்டும் பின் துரத்தி அடிக்கப்பட்டும் உள்ளனர். தலித் மக்களுக்கு அவசரகால நிவாரணங்களை அரச அதிகாரிகளும் நிறுவனப் பணியாளர்களும் சிவில் சமூகக் குழுக்களும் வினியோகிப்பதை ஏனைய ஐ.டி.பிக்கள் தடுத்து வருவதாகவும் ஆதாரங்கள் உள்ளன.

சுனாமி அவசரகாலப் பதிலிறுப்பின் சிக்கலான இன்னுமொரு பரிமாணம், ஆச்சேயிலும், இலங்கையின் வடகிழக்கு மானிலங்களிலும், இந்தியாவின் நிக்கோபார் தீவுகளிலும் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அனேகமானவற்றில், இராணுவ தந்திரோபாய தேவைப்பாடுகளின் முதன்மை மீது காலூன்றி இருப்பதேயாகும். 2003 மே

மாதத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர கால நிலைமையில் பின்னிருந்து, 40,000 படையினரின் பிரசன்னத்தால் ஆச்சே மிகக் கடுமையாக இராணுவமயப்பட்டுள்ளது. அண்மைக் கால கலக எதிர்ப்பு நடவடிக்கையின் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு அங்கமாக இடம்பெறும் முகாம்களுக்குள் கட்டாயமாக மீள்குடியமர்த்துதலுடன், இந்தோனேசிய இராணுவத்தின் பாத்திரமானது சுனாமிக்குப் பின்னான அவசரகால நிவாரண வினியோகத்திலும் படைவீடுகள் போன்ற கொட்டகைக்குள் உள்ளக இடம் பெயர்ந்தோரை மீள்குடியமர்த்தும் ஒருங்கிணைப்பிலும், பல சந்தர்ப்பங்களிலும் மனிதநேய உதவிகளுக்கான கோட்பாடுகளுடன் மிக மோசமான சமாளிப்பாகவே மாறியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில், புலிக-ளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட அதாவது இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்கள் என அழைக்கப்படும் கரையோரத்துடன் எதேற்சையாக ஒத்திசைந்துபோகும் தன்மைபொருந்திய சுனாமியின் அழிவுப் பாதையானது மந்தமான நிவாரண பணி முன்னெடுப்புக்கு இட்டுச் சென்றுள்ளது. அதேவேளை தனது மத்திய அரசின் அதிகாரத்தைக் கடப்பதற்கான எந்த ஒரு கட்டமைப்பையும் கொழும்பில் உள்ள அரசு மிக உறுதியாக எதிர்த்தது. மத்திய அரசின் பதிலிறுப்பின்மையின் தன்மை சோமாலிய சம்பவத்திலும் வெளிக்காட்டப்பட்டு வருகின்றது. இறுதியாக, இந்திய தந்திரோபாய கடற்படைத் தளமாகக் குருதப்படும் நிக்கோபார் தீவுகளில், சுனாமி நிவாரண மற்றும் புனர்வாழ்வு முயற்சிகள் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டனவென்றும் அவர்கள் பாதிப்புற்ற ஆதிவாசிச் சமூகங்களையும் உள்ளூர் சிவிலிய நிர்வாகத்தையும் ஓரம்கட்டினர் என்று கூறும் ஆதாரங்களும் உள்ளன.

சுனாமி நிவாரண மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல மனித நேயச் செயல்பாட்டாளர்கள், தமது பதிலிறுப்புக்களை மீளாய்வு செய்யத் தொடங்கியுள்ளதால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் செயற்பட்டும் அதனூடாக வெவ்வேறான அரசியல் சவால்களுக்கு முகம் கொடுத்தும் வரும் நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் வேறுபட்ட பதிலிறுப்புக்களின் மட்டில் தமது கணிப்பீட்டினூடான பகுத்தறி ஒப்பீட்டு பார்வைக் கோணங்களை வழங்க முடியும் என நம்புகின்றனர். சுனாமிக்கு முன்னர் இலங்கையில் ஐநாவின் அமைப்புக்களினதும் யூ.என்.எச்.சீ.ஆரினதும் நீண்டகால பிரசன்னம் ஆச்சேயுடனான எதிரிடை வித்தியாசத்தை, வெளிச்சம் போட்டுக் கூறுகின்றன.

பேரனர்த்தம் தள்ளிவிட்ட உள்ளக இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்புக்கான உரிமைகளைப் பெறுவதிலுள்ள குறை பாடுகள் சார்பாக எழுந்துள்ள கவலை கள், உள்ளக இடம்பெயர்ந்தோரிடையே உட்பதிக்கப்பட்டுள்ள அதிகாரம் அரசிய லுடனான தொடர்புகளிலும் கவனத்தை ஈர்த்துள்ளன. எப்எம்ஆர் விசேட வெளியீட்டின் ஆசிரியர்கள், உதவி-களை அடைதல், கட்டாயப்படுத்தப்பட்ட மீள்குடியமர்த்தல், பால் நிலை, பாலி யல் சார்ந்த வன்முறை, பாதுகாப்பான தன்னார்வ மீள்வருகை, ஆவணங்களின் இழப்பு, சொத்துக்களுக்கான நட்டஈடு போன்றவற்றை உள்ளடக்கிய, சுனாமிக்குப் பின்னானகால பாதுகாப்புப்பற்றி கவலை களின் ஒரு நீண்ட தொடரையே மேற்கோடிட்டுக் காட்டி உள்ளனர். சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளின் பாதுகாப்பு, காலம் செல்லச்செல்ல அருகி வருவதனால், இத்தகைய அம்சங்கள் ஆரம்ப நிலையிலேயே கையாளப்படல் வேண்டும். தொடர்பூடகங்கள் வேறு செய்திகளால் தமது கவனத்தை ஒன்று குவிப்பதனால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களில் பெரும் பகுதியினர் இன்னும் யுத்தச் சூழ்நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றனர். கருத்தாடல்களும், நாட்டின் பாதுகாப்பு உள்விசைகளும், அன்றாட அரசியலும் இத்தகைய சிக்கல் வாய்ந்த மனிதநேய அவசரகால நிலை-லயையும், ஐடிபி பாதுகாப்பு மற்றும் உதவிகள் மட்டிலான சிக்கல்களையும் எவ்வாறு ஆளுகைக்குட்படுத்தி உள்ளன என்பதைப்பற்றி அறிய, அவற்றின்மீது ஒரு ஒழுங்கு முறையான ஒப்பீட்டு ஆய்வொன்றில் கவனம் செலுத்துவதற்கு இதுதான் உரிய, சரியான நேரம் ஆகும்.

***ஈவா-லொற்டா ஹெட்மன், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் அகதிகள் கற்கை நிலையத்தின் சிரேஸ்ட ஆய்வாளரும், தென்கிழக்கு ஆசியாவின் முரண்பாடு, வன்முறை, உள்ளக இடம்பெயர்வு போன்ற அம்சங்களின் மட்டில் விசேடத்துவம் கொண்டுவரும் ஆவார். மின்னஞ்சல் - eva-lotta.hedman@qeh.ox.ac.uk.***



*இந்தோனேசியா, பண்டா ஆச்சேயில் கடற்கரைக்கு முன்னான வீட்டின் சிதைவெச்சம்*

Mike Dubose/UMNS/ACT International

# சுனாமி பதிலிறுப்பை ஐ நா கணிப்பிடுகிறது

மரியன் கோல்ட்றி, ரிம் மொறிஸ்

*ஐ.நா.வின் பொருளாதார சமூக கவுன்சிலுக்கான (ஈகோஸொக்) அறிக்கையானது மனிதநேய பதிலிறுப்புக்களிலிருந்து கற்ற பாடங்களை இனம்காண்கிறது. பேரழிவு பதிலிறுப்பு, மீட்சி, முன்னேற்றமான ஒருங்கிணைப்பு, ஒழிவுமறைவற்ற வளப்பயன்பாடு, சிவில் சமூகத்தின் பங்குபற்றல், அபாயத்தை குறைத்தலில் அழுத்தம் என்பனவற்றில் தேசிய மட்ட உரிமை கொள்ளும் நிலைக்கும் தலைமைத்துவத்துக்குமான தேவையை இப்பரிந்தரைகள் வலியுறுத்துகின்றன.*

சுனாமி தாக்கிய 12 நாடுகளில், அண்ணளவாக 240,000 மக்கள் கொல்லப்பட்டனர். 50,000 பேர் காணமற்போயுள்ளதுடன் இறந்து போயிருக்கலாம் எனவும் அஞ்சப்பட்டது. ஒரு மில்லியனுக்குமதிகமானோர் இடம்பெயர்ந்தனர். கரையோரம் வாழ் அப்பாவிச் சமூகங்கள் பாரதூரமாகத் தாக்கப்பட்டன. ஏராளமான பாதிக்கப்பட்ட பிரேதங்களில், ஆண்களைவிட மூன்று மடங்குக்கும் அதிகமான பெண்கள் இறந்தனர். மூன்றிலொரு பகுதி பாதிப்புற்றோரை சிறுவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தினர். இலங்கை, இந்தோனேசியா, சோமாலியாவில், மனிதநேய உதவிகளின் வினியோகம் ஒழுங்கமைப்பில் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தியிருந்த, சிக்கல்வாய்ந்ததும் நீடித்துச் செல்வதுமான ஆயுத முரண்பாடுகளின் பின்னணியிலேயே இப்பேரழிவு இடம்பெற்றது.

பாதிப்புற்ற நாடுகளின் உதவிக்கான விண்ணப்பத்துக்கு பதிலிறுப்பதில், ஐநாவின் பேரழிவு கணிப்பீடு மற்றும் ஒருங்கிணைப்புக்கான 18 நாடுகளைச் சேர்ந்த ஆளணியைக் கொண்ட குழுக்கள் சுனாமி பாதித்த 5 நாடுகளில் மிக விரைவாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். உதவிதேவைப்பட்டதாக கணிக்கப்பட்ட 5 மில்லியன் மக்களுக்கு, 16 ஐநா அமைப்புக்கள் 18 சர்வதேச செஞ்சிலுவை/ செம்பிறை சங்கங்களின் பதிலிறுப்பு அணிகள், 16 க்குமதிகமான சர்வதேச நிறுவனங்கள், எண்ணிக்கையற்ற தனி யார் கம்பனிகள், உள்ளூர் சிவில் சமூகக் குழுக்கள், அமைப்புக்கள் என்பன அவசரகால உணவு, நீர் மருத்துவ சேவைகளை வழங்கின. 35 நாடுகளைச் சார்ந்த இராணுவ படைகள், நிவாரண பணிகளுக்கு உதவின. ஐநாவின் சேவைகள் வழங்கல்களுக்கான ஒழுங்கமைப்பு இணை மையத்தால், இலங்கை இந்தோனேசியாவின் சேவைகள் வழங்கல்களுக்கான ஒழுங்கமைப்புசார் உதவியை வழங்கவும் ஒருங்கிணைப்புக்கு உதவவும், இராணுவத்தினரின் உபகரணங்களை பயன்படுத்தவும் ஒருங்கிணைப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

நேரத்துக்கமைவான பதிலிறுப்பின் பேறு பேறாக எவ்வித நோய்களோ, தொற் றுக்களோ பரவவில்லை. கிட்டத்தட்ட 2 மில்லியன் மக்கள் அவசரகால மருத்துவ, உணவு உதவிகளையும்பெற்றனர். பேரழிவுக்கு பின்னான 6 மாத காலத்தில், உடனடி தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. சர்வதேச மட்டத்தில் கணிக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களுக்கு கீழே முகாம்களில் மலசலகூட வசதிகள் காணப்பட்ட போதிலும் அனேகமாக பாதிக்கப்பட்ட அனைவரும், போதுமான அளவு நீர் வினியோகத்தை பெறக்கூடியவர்களாக உள்ளனர். இலங்கையில் 30,000 அள வில் இடைத்தங்கல் உறைவிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இந்தோனேசியாவில் புவியதிர்ச்சிக்குத் தாக்குப்பிடிக்கும் 11,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும். மீட்சிக்கால முன்னேற்றம் ஏற்படுகின்ற அதேவேளை பெண்கள், சிறுவர், சிறுபான்மையினர், புலம்பெயர் தொழிலாளர்கள், உள்ளக இடம்பெயர்ந்தோர் ஆகியோரிடையே குறிப்பாக காணப்படும் மனிதநேய தேவைகள் இன்னும் பல மாதங்களுக்கு இருக்கவே செய்யும். உதாரணமாக கிட்டத்தட்ட 9,000 மதிகமான இலங்கை குடும்பங்கள் இன்னும் கூடாரங்களில் வாழ்வதைக் கூறலாம்.

சோமாலியா தவிர்ந்த சுனாமியால் பாதிப்புற்ற ஏனைய நாடுகள், தமது பலமான தேசிய அரசுகளினூடாகவும் நன்கு அபிவிருத்தி கண்ட தேசிய நிறுவனங்களுக்கூடாகவும் சட்டபூர்வமான வேலைத்திட்டத்திற்கூடாகவும் இயங்கிவருகின்றன. இது நிவாரண முயற்சிகளின் வெற்றிக்கு பெருமளவில் பங்களித்துள்ளது. அனேக பிரதேசங்களில் மனிதநேய நடவடிக்கைகள், அர்ப்பணிப்பு மிக்க மத்திய அரசின் அமைச்சுக்கள், ஆயுதப்படைகள், உள்ளூர் அரச கட்டமைப்புக்கள் உள்ள இடங்களில் அவற்றின் பங்களிப்பு என்பனவற்றுக்கூடாக பலன் பெற்றுள்ளன. சர்வதேச மற்றும் உள்ளூர் அரச அரச சார்பற்ற நிவா ரண செயற்பாட்டாளர்கள், நிவாரண வழங்கலை செய்தும் மனிதநேய மற்றும், முன்கூட்டிய மீட்சிச் செயற்பாடுகளை அரச திணைக்களங்களுக்கு கையளிப்பதை இலகுபடுத்தியும் உள்ளனர்.

## ஒருங்கிணைப்பு

எக்காலத்திலும் முகம் கொடுத்திராத பாரிய சவால்களில் ஒன்றை ஐநா சுனாமியினூடாக முகம் கொடுத்தது. சம்பவத்தின் காலப்பகுதியும் அளவும், உயர்மட்ட நிவாரண பணிகளினதும் செயல்பாட்டாளர்களினதும், பொது, தனியார் மற்றும் அரச உதவிகளினதும் எண்ணிக்கையை பலமடங்காக பெருக்கி உள்ளன. உதவிகளை தங்குதடையின்றி அளிப்பது சர்வதேச சமூகத்தின் தாராளமனதுக்கு ஒரு சோதனை. அதே வேளை, எவ்வளவு தூரம் அவற்றை சிறப்பாக கொண்டு நடத்துவார்கள் மற்றும் எவ்வாறு தாம் செலவு செய்யும் நிதிகளுக்கு கணக்கு வைப்பார்கள் என்பது சார்ந்த கனி சமான எதிர்பார்ப்புக்களை பல மட்டங்களில் கிளப்பி உள்ளதனால் மனிதநேய செயற்பாட்டாளர்களை ஒரு கவனத்தின் கீழ் கொண்டுவருதல் அவசியமாகிறது.

பொதுவில், ஒன்றிணைப்பு நன்றாக அமைந்தது. அலுவலகர்கள், உபகரணங்கள் போக்குவரத்து மற்றும் ஏனைய உதவி-களை வழங்குவதற்கென நிதிவழங்குனர்கள் தனியார்துறையினர்களுடன் முன்னமே செய்திருந்த சுனாமிக்கு முன்னான முன்னேற்பாட்டு ஆயத்தங்கள் கனிச மான அளவு காலத்தின் தேவையறிந்த பதிலிறுப்புக்கு உதவியது. இருந்தபோதிலும். ஒருங்கிணைப்பு சில சிக்கல்களை கொண்டிருந்தது. சில சமூகங்கள், நிவா ரண பொருட்களாலும், அவர்களுக்கு உதவக்கூடிய அவசியமான இயலுமையை கொண்டிராத செயற்பாட்டாளர்களாலும் நிரம்பிவழிந்தன. உதவிகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தேவைகளுடன் பொருந்தவில்லை. பலதடவை, ‘மனித நேய போக்குவரத்து நெருக்கடி’யானது தொடர்பாடலின்மை, இங்குமங்குமான திட்டமிடல், தாமதமான உதவி, செய்ததை மீண்டும் திரும்பசெய்தல் போன்ற அம்சங்களுக்கும் இட்டுச்சென்றது.

ஆரம்ப மனிதநேய பணியாளர்கள் மற்றும் நிவாரணப் பொருள் மிக விரைவாக வந்து சேர, சட்டபூர்வ நடைமுறைகளுக்கான தேவைப்பாடுகளை தளர்த்துவதற்கு அரசுகளின் மன விருப்பம் அனுமதித்தது. இருந்தபோதிலும், அனேக சந்தர்ப்பங்களில் உட்பிரவேச நடைமுறை கள் ஈற்றில் சிக்கல் வாய்ந்ததாக மாறி யது. கணணிகள், தொலைத்தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், போன்ற நடவடிக்கைகளுக்கு உதவும் அவசிய மான பொருட்களின் பயன்பாட்டை இது தாமதிக்கச் செய்ததது. சில அரசுகள் சற்றலைட் ஒழுங்கமைப்பு பயன்பாட்டின் மட்டில் கட்டுப்பாடுகளை கொண்டுவந்தன. இத்தகைய நிர்வாக நெருக்குவாரங்கள் நிவாரண நடவடிக்கைகளையும் அவ சிய மாகத் தேவைப்பட்ட உதவிகளை வினியோகிப்பதையும் தாமதிக்கச் செய்தன.

பிரச்சினையின் ஆள அகலம் பாரியதென்பதால் தங்குமிடம், நீர் மலசலகூடம் போன்றவற்றில் பாரிய குறைபாடுகள் இருந்ததுடன் பதிலிறுப்புப் பணியும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி இருந்தது. இவை மாத்திரமல்ல, போதுமானஅளவு திறன்மிக்க அனுபவமுள்ள பணியாளர்களை விரைவாக களத்துக்கனுப்பி பராமரிப்பதில் மனித நேயப் பணி சமூகத்தின் இயலாமையும் இதற்கு காரணமாயிருந்தன. தகவல் முகாமைத்துவம், தொடர்பாடல், இராணுவ சிவில் இணைப்பாக்கம் போன்ற துறை களில் விசேடத்துவம் மிக்க ஐநாவின் மனித நேய அலுவல்களை ஒருங்கிணைக்கும் அலுவலகத்திலிருந்தும், மனிதநேய தகவல் மையங்களிலிருந்தும், சிவில், இராணுவ ஒருங்கிணைப்பு அலுவலகர்கள் முறை சார் ஒழுங்கமைப்புக்களுக்கூடாக தாமத மாக களத்துக்கு அனுப்பப்ட்டனர். இதனால் தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்புக்களின் பயன்பாடு சிக்கலாக இருந்தது. தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு, தகவல் பரப்புரை போன்ற அம்சங்கள், உடன்பாடு கண்ட பிரமாணங்களின் போதாமை காரணமாக பின்னடைவை சந்தித்தன. எதிர்காலத்தில் எழக்கூடிய நெருக்கடிகளுக்கான தயார்படுத்தலில், தொழில்சார் பணியாளர்களை - நிர்வாகத்தை அதிகரித்து பலப்படுத்துவதன் மூலமும், நிறுவன இயலுமை - உள்ூரில் கிடைக்கக்கூடிய நிபுணத்துவம் என்பவற்றை பெறக்கூடிய தந்திரோபாய பங்குதாரர் தன்மைக்கு உதவுவதன் மூலமும், ‘தயார் நிலை மனிதநேய பதிலிறுப்பு இயலுமை’இல் முதலீடு செய்வதற்கு அதிகம் செய்ய வேண்டும் என்பது இப்போது தெளிவு. ஆரம்ப பதிலிறுப்புப் பணியை ஆரம்பிக்கவும் கிடைக்கக்கூடிய உள்ளூர், பிராந்திய கொள்தகுதிறன்களை கட்டியெழுப்பவும் கூடிய நேரடி அதி காரத்துடன், ஐநா.வின் அனுசரணையின் கீழ் நிவாரண பொருள்களினதும் அணி களினதும் அனுப்புதலுக்கு ஒரு தயார் நிலை பூகோள பதிலிறுப்பு கட்டமைப்பு


IRIN/Edward Parsons

*இலங்கை, அம்பாந் தோட்டையில், சுனாமியால் வீட்டின் கூரை மீது தூக்கி எறியப்பட்ட மீன் பிடிப் படகும், அழிந்த வீடும், வழங்கப்பட்ட நிவாரண பொருட்களை சுமந்துகொண்டு அதனைக் கடக்கும் ஒருவரும்.*

இட்டுச்செல்லக்கூடும். கிடைக்கக்கூடிய விமான ஊர்திகள், கடற் கலங்கள், வாகனங்கள். ஆளணி, ஏனைய இராணுவ பொருட்கள் என்பனவற்றின் பயன்பாட்டுக்கும் அதற்கான தேவைகளுக்கும் இடையில் ஒரு சிறந்த பொருத்தப்பாட்டினை உறுதி செய்ய, முன்னேற்றகரமான சிவில் - இராணுவ இணைப்பு அவசியமாகியது. விரைவானதும் தாராளமனம் கொண்டதுமான இராணுவ பதிலிறுப்புக்கள், இலகுவாக சென்றடையமுடியாத மக்களுக்கு சென்றடையம் வசதி வாய்ப்புக்களை வழங்கின. ஆனால் சில சந்தர்ப்பங்களில். சிவிலிய மற்றும் இராணுவ செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகள் ஒன்றையொன்று பாதித்தன. நிவாரணப்பொருட்கள் அவசியமாக தேவைப்பட்ட இடங்களிலும் சமாந்தர நிவாரண வழங்கல் பாதை ஏற்படுத்தப்பட்ட இடங்களிலும் நிவாரணப் பொருட்கள் உரிய வடிவத்தில், அளவில் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இந்தப் பிரச்சனைகள், இராணுவ தலைமைக் கட்டமைப்பின் போதாத புரிந்துணர்வினாலும் மனிதநேய அமைப்புக்களுக்கும் இராணுவத்துக்குமிடையிலான மிக குறைவான தகவல் பகிர்வினாலும் பெருப்பிக்கப்பட்டன. சுனாமியோ முன்னுதாரணமொன்றை தந்துள்ளது. அத்துடன் எதிர்கால மனிதநேய நடவடிக்கைகளில் இராணுவ படைகள் பரந்த அளவில் தொடர்புபடும் என்பது இப்போது மிகத்தெளிவாகவும் உள்ளது. எனவே சிறந்த தொடர்பாடல் முறைகளையும், ஒருங்கிணைப்பு நடைமுறைகளையும் இராணுவத்துக்கும் மனிதநேய பங்காளிகளுக்குமிடையில் உருவாக்கும் முக்கியத்துவம் இப்போது காணப்படுகிறது.

அனேக சம்பவங்களில். ஐநாவின் வதிவிடப்பிரதிநிதியோ அல்லது மனிதநேய ஒருங்கிணைப்பாளரோ, தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதற்குரிய ஆளணி வளங்களை குறைவாகவே கொண்டிருந்தார். ஐநா பிரதிநிதிக்கோ மனிதநேய ஒருங்கிணைப்பாளருக்கோ சிக்கல்களில்லாத ஒருங்கிணைப்பு தொழிற்பாடுகளையும் ஆரம்பத்தில் இருந்தே மீட்சி செயற்பாடுகளை தொடங்குவதற்கான கொள்தகுதிறனையும் தரவல்ல அலுவலகர்களையும் இயலுமையையும் கொடுத்து உடனடியாக உதவுவதென்பது சிக்கலானது.

பேரனர்த்த மீட்சிச் செயற்பாடுகளை யார் ஒருங்கிணைப்பதென்பதை சர்வதேச சமுகமே தெளிவாக்கவேண்டி உள்ளது. பேரனர்த்த பதிலிறுப்பு இப்போது தெளிவான, சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு பிரமாணங்களாலும் நுட்பமுறைகளாலும் வடிவமைததலுக்குட்பட்டுள்ளது. அதே வேளை பரந்த செயற்பாட்டாளர்களுடன் தொடர்புபட்ட பேரனர்த்த மீட்சி, எவ்வித முறைசார் ஒருங்கிணைப்பு கட்டுமானங்களையும் கொண்டிருப்பதில்லை. ஒரு நாடு என்ற மட்டில் குறிப்பாக சர்வதேச ஒருங்கிணைப்பின் மட்டில் இது உண்மையே. அத்துடன் வதிவிட ஒருங்கிணைப்பாளர்கள் மேலதிகமான உதவிகளை கொண்டிருப்பதில்லை என்பது இந்நிலையை மிகவும் மோசமாக்குகிறது.

## இடப்பெயர்வும் பாதுகாத்தல் சவால்களும்

சுனாமி இடம்பெற்ற கையோடு செய்யப்பட்ட கணக்கெடுப்பில் ஒரு மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்தனர் என கணிப்பிடப்பட்டது. இருந்தபோதிலும் முதல் ஒருசில வாரங்களில் தற்காலிகமாகப் பெரும் எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்திருந்தோரின் எண்ணிக்கையானது, தமது குடியிருப்புப் பிரதேசங்களுக்கு மக்கள் திரும்பத் தொடங்கியதனாலும் சூழ்நிலை ஸ்திரமடைந்ததாலும் குறையத்தொடங்கியது. இடம்பெயர்ந்த மக்கள் நகர்ந்த நகர்வுவேகம், (குறிப்பாக ஆச்சேயில்) பொறுப்பேற்றவர்களின் மீதான அதிகரித்துவரும் அழுத்தம் மற்றும் ஜீவாதாரங்களின் அழிவு என்பன, சுனாமியால் பாதிப்புற்ற பல்வகைப்பட்ட மக்களின் வித்தியாசமான தேவைகளுக்கு பதிலிறுப்புக்களைச் செய்வதில் தேசிய மட்ட அதிகாரத் தரப்பாருக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இருந்த திறமை மீது சவால் விடுத்தன. பாதிக்கப்பட்டோரை தற்காலிகமாக குடியமர்த்தும் முன்னெடுப்புக்கள், இலங்கை இந்தோனேசிய அரசியல் சூழ்நிலைகளாலும் மாலைதீவின் முன்னைய மீள் குடியமர்த்தல் முன்னெடுப்புக்களாலும் இன்னுமதிகமாகச் சிக்கலுக்குள்ளாக்கப்பட்டன.

இடம்பெயர்ந்தோரின் குறித்த சில தேவைகள் விரைவாக தீர்க்கப்பட வேண்டுமென்பது முக்கியம். இயன்றளவு அதிகமான மக்களின் உயிர்காப்புத் தேவைகளைப் பூர்த்தியாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்கப்படுத்தும் மனிதநேயக் கோட்பாடுகள், இடம்பெயர்ந்தோரின் விசேட பாதுகாப்பு மற்றும் உதவி சார்ந்த தேவைகளிலும் கவனம் செலுத்தப்படவேண்டுமென்பதை வலியுறுத்துகிறது. உதவி நியாயமாக பகிர்ந்தளிக்கப்படுவதையும் ஏலவே உள்ள அசமத்துவத்தை மீளவும் கொண்டு வராமலிருப்பதையும் உறுதி செய்ய உதவும் முகமாக இத்தகைய கோட்பாடுகள் ஆரம்பம் முதல் நிவாரண திட்டமிடலுடன் தொடர்புபட்டதாக இருக்கவேண்டும். இடம்பெயர்ந்தோர், மற்றும் அவர்களைப் பொறுப்பேற்கும் குடும்பங்களின் பாதுகாப்பு உதவி என்பனவற்றிற்கான விசேட நடவடிக்கைகளையும் முன்னுரிமைப்படுத்த வேண்டும்.[1] உள்ளக இடம்பெயர்வு சார்ந்த ஐநாவின் வழிகாட்டல் கோட்பாடுகள் இயற்கைப் பேரனர்த்தங்களுக்கும் பரவலாக்கப்படல் வேண்டும்.

## நிதி வழங்குனர்களின் தாராளமனப்போக்கு நிதியளித்தல் சவால்களை ஈன்றுள்ளது

பொது மற்றும் தனியாரின் தயை இரக்கம் மற்றும் வளங்கள் போன்றவற்றின்

அபூர்வமான பொழிவினை பேரனர்த்தம் பிறப்பித்துள்ளது. சுனாமிக்கு 6.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வாக்களிக்கப்பட்டுள்ளதாக ஐ நா கணிப்பிடுகிறது. இவற்றில் 5.8 பில்லியன் அரச மூலங்களில் இருந்தும் ஒரு பில்லியன் கூட்டுறவு மற்றும் தனியார் வாக்குறுதிகளிலிருந்தும் வருகின்றன. பேரனர்த்தம் இடம்பெற்ற 15 நாட்களுக்குள், ஐநாவின் அவசர விண்ணப்பத்தில் கோரப்பட்ட மனிதநேய மற்றும் மீட்சி உதவியான 977 மில்லியன் டாலர்களில் 60% மானது உறுதியளிக்கப்பட்டன அல்லது கிடைக்கக்கூடியனவாக்கப்பட்டன. ஓ.சீ.எம்.ஏ இன் நிதி வழிப்படுத்தல் சேவை (எப்.ரி.எஸ்) யானது 880 அமெரிக்க டாலர் உதவி ஆனிமாதத்தில் வழங்கப்பட்டதென்றும் மேலதிகமான 162 மில்லியன் உறுதியளிக்கப்பட்டுள்ளதென்றும் கணிப்பிடுகிறது. அனேக சுனாமி நிதி, ஐ.எப்.ஆர்.சீ போன்ற சர்வதேச நிறுவனங்கள் (2.2 பில்லியன் பெற்றதாக கருதப்படும்) மற்றும் பாரிய அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஐ.நாவின் வழிகள் அல்லாதனவற்றுக்கூடாகவே வழங்கப்பட்டுள்ளது.

பாரிய அதேவேளை உடனே கிடைக்கக்கூடிய வளங்கள், மனிதநேயப் பணிச் சமூகத்தை நிதிதிரட்டலில் கவனம் குவிக்காமல் செயல்பட அனுமதித்து. அதேவேளை இத்தகைய தாராள மனப்பாங்கினால் உருவான உயர் அழுத்தம் பொருந்திய நிதிச்சூழல் மிகவிரைவாக நிதிகளை செலவிட மனிதநேய நிறுவனங்கள் மீது பாரிய அழுத்தத்தையும் பிரயோகிக்கிறது. பெருமளவு நிதி ஒதுக்கத்தாலும் மிகவிரைவான பெறுபேறுகளைப் பெற அழுத்தம் கொடுக்கும் நிதி வழங்குனர்களாலும் தூண்டப்பட்டு, அனேக நிறுவனங்கள் ஒரேநேரத்தில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து தமது பெருமளவு எண்ணிக்கையிலான அலுவலகர்களை கழைத்து சோர்ந்து போகச் செய்துள்ளன. அதிவிரைவான நடவடிக்கைக்காக விரைந்ததில் ஏராள மான சர்வதேச செயற்பாட்டாளர்கள் தமது தேசிய மற்றும் உள்ளூர் பங்குதார நிறுவனங்களை கவனத்திலெடுக்கவில்லை என கணிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில், பதிலிறுப்புப் பணிக்காலத்தில் தாம் செலவுசெய்யக்கூடியதான அளவைக் கடந்த பணத்தை நிறுவனங்கள் பெற்றுள்ளன. அறிக்கை சமர்பிக்கவும் வழங்கப்பட்ட நிதிப்பயன்பாடுபற்றிய தொடர்பாடலை மேற்கொள்ளவும், தமது சுயதிட்டமிடல் நடைமுறைகளையும் விபரமாக மீள்பரிசீலனை செய்யவேண்டி இருந்ததுடன் தமது தந்திரோபாயங்களை விரைவாக அபிவிருத்தி செய்யவும் வேண்டி இருந்தது. பொதுமக்களின் நம்பிக்கையை நிலை நிறுத்திக்கொள்ள, மிகுதிப்பணத்தை எவ்வாறு கையாள மனித நேய நிறுவனங்கள் தெரிவு-களை மேற்கொள்கின்றன என்பதற்கு அப்பால், தெளிவாகத் தமது விருப்பம் நிதிவழங்குனர்களுக்கு பரிமாற்றம் செய்யப்படுகிறதா என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

சுனாமி பதிலிறுப்புப் பணிகளுக்கு உதவியுள்ள புதிய நிதிவழங்குனர்கள் எதிர்காலத்தில் எழக்கூடிய அவசர கால நிலைமைகளுக்கும் உதவுவதைத் தொடர்வார்கள் என்பதை உறுதிப்படுத்த தெளிவான அறிக்கை தயாரித்து வழங்கலும் வெளித்தெரியக்கூடிய வகைகூறல் பண்பும் மிகவும் அவசியமாயுள்ளன. வகைகூறல் கட்டமைப்பை மனிதநேயப் பணிச்சமூகம் மிகத்திறமாக உருவாக்கி உள்ளது. ஆனாலும் சுனாமிக்கு, குறிப்பாக தனியார் துறையால் வழங்கப்பட்ட அல்லது உறுதியளிக்கப்பட்ட நிதிகளின் பருமன், அந்நிதிகள் எவ்வாறு செலவு செய்யப்படுகின்றன என்பதன் மட்டில் ஓர் ஆளமான உற்றுநோக்கலை அதிகரித்துள்ளது. சுனாமி அவசர விண்ணப்பத்தின் கீழ் பெறப்பட்ட பங்களிப்பின் உடனடி நிதிக்கணிப்பு மற்றும் நிதி தடம் பேணல் போன்ற விடையங்களில் ஐநாவுக்கு உதவுவதற்கும் அவசரகால விண்ணப்பங்களுக்கு தற்போதுள்ள ஐநா.வின் நிதி தடம்பேணல் ஒழுங்கமைப்புக்களை விஸ்தரிப்பதற்கும் பிறைஸ் வோட்டர் கவுஸ் கூப்பர் என்ற சர்வதேச நிதி கணக்காளர் நிறுவனம் இலவச உதவியைக் கொடுத்துள்ளது.

1998ல் மினிச் சூறாவளி மற்றும் ஈரா-னில் இடம்பெற்ற 2003 மார்கழி மாத பூகம்பம், இவை இரண்டினதும் கடந்தகால அனுபவங்களானது, பேரனர்த்தம் நிகழ்ந்து தொடர்பூடக தலைப்புக்களை உள்வாங்கும்போது இலகுவாக வரும் நிதி, கவன ஈர்ப்பு மறைந்துகொண்டு செல்ல அவையும் தேய்வடைந்து செல்கின்றன என்பதை காட்டியது.


பேரனர்த்த நிதி சேகரிப்புக்கான சந்தர்ப்பங்களின் சந்தப்பம் ஒடுக்கமானதும் ஆயட்காலம் குறைந்ததும் என்பதை கவனத்தில் எடுத்தே, சுனமி அவசரகால விண்ணப்பத்தின் வீச்சு மீட்சிக் காலத்துக்கு நீட்டப்பட்டிருந்தது. இந்த வசைவுத்தன்மையானது, உறையுள், ஜீவனோபாய அபீவருத்தி, சிறு உள்ளக கட்டுமானம், சுற்றாடல் போன்றவற்றுக்கு தேவையான வடிவங்களைச் சேர்க்கவும் மீட்சித்திட்டங்கள், வேலைத்திட்டங்கள் என்பனவற்றின் விரைவான ஆரம்பத்தை அனுமதிப்பதற்கும் சாத்தியப்படவைத்துள்ளது. மீட்சித் தேவைகளை உள்வாங்குவதற்கான அவசர விண்ணப்பத்தில் இத்தகைய விரிவாக்கம் எல்லா அனர்த்தங்களுக்கு நியம நடைமுறையாக மாறவேண்டும். உத்தியோகபூர்வ நிதிஉதவி, அரசசார்பற்ற நிறுவன நிதிவழங்கல், தனியார்துறை பங்களிப்பு என்பனவற்றை ஒரு விசாலமான ஒழுங்கமைப்பில் உள்ளடக்கிய பொது நிதித் தட தகவல் மையத்தின் அபிவிருத்தியானது மீட்சிதிட்டமிடல் மற்றும் அமுலாக்கலை இலகுபடுத்துகிறது.

## நிவாரணத்துக்கும் அபிவிருத்திக்குமிடையிலான இடைவெளியை இல்லாதொழித்தல்

மீட்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வரைபு மற்றும் அமுலாக்கல் குறித்த காலத்துக்கு முன்னான தேசிய உரித்துடைமையும் பங்கேற்பும் அத்தியாவசியமானவை. உள்ளூர் பாதிப்புற்ற மக்களின் தேவை-களையும் இயலுமை ரீதியும் மீட்சி நிகழ்ச்சித்திட்ட மிடலில் கவனத்தில் கொள்ளப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு பேரனர்த்த முகாமைத்துவ விற்பன்னர்கள், தொழில்நுட்ப வியலாளர்களிடமிருந்து வரும் பங்கேற்பு இன்றியமையாதது.

அவசரகால நிவாரணக் காலகட்டத்தில் மீட்சிக்கான முன்கூட்டிய கவன ஈர்ப்பானது, உள்ளூர் மக்கள் தமது சொந்தக்காலில் நிற்பதற்கு உதவியது. இந்தோனேசியாவில், “வேலைக்கு பணம்” என்ற திட்டத்தினூடாக இடிபாடுகளின் அகற்றல் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தில் பங்கேற்ற 11,000 மக்களின் உள ரீதியான உற்சாகத்துக்கு இது உதவிய அதேவேளை உள்ளூர் பொருளாதாரத்துக்கும் பணத்தை உட்செலுத்தியது. இருந்தபோதிலும், பல இடங்களில் முன்கூட்டிய போக்குவரத்து மற்றும் மீள்கட்டுமானப் பொருட்களின் வழங்கலில் வீதிகளின் சேதம் சிக்கலை ஏற்படுத்தியதால் முன்கூட்டிய மீட்சி என்பது சாத்தியமாயிருக்கவில்லை. இத்தகைய மீட்சிசார்ந்த பிரச்சனைகளை வெற்றிகொள்வதில் முன்கூட்டிய சேவை-கள் - வினியோக ஒழுங்கமைப்பு, விமான போக்குவரத்து சேவை போன்றவற்றை தம்மகத்தே கொண்ட தனியார் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தயார் நிலை பங்காளிகள் என்பவர்களை உள்ளடக்கிய முன் ஆயத்தங்கள் உதவலாம்.

ஐ.நா.வானது, அபாயக்குறைப்பு நடவடிக்கைகளை பேரனர்த்த மீட்சி முயற்சிகளுடன் ஒனறிணைப்பதற்கு, ஒழுங்கமைப்பு ரீதியான கட்டமைப்பின் மட்டில் குறைவான நிலையிலேயே உள்ளது. முன்கூட்டிய மீட்சித் தேவை-களை கண்டுபிடிக்கப் பொருத்தமான கணிப்பு முறைமைகளை இனம் காண்பதற்கும், மீட்சி நிகழ்ச்சித்




பண்டா ஆச்சேயின் மத்தியில் உள்ள வீதியொன்று (கடற்கரையிலிருந்து 4 கி.மீ அப்பால்)

UNICEF/HQ050129/Jim Holmes



இலங்கையில் தற்காலிக வசிப்பிடங்கள்

திட்டமிடல்களுக்கு உதவும் தொழில்நுட்ப விற்பன்னர்களை அனுப்பும் நடைமுறைகளை வளர்ப்பதற்கும், மீட்சி மற்றும் இலகுவாக அபாயத்துக்குட்படும் நிலைமையை குறைப்பதற்குமான நேர் தலையீடுகளுக்கு நிதி கிடைப்பதை உறுதிப்படுத்துவது ஒரு பிரதான தேவை.

### சிவில் சமூகமும் உள்ளூர் மட்டத்தில் தொடர்புபட்டு செயலாற்றலும்

சிவில் சமூகம் நிவாரண மற்றும் மீட்சி முயற்சிகளுக்கு மிகப்பாரிய பங்களிப்பை செய்துள்ளது. தாய்லாந்து உள்ளூர் அமைப்புக்கள், உள்ளூர் அரசுடனும் தேசிய அதிகாரபீடத்துடனும் ஒருங்கிணைந்து மீட்சி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த அத்தியாவசியமாயிருந்தன. பர்மிய புலம்பெயர் தொழிலாளிகள், பாரம்பரிய இருப்பை முன்னெடுக்கும் கடைசிக் கடல் பழங்குடியினர்களினிடையே இனச் சிறுபான்மையாகக் காணப்படும் 'போக்கின்' போன்றோரை கண்டும் காணாமலும் விட்டிருக்கக் கூடியவர்களின் கவனத்தை இந்த உள்ளூர் தாய்லாந்து அமைப்புக்கள் ஈர்த்தன. இந்தோனேசியாவில், அரசின் மீள்கட்டுமான சிறப்புதிட்டத்தை அபிவிருத்தி செய்வதில், அரசுக்கும் ஐநா மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் ஆச்சே மீட்சி பொதுமன்றம் உதவியினை யும் ஆலோசனையையும் வழங்கியது. ஆச்சேயில் சிவில் சமூகத்துடனான விரிந்த பரந்த கலந்தாலோசனைகள் திட்டமிடல் படிமுறைகளில் நம்பகத்தன்மையை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

பாதிப்புற்ற மக்களது, தேவைகள் கொள்தகுதிறன்களின் சிறப்பான பங்கேற்பு கணிப்புக்களின் அடிப்படையிலலேயே மீட்சி நிகழ்ச்சித்திட்டமிடல் இருக்கவேண்டுமென்பது பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, இது எப்போதும் நடைமுறை யில் நடக்கும் விடயமுமல்ல பல நாடுக ளில், மீட்சி திட்டமிடலில், தமது தொடர்பு குறைவாய் உள்ளதைப்பற்றிய மனக்கவலை பாதிப்புற்ற மக்களால் எழுப்பப்பட்டது.

பதிலிறுப்பின் தொடக்கத்திலிருந்து, சர்வதேச செயற்பாட்டாளர்கள் உள்ளூர் அரச அதி காரிகளுடன் தொடர்புபட்டு செயற்பட்டனர். நிவாரணப் பணிக் காலங்களில் பாதிப்புற்ற அரசுகள் அதிகாரத்தை ஒன்றுகுவிக்க முயலவில்லை. ஆனால், மறுதலையாக பதிலிறுப்புப் பணிகளை இலகுபடுத்த உப தேசிய மட்டங்களில் ஒருங்கிணைப்புக்களையும் தொடர்புபட்ட செயல்படுத்தலையும் வரவேற்றனர். இருந்தபோதிலும், ஒருங்கிணைவு நடவடிக்கைகளை செய்வதற்கான போதுமான அளவு வளங்களை உள்ளூர் அரச கட்டமைப்புக்கள் எப்போதும் கொண்டிருப்பதில்லை என்பதை சுனாமி வெளிப்படுத்தியது. வெளி அமைப்புக்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் அனர்த்தத்துக்கு முன்னான திட்டங்களை ஆயத்தம் செய்யவும் உள்ளூர் நிறுவனங்களின் பதிலிறுப்பு கொள்தகுதிறனை கட்டிஎழுப்பவும் ஒன்றாக இணைந்து செயற்படவேண்டி உள்ளது.

அபாயத்துக்குட்பட்ட சமூகங்களை, பேரனர்த்தங்களின் தாக்கத்திலிருந்து தம்மையும் தமது சொத்துக்களையும் பாதுகாக்கும் வண்ணம் வலுவூட்டும் தேவையை சுனாமி கோடிட்டுக் காட்டியுள்ளது. வெள்ள அபாயத்துக்குட்பட்ட பிரதேசங்களுக்கு உணவையும் மருந்துப் பொருட்களையும் சேமித்துவைப்பதிலிருந்து, ஆசிரிய பயிற்சி, பாடசாலை பாடவி தானம் என்பவற்றில் அபாய ஆயத்த நிலை கல்வி உள்வாங்கப்படல், போன்ற சமூகமைய பேரனர்த்த ஆயத்த நிலைக்கான திட்டங்களை அபிவிருத்தி செய்வது போன்றன பேரனர்த்த சேதத்தை கணிசமான அளவு குறைக்க உதவும். முன்கூட்டிய உள்ளூர் அபாய எச்சரிக்கை ஒழுங்கமைப்புக்கள், பூமியதிர்ச்சியைத் தாங்கும் கட்டடங்களை கட்டுதல், தப்பித்தல் மார்க்கங்களை இனம்காணல், ஏற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் தொடர்புகளின் தந்திரோபாயங்கள் என்பன எச்சரிக்கை கொடுக்கப்படும் போது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அத்தியாவசியமானவை.
பேண்தகு நிலை கொண்ட பொருளாதார அபிவிருத்திக்கான நீண்டகால உதவி, பலமான சிவில் சமூகங்களின் பெறுபே றாக சிறந்த உள்ளகக் கட்டுமானங்கள் என்பன இயற்கை பேரளிவுகளின் அதிர்ச்சிக்கு தேசம் தயார் நிலையில் இருக்கிறது என்பதை உறுதிபடுத்துவதற்கு உதவும். சர்வதேச சமூகம் மக்கள் மைய முன்கூட்டிய எச்சரிக்கை ஒழுங்கமைப்புக்களில் முதலீடு செய்ய வேண்டும். அவர்கள் அபாய கணிப்பீடுகள், விழிப்புணர்வை ஏற்படுத்தல், தயார்நிலை நடவடிக்கைகள் என்பனவற்றையும் உள்வாங்க வேண்டும். இதனால் அபாய எச்சரிக்கை கொடுத்ததும் என்ன செய்ய வேண்டும் என்பதை சமூகங்கள் அறிந்திருக்கும். பதிலிறுப்பும் மீட்சிகளை திட்டமிடலும் பாதிப்புற்ற மக்களின் தேவை-கள் இயலுமைகள் மீதான நம்பகமான பங்கேற்பு கணிப்பீட்டின் அடிப்படையில் இடம்பெறவேண்டும். இதனால் உள்ளூர் முன்னெடுப்புக்கள், வளங்கள், இயலுமைகள் என்பன முழுமையாக புரிந்து கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படும். கலந்தாலோசனை கட்டமைப்புக்கள், முன்னுரிமைபடுத்தும் செயல்பாடுகள் என்பன மீட்சி முன்னுரிமைகள், பாத்திரம், பொறுப்புக்கள், வளங்கள் என்பன மட்டில் இணக்கப்பாடுகளை கட்டி எழுப்ப பங்களிப்பு செய்கின்றன. அடுத்த பேரனர்த்தம் தாக்குமுன்னர், பதில் கூறு சமூகம் சுனா-மியால் கற்றபாடங்களை ஆவணப்படுத்தும் மற்றும் வெளியே பரப்புரை செய்யும், வாய்ப்பினை இழக்கக்கூடாது.

***இந்தக்கட்டுரை எப்.எம்.ஆர் ஆசிரியர்க-ளால் தயாரிக்கப்பட்டுள்ளது. ஐநா வின் பொருளாதார சமூக கவுன்சிலில் கலந்துரையாடப்பட்ட விடையங்களில் இருந்து தெரிவுசெய்யப் பட்டவை. 'அவசர கால நிவாரணப் பணியை பலப்படுத்துதல், புனர்வாழ்வு, மீள்கட்டுமானம், இந்து சமூத்திர சுனாமி பேரழிவின் பின்னரான கால மீட்சியும் பாதுகாப்பும்'- ஐநா. வின் செயலாளர் நாயகத்தின் அறிக்கை யூலை. 2005 www.un.org/docs/ecosoc இணையத்தளத்தில் இதனை பார்க்கலாம். அறிக்கையின் அம்சங்களுக்கு கொடுக்கப்பட்ட வியாக்கியானமும் அழுத்தமும் எப்.எம்.ஆர் ஆசிரியர்களின-துடையதே அன்றி ஐநாவினுடையதல்ல.***

1.www.book.edu/fp/projects/idp/gp_page.htm

# இயற்கைப் பேரழிவுகளும் உள்ளக இடம்பெயர்ந்தோர் உரிமைகளும்

வோல்டர் காலின்

*சுனாமியால் உயிர் தப்பியோருக்கு உதவி வழங்குவதற்கென புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் விரைந்ததில், பேரனர்த்தத்தால் பலவந்தமாக இடம் பெயர்ந்தோரின் மனித உரிமைகளை பாதுகாக்க போது மான அளவு கவனம் கொடுக்கப்படவில்லை.*

பாதுகாப்பு விவகாரம் என்பது உதவிகளை அடையும் வழிகள், உதவி பொருட்களில் பாரபட்சம், பலாத்கார மீள்குடியமர்த்தல், பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை, போராட்டத்துக்கு அல்லது யுத்தத்துக்கு சிறுவர்களை அமர்த்தல், ஆவணங்கள் இழப்பு, பாதுகாப்பான சுய மீள் வருகை, அல்லது மீள்குடியேற்றம், உடமை நட்டஈட்டு பிரச்சினைகள் போன்றனவற்றை உள்ளடக்கியது. எந்தளவிற்கு நிவாரணத்திலிருந்து புனர்வாழ்வுக்கு சுனாமியால் பாதிப்படைந்த நாடுகள் நகர்கிறதோ அந்தளவிற்கு மனித உரிமைப் பிரச்சினைகட்கு முகம் கொடுக்கும் தேவையின் அளவும் அதிகரிக்கிறது.

இடம்பெயர்ந்தோர் தமது இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியாத வேளையிலும் ஒரு சில வாரங்கள் அல்லது மாதங்களில் ஒரு புதிய இடத்தை கண்டுபிடிக்க இயலாத போதும் கடுமையான மனித உரிமை மீறலுக்கான அபாயங்கள் அதிகரிக்கின்றன என்பதை ஏனைய இயற்கை பேரனர்த்தங்களினால் பெற்ற அனுபவங்கள் எமக்கு கற்பிக்கின்றன. இயற்கை பேரனர்த்தச் சூழ்நிலையில் எவ்வளவு தூரம் இடம்பெயர்வு நீடிக்கிறதோ அவ்வளவுக்கு சமூக, பொருளாதார பண்பாட்டு உரிமைகளின் மீறல்களும் பாரபட்சங்களும் ஆழமாக ஆக்கிரமிக்கின்றன. அனேக சந்தர்ப்பங்களில் இத்தகைய வன்முறைகள் மனதாரத் திட்டமிட்டு தூண்டப்படுபவை அல்ல. மாறாக பொருத்தமற்ற கொள்கை நடைமுறைகளின் விளைவாக எழுபவை. ஆரம்பத்திலிருந்தே பொருத்தமான மனித உரிமைகள் பாதுகாப்பு நடைமுறைகள் கவனத்தில் கொள்ளப்படுமாகில் அவை இலகுவாக தவிர்க்கப்படக்கூடியவை.

உள்ளக இடப்பெயர்வுசார் வழிகாட்டல் கொள்கைகள்,[1] இடப்பெயர்வை தூண்டிய பேரனர்த்த சூழ்நிலைகளில், மனித உரிமைகள் சார்ந்த சவால்களை முகங்கொடுக்கும் ஒரு வேலைத்திட்ட வரைபை தருகின்றன. தமது இருப்பிடங்களை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களது இடப்பெயர்வுக்கு பின்னால் உள்ள காரணங்களை கவனத்திலெடுக்காது அனைவரும் பொது வில் பல்வேறுபட்ட இலகு அபாயத்துக்குட்பட்டு நிலையை தம்மகத்தே கொண்டுள்ளனர் என்பதை கவனத்தில் எடுத்து, வழிகாட்டல் கோட்பாடானது யுத்தம், சிவில் கலவரம் என்பவற்றுக்கப்பால் இயற்கை பேரனர்த்தங்களையும் உள்ளடக்கிய காரணங்களின் நிமித்தம் தமது இல்லங்களையோ அல்லது வழமையான வாழ்விடங்களையோ விட்டு வெளியேற அல்லது தப்பியோட கட்டாயப்படுத்தப்படும் அல்லது தள்ளி விடப்படும் ஆட்களுக்கு 'உள்ளக இடம்பெயர்ந்தோர்' என்ற ஒரு பரந்த வரைவிலக்கணத்தை பயன்படுத்துகின்றது.

## இயற்கை அனர்த்தத்துக்குப் பின்னான மனித உரிமை சவால்கள்

**உதவிகளைப் பெற சென்றடைதல்:** தேசிய அதிகார தரப்பாரிடமிருந்து பாதுகாப்பும் உதவி கோரவும் பெறுவதற்குமான உரிமையினை உள்ளக இடம்பெயர்ந்தோர் கொண்டுள்ளார்கள். சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு தேவையான மனித நேய உதவிகளை வழங்குவதில் மிக விரைவாக பதிலிறுப்பதற்கு விருப்பத்துடனும் வெளிநாட்டு உதவியை நாடும் தேவையுடனும் இருந்து வரும் நாடுகள், சர்வதேச சமூகத்துடனான கூட்டு வேலையில் ஈடுபட்டும் அல்லது செய்தும் வருகின்றன. இருந்தபோதிலும் தம்மால் போதுமான உதவிகளை வழங்க முடியாத சூழ்நிலையில் உள்ள அரசுகள் தேவைகளுடன் கஸ்டப்படுபவர்களுக்கு உதவிகள் சென்றடையும் வழிகளை தடுக்கவும் கூடாது. பாதிப்புற்ற மக்களை சென்றடையத் தேவையான அனுமதியை பெறுவதில் மேலதிக தாமதத்தை ஏற்படுத்துதல் போன்ற உதவி வினியோக கட்டுப்பாடுகளை தவிர்க்கவும் வேண்டும்.

**பாராபட்சமின்மை :** இயற்கை பேரனர்த்தங்களின் பின்னர், மனித நேய மற்றும் ஒன்றுதிரட்டிய உதவி பகிர்ந்தளித்தல், மீள் குடியமர்த்தல், மீள் குடியேற்றம் போன்ற முடிவுகளிலும் பாராபட்சம் எழலாம். வழிகாட்டல் கொள்கைகளில் வலியுறுத்தப்பட்டது போன்று, பக்கச் சார்பின்மை நடுவு நிலைமை போன்ற நீண்ட – நிலை நிறுத்தப்பட்ட கோட்பாடுகளுக்கமைவாக யுத்தத்தால் இடம்பெயர்ந்தோரைவிட இயற்கை அனர்த்தங்களால் நீர்மூலமாக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் சலுகை வழங்காமல் இன, மத, மொழி, சாதி, பிரதேச ரீதியான பாராபட்சங்களின்றி உதவிகள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். உதவி வழங்கலின் அநீதிகள் மனித நேய கோட்பாடுகளை மாத்திரம் மீறுவதில்லை மாறாக உள்ளக இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்பை பயமுறுத்தவும் செய்து அவர்களது ஒன்றிணைவை சிக்கலாக்கி தேசிய மட்ட உறவுச் சீராக்கல் நோக்கிய நகர்வில் விரத்தியை பதித்து அதனூடாக பதட்டத்தை ஏற்படுத்தவும் செய்கிறது

**பெண்கள் சிறுவர்களின் பாதுகாப்பு :** வழிகாட்டல் கோட்பாடுகள் பெண்கள், சிறுவர்களின் தேவைகளின் மட்டில் விசேட கவன ஈர்ப்புக்கு அழைப்பு விடுக்கிறது. அதிக அளவிலான வீட்டு வன்முறைக்கு தம்மை பணயம் வைக்கும் முகாம்களிலேயே இவர்கள் குறிப்பாக பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைக்கு இலகுவாக உட்படும் அபாய நிலையை எதிர்நோக்குகின்றனர். பெண்களது கைகளில் நேரடியாக உணவு வழக்கப்படாதபோதும் முகாம் முகாமைத்துவத்தில் அவர்கள் உள்வாங்கப்படாதபோதும், நிவாரணம் மீள் ஒருங்கிணைப்பு திட்டங்களை அபிவிருத்தி செய்வதில் ஒதுக்கப்படும்போதும், பாலியல் சுரண்டலுக்கும், துஸ்பிரயோகத்துக்கும் பெண்கள் இலகுவாக அபாயத்துக்குட்பட்டு நிலையானது மிக மோசமாக அதிகரிக்கின்றது. இனவிருத்தி சுகாதார சேவைகளை பெறும் விடையத்திலும் பெண்கள் விசேட தேவைகளை கொண்டுள்ளனர். குடும்பத்தையும் இல்லத்தையும் இழந்த சிறுவர்கள்கூட குறிப்பாக இராணுவ ஆட்சேர்ப்புக்குட்படும் அபாயத்தில் உள்ளனர்.

**ஆட்கடத்தல் :** குடும்பங்கள் இடம்பெயரும்போதும் பிரிந்து விடும் போதும் சிறுவர்கள் அனாதையாக்கப்படும் போதும் ஜீவனோபாயம் அழிக்கப்படும் போதும் இன்னுமொரு பாரிய அபாயமாக இது வலுவடைகிறது.

**கல்வி பெறுவதற்கான வழிமுறை :** ஒரு இயற்கை அனர்த்தத்துக்குப் பின்னர், இடம் பெயர்ந்த பிள்ளைகளின் உளச் சமூக நலத்துக்கு மிகவும் அவசியமானதும் உரித்துடையதுமான கல்வியில் ஏற்படும் இடையூறை குறைப்பதில் பாடசாலைக்கு சிறுவர்கள் உடனடியாக திரும்புதல் என்பது அவசியமானது. பாடசாலைக்குச் சமூகமளித்தல் என்பது ஆட்கடத்தல் இராணுவ ஆட்சேர்ப்பு போன்ற அபாயங்களுக்கு சிறுவர்கள் உட்படு நிலையை குறைக்கவல்லது. பாடசாலை கட்டடங்களில் இடம் பெயர்ந்தோர் தஞ்சமடைந்துள்ள வேளைகளிலும், இடம்பெயரா மற்றும் இடம்பெயர்ந்த சிறுவர்கள் கல்வி பெறுவதில் தடைகள் ஏற்படுகின்றன. மிகப்பொருத்தமான தற்காலிக தங்குமிடங்களில் இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்படுதல் என்பது இடம்பெயர்ந்த மக்களில் பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல ஏனைய பரந்த சமூகத்தின் பிள்ளைகளுக்கும் கல்வி வசதி கிடைப்பதற்கான வாய்ப்பை திறந்து விடுகின்றது.

**ஆவணங்களை தொலைத்தல் :** ஆவணங்கள் இல்லாமை என்பது சுகாதார, கல்வி ஏனைய அத்தியாவசிய பொது சேவைகள் மறுக்கப்படுவதற்கும், உடமைகளுக்கான நட்டஈட்டை வழங்கும் கட்டமைப்புக்கள் அதனை வழங்க மறுப்பதற்கும் இட்டுச் செல்லலாம். பதில் ஆவணங்களை பெறுதல் என்பது கூட கஸ்டமானதும் நேரத்தை எடுப்பதுமாகும். இருந்தபோதிலும் பதில் ஆவணம் பெறும் உரிமை உள்ளக இடம்பெயர்ந்தோருக்கு உள்ளது.

**உள்ளக இடம்பெயர்ந்தோரின் பங்கேற்பு :** உள்ளக இடம்பெயர்ந்தோர் முடிவெடுத்தலில் தாம் புறக்கணிக்கப்படுவதாக உணர வாய்ப்புண்டு. உதாரணமாக முகாம்கள், குடியேற்றம் போன்றவற்றின் இடம் வடிவமைப்பு, உதவி பகிர்ந்தளிக்கப்படும் விதம், வழங்கப்படும் உணவு மற்றும் பொருட்களின் வகைகள், அன்றாட வாழ்வில் மையமாகவுள்ள ஏனைய விடையங்கள் என்பனவற்றை குறிப்பிடலாம். இவை மனித நேய உதவிகளின் விளைவுத்தாக்கத்தை குறைத்து மதிப்பிடுவதற்கும், இடம்பெயர்ந்தோரின் குறிப்பாக பெண்ணின் உடல் பாதுகாப்பை அபாயத்துக்குள்ளாக்குவதற்கும் இயற்கை பேரனர்த்தத்தால் உருவாக்கப்பட்ட ஆதரவற்ற நிலையை அதிகரிக்கச் செய்வதற்கும் இட்டுச்செல்லலாம்.

**சுய மீள் திரும்பலும் மீள் குடியேற்றமும்:** பேரனர்த்தத்தின் அவசரகால நிலை மறைந்ததிற்குப் பின்னர் இடம்பெயர்ந்தோர் தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்ப வழமையாகவே அவர்களுக்கு உதவி தேவைப்படும். இதனை இலகுபடுத்துவது தேசிய அதிகாரிகளினது முதல் கடமையும் பொறுப்புமாகும். வசதிவாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலமும் அதேவேளை அதற்கான வழி வகைகளை வழங்குவதன் மூலமும், பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் தமது சொந்த இடங்களுக்கு மீள் திருப்புவதற்கோ அல்லது நாட்டின் இன்னுமொரு பகுதியில் குடியேறுவதற்கோ உதவுவதன்மூலமும் மீள் இணைப்பை ஏற்படுத்துவதற்கு தேவையான நிபந்தனைகளை உருவாக்குவதன் மூலமும் செய்யலாம். வீடுகளை மீளக்கட்டுவதற்கும் ஏனைய உள்ளக கட்டுமானங்களை மேற்கொள்வதற்கும் மேலதிகமாக, முன்னைய ஜீவாதாரத்தை கட்டி எழுப்பவதன் மூலமும், (சிதைந்த விவசாய நிலங்களை, வியாபார சொத்துக்களை, மீன்பிடி படகுகள் என்பவற்றினை புனருத்தாரணம் செய்தல்) வருமானத்துக்கான புதிய மூலங்களை அபிவிருத்தி செய்வதற்குமான பயிற்சி உதவி வழங்குவதன் மூலமும், இடம் பெயர்ந்தோரை இயலுமானவர்களாக்குவதற்கு உதவுவதை இது கருதுகிறது.

*சுனாமி தாக்கிய பிராந்தியங்களில், மீள் கட்டுமான மீட்சி முயற்சிகள் மனித உரிமை மைய அணுகுமுறைக்கூடாக உறுதிப்படுத்தப்படவேண்டும*

ஒரு பேரனர்த்தத்துக்குப் பின் மீள் கட்டுமானத்துக்கு தடை செய்யப்பட்ட 'தடை வலையங்கள்' அல்லது 'விலக்கப்பட்ட வலையங்கள்' போன்ற பிரதேசங்களை அரசாங்கங்கள் பிரகடனப்படுத்த விரும்பலாம். இத்தகைய தீர்மானங்கள், இடம்பெயர்ந்தோரின் நடமாடும் சுதந்திரத்தையும் சில இடங்களில் சொத்துரிமையையும் வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கான திறமையின் மட்டிலும் பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. எங்கு அதிகார பீடம் விலக்கப்பட்ட வலையலங்கள் சட்டபூர்வமாக அமுல்படுத்தப்படவேண்டும் என்று தீர்மானமாக இருக்கிறதோ, அங்கு அத்தகைய தீர்மானங்கள் இடம் பெயர்ந்தோருடனான நெருக்கமான கலந்தாலோசனைகளுக்கூடாகவே எடுக்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்தோர் உடமைகளுக்கு நட்டஈடு பெறுவதுடன் உதவி, நிலம் போன்ற வசதிளை இன்னுமொரு இடத்தில் தமது ஜீவனோபாயத்தை கட்டியெழுப்புவதற்கும், மீள் குடியமர்த்தலுக்கான இருப்பிடத்தையும் பெறுதல் வேண்டும். இத்தகைய தீர்மானங்கள் குறிப்பிட்ட இன, சமய மற்றும் ஏனைய குழுக்களுக்கெதிரான பாரபட்சத்தை ஏற்படுத்தக்கூடாதென்பது அத்தியாவசியம். அத்துடன் ஆயுத முரண்பாடு, இனக்கலவரம் காரணமாக ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்கள் வாழும் இடங்களை இயற்கை அனர்த்தம் தாக்கியது போன்ற வித்தியாசமான சூழ்நிலையில், இடம் பெயர்ந்தவர்கள் மீதும் பாரபட்சம் காட்டக்கூடாது.

மறுபக்கத்தில், உள்ளக இடப்பெயர்ந்தோர் தமது இடப்பெயர்வு காலம் தாழ்த்தப்பட்டதாலோ அல்லது இன்னுமொரு இடத்தில் தமது வாழ்வை மீளக் கட்டி எழுப்பத் தொடங்கி இருந்ததன் நிமித்தமோ, தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதில்லை என்ற தெரிவை மேற்கொள்ளலாம். பேரனர்த்தத்தால் உருவான அலங்கோல நிலைக்குப் பின்னர், வழமைக்குத் திரும்பிவிட்டது என சில அடையாளங்களை காட்டி மீள் திரும்புதலை மிக விரைவாக்குவதற்கு சிலவேளை அதிகாரத் தரப்பார் மிக அங்கலாய்பாக இருக்கலாம். இருந்தபோதிலும், தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதா அல்லது வேறெங்காகிலும் மீள் குடியேறுவதா என்ற தெரிவை மேற்கொள்ளும் இடம்பெயர்ந்தோரின் உரிமைக்கு அதிகாரிகள் மதிப்பளிக்க வேண்டும். அத்துடன் எந்தவகையான மீள் ஒன்றிணைப்புக்கான அவர்களது தெரிவுக்கும் உதவுதல் வேண்டும்.

**உடமை பிரச்சினைகள் :** எல்லைகளுக்குப் பயன்படுத்திய அடையாளங்கங்களை அடித்துச் சென்ற இடங்களிலும் நிலம் தமக்குரியதென்பதை நிரூபிக்கும் ஆவணங்களை இழந்த குடியிருப்பாளர்களைக் கொண்ட இடங்களிலும் பாதுகாத்து வைக்கப்பட்ட ஆவணங்கள் அடித்துச் செல்லப்பட்ட இடங்களிலும் இயற்கை பேரனர்த்தம் சொத்துடமைசார்ந்த விசேட பிரச்சனைகளை தோற்றுவித்துள்ளன. பதிவு செய்தல், சந்ததிவழி சொத்துடமை போன்றவற்றின் ஒழுங்கு விதிகள் பெண்களுக்கெதிராக பாரபட்சத்தை காட்டுவதனால் அவர்கள் சொத்துக்களை மீளப்பெறுவதற்கு (அதிலும் குறிப்பாக அவர்களது கணவன்மார் கொல்லப்பட்டிருப்பின்) மிகக்கஸ்டங்களை எதிர்நோக்க வேண்டியும் உள்ளது. சொத்துக்கோரல்களை கையாள மத்தியஸ்தம் வழங்குத்தொடுகை வசைவுத்தன்மை பொருந்திய தீர்வுமேற்கொள்ளல் போன்றனவற்றுக்கான அதிகாரத்தை கொண்ட ஒரு அற்பணிப்பு மிக்க நிர்வாக கட்டமைப்பை உருவாக்குதல் என்பது பெரிய அளவிலான சொத்துச் சிக்கலை கையாள்வதற்கான வினைத்திறன் மிக்கதொரு வழிமுறை என்பதை கடந்தகால அனுபவம் காட்டுகிறது. இடப்பெயர்வின் விளைவாக எழுந்த சொத்துச் சிக்கல் பிரச்சனையை தீர்த்தல் என்பது, நீண்டுகொண்டு செல்லும் அசமத்துவத்தை அல்லது பதிவு செய்வதில் உள்ள வினைத்திறனின்மையை கையாள்வதற்கும், தேச வழமை உரிமைகள் மற்றும் பாரம்பரியம் அல்லாத உரித்துடமை ஆதாரம் என்பன கவனத்தில் எடுக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் சட்டங்களையும் கொள்கைகளையும் மாற்றி அமைப்பதற்கும் ஒரு வாய்ப்பாகக்கூட இது அமையலாம்.

## நிறைவு

அரசுகளும் சர்வதேச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உள்ளக இடம்பெயர்ந்தோர்களுக்கான மீள் கட்டுமானம், மீள் ஒன்றிணைப்பு போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்து அமுலாக்கும்போது, தாம் பிரயோகிக்கக்கூடிய மனித உரிமைகள் தேவைப்பாட்டுக்கமைவான பாரபட்சமற்ற தீர்வுகளை தேடவேண்டும். 'பாதுகாப்பு கண்ணாடிகள்' ஊடாக இடம்பெயர் சூழ்நிலையை அணுகி ஆராய்ந்து செயல்படுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தோர் இயற்கை பேரனர்த்தத்தினால் இடம்பெயர்ந்தோரைவிட எந்தவகையிலும் குறைவான முக்கியத்துவத்தை கொண்டிருக்கவில்லை. சுனாமி பாதித்த நாடுகளுக்கு நான் மேற்கொண்ட வேலை பயணங்களின்போது, இயற்கை பேரனர்த்தங்களுக்கு ஒரு பதிலிறுப்பை அபிவிருத்தி செய்து அமுலாக்குவதில் மனித உரிமைகள் மைய அணுகுமுறைக்கான தேவைப்பாட்டின் மட்டில் ஒரு சாதகமான பதிலையே காணக்கூடியதாக இருந்தது.

முக்கியமானவை :

- அரசுகள், தேசிய மீள் கட்டுமானம், மீள் இணைப்பாக்கம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களை வகுக்கையில் வழிகாட்டல் கோட்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். அவை, ஆயுதப் போர் சூழ்நிலையில் மாத்திரமல்ல இயற்கை பேரனர்த்தச் சூழ்நிலையிலும் சமமாக பிரயோகிக்கக்கூடிய வழிகாட்டலை வழங்குகின்றன.
- இன, மத, சமூக, பால்நிலை போன்ற பின்னணிகொண்ட வித்தியாசமான குழுக்களுக்கிடையிலான முன்னைய முரண்பாடுகள் காரணமாக இடம்பெயர்ந்தவர்கட்கு எதிரான பாரபட்சம் காட்டாத வழிவகைகளுக்கூடாக நிதிவழங்குனர்கள் நிதி வழங்குவதற்கான தமது பொறுப்பின்மட்டில் இன்னுமதிகமான விழிப்புணர்வை பெற வேண்டும்.
- மீள குடியமர்த்தலை நிர்வகித்தல், மனித நேய உதவிகளை பகிர்ந்தளித்தல் இடம்பெயர்வுகளை தாக்குப்பிடிக்கக்கூடிய தீர்வுகளை காணல் போன்றவற்றுடன் தொடர்புபட்ட எந்தத் தீர்விலும் இடம்பெயர்ந்தோர் குறிப்பாக பெண்கள் உள்வாங்கப்படல் வேண்டும்.
- தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, உள்ளக இடம்பெயர்ந்தோரின் சூழ்நிலைகளை கண்காணிக்கவும் அவ்வாறு செய்வதற்கான பொறுப்புள்ள முறைமை ஒன்று உருவாக்கப்படு வதற்குமான ஊக்கமும் உதவியும் கொடுக்கப்படல் வேண்டும்.
- ஐநா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரும் மனித நேய அலுவல்களை ஒருங்கிணைக்கும் ஐநாவின் அலவலகமும் இணைந்து களத்திலுள்ள நிறுவனங்களுக்கிடையிலான நிரந்தர சபைக்கு நடைமுறை நடவடிக்கை வழிகாட்டி ஒன்றை வழங்கும் வண்ணம் இயற்கை அனர்த்த சூழ்நிலைக்கான மனித உரிமைகளின் மட்டில் ஒரு வழிகாட்டல் கையேட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

***வோல்டர் காலின் உள்ளக இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகளுக்கான ஐ.நா செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியும். புரூக்கில்ஸ் - பேர்ள் உள்ளக இடம்பெயர்ந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இணை இயக்குனரும், சுவிற்லசலாந்து பேர்ள் பல்கலைக்கழகத்தில் யாப்பு மற்றும் சர்வதேச சட்டங்களுக்கான பேராசிரியருமாவார். மின் அஞ்சல் : walter.kaelin@oefre.unibe.ch.***

***மார்ச் 2005 இல் இவர் ஆசியாவிற்கான பணிப்பயணத்தை மேற்கொண்டார். பின்வரும் இணைய தளத்தில் அவ் அறிக்கை கிடைக்கும். www.brookings.edu/dybdocroot/fp/projects/idp/20050227_tsunami.pdf. நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மேலதிக தகவல்களுக்கு www.brook.edu/fp/projects/idp/idp.htm மின் அஞ்சல் : brookings-bern@brookings.edu***

1. www.unhcr.ch/html/menu2/7/b/principles_lang.htm

# சுனாமிக்குப் பொதுச் சுகாதார பதிலிறுப்பு - நாம் என்ன கற்றுள்ளோம்?

மனுவல் கார்பல்லோ, பிறயன் ஹீல்

*புலம்பெயர்வுக்கும் சுகாதாரத்துக்குமான சர்வதேச நிலையம் ஒழுங்கு செய்த மாலைதீவுக் கூட்டத்தில், மனிதநேயப் பதிலிறுப்பிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை, சுனாமி பாதித்த நாடுகளைச் சேர்ந்த பொதுச் சுகாதார நிபுணர்கள் கணிப்பிட்டனர்.*

ஏனையவர்களைவிட சிலர் மிக இலகுவாக அபாயத்துக்குட்படு நிலையில் எப்போதும் உள்ளனர் என்பதை உணர்த்தும் துயரம்மிக்க நினைவூட்டடியாக சுனாமி இருந்துள்ளது. தமது உயிர்களைப் பறிகொடுத்ததில் பெரும்பான்மையானவர்கள் வறுமையில் வாழ்ந்து வந்தவர்களும் கரையோரம் நெடுகிலும் போதிய வீட்டு வசதி இல்லாமல் வாழ்வதற்கு தள்ளப்பட்டவர்களும் ஆகும். சுனாமிக்கு ஆறு நாட்களுக்கு முன்னர், ஐநாவின் அபிவிருத்தி குறைந்த நாடுகள் வரிசையிலிருந்து நீக்கப்பட்டிருந்த மாலை தீவுவில், பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் வங்கிக் கணக்கின்மையால் வீட்டில் பணத்தை வைத்திருந்து அனைத்தையும் இழந்த வறியவர்களேயாகும். தீவுக்கு ஏற்பட்ட பாதிப்பின் தாக்கம் 62% என ஜீ.டி.பி கணிப்பிட்டதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தில் சுனாமிக்கு முன்னர் எதிர்வு கூறப்பட்ட 7.5% இல் இது 1% மாத்திரமே குறையும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

பாதிப்புற்ற எல்லா நாடுகளிலும் பொதுச் சுகாதாரத்துக்கு இறந்த உடல்கள் குவிதல் என்பது ஒரு பாரிய பயமுறுத்தலை தரும் என்ற பயத்தை வைத்துக்கொண்டே, சுனாமிக்கான ஆரம்ப பதிலிறுப்புக்கள் வார்க்கப்பட்டன. மனித உடல்கள் உண்மையில் உணர்ச்சி அழுத்தங்களுக்கான மூலங்களாகவும், அவற்றின் சேர்க்கை உளச் சமூகப் பார்வையில் மிக முக்கியமானதாகவும் உள்ளன. உடல்கள் உடனடி சுகாதார பயமுறுத்தலை பிரதிநிதித்துவப்படுத்துவ தில்லை என மக்களுக்கு விளங்க வைக்கும் முயற்சி அரை மனதுச் செயற்பாடாக இருந்தது. உடல்களைப் புதைக்கும் பொதுவான விரைவு பாரம்பரிய சடங்காசார செயற்பாடுகளை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துள்ளதுடன் உளநல உதவிக்கூடாக கையாளப்பட வேண்டியதொரு தேவையைக் கொண்ட குற்ற உணர்வுக்கும் வழிவகுத்துள்ளது.

சுனாமி பாதித்த ஏராளமான மக்களின் விடையத்தில், குறைவான உணவைப் பெறுதலுடன் ஏற்கெனவே வறுமை தொடர்புபட்டுள்ளதென்பது போதியளவு கவனத்தில் கொள்ளப்படவில்லை. இந்தியா, இலங்கை, மாலைதீவு போன்ற நாடுகளின் சில பகுதிகளில் போசாக்கின்மை பற்றிய அறிக்கைகளும் உள்ளன. உணவு உதவி, உணர்தகு திறனற்ற நிலையில் பொதுவாக வழங்கப்பட்டு வருகிறது. தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் சோறு உண்ணும் சமூகங்களுக்கு கோதுமை மாவை இலவசமாக வழங்கியதும், அவசர கால உணவுப் பொதியின் ஓர் அங்கமாக வழங்கப்பட்ட போசாக்கு பிஸ்கட்களை வயோதிபர் மெல்ல முடியாமல் இருந்தது பற்றிய அறிக்கைகளும், தாய்ப்பால் கொடுத்தலைக் குறைத்த பால்மா வினியோகம் பற்றிய தாய்லாந்து அறிக்கையும், முன்னைய பேரனர்த்தங்களில் இருந்து கற்ற பாடங்கள் மிகவிரைவாக எவ்வாறு மறக்கப்படலாம் என்பதை காட்டுகின்றன.

சுகாதார ஒழுங்கமைப்புக்களே கடுமையாகத் தாக்கப்பட்டன. ஆச்சேயின் பாதிப்புற்ற பிரதேசங்களில் 30% மான மருத்துவிச்சியர் இறந்து போயினர் என்பதுடன் ஒவ்வொரு ஆறு மருத்துவ சிகிச்சை நிலையங்களில் ஒன்றாவது அழிந்துள்ளது. மாகாணம் முழுவதுமாக மருத்துவ உபகரணங்களும் பொருட்களும் இழக்கப்பட்டதுடன், அனேகமாக மறக்கப்படும் சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள் ஏனைய சாதாரண மக்களைப் போன்று பயத்துக்கும் மன அழுத்தத்துக்கும் ஆளாகி உள்ளதுடன், மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வசதிகளை துப்பரவு செய்யவும் திருத்தவும் பெருமளவு உடல்களைத் தோண்டி எடுத்துப் புதைக்கவும் வேண்டி இருந்தது.

இலங்கையிலும் வட ஆச்சேயிலுமுள்ள சமூகங்களிடையே ஆண்களைவிடப் பெண்களின் இறப்பு வீதம் 4 மடங்கு அதிகமாகவும் இந்தியாவில் மூன்று மடங்கு பெரிதாகவும் உள்ளது. பெண்களின் சமூக, சுகாதார நிலையில் இலகு அபாயத்துக்குட்படு தன்மையை, அவசரகால நிலையை எதிர்கொள்வதற்கான ஆயத்தப்படுத்தும் திட்டம் நன்கு ஏற்றுக் கொள்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கான அழைப்பை விடுக்கின்றதாக, இந்த சமமற்ற தாக்கம் இருத்தல் வேண்டும். சுனாமிக்கான பதிலிறுப்பு, ஒரு அவசரகாலச் சூழ்நிலையில் இனவிருத்திச் சுகாதாரத்திற்கும் கர்ப்பமுற்ற பெண்களின் தேவைகளுக்கும் பாரம்பரியமாகக் கொடுக்கப்படும் குறைவான முன்னுரிமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். கர்ப்பிணித் தாய்மார் விசேட தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளனர் என்பதுடன் நெருக்கடிக் காலங்களில் இவை அதிகரிக்கின்றன என்ற உண்மை காணப்பட்டபோதிலும், ஏராளமான நிவாரண நடவடிக்கைகள் இதனைக் கவனத்திற் கொள்ளத் தவறி விடுகின்றன. இயற்கை அல்லது மனிதன் உருவாக்கிய பேரனர்த்தங்களின்போது கருத்தடைச் சாதனங்களின் வினியோகம் பல நிறுவனங்களுக்கு முன்னுரிமைப்படுத்தக்கூடிய விடயமாக இருப்பதில்லை. ஏனென்றால், அவர்களிடம் நேரடியாகக் கேட்டுப் பெற மக்கள் தயக்கம் காட்டுவதேயாகும். இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய இனவிருத்திச் சுகா தார மற்றும் ஏனைய அவசரகால நிலைச் சுகாதார உபகரணங்களின் முக்கியத்துவம் எங்குமே காணப்பட்டது. அவை இல்லையென்றால் அனேக அவசர கால நிலைச் சுகாதாரத் தேவைகளுக்கு, உரியதான பல்வகைப் பதிலிறுப்புக்களுக்குச் சாத்தியப்படாமலே போயிருந்திருக்கும். இத்தகைய உபகரணத் தொகுதிகளின், பரந்த அளவிலான முன் ஏற்பாட்டு நிலை, அத்தியாவசியமானதென்பதுடன் அவற்றைப் பயன்படுத்தத் தேவையான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய அணிகளுக்கான பயிற்சியுடனும் இணைந்தும் செல்ல வேண்டும். சுனாமியின் பின்னான காலத்தில் தயார் நிலையில் இருந்த தாய் - சேய் உபகரணப் பொதிகள், தேவைப்படும் மக்களுக்கு வினியோகித்தது கூட மிகப்பெரிய பிரயோசனமாக இருந்தது. உள்ளூரில் வாங்கக்கூடிய மூலப்பொருட்களை வைத்துத் தயாரிக்கப்பட்டனவாக இப் பொதிகள் இருந்ததுடன், ஒரு கௌரவமான வாழ்வை கொண்டு நடாத்துவதற்கு அவசியமான தேவைப்பாடுகளுக்கென பெண்களுக்கு வழங்கப்பட்டும் இருந்தன.

அனேக சந்தர்ப்பங்களில் மக்களின் தண்ணீருக்கான உடனடித்தேவை, பேண்தகுநிலையற்ற நேர் தலையீடுகளுக்கூடாகப் பூர்த்தி செய்யப்படுகின்றன. நிறுவனங்களால் அறிமுகம் செய்யப்பட்ட உவர் நீர்ச்சுத்திகரிப்பு சாதனங்கள் பழுதடைந்து வருகின்றன. திறந்த நிலக்கிணறுகளின் உயர் உவர் நிலை அளவு கையாளப்பட வேண்டிய ஒரு பெரிய நீண்டகாலப் பிரச்சனையாகும். இலங்கையில் மாத்திரம் 12,000 கிணறுகள் உவர் நீர்த்தன்மைக்கு மாறிவிட்டன. அத்துடன் ஏராளமான கிணறுகளின் உள் நீரூற்று உவர் நீரின் உள்வருகையால் நிரந்தரமாகவே பாதிப்படைந்துள்ளது. நன்னீர், கடல் நீர்ச்சமநிலையானது மீண்டும் சமநிலைக்குவர நீண்டகாலம் பிடிக்கும். இப்படியான முறைக்கு ஏராளமான மழை வீழ்ச்சிக் காலங்கள் கூடத் தேவைப்படலாம். உவர் நீரை நன்னீராக்கும் உயர்தொழில் நுட்பப் படிமுறையை சில வெளி நிறுவனங்கள் அறிமுகம் செய்துள்ளபோதிலும் அவை நடைமுறைச் சாத்தியத்துக்குப் பொருந்தாதவையாகும். அதாவது செலவு ஈடுசெய்வது என்பது கடினமென்றாலும் உள்ளூர் சமூகங்கள் இத்தகைய தொழில்நுட்பக் கருவிகளைப் பராமரிக்கும் பொறுப்பேற்க இயலாத நிலையினாலும் இம்முயற்சி நடைமுறைக்குகந்ததல்ல.

சட்டபூர்வச் பிரச்சினைகளின் சிக்கல் வாய்ந்த தன்மை போதுமான அளவு புரிந்து கொள்ளப்படவில்லை. சுனாமி பாதித்த நாடுகளில் உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களுக்கும் காணமற்போனோர் எனப்பவர்களுக்குமிடையிலான சட்டபூர்வ வேறுபாடானது, குறிப்பாக கணவன் காணமற்போனதால் விதவையாக்கப்பட்டவர்கள் மீது குறிப்பிடத்தக்க சிக்கல்களைக் கொண்டுவரலாம். அனேக நாடுகளில், பேரழிவுத் தாக்கமானது, வீட்டு அத்திவாரத்தைத் தானும் இனம் காணமுடியாத அளவுக்குச் செய்துள்ளதுடன் அவர்களது இருப்புக்கான ஆவணங்களை இழந்து போகவும் செய்துள்ளது. மாலை தீவில், கல்விச் சான்றிதழ்களில் இழப்பானது இளம் பிள்ளைகளின் மன அழுத்தத்துக்கான பிரதான மூலகாரணியாக உள்ளது.

## தம்முடன் ஏற்றுச் சேர்த்துக்கொண்ட குடும்பங்களை மறக்கவேண்டாம்.

சுனாமியைத் தொடர்ந்து நிவாரண மீள்கட்டுமான முயற்சிகள், இடம்பெயர்ந்தோரின் சுகாதார, சமூகத் தேவைகளுக்கு உரியமுறையில் முன்னுரிமை கொடுத்தன. இருப்பினும், இடம்பெயாந்தோருக்குப் புகலிடம் கொடுத்துவரும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான குடும்பங்களின்



பண்டா ஆச்சேயில், ஓர் உள்ளக இடம்பெயர் முகாமில் சின்னம்மைத் தடுப்பூசி ஏற்றப்படும் 15 வயது பற்றியா

தேவைகள் மட்டில் போதுமான அளவு கவனக்கணிப்பு இருக்கவில்லை. குறிப்பாக மாலைதீவு, இலங்கை, ஆச்சே மக்கள் தமது வீடுகளுக்குள் இடம் பெயர்ந்தோருக்கு புகலி டமும் விருந்தோம்பலும் கொடுத்ததில் பெருமை கொள்கின்றனர். இவ் உதவி கொடுக்கப்படவில்லையென் றால், உள்ளக இடம்பெயர்ந்தோரின் கஸ்டங்கள் கணி சமான அளவு மிகமோசமான நிலை- யை அடைந்திருக்கும். பொறுப்பேற்ற குடும்பங்கள் படும் கஸ்டங்கள் குறிப்பிடத்தக்க அளவு சுமையாக இருந்தபோதும் அவர்கள் பொறுமை காப்பது நம்பமுடியாத அளவு உயர் வாயுள்ளது. அவர்கள் தமது குடும்பம் பயன்படுத்தும் அறை, உணவு, ஏனைய வளங்களைப் பகிர்ந்துகொள்வதுடன் தமது அந்தரங்கங்களையும் இழந்து, தமது சொந்த வாழ்க்கை குறுக்கீட்டுக்கு ஆளாவதையும் காண்கின்றனர். இடம்பெயர்ந்தவர்களது மீள்குடியமர்வு எவ்வளவு தூரம் தாமதமாக்கப்படுகின்றதோ, எவ்வளவு தூரம் ஏற்றுச் சேர்த்துக் கொண்ட குடும்பங்கள் தொடர்ந்தும் அவர்களுக்கு உதவவேண்டி இருக்கின்றதோ, அவ்வளவு தூரம் ஏற்றுச் சேர்த்துக் கொண்ட குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதின்மட்டில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனென்றால் மீட்சி என்பது அவர்களுக்கும் ஜீவாதாரமானது.

ஏற்றுச் சேர்த்துக் கொண்ட வீடுகளி லும் தற்காலிக உறைவிடங்களிலும் காணப்படும் அளவுக்கதிகமான ஆள் நெருக்கமானது, பல்வகைச் சுக- தாதார, சமூகப்பிரச்சனைகளுக்கு இட்டுச் செல்லலாம். இன்றுவரை, இவ்வாறானவை தடுக்கப்பட்டுவருமாற்போல தோன்றுகிறது. ஆனால் எவ்வளவுதூரம் இச்சூழ்நிலை நீட்டப்பட்டுக்கொண்டு போகிறதோ அவ்வளவு தூரத்துக்கு அப்பிரச்சனைகள் எழ வாய்ப்பும் அதிகரிக்கிறது. மிதமிஞ்சிய ஆள் நெருக்கடிப் பிரச்சனையைத் தற்காலிக வீடுகளைப் பாரியளவில் விரைவாக அமைப்பதன் மூலம் தீர்க்கமுற்படும்போது, நீர், மலசலகூட தேவைகளின் மட்டில் கூடிய கவனக் குவிப்பு அவசிமாயுள்ளது.

இயற்கை பேரனர்த்தத்தின் ஒரு பிரதான அம்சம், தமது உடல் உள நலத்தின் மீதான உடனடியாகத் தென்படாததும் அடைவதில் சிக்கல் உள்ளதுமான உளச் சமூகத்தாக்கமாகும். சுனாமி யால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குறு- கிய மற்றும் நீண்டகாலத் தேவைகளைப் புரிந்து கொள்ளலும் பதிலிறுத்தலும் அத்தியாவசியமானது. அத்துடன் சமூக மீள்கட்டுமானத்தில் அவர்களது பங்கேற்புக்கான கொள்தகுதிறனைத் தீர்மானிக்கவும் உதவும். பொதுச் சுகாதாரத்துக்கு பாரம்பரியமாக கொடுத்து வரப்பட்டுவரும் தாழ்மட்டக் கவனமும், இத்துறையில் மிகக்குறைந்தளவிலானவர்கள் பயிற்றப்பட்டதுமான சூழ்நிலையில், ஆரம்பச் சுகாதார பாரம்பரிப்புப் பணியாளர்களையும், சுனாமிக்குப் பின்னான சமூக உளவியல் பிரச்சனைகளைக் கண்டுணர்ந்து பதிலிறுக்க ஏனையோரையும் ஆயத்தம் செய்ய ஒரு பாரிய உந்துதலைக் கொடுக்க வேண்டி உள்ளது.

சமய நம்பிக்கை என்பது சுனாமி யில் உயிர்பிழைத்தோரால் காட்டப்பட்ட மீளும் தன்மையின் முழுமையான ஒரு அங்கமாக உள்ளது. சமயத் தலைவர்கள் மனச்சமாதானத்தை மாத்திரமல்ல, நடைமுறைத் தகவல்கள் சமூக ஒருங்கிணைவுக்கான கவனக் குறிப்பு போன்றவற்றையும் வழங்கி உள்ளனர். உதவி வழங்குனர்கள், தமது பாத்திரத்தை மிகப் பரந்த அளவில் மதிக்கும் தேவை உள்ளது. மறுபக்கத்தில், நிவாரண உதவி நிறுவனங்கள் தமது சொந்தச் சமயத்தைப் பரப்புவது பற்றியும் பல அறிக்கைகள் உள்ளன. இது பல நாடுக- ளில் குறிப்பிடத்தக்க அளவு பல்வேறு குழப்பங்களையும் பதகளிப்பையும் உருவாக்கி உள்ளன. மனிதநேயப் பணி யில், இத்தகைய சமயக் நிறுவனங்கள் இத்தகைய பங்கினை வகுக்க அனுமதிக்கப்படவேண்டுமா என்ற வினாவும் தொடுக்கப்பட்டுள்ளது.

## பரிந்துரைகள்

கருத்தரங்குப் பங்குபற்றுனர்களால், அழுத்திக் கூறப்பட்ட பிரதான பேரனர்த்தத் திட்டமிடல் பிரச்சனைகள் வருமாறு:

- வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளூர் கொள்தகுதிறனையும், மீளும் திறனையும் செல்லாததாக்காமல் பலப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.
- அரச அதிகாரிகளும் உள்ளூர் சமூகங்களும், பெண்களை குறிக்கப்பட்ட அபாயத்துக்குட் படுத்தும் காரணிகள் மட்டில் விழிப்புணர்வு கொண்டவர்களாக மாறவேண்டும்.
- களத்துக்கு அனுப்பப்படும் அவசர கால நிபுணர்கள், உரிய திறன்களைக் கொண்டிருப்பதையும் (இப்படி ஒருபோதும் நடப்பதில்லை) தேசிய அதிகார பீடத்திடமிருந்து அறிவுறுத்தல்களை எடுக்க ஆயத்தமாக இருப்பதையும் உறுதிப்படுத்த, நிதி வழங்குனர்கள் முயல வேண்டும்.
- முன்னர் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட சுனாமி பாதித்த பிராந்தியங்களில், பயனாளிக- ளால் நம்பப்படவேண்டிய இராணு- வப் படைகளின் கொள்தகுதிறன் வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்களது மேலாண்மைப் பாத்திரம், தங்கி வாழும் தன்மையை உருவாக்குவதுடன் தமது சுயதீர்வுகளை வைத்துக்கொண்டு சமூகங்கள் இயங்குவதையும் தடுக்கவல்லது.
- ஐநாவின் நிதிக்கான அவசர விண்ணப்பம், உடனடி வேலைத்திட்டங்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்படவும் செலவிடப்படவும்

கூடாது. பொதுச்சேவைகளை மீள் உயிர்ப்பூட்டுவதற்கான நீண்டகால அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குச் செலவிடப்படும் வண்ணம் இலகுபடுத்தி புதிய நடைமுறைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

- இனம் காணப்பட்ட தேவைகளுக்கு மருத்துவப் பொருட்கள் பொருத்தமானவை என்பதையும், அவை எங்கே போகின்றன எனும் தடத்தையும், அத்தகைய விபரங்களையும் நிதி வழங்குனர்கள் பயனாளி நாடுகளுக்கு வழங்கப்படுவதை அவர்களாகவே உறுதிப்படுத்த வேண்டும்.
- நிதி வழங்குனர்கள் ஆயத்தமற்ற நிலைக்குள் அகப்பட்டுள்ளது போன்று தோன்றுவதுடன், உதவிகள் மிக வினைத்திறனுடன் வினியோகிக்க ப்பட்டிருக்கக்கூடிய சில பல்தேசிய ஒழுங்கமைப்புக்கள் பற்றியும் அறிந்திருக்கவில்லை.
- பயனாளி நாடுகளுக்கு நிதிவழங்கும் நடைமுறைகள் பற்றி நிதி வழங்குனர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும். நிதிகள் உறுதியளிக்கப்பட்டதும் அவை தாமதமின்றி உடனடியாக வந்துவிடும் என பல அரசாங்கங்கள் எண்ணுகின்றன.
- மரம் நடுகை, அடர்த்தியான காடுகள், சதுப்புநிலத் தாவரங்களின் பாதுகாப்பு என்பன எதிர்கால சுனாமிகளுக்கெதிரான தடைகளைக் கொடுக்கும் வண்ணம் மேம்படுத்தப்படுதல் வேண்டும்.
- ஸ்பியர் பிரமாணங்கள் முக்கியமானதாக இருக்கின்ற போதிலும், சதாரண உள்ளூர் சமூகங்களுக்கு அவற்றை அறிமுகம் செய்வதினூடாக, உள்ளூர்-தேசிய கொள்தகுதிறன்களுக்கப்பால், யாதார்த்தத்துக்குப் புறம்பான எதிர்பார்ப்புக்களை அவர்களிடையே உருவாக்கலாம் என்பதை விளங்கிக்கொள்ளும் தேவை உள்ளது.
- மகப்பேற்றுப் பராமரிப்பு, தாய்ப்பாலூட்டல், குடும்பத்திட்டமிடல், இளவைப் பருவ பாலியல் சுகாதாரம் சார்ந்த தகவல்கள், இனவிருத்திச் சுகாதார உபகரணப் பொதிகளின் முன் ஏற்பாடு, முன்நிலை எடுத்தல் போன்றவற்றை பாதுகாத்தலிலும் முன்னேற்றுவதிலும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- ஒரு பாதுகாப்பு மையமாகவும், வசதிகளடங்கிய நிலையமாகவும், பல்நோக்கு பொதுக்கட்டங்களை ஒதுக்குதல் அவசியம்.

*இந்தோனேசியாவில், நோயாளிகளுடன், YAKKUM அவசரகாலப் பிரிவின் வைத்தியர் சாரி முட்டியா திமுர்*

சுனாமியானது, எவ்வாறு சர்வதேச சமூகம் முன்னைய பேரனர்த்தங்களில் இருந்து கற்றுக் கொண்டவைகளை மறந்துவிடமுடியும் என்பதை மாத்திரமல்ல, எவ்வாறு நாடுகள் பேரனர்த்தங்களைக் கையாளச் சமூகங்களை ஆயத்தம் செய்வதில் கவனம் செத்தவில்லை என்பதையும் கூட எமக்கு நினைவூட்டி இருந்தது. திட்டங்கள் தீட்டப்பட்டிருந்த போதிலும்கூட, பேரனர்த்தம் தாக்கும்போது அவற்றைப் பயன்படுத்தக் கூடிய நிலையில் இருந்தவர்களுடன், அவை பகிரப்படவில்லை. எதிர்காலத்தில், பேரனர்த்த ஆயத்தத்தை ஒழுங்கமைப்பதில் மேலும் அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது. அத்துடன் உள்ளூர் சுகாதாரம், சமூக ஒழுங்கமைப்புக்கள் என்பவற்றின் முழுமை நிலைக்கு இட்டுச் செல்லும், தடுப்பு முன்னெடுப்புக்கள் என்பவற்றுடன் அவற்றை முன்னெடுக்கும் பொறுப்புவாய்ந்தவர்கள் ஒவ்வொருவரும் அவற்றைப் புரிந்துகொள்ளச் செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

சுனாமி மறக்கப்படுவதற்கு முன், பரிமாற்றப்படக்கூடிய நோய்களின் கட்டுப்பாடு, இனவிருத்திச் சுகாதாரம், உளச்சமூக ஆதரவு, வினியோகம் - சேவைகள் ஒழுங்கமைப்பு, கண்காணிப்பு போன்ற துறைகளில் கற்ற பாடங்களை மீளாய்வு செய்தல் முக்கியமானது. பொதுச் சுகாதாரம், பேரழிவைக் குறைக்கும் திட்டம் என்பனவற்றின் பயன்பாடு, அவற்றை அறிந்து அவற்றின் ஆயத்தத்தில் பங்குகொள்ளும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே உள்ளன. மத்திய அரசாங்கங்களில் இருந்து உள்;ர் சமூகங்கள் வரை, எல்லாத் தரப்பாரும் தொடர்ச்சியாக திட்டங்களை மீளாய்வு செய்வதிலும் பதிலிறுப்புக்களை ஒத்திகைசெய்து பார்ப்பதிலும் தொடர்ப்புபடுத்தப்பட வேண்டும்.

***மனுவல் கார்பல்லோ, இடம்பெயர்வு மற்றும் சுகாதாரத்துக்கான சர்வதேச நிலையத்தின் இயக்குனராவார் (11 Route du Nant d'Avril, CH – 1214, Geneva, Switzerland) பிறயன் ஹீல் அந்நிலையத்தின் தகவல் அதிகாரியாவார் மின்னஞ்சல் : mcarballo@icmh.ch; bheal@icmh.ch மாலைதீவு கூட்டத்தைப்பற்றிய அறிக்கையை (தாய்வான் சர்வதேச சுகாதார நடவடிக்கை நிலையத்தால் நிதி உதவி அளிக்கப்பட்டது) ICMH இன் பின்வரும் இணையத்தளத்தில் காணலாம் www.icmh.ch***


Emily Will/MCC/ACT International

# மிகப் பாரிய நிலத்திருட்டு

ஸ்கொட் லியுகி

*சுனாமியானது, பேரனர்த்தத்துக்குப் பின்னான மீள்கட்டுமானங்களில் ஒரு உரிமைகள் - மைய அணுகுமுறைக்கான தேவையை நினைவூட்டியுள்ளது. மிகச் சிக்கலானது அல்லது செலவுகூடியாதன ஒரு பக்கத்தில் தூக்கி வீசுவதைக்காட்டிலும், வீடமைப்பு, நிலம், சொத்துரிமை என்பன பேரனர்த்தத்துக்குப் பின்னான திட்டத்தின் இதயத்தில் செருகப்படுமாகில், அது வெற்றி பெறும் என்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். இந்த உரிமைகள் கவனத்திலெடுக்கப்படாமலோ அல்லது விலக்கப்பட்டு ஒரு ஒழுங்கமைப்பு ரீதியாக மீறப்பட்டாலோ, உரிமைகள் மாத்திரம் துஸ்பிரயோகம் செய்யப்படவில்லை மாறாக மீள் கட்டுமானமும் தோல்வியடைகிறது.*

மீண்டுமொரு முறை, சுனாமிக்குப் பின்னான உதவிகள் கொட்டிய வேளை, "இம்முறை வேறுவிதமாகத்தான் இருக்கப்போகிறது, இம்முறை பாதிக்கப் பட்டவர்களைத் தவற விடமாட்டோம்" எனும் பழைய கதைகளைக் கேட் டோம். ஆறு மாதமாகிவிட்டது, ஏனைய பேரனர்த்தங்களில் இருந்து பாரிய மீட்சியும் மீள்கட்டுமானமும் எந்தவகையில் வேறுபட்டு இருக்கின்றன எனக் கேட்கும் நேரமிது. எது தேவையாக இருந்ததோ அதை பேரனர்த்தத்துக்குப் பின்னான மீள்கட்டுமான முயற்சிகள் அடைந்துள்ளனவா? வீடற்றவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட்டு வாழ்வைத் தொடர்ந்து கொண்டு செல்கின்றனரா? குஜராத், பாம், கோப் போன்ற இடங்களில் பூகம்பம், மத்திய அமெரிக்கா அல்லது கரிபியனில் அடித்த ஹரிக்கேன் சூறாவளி, ஆகியவற்றில் உயிர் தப்பியவர்களைவிட ஆச்சே, மாலைதீவு, இலங்கை, இந்தியா போன்ற இடங்களில் உயிர் தப்பியவர்கள் சிறப்பாக இன்றுள்ளனரா? உயிர் தப்பியவர்கள், தமது உரிமைகளுக்கமைவாக நடத்தப்படுகின்றனரா? வேறுவகையில் தமது இலக்குகளை அடையமுடியாத அரசியல் முன்னெடுப்பாளர்கள், அதனை அடைய பேரனர்த்தத்தைப் பயன்படுத்துவதால், பாதிப்புற்றோர் இன்னும் பாதிப்புற்றோராக மாற, அவர்களது மனித உரிமைகள் ஓரம் கட்டப்பட்டுள்ளனவா?

## நிலம் இழந்து பெறப்பட்டுள்ளது

ஒவ்வொரு பேரனர்த்தத்திலுமே, உயிர்களும் ஜீவனோபாயமும் அழிக்கப்படுகின்றன, பொருளாதாரக் கஸ்டங்கள் ஈருடகத்தன்மை பொருந்தியவையாக இருக்கின்றன, சாதாரண வாழ்வில் கடுமையான இடையூறு உறுதிப்படுத்தப்படுகிறது. ஆனால் எல்லாப் பேரனர்த்தங்களுக்கூடாகவும் இழை-யோடும் பொதுப் பயமுறுத்தல் இருக்கவே செய்கிறது. வெற்றிகரமான மீள்கட்டுமானம், மீள் நிவாரணம், மீள் புனருத்தாரணம், சீர்படுத்தல் ஆகியவற்றின் வெற்றிக்கு அவசியமானதொன்றை தன்னகத்தே கொண்டிருப்பது நிலம், வீடு, சொத்துசார்ந்த (எச்.எல்.பீ) உரிமைகளாகும்.

மானுடச் சேதத்தைவிட, சட்டப்படி வெளியேற்றுமாப்போன்ற சாக்கு, நிலப்பறிப்பு, நியாயப்படுத்த முடியாதா நிலச் சுவீகரிப்புத் திட்டம், வீடற்றவர்கள் தமது சொந்த காணிகளுக்கும் வீடுகளுக்கும் மீண்டும் திரும்பிச் செல்வதைத் தடுப்பதற்கான வடிவமைக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்றவற்றை சுனாமி வழங்கியது. தாய்லாந்தும் இந்தியாவும் ஏனைய நாடுகளும் மீள் திரும்புதலுக்கான உரிமையை கட்டுப்படுத்தி உள்ளன.

ஆனால் இலங்கையோ மீள் நிர்மாணப் படிமுறைகளுக்கூடாக தனது குடியிருப்பு நிலத் தோற்றத்தை மீள் தோற்றம் கொடுப்பதற்கு முயலும் சுனாமி தாக்கிய நாடாக, அது வெளியே நிற்கிறது.

அரச கொள்கையானது கடற்கரையில் இருந்து 100 மீற்றருக்குள் (சில இடங்களில் 200 மீற்றர்) புதிய கட்டுமானங்கள் அமைக்கப்படுவதை தடை செய்கின்றது. சுனாமி தாக்கியபோது, கிட்டத்தட்ட 500,000 மக்கள் அதாவது தற்போது இடம்பெயர்ந்துள்ளவர்கள் 100 மீற்றர் தடை வலயத்துக்குள்ளேயே முன்னர் வாழ்ந்தனர். கட்டுமான ஒழுங்கு விதி யால் பாதிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு, புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுத்துக் குடியமர்த்த அரசு வாக்குறுதி அளித்துள்ளது. 100 மீற்றருக்குள் இருந்த தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் தொடர்ந்தும் உண்மையான உரிமையா-ளர்களின் சொத்துக்களாக இருக்கும் அதேவேளை (அத்தகைய நிலங்களை அரசுகூட சொந்தம் கொண்டாடமாட்டாது என கூறுகிறது) 100 மீற்றர் சட்டமானது ஆயிரக்கணக்கான மீனவச் சமுதாயத்தை சேர்ந்தவர்களையும் கடற்கரையில் அல்லது அருகில் வாழ்ந்தும் தொழில் புரிந்தும் வந்த ஏனையவர்கை-ளயும் தமது சொந்தக் காணிகளுக்கு திருப்பிச் செல்வதை நிரந்தரமாகத் தடுக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் இதுமட்டில் அதிருப்தியுற்றுள்ளனர் என்பது புரிந்துகொள்ளக் கூடியதே.

கடற்கரையோரங்களையும் எதிர்காலத்தில் ஏற்படவல்ல சுனாமியில் இருந்து முன்னர் வசித்தவர்களையும் பாதுகாக்கும் பேரவல், முற்றுமுழுதாக நியாயமானதாகவும், மனித உரிமைகள் நியமங்களுடன் இணங்கிச் செல்வதாகவும் தென்படலாம். இருந்த போதிலும் இத்தகைய இலங்கைக் கரை யோர குடிசனத்தொகையை மாற்றவல்ல திட்டங்கள், பல திசைகளிலிருந்தும் வரும் விமர்சனங்களுக்குட்பட்டுள்ளது. முதலாவதாக, மக்கள் தாமே இவ்வாறு நகர்வதற்கு விரும்பவில்லை என்பதுடன் தமது முன்னைய வீடுகளுக்கு மீளத்திரும்பவே ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். இரண்டாவது, இலங்கையில் 100 மீற்றர் சட்டம் பற்றி வினைத்திறன்மிக்க கலந்தாலோசனை இல்லை. மூன்றாவது, ஹொட்டல்களுக்கும், பணக்கார சொத்து அபிவிருத்தியாளர்களுக்கும் ஏனைய விசேட சலுகை பெற்ற குழுக்களுக்கும் 100 மீற்றர் சட்டம் அனுமதி அளிப்பதுடன் புறநடைப்பாங்கைக் கொண்டிருப்பது சலு-கைகள் பற்றிய கடுமையான கரிசனைகளை எழுப்பியுள்ளது.

## வீடமைப்பு நிச்சயமின்மை

ஆச்சேயில் அதிகாரிகள், நிரந்தர வெ-ளியிடக் குடியமர்த்தலுக்கு முகம் கொடுப்பதைக் காட்டிலும் தன்னார்வ மீள் திரும்புதல் அடிப்படையில், சொந்த வீடுகளுக்கு மக்கள் செல்வதை அனுமதிக்கும் வண்ணம், தமது கொள்கைகளை குறிப்பிடத்தக்க அளவு மாற்றியுள்ளனர். இதனால் ஆச்சேயினர் புதிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களில் இன்றும் புதிய வீடுகள் அனேகமாக கட்டுப்படவில்லை அல்லது மீள் கட்டுமானப் படிமுறை வேதனை கொள்நிலையில் மிக மெதுவாக இருந்து வருகிறது. நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் சமூக வரைபாக்கத்தின் முக்கிய படிமுறை ஆச்சேயில் இடம்பெற்றுள்ளது. ஆனால் அதிகாரி கள் இந்த அடிமட்டத்திலிருந்து மேல் நோக்கிய முன்னெடுப்பை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனர். இது சிலவேளை உலக வங்கியால் உதவியளிக்கப்படும் "விரைவான உறுதி பதிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின்" ஆளுகைத் தாக்கமாக இருக்கலாம், ஆச்சேயில் இந்நிகழ்ச்சித் திட்டமானது, நிதிமட்டில் மிகத் தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருந்தபோதிலும், மிக மெதுவான தும் பரந்த மீள் கட்டுமானப் படி முறையை துரிதப்படுத்துவதில் உதவுவதற்கு சாத்தியமான முரண்பாடுகளை தூபமிடுவதாகவும் இருக்கிறது.

இலங்கையில், சுனாமி அடித்து 6 மாதங்களின் பின்னும், ஆயிரக்கணக்கான பாதிப்புற்றவர்கள் தற்காலிக கொட்டில்களிலும் கூடாரங்களிலும் வாழ்கின்றனர். பாரம்பரிய கரையோரக் கிராமங்களில் இருந்து நான்கு அல்லது ஐந்து சில சமயங்களில் 14 கிலோ மீற்றருக்கப்பால் புதிய வீடுகளை அமைக்க அரசு திட்டங்களைக் கொண்டுள்ளது என அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. கடலை-லயே ஜீவாதாரமாகக் கொண்ட மீனவக் குடும்பங்களின் ஜீவனோபாயத்தில் பாரிய தாக்கத்தை இது கொண்டு வரப்போகிறது. இலங்கையில் தற்காலிக மீளக்குடியமர்வுப் பிரதேசத்துக்கு வருகை தரும் ஒருவருக்கு, சுனாமியால் பாதிப்புற்றோர் தமக்குத் தேவையான நிரந்தர வீடுகளைப் பெற்றுக்கொள்ள பல வருடங்களுக்குக் காத்திருக்கப் போகிறார்கள் என்ற உணர்வைப் பெறுவது அவ்வளவு கடினமானதல்ல.

மீளக் கட்டும் முயற்சியில் இந்தச் சமூகங்களுடன் நெருக்கமாகத் தொடர் படுவதில் உள்ள தோல்வியானது மேல திகமான விரக்தியைத் தருகிறது. சுனாமி பாதித்த நாடுகள் முழுவதும், பாதிப்புற்ற சமூகங்களின் தீர்மானமெடுத்தல் உள்ளடங்கலாக, மீள்கட்டுமான முயற்சிகள் பொதுவாகவே, உச்சியிலிருந்து அடிமட்டம் நோக்கிய முன்னெடுப்புக்களாகவே இருந்து வருகின்றன. பாதிப்புற்ற தனி மனிதர்கள், குடும்பங்கள், சமூகங்கள் மிக விரைவாகப் பெற்றுக்கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் கூடிய வீட்டுக்கான தீர்வுகளைக் கண்டுபிடிக்கும் முகமாக ஒன்றிணைந்து செயற்பட, பாதிப்புற்ற பிராந்தியங்கள் முழுவதிலுமுள்ள, அரசுகள், சமூகங்கள், நிறுவனங்கள் விசேட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். 2001இல் ஏற்பட்ட பூகம்பத்திற்குப் பின்னான காலப்பகுதியில்




*இலங்கையில், வீடுகள் நிமிர்ந்து நின்ற இடங்கள்*

குஜராத் மானில அரசு செயற்பட்ட விதத்தை அரசுகளும் வெளிநாட்டு நிறுவனங்களும் மாதிரியாகக் கொள்ள வேண்டும். உள்ளூர் சமூகங்களையும் உள்ளூர் நிறுவனங்களையும் மீள்கட்டுமானப் படி முறையை முன்னெடுக்க அனுமதித்ததையும், மானில அரசோ அல்லது தனியார் துறையோ மீள்வீடமைப்பு முயற்சியை பொறுப்பேற்றிருந்தால் நடந்திருக்கக்கூடிய வேகத்தைக் காட்டிலும் மேற்குறித்தவர்களின் முயற்சியால் எவ்வளவு விரைவாக மீள வீட்டுக்குத் திரும்ப முடியுமோ அவ்வளவு விரைவாக பாதிப்புற்றோர் திருப்பியதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

## உரிமைகள் மைய மீள்கட்டுமானம்

இந்த இயற்கைப் பேரனர்த்தத்தில் உட்பதிக்கப்பட்டுள்ள மானு டப் பெருந்துயரானது, உயிர் பிழைத்தோர் தமது இல்லங்களையும் ஜீவனோபாயத்தையும் சமூகங்களையும் மீளக்கட்டியெழுப்ப முனையும் வேளை, அவர்களது மனித உரிமைகளை மீறுவ தன் மூலம் அதிகரிக்கப்படக்கூடாது. எச்எல்பீ உரிமைகள், பேரனர்த்தத்துக்குப் பின்னான ஒழுங்கமைப்பில் மிகப் பிர- தான மான காரணியாகும். அத்துடன் எதிர்கால மீட்சி முயற்சிகளின் முழுமையான அங்கமாகவும் இருக்க வேண்டும். நிவாரண மீள் கட்டுமான முயற்சிகளில், எச்எல்பீ உரிமைகள்சார் வேலைத்திட்டமானது, சுனாமிக்கான பதிலிறுப்பின்மட்டில் எதிர்கால பேரனர்த்தங்களில் கூட அதிகரித்துச் செல்லும் கடினமான கொள்கைகளில் பலவற்றை தவிர்ப்பதற்கு ஏதோ ஒருவகையில் இட்டுச் செல்லும்.

1. **சுயமாக மீள் திரும்புதலுக்கான உரிமை:** பேரனர்த்தங்களின் எல்லா உயிர் பிழைத்தோரும் தாம் முன்னர் வசித்த காணிகளுக்கு எவ்வித பாரபட்சமும் இன்றி சுயமாகத் தன்னார்வத்துடன் திரும்பிவருவதற்கான உரிமையை கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அவர்களது வீடுகள் வாழவோ திருத்தத்துக்குட்பட்டு பின் பயன்படுத்தவோ கூடியனவென்றால் இந்த வீடுகளைத் திருத்தவும், மீளப்பெறவும், மீளவும் உரிமைகொண்டாடவும், மீளவும் வாழவுமான உரிமை மதிக்கப்பட வேண்டும். மீள் திரும்புதலில் ஏதாவது நியாயப்படுத்தப்பட முடியாத கட்டுப்பாடுகள் இருப்பின், அவை சர்வ- தேச சட்டத்தின் கீழ், சட்டத்துக்குப் புறம்பானதாகக் காணப்படும் கட்டாய வெளியேற்றத்துக்கு ஈடாகும்.
2. **போதுமான அளவு இருப்பிட இல்லத்துக்கும் பாதுகாப்பான மீள் திரும்புதலுக்குமான உரிமை:** அனைத்து அனர்த்தங்களையும் தொடர்ந்து, அனைத்துப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், தனிநபர்களுக்கும் சர்வதேச மனித உரிமைகளுக்கமைவாக போதுமானதானதும் இயலுமானதுமான வீடொன்று வழங்கப்படல் வேண்டும். மீள் திரும்புதல், மீள்குடியேற்றம் மட்டில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் ஒப்பந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டு உரியமுறையில் அது வீட்டு, காணிப்பதிவில் பதியப்படல் அவசியம். மீள்நிர்மாணப் படிமுறையின் விழைவாக யாரும் வீடற்றவர்களாக மாறக்கூடாது.
3. **பங்கேற்பு, கலந்தாலோசனை, பாரமட்சமின்மைக்கான உரி மை:** திட்டமிடல், மீள்வருகை, முகாமைத்துவம், மீள் வீடுகளை ஆக்குதல், மீள் குடியேற்றம் போன்றவற்றில் அனர்த்தனத்தால் பாதிக்கப்பட்டவர்களின் முழுமையான பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கு விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்துப் பாதிப்புற்ற சமூகங்களும் எந்த ஒரு வீட்டுத் திட்டத்திலும் கலந்தாலோசிக்கப்படவும், தமது விருப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவும் சமூக – மைய அமைப்புக்களை உருவாக்கி ஊக்கப்படுத்தப்படவும் வேண்டும். வீடு, மீள்நிர்மானம் அதனுடன் தொடர்புபட்ட உள்ளகக் கட்டுமானம் என்பனவற்றினூடாக முன்னாள் குடியிருப்பாளர்கள் அதிலும் குறிப்பாக ஏழை வதிவிடத்தார் மாத்திரம் பயன்பெறுவதை உறுதிப்படுத்த முற்றுமுழுதான பங்கேற்பு, ஒழிவுமறைவற்ற, வகை கூறும் ஒழுங்குமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். அனைத்து மீள் கட்டுமான புனர் வாழ்வு முயற்சிகளும், ஒதுக்கப்பட்ட அல்லது குறிப்பாக இலகு அபாயநிலைக்குட்பட்டவர்களது தேவைகளை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.
4. **தற்காலிக வீடமைப்பு ஆயத்தம் செய்தலில் பாதுகாப்புக்கான உரிமை:** பேரனர்த்தத்தைத் தொடர்ந்து தற்காலிக வீடமைப்பு குடியிருப்புக்களைப் போடு வதிலும் நடத்துவதிலும் சர்வதேச மனித உரிமைகள் பிரமானங்களுக்கு முழுமையாக இணங்குவதாக இருக்க வேண்டும். முகாம் வாசியொருவரின் உறையுள், நீர், உணவு, மருத்துவப் பராமரிப்பு, கல்வி என்பவற்றுக்கான உரிமையை நிறைவு செய்வதற்கு மேலதிகமாக, முகாமானது அதில் வசிக்கும் இடம்பெயர்ந்தவர்களினுடனான முழுமையான கலந்தாலோசனை, ஒத்துழைப்புடன் நிர்வகிக்கப்பட வேண்டும். அவசரகால நிலைசார் உதவிப் பொருட்களோ வசதிகளோ யாரையும் கட்டுப்படுத்துவதற்கும் அடக்குவதற்குமான சாதனமாகப் பயன்படுத்தப்படக் கூடாது. தற்காலிக முகாம்கள் அனைத்தினுள்ளும் உடல் உளப்பாதுகாப்பு, உளச்சுகாதாரம் குறிப்பாக பெண்கள் சிறுவர்களின் இத்தகைய அம்சங்கள் பாதுகாக்கப்படுவதுடன் பாராமரிக்கப்படுதலும் வேண்டும்.
5. **ஜீவாதாரம், சமூகப் பாதுகாப்பு, தண்ணீர், சுகாதாரம் கல்வி என்பனவற்றுக்கான உரிமை:** பேரனர்த்தத்துக்குப் பின்னான உதவி முயற்சிகள் வெறுமனே அவசரகால உதவியையும் தற்காலிக முகாம்கள் அமைப்பையும் நோக்கியதாக சமமற்ற வகையில் திசைப்படுத்தப்படக் கூடாது. மீள் கட்டுமானம், புனர்வாழ்வுக்குக் கிடைக்கும் குறிப்பிடப்படும்படியான வளங்கள், பொருத்தமான வீடுகளைக் கட்டவும், இழந்த ஜீவனோபாயத்தை மீள உயிர்ப்பிக்கவும், சமூகப் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, சமூக வசதிகள் போன்றவற்றுக்கான பொருட்களுக்கும் செலவிடப்பட வேண்டும்.
6. **பரம்பரைச் சொத்துக்கான சம உரிமை:** பாரபட்சமிக்கதும் பெண்கள் பிள்ளைகளுக்கு சமமான சொத்து மாற்றத்தை தடுக்கவல்லதுமான அனைத்துப் பரம்பரைச் சொத்தும் சொத்துரிமைச் சட்டங்களும் அல்லது நடைமுறைகளும் (முறை- றசார் அல்லது முறைசாரா) துருவி ஆராயப்பட்டு சமமாக்கப்படவேண்டும். விதவைகளுக்கு சட்டபூர்வ காணி உறுதிகள் வழங்கப்படுவதுடன் தமது சொந்தப் பெயர்களில் மாற்றப்படவும் வேண்டும். திருமணமான பெண்கள் தமது கணவர் பிள்ளைகளுடன் சொத்து ஆவணங்களில் சமமாக இனம்காட்டப்பட வேண்டும்.
7. **பெண்கள் உரிமைகள்:** பெண்கள் பொதுவாகவே பாரம்பரியமாக உயிர்பிழைத்தலையும் அவர்க- ளது சமூகத்தின் நலன்களையும் உறுதிப்படுத்துவதில் முன்னிலையில் இருந்து வருகின்றனர். இதனால் மேல் வலியுறுத்தப்பட்ட பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மேலதி- கமாக நிவாரணம், மீள் நிர்மானம், புனர்வாழ்வு முயற்சிகளில் பெண்களுக்கு உதவுவதும் பங்கேற்புக்கான அவர்க- ளது உரிமைகளை மதிப்பதும் இன்றியமையாதது.

இந்து சமுத்திரச் சுனாமியானது, அடுத்த பாரிய இயற்கை அல்லது மனி தர் உருவாக்கும் அனர்த்தத்துக்குப் பதிலிறுக்கும் பொறுப்பைப் பெற்றுள்ள, கொள்கை வகுப்பாளர்களுக்கு ஏராளமான படிப்பினைகளைத் தந்துள்ளது. அடுத்த இன்னுமொரு பேரனர்த்தம் ஏற்படும்போது மீட்சிப்படிமுறையில் இன்று நாம் காணும் அரசுகளின் சாதூரியமான சுரண்டல்கள் மீண்டும் ஏற்படாது என நம்பலாம்.

***ஸ்கொட் லியுகி, வீட்டுரிமைகள் மற்றும் சட்டப்படி வெளியேற்றத்துக்கான நிலையத்தின் இயக்குனரும் (COHRE www.cohre.org) சுனாமிக்குப் பின் இலங்கையிலும் மாலைதீவிலும் வீடமைப்பு, காணி, சொத்துரிமைகள் சார்ந்த பிரச்சனைகளில் பணிபுரிந்தவரும் ஆவார். மின் அஞ்சல் : scott@cohre.org COHRE ஆனது, சுனாமி தாக்கிய நாடுக- ளில் மீள் நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்களில் இடம்பெறும் மனித உரிமைகள் துஸ்பிரயோகங்களுக்கான கண்காணிப்பு அலுவலகத்தை அண்மையில் கொழும்பில் அமைத்துள்ளது. தொடர்புகளுக்கு : bret@cohre.org***

# ஏனைய நெருக்கடிகளுக்கான நிதியளித்தலை சுனாமி பாதித்துள்ளதா?

ரொபி லான்ஸர்

ஏனைய அவசரகால நிலைமைகளுக்கான நிதியை சுனாமி திசை திருப்பிவிட்டது என அனேக உதவிப் பணியாளர்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர். இதே மாதிரியான பயம் எப்போதெல்லாம் பாரிய அவசர காலநிலை எழுகின்றதோ அப்போதெல்லாம் எழுந்துள்ளது. ஆனால் அவை நியாயப்படுத் தப்படுகின்றனவா?

இக்கட்டுரையை வரையும் ஜுன் 03 இல், பிரதான ஐ.நா. நிறுவனங்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் நிகழ்ச்சித் திட்டங்களை கோடிட்டுக்காட்டிய ஐ.நா. வின் அவசர விண்ணப்பமும் திரட்டிய விண்ணப்பங்களும் 41% நிதியை பெற்றன என ஐ.நா.வின் நிதித் திட்ட சேவை[1] அறிவித்து. இந்து சமுத்திர நிகழ்ச்சித் திட்டம் சமநிலைப்பாங்கிலிருந்து விலகியபோது, நிதி வழங்கல் அற்பமாக 25%க்கு கீழிறங்கியது. அதேபோல் கடந்த வருடம் டாபூர் மாநிலத்துக்கு உலக கவனம் திரும்புவதற்கு முன்னர், அவசர விண்ணப்பத்துக்கும் திரட்டிய விண்ணப்பங்களுக்கும் 23% க்கு நிதி உதவி அளிக்கப்பட்டன. ஒரே பார்வையில் நோக்கின், சென்ற வருடத்தைவிட இவ்வருடம் நிதியுதவி சிறிது வேறுபட்டதாக தென்படுகிறது. அத்துடன் ஜேர்மனி, ஜப்பான், நோர்வே, அமெரிக்கா போன்ற பிரதான நிதி வழங்கும் நாடுகள் ஏனைய பிரச்சினைகளுக்கு நிதி வழங்குவதில் சிறிது பரவாயில்லை எனலாம். அதே வேளை ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்ததை விட உயர்வாக இருக்கின்றன. உண்மையில் ஏனை பிரச்சனைகளுக்கு நிதி வழங்கல் ஒரு நல்ல செய்தியாக உள்ளது போலுள்ளது. அல்லது அவ்வாறு தென்படுகிறதோ?

ஏனைய பிரச்சினைகளுக்கு நிதியளிப்பதை சுனாமி திசை திருப்பவில்லையென முடிவுக்கு வருமுன்னர், 2004 ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வருடத்தில் கிடைக்கக்கூடிய மனித நேய நிதியின் அளவை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். 2005 இல் இன்றுவரை ஏராளமான பணம், உதவி நிறுவனங்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருந்ததற்கு சுனாமிக்கு நன்றி. அதேவேளை சுனாமி நிதியை கவனத்தில் எடுக்காத போதிலும்கூட, 2004 இல் இதே காலப்பகுதியில் கிடைக்கக்கூடியதாயிருந்த 697 மில்லியனுடன் ஒப்பிடும் போது இவ்வருடம் 847 மில்லியன் டாலர் என்பது அதிகமானதே. அதிகரித்து வரும் கவனிப்பாரற்ற பல்வேறுபட்ட அவசரகால நிலைமைகளுக்கு ஆக 417 மில்லியன் டாலர்களை மாத்திரம் விட்டுவிட்டு, இவ்வருடத்தின் மொத்தத்தில் அரைவாசிப் பங்கு சூடானுக்குரியதாகியுள்ளது. கடந்த வருட இதே காலப் பகுதியை விட 2005 இல் முதல் 5 மாத காலப்பகுதியில், மத்திய ஆபிரிக்க குடியரசு, சாட், செச்னியா, எரித்திரியா, கவானா, சோமாலியா, மேற்கு ஆபிரிக்கா போன்ற நாடுகள் குறைந்த பணத்தை பெற்றுள்ளன. அங்குள்ள மக்கள் ஒரு வருடத்துக்கு முன் இருந்ததைவிட மிக மோசமாகவே இன்றுள்ளனர். 2005க்கான 21 விண்ணப்பங்களில் சராசரி நிதி வழங்கல் 25% மாத்திரமே இருக்க, மொத்த விண்ணப்பங்களில் 11, 20% க்குக் குறைவான நிதியை பெற்றன. 1992 இல் இருந்து, இத்தகைய விண்ணப்பங்கள் வருடத்தை பூர்த்திசெய்யும்வேளை சராசரியாக 67% நிதியை மாத்திரம் கொண்டிருக்க நிதி வழங்கல் நேரக்கணிப்பு சார்ந்த சுனாமியுடன் தொடர்புபட்ட மிக மோசமான பிரச்சனைகளும் உள்ளன.

நல்ல கொள்கைகளுக்கும், நடைமுறை பின்பற்றல்களுக்கும் ஒழுகும் சில முக்கிய அரசாங்கங்களால் முன் எடுக்கப்பட்ட 'நல்ல மனித நேய நிதிவழங்கு தன்மை'யின்[2] மட்டில் இவ்வருடம் 2ம் வருடமாக உள்ளது. இவற்றில் ஒன்று, விண்ணப்பங்கள் வினியோகிக்கப்பட்டதும் உடனடியாக பணம் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்பதை எமக்கு கூறுகிறது. சுனாமிக்கான நிதிசார் பதிலுறுப்பு உண்மையில் மிக விரைவாக இருக்கும் பொழுது ஏனைய பிரச்சனைகளுக்கான நிதி வழங்கல் வழமைபோல மெதுவாகவே உள்ளது. நிதி வழங்குபவர்கள் சுனாமியில் கவனம் குவித்ததுடன் ஏனைய பிரச்சினைகளுக்கு கவனத்தை செலுத்தத்தக்க போதியளவு அலுவலக வளங்களை குறைவாக கொண்டிருந்தனர். சுனாமி அல்லாத ஏனைய பிரச்சினைகளுக்கு முன்மொழிவு அடிப்படையில் நிதியளித்தல், ஒப்பந்தங்களை செய்வதற்கான பொறுப்பேற்பு என்பன அவர்கள் முன்னர் செய்ததை காட்டிலும் தாமதமாகவே இடம்பெறுகின்றன என்பதுகூட ஓர் பதில் விளைவேயாகும்.

சில சம்பவங்களில் புதிதாகவும், மேலதிகமாகவும் வாக்களிக்கப்பட்ட சுனாமி காசு உண்மையில் கிடைக்கக்கூடியதாக இல்லை. எனவே பல நிதி வழங்குனர்கள் ஏனைய அவசரகால நிலைமைகளுக்கென்று முன்னர் ஒதுக்கப்பட்டவற்றை, சுனாமி பணமாக ஒதுக்க பல குறுக்கு வழிகளை கையாண்டனர். அத்தகைய சம்பவங்களில் நிதி அமைச்சர்கள் நிதிகளை ஈடு செய்ய வாக்குறுதி அளித்தனர். ஆனால் அதற்கு அதிக காலம் எடுக்கக்கூடிய சட்ட ரீதியான செயற்பாடுகள் தேவைப்படலாம். அந்த வகையில் சுனாமி சில நிதி வளங்களை திசை திருப்பியதுடன் ஏனைய பிரச்சனைகள் உள்ள பிராந்தியங்களில் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு கிடைக்கும் பணத்தை காலதாமதப்படுத்தியது. பின்லாந்து போன்ற அரசுகள் இவ் ஆண்டுக்கென உருவாக்கப்பட்ட உதவி பட்ஜட்டை ஏற்கனவே கொண்டுள்ளதுடன் அது அதிகரிக்கப்பட மாட்டாது என அறிவித்தும் உள்ளனர் என்பது சுனாமியால் வந்த தாக்கத்தை இன்றும் அதிகரிக்கச் செய்துள்ளது. சுனாமிக்கு பயன்படுத்தப்படும் பணம் என்பது ஏனைய பிரச்சினைகளுக்கு பணம் கிடைக்கக்கூடியதாக இல்லை என்பதையே கருதுகிறது.

சுனாமிக்குப் பின்னர், உதவி நிறுவனங்கள் விரைவாகவும், தாராளமனதுடனும் செயல்பட பொதுமக்களிடமிருந்தும் உள்ளார்ந்த விதத்திலும் பெரும் அழுத்தத்துக்குட்பட்டனர். கிடைக்கக்கூடிய பயிற்றப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை வரையறைக்குட்பட்டுள்ளதுடன், பல ஐ.நா. அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முக்கிய கள நடவடிக்கைகளில் இருந்து தமது வழங்களை தலைமையகங்களுக்கு, சுனாமிக்காக பணியாற்ற திசை திருப்பி உள்ளனர். சென்ற வருடத்தை விட இந்த வருடத்தின் இறுதியில் முதல் நெருக்கடியாக திகழாத பிராந்தியங்களில் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை பல நிறுவனங்கள் கையளித்துள்ளன என்பது இதன் பின் விளைவுகளில் ஒன்றாக திகழ்கிறது. உண்மையில் சென்ற வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆபிரிக்காவின் சில நாடுகளுக்கான பெறப்பட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை இவ்வருடத்தில் குறைவாக உள்ளது என ஒரு பிரதான நிதி வழங்குனர் கூறியுள்ளார்.

## நிறைவு

சுனாமிக்கு ஒத்துக்கொள்ளப்பட்ட பணம் என்பது ஏனைய பிரச்சினைகளுக்கு இல்லை என்ற நிலையில், இந்து சமுத்திர பேரனர்த்தம் ஏனைய பிரச்சினைகளுக்கான நிதியளித்தலை திசை திருப்பியுள்ளது என்பதை கூட்டிக் கழித்துப் பார்த்தால் அதில் ஒன்றுமில்லை என்ற கருத்தையே முன்மொழிகிறது. இதை விட இந்தச் சூழ்நிலையானது சிக்கல் வாய்ந்தது. உதாரணமாக அனேக நிதி வழங்குனர்கள் சுனாமி நிதியளித்தல் என்பது மேலதிகமான பணம் என்றும் ஏனைய பிரச்சினைகளில் தாம் செலவுசெய்தது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உண்மையில் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஒட்டு மொத்தமாக, இந்து சமுத்திர பேரனர்த்தம் ஆகக்குறைந்தளவு தற்காலிகமாகவேனும், நிதி வழங்குனர்களினதும் உதவி நிறுவனங்களினதும் ஏனைய பிரச்சினைகளுக்கு பதிலிறுப்பதை பாதித்துள்ளது. இச் சூழ்நிலை தலைகீழாக மாறக் கூடியதென்பதுடன் உதவிப் பணி சமூகத்தால் ஒருமுகப்படுத்தப்பட்ட செயல்பாட்டை வேண்டியும் நிற்கிறது. முன்குறித்து கணிப்பிடவல்லதும் உரிய நேரத்துக்குகந்ததும் தேவை மைய நிதியளித்தலுக்குமான அழைப்பு எப்போதும் பெறுமானம் மிக்கது. பிந்திய நிதியளித்தல் குறைவான நிதி அளித்தல் ஆகியனவற்றின் பின் விளைவுகள் பற்றி உதவி வழங்கும் நிறுவனங்கள் நிதி வழங்கு நிறுவனங்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும். கைவிடப்பட்ட அல்லது தாமதமான நிகழ்ச்சித் திட்டங்களால் ஏற்படும் மனித அவலங்களின் பின் விளைவுகளை விபரிக்கும் தரவுகள் தகவல்கள் அவசியமானவை. தமது சுனாமி பணம் வேறானது, ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டதல்ல என்றெல்லாம் கூறும் அரசுகள் அது உண்மைதானா என நிருபிக்குமாறு கேட்கப்பட வேண்டும். சட்டமியற்றுபவர்களும் நிதி அமைச்சர்களும் மனித நேய பணிக்கான பட்ஜட்டுக்களை விரைவாக மாற்றியமைக்க செயல்பட வேண்டும். அவசரகால நிவாரணத்தில் காலக்கணிப்பு என்பது மிக முக்கியம். 2005 ஜுன் இறுதிப்பகுதியில் தனது விண்ணப்பங்களின் தற்போதைய நிலை பற்றி கலந்துரையாட ஜெனிவாவில் ஐ.நா ஒரு கூட்டத்தை கூட்டவுள்ளது. உலகின் மிகவும் பிரதிகூலம் மிக்க பிரதேசங்களில் பேரனர்த்தத்தாலும் யுத்தத்தாலும் தாக்கப்பட்டுள்ள மக்களுக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதில் கூடிய அழுத்தமும் கவனமும் கொடுக்கப்பட உள்ளன. பாரிய மனித நேய சமூகத்தின் உடனடி கவனம் இதற்கு தேவைப்படுகிறது.

***ரொபி லான்ஸர் முன்னை நாள் அகதிகள் ஆய்வு நிலைய வருகைதர உடனிருப்பாளரும் ஜெனிவா ஓ. சி. எச். ஏ. இல் திரட்டிய விண்ணப்பப் படிமுறை முறைக்கான தலைவரும் ஆவார். சுய தற்றுணிவில் இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. மின் அஞ்சல் : lanzer@un.org***

1. www.reliefweb.int/fts
2. www.reliefweb.int/ghd

# ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் (DFID) சுனாமி பதிலிறுப்பை மீளாய்வு செய்கின்றது

டேவிட் ஹொரோபின்

ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் (**DFID**) சுனாமிக்குப் பின்னான காலத்தில் உடனடியாக அண்ணளவாக ஒத்துக்கொண்ட 68 மில்லியன் பவுண்கள் நிவாரண உதவிக்கான வேலைத்திட்டத்தை தற்போது திட்டமிட்டுள்ளது. தனது மனித நேயப் பதிலிறுப்பு மீளாய்வு பூர்த்தியாக்கப் படாதபோதிலும் முன்கூட்டிய பாடங்கள் பெறப்பட்டுள்ளன.

தென்கிழக்காசிய பிராந்தியத்தை மார்கழி 26 இல் உலுக்கிய சுனாமிக்கு பிரித்தானிய அரசின் பதிலிறுப்பை டிபிட் (**DFID**) வழிநடத்தி உள்ளது. முரண்பாட்டுக்கும் மனிதநேய அலுவலகத்துக்குமான திணைக்களத்தின் (ஊர்யுனுமுவு) பணிக்குழுவின் பிரதான அங்கத்துவ அலுவலகர், இலண்டனில் இருந்து புறப்பட்டு மார்கழி 26ம் திகதி மாலையே கொழும்பை வந்தடைந்தார். டிபிட் அதிகாரிகளை பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தில் சந்தித்துவிட்டு, ஐநா அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின், மிக மோசமாக பாதிக்கப்பட்ட கிழக்கு கரையோரமான அம்பாறைக்கு உடனடியாக சென்று, இலங்கை அரசுக்கு உதவும் பொருட்டு ஐநா மற்றும் பரந்த மனிதநேய சமூகத்துக்கான கணிப்பீட்டை பொறுப்பெடுப்பதென முடிவு செய்யப்பட்டது. பேரழிவு ஏற்பட்டு ஒருசில நாட்களிலேயே முதலாவதும் விரைவானதும் விசாலமானதுமான விளைவுத்தாக்கம் மற்றும் தேவைக் கணிப்பீட்டை ஐநா, யூஎஸ்எயிட், டிபிட் ஆகியன இணைந்து எடுத்த எடுப்பிலேயே செய்து முடித்தன. அத்துடன், எமது அலுவலர்கள், நிவாரண உதவி, யூ. என். எச். சீ. ஆர். மற்றும் தேசிய அதிகாரசபை என்பனவற்றுடன் இணைந்து ஆரம்ப இடைத்தங்கல் முகாம்களை ஒழுங்கமைத்தல் போன்ற விடையங்களில் ஈடுபட்டிருந்த பிரித்தானிய இராணுவத்தை வழிநடத்துவதிலும் இணைந்து பணிபுரிவதிலும் ஈடுபட்டனர். அத்துடன் குடியிருப்பு, பாதுகாப்பு, உளச்சமூக உதவி, கல்வி ஜீவாதார செயற்பாடுகளை ஆரம்பித்தல் போன்றனவற்றை முதன்மைப்படுத்தும் **CHAD** முகாமைத்துவத்துக்கு, நிகழ்ச்சித் திட்டமிடுவதற்கான பரிந்துரைகளையும் உருவாக்கினர்.

முதலாவது தொகுதி நிவாரணம் விமானமூடாக ஐக்கிய இராச்சியத்தைவிட்டு புறப்படுவதற்கான ஒழுங்குகளை டிபிட் மேற்கொண்டது. மனிதநேய அனுபவங்களை ஒருங்கிணைக்கும் ஐநாவின் அலுவலகம் (ஒசிஎச்ஏ) ஆல் முன்னெடுக்கப்பட்ட இந்து சமுத்திர அவசர விண்ணப்பத்துக்கு டிபிட் 10 மில்லியன் பவுண்களை அளித்தது. ஐநாவுக்கூடாக 40 மில்லியன் பவுண்களை நிவாரண மீட்சிப் பணிகளுக்கு தனது உதவியாக டிபீட் அளித்திருந்தது. இது ஐநாவின் நிறுவனங்களை மற்றும் நேரடி உதவி இரண்டினையும் இணைப்பதாக இருந்தது.

சுமாத்திராவின் அழிவுக்குட்பட்ட மேற்கு கரை முழுவதுமான பிரதேசத்தில் தனிமைப்பட்டுப் போயிருந்த சமூகங்களுக்கான ஐநாவின் மற்றும் ஏனைய நிறுவனங்களின் உதவி களை வழங்குவதில் ஐந்து உலங்குவானூர்திகளை வாடகைக்கமர்த்திக் கொடுத்ததன் மூலம் தனது காத்திரமான பாத்திரத்தை டிபிட் நிறைவேற்றியிருந்தது. பல பிரித்தானியாவைச் சாராத நிறுவனங்கள் உள்ளடங்கலாக 25 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தமது வேலையை முன்னெடுக்க உதவும் முகமாக நிதி உதவிகளை வழங்கியுள்ளோம். செஞ்சிலுவை, செம்பிறை சங்கத்துக்கு 35 மில்லியன் பவுண் வழங்கப்பட்டது. பிரித்தானியாவின் 13 முன்னணி நிதி உதவி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பேரழிவுகள் அவசரகால நிலைகளுக்கான செயற்குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட 26 விமான தொகுதி நிவாரண பொருட்களுக்கான செலவினங்களை செலுத்தினோம்.[1]

அவசரகால நிலை காணப்பட்ட காலப் பகுதியில், டிபிட் ஏராளமான பிரச்சினைகளை இனம் கண்டது. சுமாத்திராவின் மேற்குக் கரையில் பாதிக்கப்பட்டவர்களை விசேடமாக கவனத்திலெடுத்தால் அங்கு தரவுகள் மிகவும் வரையறுத்துக் காணப்பட்டன. உள்ளூர் அவசரகால முகாமைத்துவ கட்டமைப்புக்கள் மிகவும் பலவீனமாக இருந்தன. சில குறிப்பிட்ட துறைகளில் முன்னணிவகித்த வெளி நிறுவனங்கள் பற்றி குழப்ப நிலை இருந்தது. ஐநாவின் அவசர விண்ணப்பம் தாமதமாக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் முறையான கட்டமைப்பை கொண்டிராதது போன்றும் தென்பட்டது. தகுதிவாய்ந்த மற்றும் அனுபவமிக்க ஆளணி பற்றாக்குறையால் நிறுவனங்கள் அவதியுற்றன. டிபிட் இனால் உதவியளிக்கப்பட்ட பண்டா ஆச்சே மற்றும் கொழும்பின் மனிதநேய தகவல் மையங்கள் மிகவிரைவாக உருவாக்கப்படவில்லை.

பேரழிவிற்குப் பின்னரான 6 மாதங்களில் டிபிட் தான் நிதி வழங்கிய நிகழ்ச்சித் திட்டங்களை ஆழமாக உற்றுநோக்குவதுடன் அவற்றின் போக்கையும் தொடர்ச்சியாக அவதானித்து வருகின்றது. இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, மாலைதீவு போன்ற நாடுகளில் முன்னேற்றத்தை பரிசோதிக்கும் கண்காணிப்புப் பணியின் இடைநடுவில் நாம் தற்போது உள்ளோம். முறையான அடிப்படை வசதிகளுடனும், நீர் மற்றும் ஏனைய சுகாதாரம், கல்வி வசதியுடனும், வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் எதிர்கால பேரழிர்சியிலும்கூட தாக்குப்பிடிக்கவல்ல இயலுமையை மீள கட்டியெழுப்பும் மீள் வளமாக்கப்பட்ட சாதனங்களுடனும், நிரந்தரமாக மக்கள் குடியமர்த்தப்பட இன்னும் நிறையவே செய்யவேண்டி உள்ளதென்பதை நாம் அறிந்தே உள்ளோம்.

கற்றலையும் ஒருங்கிணைப்பையும் அபிவிருத்தி செய்யவல்ல சிறந்த மனித நேய நிதி வழங்கு பாங்குடனான முன்வருதல் மட்டில் தனது கடப்பாடுகளை டிபிட் நன்றாக உணர்ந்துள்ளது. எமது சுனாமி நடவடிக்கைகளை, பரந்த விசாலமான மனிதநேயப் பதிலிறுப்பு மீள்பார்வைக்கூடான கணிப்பீட்டை தற்போது நாம் பொறுப்பேற்றுவருகிறோம். அவற்றின் பெறுபேறுகள் ஏனைய நிதி வழங்குனர்களுடனும் பகிர்ந்து கொள்ளப்பட உள்ளன. நிதி நடவடிக்கைகளுக்கான முகாமையாளர்களின் கூட்டமொன்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

விரிவான விதந்துரைகள் வெளிவரலாம். ஆனால் எனது சுய பார்வைக் கோணத்திலிருந்து, பின்வருவனவற்றுக்கான தேவைகளை பற்றி சுனாமி கற்பித்துள்ளது என நான் நம்புகின்றேன்.

- ஐநாவின் ஒழுங்கமைப்பனைத்தையும் ஊடறுத்த ஒரு பொதுவான கொள்வனவு, வினியோகம் மற்றும் கையாளல் சேவை ஒழுங்கமைப்பு.
- ஐநாவின் அனுபவம்மிக்க மனித நேய ஒருங்கிணைப்பாளர்கள் முன்னேற்றகரமான வலுவூட்டலை கொண்டிருத்தல்.
- ஐநா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பேரழிவுக்கான பதிலிறுப்பு அபிவிருத்தி செய்யப்படல்.
- ஐநாவின் பாரிய ஒருங்கிணைப்பை முன்னேற்றும் வண்ணம் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு ஒருங்கமைப்பு கட்டமைப்பை உருவாக்குதல்.
- இராணுவ மற்றும் சிவில் மனித நேய பணியாளர்களுக்கிடையில் ஒருங்கிணைவுக்கான தெளிவான வழிகாட்டல்கள்.
- மனிதநேய அலுவலகர்களுக்கான முன்னேற்றகரமான தொழில்சார் பிரமாணங்களும் தகைமைக் கட்டுமானங்களும்.
- நிதி வழங்குனர்களுக்கிடையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான நடவடிக்கைசார் இலக்குகள்.

***டேவிட் ஹொராபின் டிபிட் இன் முரண்பாடு மற்றும் மனிதநேய அலுவல்கள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் அணி இயக்குனராவார். மின்னஞ்சல்: D-Horobin@dfid.gov.uk.***

***இக்கட்டுரை, டிபிட்டின் அல்லது ஐக்கிய இராச்சிய அரசின் கருத்துக்களை பிரதிபலிக்காமல் தற்றுணிவின் அடிப்படையில் வரையப்பட்டுள்ளது.***

1. www.dec.org.uk



*பண்டா ஆச்சேக்கு நிவாரணப் பொருட்களை படகில் கொண்டு செல்லல்*

UNICEF/Josh Estey

# சுனாமிக்குப் பின்னான ஆச்சேயில் உள்ளக இடம் பெயர்ந்தோரை அடைதல்

குளோடியா ஹட்ஸ்பேத்

*சுனாமியால், ஆச்சே மாகாணத்தில் மக்கள் தொகையில் 12% ஆச்சேயினர் அதாவது அரை மில்லியன் மக்கள் உள்ளக இடம் பெயர்ந்தோராகினர். மனித நேய செயற்பாட்டாளர்களுக்கு, இவர்களை சென்றடைதல் என்பது பாரிய சவாலாக இருந்தது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அவசரகால நிலைமைகளில் உள்ளக இடம்பெயர்ந்தோரை சென்றடையும் வழிகளை முன்னேற்ற, பல முக்கிய பாடங்களை இதிலிருந்து நாம் கற்க முடியும்.*

இடம்பெயர்ந்தோரில் அனேகமானோர், ஒன்றில் மாகாணத்தைவிட்டு வெளியேறினர் அல்லது பொறுப்பேற்கும் குடும்பங்களால் கூட்டிச் செல்லப்பட்டனர். ஆனால் பள்ளிவாயில்கள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட முகாம்களுக்குள் மிகவும் அபாய நிலைக்கு எப்போதுமே இலகுவாக உட்படும் குறிப்பிடப்படும்படியான விகிதத்தினர் வாழ்ந்தனர். இவர்களது தற்காலிக வாழ்விடம் அழிவுக்குட்பட்ட கிராமங்களின் விளிம்பிலோ அல்லது இந்தோனேசியப் படையினருக்கும் ஜீ.ஏ.எம். பிரிவினைவாதிகளுக்கும் போட்டிக் களமாக விளங்கிய மேட்டு நிலங்களிலோ அமைந்திருந்தது. சர்வதேச சமூகம் மிக விரைவாகச் செயற்பட்டு, தடுக்கக்கூடிய மரணங்களை தவிர்த்த அதேவேளை ஆச்சேயை அடைவதற்கு பௌதீக, தகவல், சமூக ரீதியான மூன்று பிரதான தடைகளும் காணப்பட்டன. ஊடனடியாகச் சென்றடையக் கூடியவர்களுக்கு அவசர கால நிவாரணத்தை வழங்கிக் கொண்டே, இத்தகைய தடைகளை வெல்லுதல் என்பது சொல்லவே கஸ்டமானது என்பது நிரூபணமானது.

### சென்றடைவதற்கான பௌதீகத் தடைகள்

ஆரம்பத்திலிருந்தே, ஏராளமான உள்ளக இடம் பெயர்ந்தோரை பௌதீக ரீதியாக சென்றடைதல் என்பது பிரச்சினையான விடயம் என்பது தெளிவானது. மிக-மோசமாக பாதிப்புக்குள்ளான பண்டா ஆச்சேக்கும் முலோபோவின் தென்பகுதியின் தொடக்கத்துக்குமிடையிலான 200 கி.மீ கரையோரத்தைச் சென்றடைதல் என்பது முடியாத காரியம். சுனாமி நூற்றுக் கணக்கான பாலங்களையும் ஏராளமான வீதிகளையும் கழுவிச் சென்றிருந்தது. மொத்தமாக 26 மஅக்கான தொடர்புபடுத்தும் கொள்தகுதிறன் தேவைப்பட்டது. புதிய மண் மேடுகளாலும், பெரிய கடற் கலங்கள் தரையிறங்குவதைக் கட்டுப்படுத்தும் சிதைவுகளாலும், கரையோரம்கூட உருமாற்றத்துக்கு உள்ளாகி இருந்தது. இதன் பே-றாக, சென்றடைதல் என்பது உலங்கு வானூர்திகள் மூலமும் சிறிய படகுகள் மூலமுமே சாத்தியமாகியிருந்தது. உள்ளக இடம்பெயர்ந்தோரைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதென்பது, மிகச் சிறந்தகள அனுபவங்களையுடைய நிகழ்ச்சித் திட்ட பணியாளர்களால் வழங்கப்பட்ட செலவு மிக்க வினியோகம்-சேவைகள் ஒழுங்கமைப்பு உதவியுடன் தொடர்புபட்டு இருந்தது.

ஆச்சேயில் சுனாமி பதிலிறுப்பானது, எதிர்பார்த்திராத அளவுக்கு ஐ.நா. நிறுவனங்கள் மற்றும் இராணுவத்தினரிடையே கருத்துத் தொடர்பாடலுக்கு வழி சமைத்தது. உலங்கு வானூர்திகள், தற்காலிக இறங்கு துறைகள், துறைமுகப் பயன்பாடு, தரையிறங்கும் விசேட கடற் கலங்கள் போன்ற இராணுவ உதவிகள் மிகப்பெறுமதிமிக்கதாக இருந்துள்ளன. ஆயினும் இந்த உதவிகள், இராணுவம், மனிதநேய பணிச் சமூகம் ஆகிய இரண்டுக்குமிடையிலான முன்னேற்றம் கொண்ட ஒருங்கிணைவுக்கூடாக ஆள அகலமாக்கப்பட்டிருக்கக் கூடும். அவ்வாறே 15 நாடுகளைச் சேர்ந்த பல்வேறு இராணுவ அணிகள் இந்தோனேசிய இராணுவம் ஆகியனவற்றின் ஒருங்கிணைவுக்கூடாகவும் இதைச் செய்திருக்க முடியும். சுனாமி தாக்கிய நாடுகள் அனைத்துக்குமான இராணுவ உதவிகளை ஒருங்கிணைப்பதற்கென தாய்லாந்தில் ஒரு ஒன்றிணைந்த பிராந்திய பணிப்படை உருவாக்கப்பட்டபோதிலும், உள்ளூர் ஒன்றிணைந்த இராணுவ பணிப்படையாலோ அல்லது இராணுவ சிவில் தொடர்பு அணியின் முன் கூட்டிய நிறுவுதலினாலோ இவ் ஒன்றிணைந்த பிராந்திய பணிப்படை மேலுமதிகமாக ஆதரவளிக்கப்பட்டிருக்கலாம்.

அனைத்து இராணுவ உபகரணங்களையும் பொருட்களையும் ஒருங்கிணைத்த இந்தோனேசிய இராணுவத்துக்கும், தகவல் பகிர்தல் மற்றும் வரைபாக்க அனுசர-னையின் மட்டில் செயற்பட்ட சர்வதேச பணிச் சமூகத்துக்குமிடையில், அதிகரித்த தொடர்பியக்கத்துக்கான சந்தர்ப்பங்கூட இருந்தது. முதல் ஒருசில வாரங்களில் மிகப் பின்தங்கிய பிரதேசங்களுக்கு தனிப்பட்ட நன்கொடைப் பொருட்களை விமானம் மூலம் ஏற்றி இறக்க இராணுவ உபகரணங்கள் மிகப்பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. இது ரீ.என்.ஐ.ஆல் ஒருங்கிணைக்கப்பட்டபோதிலும், மனித நேய பணித்துறை ஒருங்கிணைப்புக் குழுக்களால் செய்யப்பட்ட தந்திரோபாயத் தகவல்கள் மற்றும் திட்டமிடல் என்பனவற்றுக்கும், உடனடி பதிலுறுப்புக்குமிடையில் தெளிவான தொடர்பு இல்லாமல் இருந்தது.

இவைதவிர, வான்வளி வினியோகம்-சேவை-கள் ஒழுங்கமைப்புக்கான மாற்று வழி கிடைக்கக் கூடியதாகவும், இலவசமான-தாகவும் இருந்ததனால் வேறு மார்க்கங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. சாதாரண சிறிய உள்;ர் படகுகளைப் பயன்படுத்துவதற்குரிய ஒரு முறையை உருவாக்குதல் என்பது, சுனாமியால் அழிக்கப்பட்ட ஒரு பிரத்தியேக குழுவினரான உள்ளூர் மீனவர்களின் ஜீவனோபாயத்துக்கு பெருமளவில் பங்களித்திருக்கும். கரையோரங்களுக்கு ஆட்களையும் பொருட்களையும் ஏற்றி இறக்கும் உள்ளூர் படகுச்சேவை, சுனாமிக்கு முன்னான ஆச்சேயில் நடைமுறையில் இருந்தும்கூட, சர்வதேச இராணுவத்தின் பிரசன்னம் விலக்கிக்கொள்ளப்பட்டு சர்வதேச சமூகம் ஏனைய போக்குவரத்து மாற்று உபாயங்களை கண்டு பிடித்துத் கொள்ளும் வரை, இப்போக்குவரத்து உபாயம் கவனத்தில் கொள்ளப்படவில்லை. உள்ளூர் போக்குவரத்து உபாயத்தை மீளக்கட்டியெழுப்புதல், உள்ளூர் பொருளாதாரத்துக்கும் இலகுவாக அபாயத்துக்குட்படு நிலையிலுள்ள மக்களின் ஜீவனோபாயத்துக்கும் பங்களித்திருந்திருக்கும். அத்துடன் பாதிப்புற்ற சமூகங்களுக்கு மிகத் தேவைப்பட்ட போக்குவரத்தை வழங்கி, உள்ளூர் போக்குவரத்துத் துறையை மேம்படுத்தியிருக்கும். யுத்தப் பிரதேசங்களில் மனிதநேயச் செயற்பாடுகளைக் கொண்டியக்க, இராணுவ கடற் கலன்களையும் விமானங்களையும் பயன்படுத்துதல் என்பது எப்போதும் ஒரு இறுதி வழிவகையாக மாத்திரமே இருத்தல் வேண்டும்.

உலங்கு வானூர்திகளின் பயன்பாட்டினூடாகக்கூட உள்ளக இடம்பெயர்ந்தோரைச் சென்றடைதல் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. யுத்த சூனியப் பிரதேசம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு மாத்திரம் உலங்கு வானூர்திகள் வரையறை செய்யப்பட்டிருந்தன. இப் பிரதேசங்கள் பாதுகாப்பற்றவை எனக் கணிக்கப்பட்ட மேட்டு நிலங்களுக்கு பின்வாங்கிச் சென்ற உள்ளக இடம்பெயர்ந்தோரின் பயன்பாட்டுக்கு விலக்கப்பட்டிருந்தது. மேலும் பாதுகாப்பு கட்டுப்பாடுகளின் நிமித்தம் குறிப்பிட்ட நேரத்துக்கு மேலதிகமாக உலங்கு வானூர்திகள் நிறுத்தி வைக்கப்பட அனுமதிக்கப்படவில்லை. இதனால் பொருட்களின் சமமான பகிர்வை உறுதிப்படுத்துதல் பிரச்சினைக்குரியதாக இருந்தது. அனேகமான சந்தர்ப்பங்களில் இந்தோனேசிய இராணுவத்தினரே, உலங்கு வானூர்திகளில் இருந்து பொருட்களை இறக்கவும் நிவாரணப் பொருட்களை பகிர்ந்தளிக்கவும் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருந்தனர். பொருத்தமான பகிர்ந்தளிக்கும் முறை இன்மையால், இறங்கு தளத்திலிருந்து ஒரு சில நூறு மீற்றர்களுக்கப்பால் மீள்குடியேறியிருந்த உள்ளக இடம் பெயர்ந்தோர்கள் தமக்குரிய நீதியான பங்கை பெறுமாப்போலிருக்கவில்லை. பாதுகாப்புக் கட்டுப்பாடு என்பது ஒரு சில வரையறை செய்யப்பட்ட இடங்களைத் தவிர்ந்த ஏனைய மேற்குக் கரையில் ஒரு இரவு தன்னும் தங்குவதற்கு ஐ.நா. பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது. இவ்வாறாகவே மனிதநேயப் பதிலிறுப்புக்களை கண்காணிக்கும் அவர்களது கொள்தகுதிறன் கட்டுப்படுத்தப்பட்டது.

மேற்குக் கரை அழிவும் கிடைக்கக்கூடியதாயிருந்த இராணுவ போக்குவரத்து வசதியும், யாரும் சென்றடையக்கூடிய குறிப்பாக வடகிழக்குக் கரையில் இருந்த இடம்பெயர்ந்தோரின் குழுக்களின்பால் இருந்து கவனத்தை, வேறுபக்கம் திசை திருப்பிவிட்டன. இதனால், சமமற்ற வி-கிதாசார அடிப்படையில் பெருமளவு நேரமும் வளங்களும் எண்ணிக்கையில் சிறிதாக இருந்த மேற்கு கரையோர இடம்பெயர்ந்தோரை சென்றடைந்தன.

### சென்றடைவதற்கு முட்டுக்கட்டையாயிருந்த தகவல் தடைகள்

ஆச்சேயில் அனேக உள்ளக இடம்பெயர்ந்தோர் எங்குள்ளனர், என்ன எண்ணிக்கையில் உள்ளனர் என சாதாரணமாக கண்டு பிடித்தல் கடினமாயிருந்தது. முகாம்கள் மியூலபோ, பண்டா ஆச்சே நகரங்களின் குறுக்கே தூவப்பட்டது போன்று காணப்பட்டதுடன் நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் கடற் கரையோரமெங்கிலும் இங்குமங்குமாகக்

காடுகளிலும் காணப்பட்டன. மொத்தத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட குடியிருப்புக்களிலும் ஏற்கனவே இருந்த சன சமூகக் கட்டடங்களிலும் ஒரு சில குடும்பங்களில் தொடங்கி பலநூறு குடும்பங்கள் என்ற அடிப்படையில் 500 க்கு மதிகமான முகாம்கள் இருந்தன.

ஆரம்ப காலப்பகுதியில் ஒரு சிறிய பரந்த விசாலமான மனித நேயத் தேவைக் கணிப்பீடுதானும் செய்யப்பட்டிருக்கவில்லை. இடஅமைவு, எண்ணிக்கை, பொதுவான சூழ்நிலை, ஏனைய அடிப்படைத் துறைசார் தகவல்கள் உள்ளடங்கலாக ஒரு சாதாரண அடிப்படைத் தகவல் படிவம் ஒன்று, அமுலாக்கல் பங்குதார நிறுவனங்கள் வெளியில் செல்லும்போது சேர்த்தெடுக்கும் வண்ணம் ஆயத்தப்படுத்தப்பட்டு ஒரு ஆரம்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் மந்தமான தரவுச் சேகரிப்பு பல ஆபத்துக்களை கொண்டிருந்தது. இத்தரவு சேகரிப்பினூடாக, உண்மை நிலை பற்றிய ஒட்டு மொத்த படத்தை, 3ம் அல்லது 4ம் முன்னுரிமைக்குரியதென நினைக்கும் பங்குதார நிறுவனங்கள் கொடுக்கவில்லை. அதேவேளை, இவர்களது உள்ளீட்டிலேயே தரவு சேகரிப்பு தங்கி இருந்தது. சென்றடையக்கூடிய இடங்களில் மிகத் தரமான தரவுகள் கிடைக்கக்கூடியதாக இருந்தன. ஆயினும் பெரும் பண்டா ஆச்சேக்கு வெளியில் வேறெங்காகிலும் கிடைக்கக் கூடியதாயிருக்கவில்லை.

மருத்துவ சிகிச்சைக்காக பண்டே ஆச்சேக்கு காயப்பட்ட பெண் ஒருவர் எடுத்துச் செல்லப்படல்

மேற்குக் கரையோரச் சூழ்நிலை பற்றிய தகவல்களைச் சேகரிக்கச் செய்யப்பட்ட பெரிய அளவிலான கணிப்பீடு உள்ளடங்கலாக, பல துறைசார் கணிப்பீடுகள், யூ.எஸ்.எஸ். லிங்கன் எனும் அமெரிக்க கடற்படைக் கப்பலில் இருந்து மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் பல்துறை கணிப்பீடுகளாக அவை இல்லாமல் இருந்தன. மேலும், அரசியல் ரீதியில் உணர்தகு நிலைகொண்டதான மேற்குக் கரை பற்றிய தகவல்கள் மட்டில் ஓர் உணர்தகு நிலைகூடக் காணப்பட்டது. அத்துடன், இராணுவத்தால் வழங்கப்பட்ட உலங்கு வானூர்திப் பணியினூடாக, பெருமளவில் சென்றடைய முடியாத மேற்குக் கரைமீது நிவாரணப் பொருட்களை போட்ட வண்ணம், அதில் ஈடுபட்ட ஏராளமான மனித நேயப் பணிச் செயற்பாட்டாளர்கள், சேகரிக்கும் தகவல்களைப் பெறுவது பற்றியும் உணர்தகு நிலை பலமாகக் காணப்படுகிறது.

தகவல்கள் அதிகம் இல்லாதிருப்பது பிரச்சனையாயிருக்கவில்லை ஆனால், மாகாணம் முழுவதையும் உள்வாங்கிய மனிதநேயப் பணிசார் சூழ்நிலை பற்றிய பல்துறைத் தகவல்களின் திரட்டே இல்லாததுபோன்றிருந்தது. ஏராளமான பல்வகைப்பட்ட தகவல்களின் கணிப்பீடு சிறு சிறு துளியாக ஓசீஎச்ஏ யின் மனிதநேய தகவல் மையத்துக்கு கசிந்தது. இந்தத் தகவல்களை பயன்படுத்தக்கூடிய வடிவத்தில் இம்மையம் தன்னால் இயன்றளவிற்கு திரட்டி வெளியிட முயன்றது. இருந்தும்,[1] ஐடிபியினரின் இடங்கள், அவர்களது நிலைமை, தேவைகள் போன்றன பற்றிய ஒரு முழுப்படத்தை நிறுவனங்கள் பெறத் தொடங்கின என்ற நிலை, அழிவு நிகழ்ந்து பல வாரங்கள் வரைக்கும் இருக்கவில்லை. இருந்தபோதிலும் முழுமையான தகவல்கள் இல்லாத நிலையிலும்கூட சின்னம்மை கொலரா போன்ற அவசரகால உயிர்கொல்லிகளின் தவிர்க்கக்கூடிய மரணத்தை தடுக்கவும் உடனடியாகப் பதிலிறுக்கவும் யுநிசெப் மற்றும் ஏனைய நிறுவனங்கள் எவையெல்லாம் கிடைக்குமோ அவற்றையெல்லாம் பயன்படுத்த முனைந்தன.

## சென்றடைய முட்டுக்கட்டையாக உள்ள சமூகத் தடைகள்

அனேக உள்ளக இடம்பெயர்ந்தோர், ஏற்றுக்கொள்ளும் குடும்பங்களிடத்தில் புகலிடம் பெறுவதாலும் அவர்களது




புலப்படாத்தன்மையாலும் அவர்களைச் சென்றடைதல் ஒரு சவாலாக உள்ளது. இந்தகைய குழுவினர் நேரடி அவசர கால நிலை உதவியின் பெரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருந்தபோதும்கூட, அவர்களுக்கு, அவர்களது பிள்ளைகள் பாடசாலைக்கு மீண்டும் செல்வது, உளச்சமூக ஆதரவு, பிரிந்துபோன பிள்ளைகள் உறவினர்களை கண்டுபிடித்து இணையும் நிகழ்ச்சித் திட்டம் போன்றனவற்றுக்கு ஆதரவு தேவையாக உள்ளது. அத்துடன் உள்ளக இடம்பெயர்ந்தோர், தற்போது பொறுப்பேற்ற குடும்பங்களுக்கு மேலதிக சுமையாகவும் மாறியுள்ளனர்.

இம் மக்களை சர்வதேச சமூகம் அடைவதில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளபோதிலும், இந்தோனேசிய அரசு, உள்ளக இடம்பெயர்ந்தோரை ஏற்றுக்கொண்டுள்ள குடும்பங்களுக்கு பண உதவி அளிப்பதினூடாக ஒரு தீர்வை வழங்கி முன்னணிப் பாத்திரத்தை எடுத்துள்ளது. பண உதவிக்கு, ஒவ்வொரு உள்ளக இடம் பெயர்ந்தோரும் உள்ளூர் மனித நேயப் பணிச் சமூகச் சாவடியில் பதியும் தேவை உள்ளதுடன், பண உதவியானது ஒவ்வொரு நபருக்கும் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டம் ஒவ்வொரு இடம்பெயர்ந்தோரையும் பதியும்படி செய்துள்ளதுடன் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களைப் பெறவும் இலகுபடுத்தி உள்ளது. இது பிரச்சனையின் அளவுக்கேற்ப தகவல்களைப் பெறச் சாத்தியப்பட வைத்துள்ளதுடன் ஆயிரக்கணக்கான தனி நபர்களினதும் குடும்பங்களினதும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் சமூக ஆதரவையும் ஊக்கப்படுத்தி உள்ளது. இறுதியாக, இந் நிகழ்ச்சித்திட்டம் நேரடி உதவிக்கான பிரயோசனமான கட்டமைப்பு, உள்ளூர் பொருளாதாரத்துக்கு ஜீவாதாரமான பணத்தை உட்செலுத்துதல் ஆகிய இரண்டையும் தந்துள்ளது.

யூனிசெப்பை பொறுத்தமட்டில், கைவிடப்பட்ட அனாதையாக்கப்பட்ட சிறுவர்களைச் சென்றடைவதே பிரதான பிரச்சினையாகும். ஆச்சேயில் யூனிசெப் இன் பாரிய பணிகளில் ஒன்று, கைவிடப்பட்ட அனாதைச் சிறுவர்களைப் பதிவதுடனும் அவர்களது குடும்பங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதுடனும், சாத்தியப்பட்டால் அவர்களை உறவினர்களுடன் மீளச் சேர்ப்பதுடனும் தொடர்புபட்டது. ஏராளமான அனாதைச் சிறுவர்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளதனால், சென்றடைவதற்கு.்.கண்டுபிடிப்பதற்கு கஸ்டமான குழுவாக இது திகழ்கிறது. ஏனைய அவசரகால நிலைகளுக்கு வேறுபட்டவகையில் அனாதைச் சிறுவர்கள் அங்கு தென்படுவதில்லை. ஏனைய இடங்களையோ அல்லது பிரதேசங்களையோ போலல்லாது சுனாமியில் ஏராளமான சிறுவர்கள் இறந்ததனால் பிள்ளைகளை இழந்த குடும்பங்கள் எஞ்சியுள்ள ஏனைய சக பிள்ளைகளை தம்முடையவர்களாக்கிக் கொள்ளத் துடியாய் துடிக்கின்றனர். இதனால் உறவினர்கள், அனாதையாக்கப்பட்ட உறவுச் சிறார்களை இனம் காட்டப் பயப்படுகின்றனர். அவ்வாறு செய்யும் பட்சத்தில் அச்சிறுவர்கள் எடுத்துச் செல்லப்பட்டு விடுவார்கள் என்று பயப்படுகின்றனர். சிக்கல் வாய்ந்த ஆதரவுக் கட்டமைப்பாக யூனிசெப் தத்தெடுப்பதை ஆதரவளிக்கும் அதேவேளை கைவிடப்பட்ட எல்லாச் சிறுவர்களும் பதியப்படுதல் என்பது மிக அவசியமானது என்பதையும் வலியுறுத்துகிறது. அவ்வாறு செய்யும்போது உறவினர்களுடன் மீள இணைதல், தம்மை தத்தெடுத்துள்ள குடும்பங்களின் பொருளாதாரச் சுமைகளை குறைக்கவல்ல நிகழ்ச்சித்திட்டங்களை அடைதல் ஆகிய இரண்டுக்குமான சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்கு அப்பதிவு செய்தல் அவசியமாக இருக்கும்.

உள்ளூர் நிறுவனங்களுடன் வலைப்பின்னல் கட்டமைப்பை நிறுவுவதன் ஊடாக யூனிசெப் பரிந்துரை வாதிடலை மேற்கொண்டுள்ளதுடன் உள்ளூர் சமூகங்களுடன் இணைவுத் தொடர்பையும் மேற்கொண்டுள்ளது. சமூகத்தைச் சென்றடையும் நிகழ்ச்சித் திட்டங்களான சிறுவர் - சினேக இடங்கள் அமைத்தல், பதிவு நிலையங்கள் அமைத்தல் ஆகியவற்றுக்கு உள்ளூர் நிறுவனங்களுக்கு யூனிசெப் உதவியுள்ளது. உள்ளூர் நிறுவனங்கள், சமூகங்களால் நம்பப்படுவதுடன் ஏற்றுக்கொள்ளவும் படுகின்றன. உள்ளூர் அனுபவத்தையும் முகாம்களுக்குள் சமூகக் கட்டமைப்புக்கள் சென்றடைவதையும் ஒன்றிணைப்பதற்கு அவர்கள் தயாராகவும் இருக்கின்றனர். ஆயினும், இந்த வெற்றியின் பேறாக முகாம்களுக்குள் உயிர்ப்புடன் உள்ள கட்டமைப்புக்களை நேரடியாக இனங்கண்டு அவற்றுடன் வேலை செய்வதன் ஊடாகவும், உள்ளூர் பள்ளிவாசல்கள் உள்ளடங்கலாக சமய வலைப்பின்னல்களுடனான பங்குதாரர் பாணியைக் கட்டி எழுப்புவதனூடாகவும், ஆரம்ப காலத்தில் ஏராளமான சிறுவர்களை சென்றடையக்கூடிய சாத்தியப்பாடுகள் அதிகமாயிருந்திருக்கும்.

## கற்ற பாடங்கள்

எதிர்காலத்தில் நிகழத்தக்க அவசர கால நிலைகளில் சென்றடையத் தடையாயிருப்பவைகளை வெல்லும் வழி-முறைகள் ஆச்சே அனுபவம் தருகிறது.

1. வினைத்திறன்மிக்க பதிலுறுப்புக்கு, இராணுவப் பொருட்களின் பயன்பாடு அவசியமானதாக இருக்கும். அதே வேளை, உள்ளூர் போக்குவரத்து முறைகளை பலப்படுத்தவும், பயன்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். பாதுகாப்புக் கெடுபிடிகளைக் கடந்து ஜீவனோபாயங்களைக் கட்டி எழுப்ப உள்ளூர் அனுபவத்தின் அடிப்படையில் சேவைகள் வினியோக ஒழுங்கமைப்பை இது மேம்படுத்தும்.
2. எங்கெல்லாம் சாத்தியமோ, அங்கெல்லாம் ஏற்கனவே உள்ள சமூக கட்டுமானங்களையோ அல்லது செஞ்சிலுவை.'. செம்பிறை சங்கத்தை பயன்படுத்தி எவ்வளவுக்கு விரைவாக உள்ளூர் பகிர்ந்தளிப்பு முறையை உருவாக்க முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்தல் வேண்டும். வேறு திசைதிருப்பங்களுக்கான வாய்ப்புக்களைக் குறைக்கும் அதே வேளை, ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித நேயக் கோட்பாடுகளுக்கமைவாக நிவாரணப் பொருட்களின் நீதியான பகிர்வும் வினியோகமும் இடம் பெறு-வதை உறுதி செய்யவும் உதவும்.
3. உபாய ரீதியான தகவல்களின் அடிப்படையிலும் மனித நேயத் தேவையின் மட்டிலும் எல்லா உள்ளக இடம்பெயர்ந்தோருக்கும் சம கணிப்பும் சம உதவியும் கொடுக்கப்படல் வேண்டும். சிதைந்த உள்ளகக் கட்டுமானங்களை மீளக்கட்டுதலில் இயற்கை விசைகளுக்கு குறைவான அபாய நிலையைக் காட்டும் பிரதேசங்களில் அவசியமான கட்டமைப்பை நிறுவுதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தகவல் தடைகளின் மட்டில் பெற்ற அனுபவங்கள்கூட ஏராளமான பாடங்களை முன் வைக்கின்றன

- ஒரு அவசரகால நிலைமையில், ஆச்சரியப்படவைக்கும் எண்ணிக்கையான சர்வதேச நிறுவனங்களுடன் (யூனிசெப் 400 பங்காளி நிறுவனங்களைக் கொண்டிருந்தது) ஐ.நாவின் மனிதநேய தகவல் நிலையமானது, தகவல்களின் திரட்டு, பகுப்பாய்வு, பரப்புதல் போன்றனவற்றில் முக்கியமானதாக இருந்தது. அவசரகால நிலையில், முதன்மைப்படுத்தும் விடையங்களில் முதலாவதாக எச்.ஐ.சீ.யின் உருவாக்கம் இருத்தல் வேண்டும்.
- ஒரு சில சிக்கல் இருந்தபோதிலும், துறைசார் செயலணிக் குழுக்களுடனான தகவல் பகிர்வு பொதுவாக சிறப்பாக இருந்தது.
- ஓ.சீ.எச்.ஏ.ஆல் வழங்கப்பட்ட பூகோள நிலையெடுத்தல் முறை கையேடு, வரைபாக்கம் செய்ய இன்றிமையாததென்பதுடன் புலப்படா தொலை தூரத்திலுள்ள உள்ளக இடம்பெயர்ந்தோரை சென்றடையப் பின்னர் உதவவும் கூடியது. இனி வரும் அவசர காலச் சூழ்நிலைகளில், அக் கைநூல் கிடைக்கக்கூடியவாறு இருத்தலை ஓ.சீ.எச்.ஏ. உறுதிப்படுத்த வேண்டும்.
- ஆச்சேக்குள் குவிக்கப்பட்ட ஏராளமான தன்னார்வத் தொண்டர்கள், தகவல் திரட்டலில் முக்கியமான கண்களையும் காதுகளையும் கொடுத்தனர். இத்தகைய குறைவான பாரம்பரிய தகவல் முறை பயன்படுத்தப்படுவதுடன் இயன்றளவு ஆதரவளிக்கப்படவும் வேண்டும்.
- கணிப்பீட்டில் குறித்த ஒரு அம்சத்துக்கென மாத்திரம் உருவாக்கப்பட்ட அணுகுமுறைகள் தவிர்க்கப்பட வேண்டும். சாத்தியப்படும் இடங்களிலெல்லாம் திரட்டிய பல் நிறுவன, பல்துறை மனித நேயக் கணிப்பீடுகள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும். பதிலிறுப்புக்கு அடிப்படையை வழங்கும் வண்ணம் அவை முதல் ஓர் சில நாட்களிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மனித நேயப் பதிலிறுப்புக்கு இராணுவப் பொருட்கள், உபகரணங்கள் கையில் பயன்பாட்டுக்கு இருக்கும்போதே, கணிப்பீட்டு நோக்கத்துக்காக இராணுவ வளங்களை பயன்படுத்துவதை இயலுமாக்கும் வண்ணமும், பெறுமதியான இராணுவ தகவல்களை மனித நேயச் சூழ்நிலையில் பயன்படுத்தக்கூடியதாயிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தவும், சிவில் இராணுவ ஒருங்கிணைப்பு மையம் முதல் ஓர் சில நாட்களுக்குள் அமைக்கப்படுவதை உறுதிசெய்தல் இன்றியமையாதது.

சிலவேளை முக்கியமாக, ஆச்சேயில் பதிலிறுப்பானது தற்போதிருப்பதை மாற்றீடு செய்யவல்லது ஒன்றுமே இல்லை என்பதை தெளிவாக்கியது. பின்தங்கிய தூர இடங்களில் கள அலுவலகங்கள் அமைப்பதனாலும் அனுபவம் மிக்க களப்பணியாளர்களைப் பணிக்கமர்த்துவதனாலும் பதிலிறுப்பின் தரத்தில் எண்ணிலடங்கா வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றன.

உள்ளக இடம்பெயர்ந்தோரை சென்றடைதல் என்பது, மனித நேயப் பணிச் சமூகத்துக்கு, நேரத்துக்குகந்த தரமான மனித நேயப் பதிலிறுப்பை, உறுதி செய்ய எடுக்கும் தனது முயற்சிகளின் மட்டில், ஒரு பாரிய சவாலாகத் தென்படலாம். இருந்தபோதிலும், உள்ளக இடம் பெயர்ந்தோருடன் தொடர்புபட்ட அவசர கால நிலைமைப் பதிலிறுப்பு எனும் துறை, நிபுணத்துவம் மிக்கதாக மாறியுள்ளது. எமது அனுபவத் தொகுப்பு வளர்கிறது. இவ் அனுபவங்களைச் சேர்த்தெடுப்பதன் மூலமும் கற்ற பாடங்களை உள்வாங்குவதன் மூலமும் எதிர்காலத்தில் எளத்தக்க பிரச்சனைகளுக்கான எமது பதிலிறுப்பை நாம் பயன்படுத்த முடியும்.

***கிளெடியா ஹட்ஸ்பெத் (அகதிகள் கற்கை நிலையப் பட்டதாரியும் மருத்துவரும்) யூனிசெப் இன் அவசரகால நடவடிக்கைகளுக்கான பதிலிறுப்புப்பணியின் இணைப்பாளர் ஆவார். பேரழிவின் பின் முதல் மூன்று மாதங்களுக்கான தனது நிறுவனத்தின் ஆச்சே உப அலுவலகத்தின் பொறுப்பாளராக செயல்பட்டார். மின் அஞ்சல் : chudspeth@unicef.org***

***இக்கட்டுரை அவரது தற்றுணிவில் வரையப்பட்டுள்ளதுடன் யூனிசெப் இன் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை.***

1. www.humanitarianinfo.org/sumatra

*பண்டா ஆச்சேயில் உள்ளக இடம்பெயர்ந்தோர் முகாமில் யுனிசெப் ஆதரவு சிறுவர் நிலையம்*




UNICEF/HQ050320/Josh Estey

# உள்ளக இடம் பெயர்ந்தோர் ஆச்சே இல் முகாம்களுக்குள் முடக்கம்

லூக்மன் ஏஜ்

*சுனாமியின் பின்விளைவின் நிமித்தம் சர்வதேச சமூகத்துக்கு ஆச்சே திறந்துவிடப்பட்டது ஆச்சேயர்களுக்கு நம்பிக்கையின் ஒளிக்கீற்றைக் கொடுத்துள்ளது. இருந்தபோதிலும் புனர்வாழ்வு மீள்கட்டுமானத் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட, உள்ளூர் தேவைகளின் மட்டில் உணர்தகு திறனற்ற அரசினால் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான நம்பிக்கை தகர்க்கப்பட்டு வருகிறது.*

பேரனர்த்தத்துக்கு முன்னர், தனிநாடு கேட்டு போராடிய சுதந்திர ஆச்சே அமைப்பு (ஜீ ஏ எம்) க்கு எதிரான இந்தேனோசிய இராணுவத்தின் கலக எதிர்ப்பு இராணுவ நடவடிக்கை காரணமாக அநேக ஆச்சேயினர் மிகக் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தனர். அரசின் அகதிகள் மீள் குடியமர்த்தல் வேலைத்திட்டத்தால், சமூக நிலைக்கு திரும்புவதற்கும் பேண்தகு நிலை கொண்ட ஜீவாதாரங்களை கட்டியெழுப்பும் சந்தர்ப்பத்துக்குமான நம்பிக்கை தகர்க்கப்பட்டுள்ளது. சுனாமியால் இடம் பெயர்ந்தவர்களால் கோரப்பட்டதுபோன்ற புனர்வாழ்வு மற்றும் நிரந்தர வீடுகளின் கட்டுமானத்தில் கவனம் செலுத்துவதைக்காட்டிலும் உள்ளக இடம் பெயர்ந்தோரை அவசரகால முகாம்களில் இருந்து தற்காலிக கொட்டில்களுக்கு நகர்த்தும் மேலிருந்து கீழ்நோக்கிய நிகழ்ச்சித் திட்டமாகவே இது உள்ளது.

சர்வதேச நியமங்களை உறுதிப்படுத்தும் வகையில் கட்டப்பட்டது போன்று தோன்றும், மின்சாரம் நீர்விநியோகத்தைக் கொண்ட 30 மீற்றர் நீளமான மரத்தாலான வீடுகள் ஒவ்வொன்றும் 10 மீற்றர் கொண்ட ஒரு டசின் குடும்ப அறைகளையும், ஒரு சமையலறையை மேலதிகமாகவும், இரண்டு குழியலறைகளையும் ஒன்றுகூடி படிக்க வழிபட ஒரு மண்டபத்தையும் கொண்டுள்ளது. 140,000 உள்ளக இடம்பெயர்ந்தோரை அவசரகால முகாம்களில் இருந்து இடமாற்றவும் ஒவ்வொரு இடம் பெயர்ந்தோருக்கும் 90,000 ரூபியா (9 டொலர்) மாத கொடையாக வழங்கவும் அரசு திட்டமிடுகிறது. படை வீடுகளில் மக்கள் வசிப்பதென்பது உழைப்புக்கு ஒரு வழிவகையுமின்றி முற்றுமுழுதாக அரசில் தங்கி இருப்பது போன்றுள்ளது. அத்துடன் வேலைக்கு உணவு என்ற திட்டத்தில் பங்கெடுப்பதற்கான சாத்தியத்தை தவிர வேறெந்த வேலையும் அற்ற ஒரு நிலையுமாகும்.

சுயமாக வாடகைக்கோ அல்லது மீளக்கட்டவோ தேவையான வளங்களை குறைவாக கொண்டுள்ளவர்கள் என்பதால் அநேக இடம் பெயர்ந்தோர் வேறிட குடியமர்த்தலை ஏற்றுக் கொள்ள கட்டாயப் படுத்தப்படுகின்றனர். வேறிட குடியமர்த்தல் திட்டத்துக்கு சர்வதேச மனித நேய நிறுவனங்கள் உதவி வழங்குமாப்போல் உள்ளதாலேயே இவர்களுக்கு உதவி அளிக்கப்படாத நிலை நிலவுகிறது. இந்தோனேசிய அரசு, ஐ.நா. மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய் வேறிட குடியமர்த்தலுக்கான விரை கணிப்பீட்டில் இணைந்துள்ளன. இயற்கை அனர்த்த அகதிகள் நிவாரணத்துக்கான அரசின் தேசிய ஒருங்கிணைப்பு நிறுவனமும் மனித நேய அலுவல்கள் ஒருங்கிணைப்புக்கான ஐ.நா. வின் அலுவலகமும் இணைந்து இதனை வேறிட குடியமர்த்தல் மைய இணைப்பு பிரிவை ஒருங்கிணைத்துள்ளது.[1]

மே 2003 இல் ஆச்சேயில் பிரகடனப்படுத்தப்பட்ட இராணுவச் சட்டத்தைத் தொடர்ந்து, கிராமத்தவர்களின் கட்டாய வேற்றிட குடியமர்த்தல் மற்றும் 1980 இல் இடம் பெற்ற இடைத் தங்கல் இடம்பெயர்வு நிகழ்ச்சித் திட்டம் போன்றனவற்றில் காணப்படும் அதே விதமான பல தன்மைகளை ஆச்சே வேறிட குடியமர்த்தல் கொண்டுள்ளது என விமர்சகர்கள் வாதிடுகின்றனர். மனித உரிமைகள் வோச் அமைப்பானது, நடமாடுவதற்கான சுதந்திரம் அடிக்கடி கட்டுப்படுத்தப்படும் இடங்களிலும், மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ள முகாம்களுக்கருகிலும் யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள ஆச்சேயர்களை அமர்த்துதல் பற்றிய இந்தேனேசிய இராணுவத்தின் வரலாற்றின் மீது கவன ஈர்ப்பை செய்துள்ளனர்.[2] இராணுவ அனுமதிக்குப் பின்னரே வீட்டுக்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன என்பதை சமூக நல அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார். இப்படை வீடுகளுக்கு உள்ளும் புறமும் நடமாடுவதற்கான சுதந்திரம் எவ்வளவு தூரம் வழங்கப்படும் என்பது தெரியவில்லை. அவர்கள் பாதுகாப்பு கம்பிச் சுருள்களால் சூழப்படவில்லை என்றாலும், விடுதலைப் போராளிகளுடனான (ஜீ ஏ. எம்) தொடர்புகளை தடுக்க இராணுவ பாதுகாப்பு கெடுபிடிகள் இருக்கத்தான் செய்யும்.

### படைவீட்டு அல்லது கொட்டகை வாசிகளுக்கு நிச்சயமில்லா எதிர்காலம்

இரண்டு வருடத்துக்கு மேலான காலத்துக்கு மக்களை கொட்டில்களுக்குள் வாழ வற்புறுத்துவதுடன் உள ரீதியிவான பாதிப்புக்களை கணிப்பிட எவ்வித உரிய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. பெரிய மைதானங்களில் ஒன்றாக வாழ்தல் என்பது ஆச்சேயின் வழமையான ஒரு விடயமல்ல. மக்களோ சிறு சிறு குழுக்களாக ஒன்றிணைந்து தமது சமூகத்தின் மையத்திலுள்ள சிறு பள்ளிவாயில்களைச் சுற்றியே வாழவிரும்புகின்றனர். கிராமப்புறங்களில் இப்பள்ளி வாயில்கள், தொழுவதற்கும் நண்பர்களுடன் கூடிக் குலாவுவதற்கும் உரிய இடமாகவும் திகழ்ந்து சமூக, சமூக அங்கத்துவ உணர்வை வழங்கும் பிரதான உருவாக்கு தளமாக திகழ்கின்றன. ஆச்சேயில் ஏராளமான கிராமப்புறங்கள் தமது கிராமப் பெயர்களில் மியூனாஸ் என்ற முன்னிணைப்பை, உதாரணமாக - மியூனாஸ் ஜெயிம், மியூனாஸ் ரூகா, மியூனாஸ் பிளாங் - என சிறு பள்ளிவாயில்களின் பெயர்களை தாங்கி அப் பள்ளிவாசல்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. ஒரு குறிப்பிட்ட பள்ளிவாயிலின் - மியூனாஸ் – அங்கத்துவமானது ஒருவர் ஒருவர் மீதான அக்கறை, வெளிபயமுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பு போன்ற விடயங்களின் பொறுப்பினை உறுதி செய்கிறது. கிராம ஆச்சேயினருக்கு முன்பின் அறிமுகமில்லாதவர்களுடன் கொட்டில்களில் கூடிவாழ்வது ஒரு பெரிய சவாலாக உள்ளது. கொட்டில்களில் அந்தரங்கம் பேணுவதற்கான வாய்ப்புக்களை கொடுப்பதில்லை என்பதால் மன அழுத்தத்தில் வாய்த்தர்க்கம் அதிகரித்தல் பாலியல் துன்புறுத்தலின் அபாயம் போன்ற விளைவுகளைத் தரலாம்.

சுனாமியில் உயிர்பிழைத்தோர், தமது கிராமங்களைவிட்டு தொலைவில் வேறிடத்தில் குடியமர்த்தப்படல் என்பது தமது நிலத்தை இழப்பதற்கு வழிவகுக்கலாம் என கவலைப்படுகின்றனர். அநேகர் சட்ட ரீதியான ஆவணங்களை இழந்துள்ளதுடன் அநேக சந்தர்ப்பங்களில் சுனாமியால் இவர்களது எல்லை அடையாளங்களும் கழுவி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தாம் அடிக்கடி தமது நிலங்களுக்கு சென்றுவரவில்லை என்றால் அன்னியர்கள் தமது நிலங்களில் குடியேறிவிடுவர் எனவும் கிராமத்தவர் அஞ்சுகின்றனர்.

இந்தேனேசியாவில் ஊழல் மிக ஆழமாகவே உள்பதிக்கப்பட்டுள்ளது. உணவு ஏனைய பொருள் உதவிகள் வழங்கவென கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நீண்ட காலத்தில் மதிக்கப்படாமல் போய்விடும் என உள்ளக இடம் பெயர்ந்தோர் பயப்படுகின்றனர். வாக்களிக்கப்பட்ட மாதத்தொகையான 150,000 ரூப்யாவை பெறுவதற்கு பதிலாக அதற்கு சமமான பொருட்களை ஏற்றுக் கொள்ளுமாறு உள்ளக இடம்பெயர்ந்தோர் கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என பல அறிக்கைகள் உள்ளன. கொட்டகை அமைக்கும் ஒப்பந்தக்காரர்கள் பகிரங்க கேள்விப்பத்திரம் கோரல் முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சிலர் கட்டப்படாத கொட்டில்களுக்கும் குறுக்கு வழிகளில் நிதி பெற்றுள்ளனர் என அறிக்கைகள் உள்ளன. பல கட்டிமுடிக்கப்பட்ட கொட்டகைகள் ஆகக் குறைந்த ஸ்பியர் பெறுமானங்களுக்கு அமைவாக இல்லாததுடன் திட்டமிட்டதைக் காட்டிலும் சிறியதாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன என 'ஊழல் அற்ற ஆச்சேக்கான சமாதானம்' எனும் ஊழலுக்கு எதிரான அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று எதிர்ப்பை வெளிக்காட்டி உள்ளது.

சுனாமியால் உயிர்தப்பியோர் என்பதற்குப் பதிலாக பலிக்கடாக்கள் என்ற மட்டில் உள்ளக இடம்பெயர்ந்த சமூகங்கள், தொடர்சியாக உதவியை எதிர்பார்க்க தலைப்பட்டால் சமூக மீட்சிப்படிமுறையான கொட்டகைக்குள் இருந்து வேறிட குடியமர்வை மேற்கொள்வதென்பதை தாமதமாக்கும். பேரனர்த்தத்துக்குப் பின் ஆச்சேயை மீள அபிவிருத்தி செய்வதில் நேரடியாகவும் சுறுசுறுப்புடனும் தொடர்புபட்டு இயங்க விரும்பும் ஏராளமான ஆச்சேயினரின் அபிலாசைகளுக்கு இது முரணாக இருப்பது ஓர் துரதிஸ்டமே. இடம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனம் (ஐ.ஓ.எம்) யூஎஸ்எய்ட் உடன் இணைந்து, நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் படிமுறையின் மட்டிலுள்ள உளப்பாங்குகளை கணிப்பிட ஒரு பிரதான அளவீட்டு கணிப்பீட்டில் பணியாற்றியுள்ளது.[3] சுனாமியால் பாதிப்புற்ற அனைவரது முன்னுரிமையும் வீடு திரும்புதல், தொழில் துறையை ஆரம்பித்தல், தமது சமூகங்களை மீளக் கட்டியெழுப்புதல் என்பனவாகும் என்பது அவர்களது பிரதான கண்டுபிடிப்பாக உள்ளது. நில சொத்து சார்ந்த சச்சரவுகளுக்கான வாய்ப்புக்கள்பற்றி தெளிவான விழிப்புணர்வை வெளிப்படுத்துகையில், தமது சொந்த நிலங்களும் வீடுகளும் தமக்குரியதென்று சட்ட ரீதியாக

உறுதிப்படுத்தப்படுமாயின் தாம் நிரந்தர வேற்றிட குடியமர்த்தலுக்கு இணக்கமுடியும் என ஒரு உள்ளக இடம் பெயர்ந்தவர் கூறினார். இடம்பெயர்ந்தோரில் அநேகர் தமது சொந்த கிராமங்களுக்கு அருகில் உள்ள பிரதேசங்களில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வேறிட குடியமர்தலுக்கான தமது பலமான ஆதரவை சுட்டிக்காட்டியுள்ளனர். கொட்டகைகளில் வாழ்வதில்லை என்ற இறுக்கமான அவாவை வெளிப்படுத்தியும் உள்ளனர். ஆச்சேயினர் அவர்களது தற்சார்பு தன்னம்பிக்கைக்கு பெயர்போனவர்கள். பதிலிறுத்தவர்களில் குறிப்பிடப்படும்படியான விகிதத்தினர் மரம், சீமேந்து போன்ற கட்டப்பொருட்களை பெறவே விரும்புகின்றனர் என கூறினர். அவர்கள் ஜீவாதார உதவிகளையே அழுத்திக் கேட்டனர். நேர்முகம் கண்டவர்களில் 4% மானவர்களே தமது வாழ்வை கொண்டு நடத்துவதற்கான உழைப்பையும், மீளத் தொடங்குவதற்குதவும் வகையில் ஏதாவது உதவியை பெற்றிருந்தனர் என கூறினர்.

## வேறிடக் குடியமர்த்தலை குடும்பங்கள் மிகக் கடுமையாக எதிர்க்கின்றன

மீன்பிடியில் பாரம்பரியமாக தங்கி வாழும் குடும்பங்கள் வேற்றிட குடியமர்த்தல் திட்டத்துக்கு மிகக் கசப்புடன் எதிர்ப்பதுடன் தமது கிராமங்களை விட்டு வெளியேறவும் மறுத்துள்ளனர். பொதுக் கூட்டங்களில் மீனவர்களின் பிரதிநிதிகள் எச் சூழ்நிலையிலும் தமது நிலத்தை விட்டு வெளியேறுவதற்கான தமது நிராகரிப்பை பகிரங்கமாக பிரகடனப்படுத்துவதில் ஏனையவர்களுடன் இணைந்துள்ளனர். உத்தியோக பூர்வ அறிவுறுத்தல்களை எக்காலத்திலும் சாதுவாக ஏற்றுக் கொள்ளும் ஒரு சமூதாயத்தில் இவர்களது எதிர்ப்பு ஒரு அபூர்வமானதாகும். இருந்த போதிலும் தமது கிராமங்களைவிட்டு வெளியேற மறுப்பவர்களுக்கு உதவி வழங்காதிருக்க இராணுவத்திற்கு கொடுத்த அதிகாரத்தினாலும் அரசினுடைய உறுதிப்பாட்டினாலும் எதிர்ப்பை தொடர்வது இலகுவானதாக இருக்குப் போவதில்லை.

அரசின் கொள்கையானது மேலிருந்து கீழ் நோக்கிய தன்மையையும், தமது இலக்கினால் உந்தப்படுவதாகவும், பங்களிப்புக்கு எவ்வித இடத்தையும் அனுமதிக்காததாகவும் உள்ளது. வேற்றிட குடியமர்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொறுப்பாக உள்ளவர்கள் கட்டாயமாக பின்வருவனவற்றில் கவனம் செலுத்தவேண்டும்.

- சொந்தக் கிராமங்களுக்கு எவ்வளவு அருகில் கொட்டில்களை அமைக்க முடியுமோ அவ்வளவு அருகாக அமைப்பதுடன் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய சுற்றுவட்டகைக்குள் குடியமர்த்துதல்.
- கொடடில்கள் அமைக்கும், நிர்வகிக்கும் படிமுறைக்குள் சிறந்த ஒழிவு மறைவற்ற தன்மையை அறிமுகம் செய்தல்.
- எவ்வளவு விரைவாக தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்ப முடியுமோ அவ்வளவு விரைவாக திரும்பும் அவாவை கொண்டிருப்பதற்கான உரித்துடைமையை அவர்கள் கொண்டுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்ளல்.
- உள்ளக இடப் பெயர்வுசார் வழிகாட்டல் கோட்பாடுகளின் அடிப்படையில் இடம் பெயர்ந்தோர் அவர்களது முழுமையான வெளிப்படுத்தப்பட்ட உடன்பாட்டுடன் மாத்திரமே வேற்றிட குடியமர்க்கலுக்குட்பட முடியும் என்பதை மதித்தல்.
- நன்கு நிலை நிறுத்தப்பட்ட சமூக கூறுகளின் ஒருங்கிணைப்பையும் இணைந்திரு தன்மையையும் உறுதி செய்ய அதிகம் தொழிற்படல்.
- அடிப்படை சேவைகளையும் உள்ளக கட்டுமானங்களையும் புதுப்பிக்கவும் மீள் திரும்பலை இலகு படுத்தவும் ஒரு ஒழுங்கமைப்பைக் கடைப்பிடித்தலும் பகிரங்கப்படுத்தலும்.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பக் கட்டமைப்பில் மாற்றங்களை கவனத்திலெடுத்து ஜீவனோபாய உதவி செயற்பாடுகளுக்கு உதவுதல்.
- எதிர்கால இயற்கை பேரனர்த்தம் பற்றிய மக்களின் கவலைகளை எடுத்தாளக்கூடிய பொது தகவல்களையும் கல்வியையும் வழங்குதல்.
  மீள் குடியமர்ந்த சமூகங்கள் பேரனர்த்த ஆயத்தம் மற்றும் முகாமைத்துவத்துக்கான விசேடத்துவ தற்காலிக திட்டங்களை உள்ளூர் மட்டத்தில் அபிவிருத்தி செய்வதில் தொடர்புபட வைத்தல்.

*லூக்மன் ஏஜ், செயின்ஸ் மலேசிய பெனாங் பல்கலைக்கழகத்தின் சமாதானத்துக்கான ஆய்வுக்கும் கண்காணிப்பிற்குமான பிரிவின் ஆச்சே நிகழ்ச்சித் திட்டத்தினை ஒருங்கிணைப்பவர். (www.seacsn.net/regional) அத்துடன் பண்டா ஆச்சேயில் ஆச்சே ஆய்வு மையத்தின் ஒரு ஆய்வாளரும்கூட. www.acehinstitute.org மின்னஞ்சல்: zitkalasa2000@yahoo.com*

1. www.humanitarianinfo.org/sumatra/assessments/doc/GoI_UN-joint_assessment_report_on_relocation_sites.doc
2. http://hrw.org/english/docs/2005/02/07/indone10134.htm
3. www.iom.int/tsunami/documents/indonesia_needs_assessment.pdf

*பண்டா ஆச்சே*



Fritz Institute

# குறைந்தபட்ச நியமங்களை இனவிருத்தி ஆரோக்கியப் பராமரிப்பில் உறுதிப்படுத்தல்

சன்ரா கிறவ்சி

*அவசரகால நிலையின் ஆரம்ப படிகளில் உயிர்காக்கும் அவசியத்தை இனவிருத்தி ஆரோக்கிய பராமரிப்பு கொண்டுள்ளது என்று ஒரு ஆழமான விழிப்புணர்வு உள்ளது. ஆச்சே மானில மீளாய்வு, சமகால குறைபாடுகளையும் பாரிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையையும் கோடிட்டுக் காட்டியுள்ளது.*

பாலியல் வன்முறை, எச்.ஐ.வீ / எயிட்ஸ், பாலுறவால் தொற்றக்கூடிய ஏனைய நோய்கள், தேவையற்ற அல்லது அபாயமான கர்ப்பம், பாதுகாப்பற்ற கருச்சிதைவு என்பன உள்ளடங்கலாக ஆரோக்கியம் சார்ந்த அதிஉயர் அபாயங்களுக்கு இடம்பெயர்ந்த பெண்களும் வழர்ந்த பெண்பிள்ளைகளும், முகம்கொடுத்துள்ளனர். 150,000க்குமதிகமான கர்ப்பமுற்ற பெண்களை சுனாமி பாதித்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய சமூகங்களில் காணப்படுவது போன்று, இவர்களில் 15% மானவர்கள் முன்னரே கண்டறியமுடியாத கர்ப்பம் சார்ந்த பிரச்சினைகளாலும் மகப்பேற்று சிக்கல்களாலும் அவதியுறுகின்றனர். ஊயிர் தப்பிய சுகாதாரப் பணியாளர்களிடத்தில் மிக அடிப்படை மருத்துவப் பொருட்களும் உபகரணங்களும் குறைவாக உள்ளதனால், இத்தகையோரின் பயன்பாட்டுக்கு அவசர கால உயிர்காப்பு மகப்பேற்று பராமரிப்பு சேவை ஒரு தேவைப்பாடாக உள்ளது.

ஒரு தசாப்தத்துக்கு முன், ஐநா வின் அமைப்புக்களினதும் சர்வதேச நிறுவனங்களினதும் நிறுவனங்களுக்கிடையிலான பணிக்குழுக்களில் ஒன்று, குறைந்தபட்ச ஆரம்ப சேவைகளின் திரட்டு (MISP)[1] அதாவது இனவிருத்தி ஆரோக்கிய செயல்பாடுகளினதும் சேவைகளினதும் தொகுப்பு ஒன்றை உருவாக்கினர். இத் தொகுப்பானது பாலியல் வன்முறையின் பின்விளைவுகள், எச். ஐ. வீ. கடத்தப்படுவதை தடுத்தல், மிதமிஞ்சிய மகப்பேற்றுக்கு முன்னான பின்னான சுகவீனங்களை தடுத்தல். கருவுற்றல் மற்றும் அவசரகால சூழ்நிலை சற்று ஸ்திரமடையும்போது பரந்த விசாலமான இனவிருத்தி சுகாதார சேவைகளின் நலன்களுக்கான திட்டம் என்பவற்றை தடுக்கவும் சமாளிப்பதற்குமான ஒரு திட்டமாகவும் இது இருந்தது.[2]

*இந்தேனேசியாவில், பெண் ஒர் படுக்கையையும் தனது 6 மாத பெண் குழந்தைக்கான உடுப்புக்களையும் பெறுதல்*

முன்னுரிமைப்படுத்தப்பட்ட ‘குறைந்தபட்ச ஆரம்ப சேவைகளுக்கான பொதி’யில் காணப்படும் செயற்பாடுகளாவன.

- இத்திட்டத்தின் அமுல்படுத்தலை ஒருங்கிணைப்பதற்கான முன்னணி நிறுவனத்தையும் தனிநபர்களையும் இனம்காணல்.
- அவசரகால உதவி மற்றும் வினியோகம், நீர், உணவு, எரிபொருள், மருத்துவ பராமரிப்பு என்பனவற்றை பாதுகாப்பாக பெறல், பொருத்தமான முகாம் அமைப்பு போன்ற அம்சங்களில் அகதிப்பெண்கள், பெண் பிள்ளைகளின் பங்கேற்பை உறுதிசெய்வதன் மூலம் பாலியல் வன்முறையை தடுத்தல்.
- பாலியல் வன்முறைக்குட்பட்டு உயிர்பிழைத்தோருக்கான மருத்துவ பராமரிப்பு.
- பாதுகாப்பான குருதியேற்றம், ஆணுறைகள் கிடைக்கக்கூடியதாயிருத்தல் போன்றவற்றை உறுதிப்படுத்தியும், எச். ஐ.வீ. தொற்று ஏற்படுவதை தடுத்தல் பற்றிய அறிவை வழங்கியும் எயிட்ஸ் நோயை தடுத்தல்.
- சுத்தமான மகப்பேற்று உபகரணங்கள் பொருட்கள் அடங்கிய பொதிகளை தாய்மார், மருத்துவிச்சிகள், பயன்படுத்த வழங்குதல், சுகாதார நிலையங்களுக்கு தாதியர் பயன்படுத்தும் பொருட்கள் உபகரணங்களை வழங்குதல், பேறு கால அவசர நிலைமைகளை சமாளிக்கத்தக்க ஒரு ஒழுங்கமைப்பை நிறுவுதல் போன்ற செயல்பாடுகளின் மூலம் பிரசவத்துக்கு முந்திய மற்றும் பிரசவ வேளை இறப்பு வீதத்தை குறைத்தல்.

இனவிருத்தி சுகாதாரம் சார்ந்த அடிப்படை தரவுகளை சேகரித்தல், தேவை யான பொருட்களுக்கு ஓடர் கொடுத்தல், சேவையை வழங்கும் இடங்களை தெரிவுசெய்தல், பயிற்சித்திட்டங்களை வடிவமைத்தல் அமுல்படுத்தல், போன்ற செயல்பாடுகளினூடாக ஒன்றிணைக்கப்பட்ட இனவிருத்தி சுகாதார சேவையை அடிப்படை சுகாதார பராமரிப்பு சேவையுடன் இணைக்கத்தக்கவாறு திட்டமிடல். 2005 மாசி மாத இறுதிப்பகுதியில், ஆச்சே மாகாணத்தில் மகளிருக்கான ஆணைக்குழு, இனவிருத்தி ஆரோக்கிய பராமரிப்பு பற்றிய ஒரு கணிப்பீட்டை நடாத்தியது. சுனாமி ஏற்பட்ட ஒரு கிழமைக்குள், ஐநா வின் சனத்தொகை நிதியம் அத்தியவசியமான இனவிருத்தி சுகாதார உபகரணங்கள், பொருட்களை இனவிருத்தி ஆரோக்கிய பராமரிப்பு சார்ந்த கருத்துக்களின் அடிப்படையில் வழங்கியதுடன் துறைசார் பணியாளர்களை அணிதிரட்டி பணிக்களத்துக்கு அனுப்பியும் இருந்தது. மாசி மாத இறுதிப் பகுதியில் ஐநா சனத்தொகை நிதியத்தின் இனவிருத்தி சுகாதார செயலணிக்குழு வாராந்த கூட்டங்களில் சர்வதேச, தேசிய உள்ளூர் நிறுவனங்களின் 35 பிரதநிதிகள் கலந்துகொண்டு வந்தனர்.



அவசரகால நிலைமைகளின் ஆரம்ப நாட்களில், சமூக உறுப்பினர்களுக்கும், மருந்துவிச்சிகள், மருத்துவதாதியர், சுகா தார உத்தியோகத்தர்கள், (ஆண், பெண்) சமூகத் தலைவர்கள், மனிதநேய தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுக்களுக்கிடையில் இடம்பெறும் கருத்து தகவல் பரிமாற்றங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஐநா சனத்தொகை நிதியமும் உலக சுகாதார நிறுவன மும் இணைந்து ஏராளமான கருவுற்ற தாய்மார், மாதாந்த மகப்பேறு, சேய் இறப்பு, பிரசவவேளை இறப்பு, இனவிருத்தி வயது போன்ற அம்சங்களில் அடிப்படையான தரவு சேகரிப்பை மேற்கொண் டிருந்தனர். மகளிர் அமைப்புக்களுடனான கலந்தாலோசனை, இடம்பெயர்ந்த பெண்கள் கருத்தடை சாதனங்களை கோரியிருந்ததாக சுட்டிக் காட்டினர். தேசிய குடும்பத்திட்டமிடல் ஒன்றியம் மற்றும் ஏனைய அமைப்புக்களுடனான ஒன்றிணைவில், ஐநாவின் சனத்தொகை நிதியம் மிக விரைவாக இத்தகைய சாதனங்களை வழங்கி இருந்தது.

இருந்தபோதிலும், ஐநாவின் சனத்தொகை நிதியத்தின் ஆச்சே மாகாண அமுலாக்கல் பங்காளி நிறுவனங்கள், இனவிருத்தி சுகாதார சேவைகளை பாதிப்புற்ற மக்களுக்கு வழங்குவதில் ஆர்வமாக இருந்த போதிலும், ஆரம்ப சேவைக்கான பொதியில் குறிப்பிட்டுள்ள முன்னுரிமை செயல்பாடுகளைப்பற்றியும் பிரதான இலக்குகளைப்பற்றியும் ஆகக்குறைந்தளவுக்கேனும் அறிந்திருக்கவில்லை. நேர்முகம் காணப்பட்ட மனிதநேய பணியாளர்களில் அரைவாசிப்பேர் இவைபற்றி கேள்வியுற்றுள்ளனர். ஆனால் ஒருசிலர் மாத்திரமே அதன் இலக்குகளையும் முன்னுரிமைச் செயற்பாடுகளையும் பற்றி எமக்கு சரியாக விபரித்தனர்.

### குறைந்தபட்ச ஆரம்ப சேவைகளின் பொதியில் (MISP) காணப்படும் உள் அம்சங்களில் உள்ள குறைபாடுகள்.

பாலியல் வன்முறை பற்றிய அறிக்கைகள் ஓரங்கட்டப்பட்டதுடன், பரந்த பிரச்சனைகளை அவை சுட்டிக்காட்டாதபோதும், மனித நேய பணியாளர்களும் அரச அலுவலகர் களும் இது பற்றி அறியாததுடன் அல்லது பாலியல் வன்முறைக்குட்பட்டவர்களுக்கு மருத்துவ பராமரிப்பை வழங்கும் வண்ணம் வசதியற்றவர்களாகவும் இருந்தனர். அனேக மாக அனைத்து சர்வதேச நிறுவனங்களும் நடத்தைசார் ஒழுக்கக் கோவையை கொண்டுள்ள வேளையிலும் ஒருவர் கூட மீறல்களை அறிக்கையிடும் நடைமுறைபற்றி அறியாதுள்ளதுடன், ஏனைய உள்ளூர் பங்காளி நிறுவனங்களுடன் இத்தகைய நடத்தைசார் ஒழுக்க கோவை பற்றி பகிர்ந்து

கொண்டதுமில்லை. பெண்களும் வளர்ந்த பெண் பிள்ளைகளும் தங்குமிடங்களையும் மலசலகூடம், குழியலறைகளையும், அறிமுகமில்லாதவர்களுடனும் குறிப்பாக ஆண்களுடனும் பகிர்ந்துகொள்வது பற்றி தமது அசௌகரிய உணர்வுகளை வெளிப்படுத்தினர். பாலியல் வன்முறைபற்றிய அறிக்கைகள் இல்லையென்றாலும், சுகாதார அமைச்சின் ஊழியர்களும் மனிதநேய பணியாளர்களும் பெருமளவில் பாலியல் வல்லுறவுக்குட்பட்டவர்கள் பற்றிய சர்வதேச, தேசிய மட்ட சிகிச்சை கொள்கை திரட்டு பற்றி அறியாதுள்ளது ஒரு அக்கறைக்குரிய விடையமாக இன்றும் உள்ளது.

ஆச்சே மாகாணத்தில் 5,500 மருத்துவிச்சிகளில் பத்து விகிதமான வர்கள் சுனாமியில் இறந்துவிட்டனர். இதன் விளைவாக எழுந்த இடைவெளிக்கு முகம் கொடுக்க, 120 மருத்துவிச்சிகள் ஜகார்த்தாவில் இருந்து ஆச்சே மருத்துவ மையங்களுக்கு இரண்டு மூன்று கிழமை இடைவெளியில் கொண்டுவரப்பட்டனர். சுத்தமான மக்கபேற்று உபகரணங்கள், பொருட்கள் மற்றும் மருத்துவ நிலையத்துக்கான மருத்துவிச்சி உபகரணங்கள் போன்ற MISP க்கு உதவும் அனேக பொருட்கள் அவசர கால நிலைமையில் சில வாரங்களுக்குள் சர்வதேச நிறுவனங்களுக்கு கிடைக்கக்கூடியதாய் இருந்தன. இருந்த போதிலும், பாரம்பரிய மகப்பேற்று மருத்துவிச்சியர் பயன்படுத்தும் பொருட்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை. சில வேளைகளில் கிடைத்தவைகூட கருவுற்ற பெண்களுக்கோ அல்லது பாரம்பரிய மருத்துவிச்சியருக்கோ உரிய நிறுவனங்களால் பகிர்ந்தளிக்கப்படவில்லை. சுனாமிக்கு முன்னர்கூட, மகப்பேற்று மையங்களுக்கு கற்பிணித்தாய்மாரை அனுப்பி வைப்பதற்கு முன்னான அடிப்படை அவசர மகப்பேற்று பராமரிப்பை வழங்கும் தமது கொள்தகுதிறன் வரையறைக்குட்பட்டு இருந்ததென சமூக மைய மருத்துவிச்சிகள் அறிக்கையிட்டிருந்தனர்.

ஒரு நிறுவனம் ஆணுறைகளை கழஞ்சியப்படுத்தி வைக்கும் இடத்தை ஆயத்தம் செய்திருந்த போதிலும், பார்வையிடப்பட்ட நிலையங்களில் பயனாளிகளுக்கு வெளித் தெரியும் வகையில் கிடைக்கக்கூடியதாயிருக்க வில்லை. அனேக நிறுவனங்கள் ஆணு றைகளை இலவசமாகவும் இலகுவாகவும் கிடைக்கச் செய்வதில்லை. ஏனெனில், இஸ்லாமிய பண்பாட்டாளர்களாலும் தேசிய சுகாதார அதிகாரிகளாலும் இதனை பொறுத்துக்கொள்ள முடியாது என்று சரியாகவோ அல்லது பிழையாக-வோ அவர்கள் கருத தலைப்படுகின்றனர். சில நிறவனங்களோ ஆணுறைகளின் பலாபலன்களின் முக்கியத்துவத்தை அறிந்திருக்கவில்லை. ஏனையவர்கள் முதல் படியாக தமது பணியாளர்களுக்கு கிடைக்கச் செய்வதை கவனத்தில் கொள்ள சித்தமாக உள்ளதுடன் எத்தகைய ஆலோசனைகளையும் திறந்த மனத்துடன் நோக்குகின்றனர்.

சுகாதார அமைச்சு, உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், எச்.ஐ.வி தொற்றுக்கள் பரவாமல் தடுக்க மருத்துவ உபசரணங்களை தொற்றுநீக்குதல், தொற்று ஏற்படாமல் செய்தல், தூய்மை போன்ற அடிப்படை சுகா தார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கைக்கொள்ளுதல் போன்ற அம்சங்கள் சுகாதார பணியாளர்களிடையே சுனாமிக்கு முன்னர் குறிப்பிடும்படியான குறைபாடாக இருந்ததென அறிவித்தனர். பாதுகாப்பான குருதிச் செலுத்தல், தேசிய சட்டத்தின் ஒரு அங்கமாக இருந்த போதிலும், அனைத்து குருதியும் நன்கு பரிசோதிக்கப் பட்டதோவென்ற சந்தேகக்கதை அனேகர் வெளிப்படுத்தியுள்ளனர்.

## முடிவுரை

முன்னணி நிறுவனத்தினதும் பொறுப்புவாய்ந்த சுகாதார கவனக் குவிப்பு மையங்களினதும் பிரசன்னம், ஒருங்கிணைக்கப்பட்ட இன விருத்தி நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் பொருட்களின் கிடைக்கக்கூடிய தன்மை என்பனவற்றை தூண்டுகின்றன என்பதை இந்த கண்டுணர்வுகள் விபரிக்கின்றன. ஆச்சே மானில மனிதநேய பணியாளர்கள் குறைந்தபட்ச ஆரம்ப சேவைகள் பொதியின் கோட்பாடுகள், வினியோகிக்கும் பொருட்கள் பற்றிய அதிகரித்துவரும் விழிப்புணர்வை வழர்த்துள்ளனர். ஆனால் புதிய அவசரகால ஒழுங்கமைப்பில் மிதமிஞ்சிய கருச்சிதைவு, சிசு மரணம் என்பவற்றை தடுக்கும் நோக்குடைய, பலதரப்பட்ட இன விருத்தி சுகாதார சேவைகள் பற்றிய அறிவினை, ஒருசிலராவது கொண்டிருக்கவில்லை. இந்த கண்டுணர்வுகள் மனிதநேய பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஆரம்ப சேவையின் பொதிபற்றிய முன் அவசரக-ால நிலை பயிற்சியை வழங்கும் தேவையை அடிக்கோடிட்டு காட்டுகின்றன. மகளிர் ஆணைக்குழு “பயன்படுத்துனர் சினேக தொலைக்கல்விக் கலைக் கூறு” ஒன்றை உருவாக்கும் பணியை ஆரம்பித்துள்ளது. அத்துடன் உலக பிரபல்ய மொழிகளில் அதனை மொழி பெயர்க்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. இக்கையேடு 2005 புரட்டாதி முதல் கிழமை அளவில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் (மின்னஞ்சல்: info@womenscommission.org)

அனைத்து அவசரகால ஒழுங்கமைப்பு களிலும் பயனாளிகளுக்கு குறைந்தபட்ச ஆரம்ப சேவைகள் பொதி கிடைக்கக்கூடியதாயிருப்பதை உறுசெய்யும் பொருட்டு, மகளிர் ஆணைக்குழு அரசுகளுக்கும், கொடையாளி நிறுவனத்தினருக்கும், மனிதநேய பணியாளர்களுக்கும் உந்துதல் கொடுத்து வருகிறது. ‘அவசரகால நிலையில் இனவிருத்தி சுகாதார முன்னுரிமைகள்: இந்தோனேசியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குறைந்த பட்ச ஆரம்ப சேவைகள் பொதிபற்றிய கணிப்பீடு’ எனும் அறிக்கை மகளிர் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் கிடைக்கும்.[3]

***சன்ரா கிறவ்சி, அகதிப்பெண்கள் சிறவர்களுக்கான மகளிர் ஆணைக்குழுவின், இனவிருத்தி சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் இயக்குனர். மின்னஞ்சல் : sandra@womens commission.org***

1. www.womenscommission.org/projects/rh/misp%20index.shtml
2. www.sphereproject.org (குறைந்தபட்ச ஆரம்ப சேவை-களின் பொதி தற்போது sphere நிகழ்சித்திட்ட, மனிதநேய பிரகடனம் மற்றும் பேரழிவு பதிலிறுப்பின் குறைந்தபட்ச அளவுப்பிரமாணங்கள் என்பனவற்றை உள்வாங்கி உள்ளது.
3. www.womenscommission.org/pdf/id_misp_eng.pdf



Emily Will/MCC/ACT International

# இந்தோனேசியாவில் மனித நேய ஒருங்கிணைப்பு: ஒரு என் ஜீ ஓ பார்வை

கார்ஸ்ரின் வூல்ஸ்

*ஒருங்கிணைப்பின் பெறுமானத்தை மனித நேயப் பணிச் சமூகம் அறிந்து வைத்துள்ள போதிலும்கூட, சுனாமிக்குப் பின்னான முதல் ஓர் சில மாதங்களில் இந்தோனேசியாவின் கள அனுபவம் பல அனுகூலமான படிப்பினைகளைத் தருகின்றன.*

அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்க ஐநா குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் 'களத்துக்குப் போதுமான வளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டால், ஒருங்கிணைப்பு தானா கவே நிகழும்' என்ற எடுகோ-ளின் அடிப்படையில் அமைந்தது போன்று தென்பட்ட அணுகுமுறை மிக வினைத்திறன் மிக்க ஒருங்கிணைப்புக்கு உண்மையில் இட்டுச் செல்லவில்லை. சில மட்டங்களில், தேவைக்கதிகமான ஒருங்கிணைப்பு காணப்பட்டது. ஒரு டசினுக்குமதிகமான ஐநா அமைப்புக்கள் தமது இருப்பியலுக்கான போட்டியில் குதித்ததும் ஒவ்வொரு வாரமும் 72 ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் இடம்பெற்றதும் பண்டா ஆச்சேயில் ஒருங்கிணைப்பானது மிகைப்படு நிலைக்குச் செல்லக்காரணமாயின. 400 க்குமதிகமான சர்வதேச நிறுவனங்களின் பிரசன்னம் இருந்து வந்த சூழலில், 10 – 40 க்கிடையிலான நிறுவனங்களே ஓர் சில கூட்டங்களிலாவது கலந்து கொண்டன என்பது அனேகமான என்ஜீஓ க்கள் இத்தகைய கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான வளங்களை கொண்டிருக்கவில்லை என்பதற்கு ஒரு சான்றாகும். அனேக ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட இலக்குகளைக் கொண்டிராததுடன் பங்குபற்றுனர்களின் பங்கு, பொறுப்பு, கடமை, முடிவெடுக்கும் அதிகாரம் போன்றனவற்றை தெளிவுபடுத்தவும் தவறிவிட்டன. அனேக சந்தர்ப்பங்களில், இத்தகைய கூட்டங்களின் நோக்கம், தகவல்களைப் பகிர்ந்து கொள்வதா, அல்லது பொது உடன்பாடுகளை எட்டுவதா, அல்லது நடை முறை அல்லது கொள்கைசார் முடிவுகள் எடுப்பதா என்ற தெளிவற்ற நிலையி-லேயே காணப்பட்டது. சிரேஸ்ட பணியா-ளர்கள் அமுல்படுத்துவதைக் காட்டிலும் ஒருங்கிணைப்பிலேயே தமது நேரத்தைச் செலவிடலாயினர்.

அதிக எண்ணிக்கையான கூட்டங்கள், அதிகரித்துவரும் மனிதநேய விசேடத்துவத்தை நோக்கிய போக்கினையும் தமது மைய செயற்பாட்டு நடவடிக்கைகளில் கவனம் குவிக்க முடியாத இயலாமையை யும் பிரதிபலித்தன. குறிப்பிடப்படும்படியான கூட்ட நேரம், மீள் கட்டுமானம், வருவாய் கூட்டல் செயற்பாடுகளின் மட்டில் கைக்கொள்ளத்தக்க கொள்கைகள் அணுகுமுறைகள் பற்றி விவாதிக்கவே செலவிடப்பட்டது. அதேவேளை, பேரனர்த்தம் இடம்பெற்று இரு மாதங்களின் பின்னரும் ஆச்சேயில், அடிப்படை மலசலகூட சுகா தார வசதிகளை பெறுவதில், ஏராளமான பேரனர்த்தம் பாதித்த மீள் குடியேற்றங்கள் மிகுந்த குறைபாட்டுடன் காணப்பட்டன. மனித நேயப் பணிச் சமூகமோ மிதமிஞ்சிய உடன்பாடின்மைகளுக்குள் அகப்பட்டு பிரிந்து நின்றதுடன் நீண்ட காலத்துக்கு கவனத்தில் எடுக்காமல் ஏராளமான சிக்கல்மிகு பிரச்சனைகளை அப்படியே விட்டுவிட்டது.

மிதமிஞ்சிய அடுக்குகளில் அல்லது மட்டங்களில் ஒருங்கிணைப்புக்கள் காணப்பட்டன. ஒரே மாதிரியான ஐநா வழிநடத்தும் ஒருங்கிணைப்புக் குழுக்கள், தமக்குள் தொடர்பாடல்களைக் கொண்டிராமலே ஜகார்த்தா, மீடான், பண்டா ஆச்சே, மியூலபோ போன்ற இடங்களில் ஒரேவிதமான பிரச்சனைகளின் மட்டில் செயல்பட்டுக் கொண்டிருந்தன. இதன் விளைவாக பல்வேறு வகையான வழிகாட்டல்கள், பிரமாணங்கள் என்பன தனித்தனியாக உருவாக்கப்பட்டன. பல ஐநா அமைப்புக்கள் ஒருங்கிணைப்பு மற்றும் அமுலாக்கல் இரண்டையும் செய்வதில் ஈடுபட்டதன் விளைவாக, அவர்கள் அனேக சந்தர்ப்பங்களில், மனிதநேயப் பணிச் சமூகங்களின் ஒருங்கிணைந்து பகிரப்படும் ஆர்வம் அக்கறைகளை பிரதிநிதித்துவப்படுத்தாமல், இந்தோனேசிய அரசாங்கத்துடனான கூட்டங்களில் தமது சுய வேலைத்திட்டங்களைச் சுட்டும் விடையங்களிலேயே கவனத்தை ஒன்று குவித்தனர். ஐநாவானது, நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புபட்ட தீர்மானங்களை அறிவிக்கும் முகமாக மனிதநேய அமைப்புக்களை வலுவூட்டும் வகையில் தகவல்களை சேகரிக்கவும் வழங்கவும் அதி-காரம் கொண்ட ஒரு மனித நேய தகவல் மையத்தை[1] உருவாக்கியது. இம் மையம் பல வாரங்களுக்கு பின்னரே செயல்படு நிலையில் வலுப்பெற்றதுடன், கஸ்டமிக்க ஒரு சில வாரங்களில் பிரயோசனமான ஆதரவை வழங்கின. இருந்தும், அனைத்து சேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யத்தக்க வளங்களை போதுமான அளவு கொண்டிருக்கவில்லை. இதே நிலைதான் "மனிதநேய வான் சேவைகள்" மற்றும், "இணைந்த சேவைகள் மற்றும் வழங்கல் ஒழுங்கமைப்பு மையம்" போன்றவற்றிலும் காணப்பட்டன.

## இராணுவத்தின் பாத்திரம்

மனித நேயப் பதிலிறுப்புக்கான இராணுவத்தின் பங்களிப்பானது, சிவில் ஒருங்கிணைப்பிற்குக் கீழ் வரவேண்டும் என்ற தேவைப்பாட்டினை ஒரு சிறந்த மனித நேயப் பணி நடைமுறையாக ஏற்றுக் கொண்டுள்ள வெளிநாடுகள் வழங்கிய இராணுவத்தினரின் பாரிய பொருட்கள், கருவிகள், உபகரணங்கள் என்பவற்றின் பயன்பாட்டை இந்தோனேசிய இராணுவமே ஒருங்கிணைத்ததென்பது உண்மை. கணிப்பீட்டு வேலைகளுக்கும் பதிலிறுப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குமாக இத்தகைய உபகரணங்கள் பொருட்களை என் ஜீ ஓக்கள் பயன்படுத்த முடியாதபடி ஒதுக்கப்பட்டிருந்தனர். இந்தோனேசியாவின் ஏனைய பகுதிகளில் இருந்து பண்டே ஆச்சே, மியூலபோ போன்ற இடங்களுக்கு பொருட்களை கொண்டு வரும் வான்வெளி கொள்தகுதிறனை என் ஜீ ஓக்கள் கொண்டிருந்தன. அத்துடன் செல்ல முடியாத கடினமான சுமாத்திராவின் மேற்கு கரையில் உள்ள சமூகங்களை சென்றடைவதற்கு கப்பல்களையும் உலங்கு வானூர்திகளையும் பயன்படுத்துவதும் மிகவும் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சிக்கல் வாய்ந்த முதல் இரு வாரங்களிலும் என் ஜீ ஓ பணியாளர்களைக் காட்டிலும் பத்திரிக்கையாளர்கள் உலங்கு வானூர்திகளில் பயணம் செய்வது இலகுவாக இருந்தது. இப்பிரதேசங்களில் செயற்பட்ட இராணுவம் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றிய தரவுகள், தகவல்களை ஒழுங்கு முறையாக சேகரிக்கவில்லை. சேகரிக்கப்பட்ட சிறிய தரவுகள்கூட என் ஜீ ஓக்களுக்கு கிடைக்க கூடியதாக இருக்கவில்லை. தொடர்ச்சியான முறைப்பாடுகளே இத்தகைய சூழ்நிலையில் சிறிது மாற்றத்தைக் கொண்டு வந்தது. ஆச்சேயில் பிரச்சனைக்குட்பட்டுள்ள ஒரு தரப்பாருக் கூடாகவும், அவர்களது கட்டுப்பாடுகளுக்கு கூடாகவும், மனித நேயப் பணிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் சூழ்நிலையும், அதனூடாக மனித நேயப் பணிச் சமூகத்தின் பக்கச் சார்பு அற்ற நடுநிலைமை தன்மையின் மட்டில் பலமான சிக்கல்களை ஏற்படுத்தும் அபாய சூழ்நிலையையுமே மாற்ற முடியாத ஒன்றாக அங்கு இருந்தது. மனித நேயப் பணிச் செயற்பாட்டாளர்களினதும் இந்தோனேசிய இராணுவத்தினரினதும் பாத்திரப் பங்கேற்புக்கிடையிலான தெளிவான வித்தியாசத் தன்மைகளை உறுதிப்படுத்த உயர்மட்டத்தில் ஏராளம் செய்திருக்க முடியும்.

## பாரிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக் கிடையில் உள்ளக ஒருங்கிணைப்பு

நிறுவனங்களுக்கிடைப்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்திணைந்து செயல்படும் தரம், கலப்புத் தன்மை வாய்ந்ததாயிருந்தது. நிகழ்ச்சித் திட்டங்களுக்கான இட அமைவும் கட்டுப்பாடும் ஆரம்பத்தில் உகந்ததல்லாததாக இருந்ததுடன் குறுகிய காலத்தன்மையையும் கொண்டிருந்தது. பல நிறுவனங்கள் தாம் பராமரிக்கச் சாத்தியப்படும் என்பதற்கப்பால், ஆரம்பத்தில் ஏராளமான இடங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து தொடர்ந்தும் பிடித்து வைத்துக் கொள்ள முயன்றனர். ஏனைய நிறுவனங்கள் இதனால் தாம் ஒதுக்கப்பட்டதாக உணர்ந்தனர். இத்தகைய முறுகல் நிலையை தடுக்கவும் ஒத்திசைவுத் தன்மையை அதிகரிக்கவும் அனேக பாரிய நிறுவனங்களின் தலைமைகள் முறைசார் வாரக் கூட்டங்களை நடாத்த தீர்மானித்தனர். இவ் ஒழுங்கமைப்பு உடனடி முன்னேற்றகர நிலைக்கு இட்டுச் சென்றது. ஒருமுறை ஒரு பிரதான செயல்பாட்டு நி-றுவனம் தாம் என்ன, எங்கே, எப்படி செய்ய வேண்டுமென்ற விடையத்தில் உடன்பாடு கண்டுவிட்டால் ஏனைய நிறுவனங்கள் தகவல்களை அது சார்பாக பகிர்வதுடன் கொள்வனவு சேவைகள் ஒழுங்கமைப்பு ஆதரவையும் வழங்குவதற்கு முன் வருவர்.

ஆச்சேயில் கெயார் நிறுவனப் பிரதி நிதிகள், இத்தகைய முறை சாரா ஒத்திசைவுச் செயல்பாடுகள் போது மானதாக அமையவில்லை என உணர்ந்ததுடன் உத்தியோக பூர்வ நன்கு வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் கட்டமைப்புக்கான ஆலோசனை-யையும் முன் மொழிந்தனர். கெயாரும் நோர்வேஜியன் ரெப்யூஜிக் கவுன்சிலும் முறைசார் என் ஜீ ஓ ஒருங்கிணைப்புக் கட்டமைப்பை உருவாக்கும் முகமாக, தன்னார்வ நிறுவனங்களின் சர்வதேச கவுன்சிலை[2] இலகுபடுத்த அழைத்தனர். கெயர், வேர்ல்ட் வி'ன் இன்டநெசனல், ஒக்ஸ்பார்ம் ஜி.பி, கத்தலிக் ரிலிப் சேவிஸ் ஆகியன இலங்கையில், இந்தியாவில், இந்தோனேசியாவில், தாய்லாந்தில் என சுனாமி பாதித்த நாடுகளில் உள்ள கற்றல் செயற்பாடுகளை ஒன்று திரட்டும் முகமாக "செயல்பாட்டு மீளாய்வை" இருநாள் செயலமர்வினூடாகச் செய்தன.[3]

## பெரிய சர்வதேச என் ஜீ ஓக்களும் சிறியனவும்

மனிதநேய தகவல் மையத்தால் வெளியிடப்பட்ட தொடர்பு விபரத்திரட்டானது



*பண்டா ஆச்சேயில் நிவாரணப் பொருட்களுடன் இந்தோனேசிய இராணுவம்*

203 பக்கங்களை கொண்டுள்ளது[4] என்பதை வைத்துப் பார்க்கும்போது ஆச்சேயில் மனிதநேயப் பணிச் சமூகத்தின் அளவு மிகப் பாரியதென்பது புலனாகும். கிட்டத்தட்ட 5,000 சர்வதேச பணியாளர்களை பதிலிறுப்பின் உச்சமாகப் பணிக்கமர்த்தியுள்ள பதிவு செய்யப்பட்ட சர்வதேச என் ஜீ ஓக்களுக்குப் புறம்பே, பதிவு செய்யும் படிமுறையை குறுக்குக் கடவையில் கடந்த ஏராளமான சிறிய சர்வதேச முன்னெடுப்புக்களும் உள்ளன. நாட்டின் வேறு பிரதேசங்களில் இருந்து வந்திறங்கிய ஏராளமான சிறிய இந்தோனேசிய தன்னார்வக் குழுக்களும் முன்னமே உருவாக்கப்பட்டிருந்த 120 ஆச்சேனிய என் ஜீ ஓக்களும் இவற்றில் அடங்கும்.

சர்வதேச சமூகத்தால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் கட்டமைப்பு, குறிப்பாகத் தொலைதூர இடங்களில் பணிபுரிந்த உள்ளூர் நிறுவனங்களைப் பெரிதாகச் சென்றடையவில்லை. உள்ளூர் மொழியில் மொழி பெயர்ப்பு வழங்கப்படாமலே ஆங்கில மொழியில் அனைத்துக் கூட்டங்களும் இடம் பெற்றன. அக்கூட்டங்களில் என்ன நடைபெறுகின்றன என்பதை அறிய முடியாத நிலையில் அக்கூட்டங்களுக்கு வருகை தரும் உள்ளூர் நிறுவனங்கள் நாளடைவில் அங்கு செல்வதை நிறுத்திக் கொண்டன. மனிதநேய தகவல் மையத்தின் பயன்பாட்டுக்கான ஐ டீ பி மையங்கள் பற்றிய தரவு தொகுப்பினை தயாரித்த கெயார் தேசிய பணியாளர்களின் அனுபவத்தின் கூடாக ஆங்கிலத்தின் மேலாண்மை நிலை சித்தரிக்கப்படுகிறது. உள்ளடக்கம் இந்தோனேசிய பகாஸாவில் இருந்ததனால் தரவுகளை வகைப்படுத்திப் பயன்படுத்த மனிதநேய மையத்துக்கு இரு வாரம் எடுத்தது. ஏனைய நிறுவனங்கள் ஏற்கெனவே அறிந்து வைத்துள்ள தகவல்களை உள்ளக இடம்பெயர்ந்தோரை நேர்முகம் கண்டு திரட்டுவதற்கு தமது பணியாளர்களை அனுப்பி இருந்ததனால் இக்காலப் பகுதியில் வளங்கள் வீணடிக்கப்பட்டன.

இந்தோனேசியா அரசு, பல ஜநா நிறுவனங்கள் மற்றும் ஒரு சில பாரிய சர்வதேச நிறுவனங்கள் என்பன, ஏனைய சிறு நிறுவனங்களும் முன்னெடுப்புக்களும் தகுதி குறைந்தனவாகவும் வளப்பற்றாக்குறைமிக்கனவாகவும் தென்பட்டதனால் அவர்களது பிரசன்னத்தை கேள்விக்குட்படுத்தின. மனிதநேய தகவல் மைய தொடர்புத் தரவுத் திரட்டில் காணப்பட்ட மதமாற்றம் செய்யும் சமய அமைப்புக்கள் போன்ற கேள்விக்குட்பட்ட பல செயற்பாட்டாளர்களை இந்த பேரனர்த்தத்தின் அளவுப் பெறுமானம் கவர்வதனால் அனேக சிறிய நிறுவனங்கள், பாரிய நிறுவனங்களால் எடுத்தாள முடியாதனவற்றை நிவர்த்திப்பதில் ஒட்டுமொத்த பதிலிறுப்புக்கு குறிப்பிடப்படும்படியான வகையில் பங்களிப்பு செய்தன. வினைத்திறன்மிக்க ஒருங்கிணைப்புக் கட்டமைப்புக்குள் அவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தால் அவர்களது பங்களிப்பு இன்னும் பெறுமானம் மிக்க ஆதரவாக அமைந்திருக்கும். உள்ளூர் மட்டத்தில் கெயாரும் ஏனைய என் ஜீ ஓக்களும் சிறிய செயற்பாட்டாளர்களுடன் பணிநிலை உடன்பாடுகளை ஏற்படுத்த முயன்றனர். இரட்டிப்பை தவிர்ப்பதிலும் கேள்விக்குட்பட்ட நிகழ்ச்சித் திட்ட அணுகுமுறைகளை மாற்றிச் சீராக்குவதிலும், அதிகார அங்கீகாரம் அனுமதித்த இடங்களிலெல்லாம் குறிப்பிடத்தக்க அளவில் சிறப்பாக இது செயல்பட்டது. ஏனைய நிறுவனங்களை ஒருங்கிணைக்க அதிகார அங்கீகாரம் வழங்கப்பட்ட இடங்களில் உதாரணமாக கொஸோவோவில் கடந்த காலங்களில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஆச்சேயில்கூட இந்த வெற்றிகரமான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டிருக்க முடியும்.

## ஒருங்கிணைப்புப் பிரச்சனைகளை அழுத்தமாகக் கூறல்

ஒருங்கிணைப்பு முக்கியமானது என அனேகர் ஏற்றுக் கொள்வர் ஆனால் ஒருங்கிணைப்பு என்றால் என்ன என்பதற்கு வித்தியாசமான பார்வைக் கோணங்கள் உள்ளன. அதன் ஆகக் குறைந்த வடிவத்தில், இரட்டிப்புச் செயற்பாட்டை தவிர்க்கும் தன்னார்வ நடவடிக்கைகளை அது உள்ளடக்கலாம் அல்லது பதிலிறுப்புக்களை உகந்ததாக்கும் பரந்த முயற்சியாகக்கூட இருக்கலாம். ஒருங்கிணைக்கும் அமைப்பானது நடுநிலைமையற்றது எனக் கருதப்படும் இடங்களிலும், உதாரணமாக மன விருப்புக்களின் கூட்டு அல்லது ஜநா வாக இருத்தல் என்ற நிலையிலும், பக்கச்சார்பற்று செயற்படும் ஒரு என் ஜீ ஓவின் தேவைப்பாட்டினை இத்தகைய உகந்ததாக்கும் முயற்சி தடைப்படுத்தலாம் என்ற சூழ்நிலையிலும், கெயார் போன்ற என் ஜீ ஓவுக்கு குறிப்பிடப்படும்படியான பிரச்சனைகளை, பதிலிறுப்புக்களை உகந்ததாக்கும் பரந்த முயற்சி முன் வைக்கக்கூடும். நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பையும் செய்யும் இணை பொறுப்பை, ஒருங்கிணைப்பு அமைப்பு கொண்டுள்ள வேளை, குறிப்பிடப்படும்படியான பிரச்சனைகள் காணப்படலாம். இத்தகைய சூழ்நிலைகளில் ஒன்று குவிக்கப்பட்ட இலக்கு இன்மையும் தனிப்பட்ட ஈடுபாடுகளும்கூட காணப்படலாம். ஒருங்கிணைப்புக் கட்டுமானங்கள் சிறப்பானவையாகத் தோன்றலாம். ஆனால் நடைமுறையில் ஒருங்கிணைப்பு அமைப்பானது போதுமான அளவும் உரிய முறையிலும் வளமாக்கப்படவும், பணியாளர்கள் பணிக்கமர்த்தப்படவும் இல்லை என்றால் அக்கட்டுமானங்கள் தட்டுத்தடு மாறலாம். எங்கு அத்தகைய ஒருங்கிணைத்தல் புதிதாக வந்திறங்குகின்றதோ, அல்லது அனுபவமற்றதாக உள்ளதோ, எங்கு தகவல் பரிமாற்றக் கட்டமைப்புக்கள் பூரணமற்றவையோ அங்கு பங்கேற்புக்கும் ஒத்துழைப்புக்கும் இசைந்து செயல்படுத்தலுக்குமான பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குவதும் கடினமாகும்.

## திட்டத்தை முன்னகர்த்தல்

சர்வதேச மனிதநேயச் சமூகம், திட்டத்தை முன்னகர்த்துவதில் அதிகமான செயற்படு நிலையில் இருக்க வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக பின்வரும் துறைகளில் அவ்வாறிருத்தல் அவசியம்.

- தகவல் தேவைப்பாடுகளை வரையறை செய்தல்.
- பிரமாணங்களைக் கொண்ட கணிப்பீட்டு படிவங்களை தொடர்பாடலுக்கூடாக வினியோகித்தல்.
- பேரனர்த்தப் பதிலிறுப்பில் ஆகக்குறைந்தளவு ஸ்பியர் பிரமாணங்களை உறுதி செய்தல்.[5]
- தேசிய, மாகாண, உள்ளூர், துறைசார் பிரிவுகளின் மட்டில் ஒருங்கிணைப்பு கட்டுமானங்களுக்கிடையில் தெளிவான தொடர்புகளை ஏற்படுத்துதல்.
- தொழில் மற்றும் வள ஒதுக்கீடு மட்டில் கூட்டாகத் திட்டமிடலில் உள்ள முன்னேற்றத்தின் திறமைகளை மதித்தல்.
- தேசிய அரசுகள் இராணுவம் என்பனவற்றின் சிக்கல்மிகு பாத்திரங்களை இனங்காண்பதும் அவர்களது கடமைகள் பொறுப்புக்களை தெளிவாக்கலும்.
- ஒத்திசைந்து செயற்படல், பிரதிநிதித்துவம், பரிந்துரைவாதிடல் போன்றனவற்றுக்காக இசைவான ஒழுங்கமைப்புக்களுடனான முன்னமே உருவாக்கப்பட்ட சர்வதேச என் ஜீ ஓ ஒருங்கிணைவுக் கட்டுமானங்கள்.
- உள்ளூர், தேசிய சிவில் சமூக அமைப்புக்களை எட்டுதல்.
- உயர் அபாயப் பிராந்தியங்களில் கொள்தகுதிறன் வரைபாக்கம்.

மேற்கொள்ளப்படும் பல்வேறு விமர்சனங்களுக்கும் அப்பால், ஒட்டுமொத்த சுனாமி பதிலிறுப்பு, வினைத்திறன் மிக்கதாக உள்ளதுடன் நிறுவன ரீதியான கற்றலை இது தூண்டியும் உள்ளது என்பதும் ஒரு ஊக்கமான விடையமாகும். சுனாமிக்குப் பின்னான சிறந்த முன்னோக்கிய திட்டமிடலுடனும் பாரிய மனவிருப்புடனும், பதிலிறுப்புச் சார்ந்த கற்றல்களைக் கற்பதற்கான சர்வதேச சமூகம், சிறந்த ஆயத்த நிலையையும் தயார் நிலையையும் வளமாக்கல் நிலையையும் அடுத்த பேரனர்த்தம் இடம்பெறும்போது வினைத்திறனுடன் ஒருங்கிணைக்கும் தன்மையைக் கொண்டிருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

***கார்ஸ்ரின் வூல்ஸ், கெயார் அவசர கால குழுவின் (CEG) அவசரகால நடவடிக்கைகள் மற்றும் தயார் நிலைக்கான ஒருங்கிணைப்பாளராவார். இந்தக் கட்டுரை சுய கொள்தகுதிறனின் மட்டில் வரையப்பட்டுள்ளதுடன் கெயாரினதோ அல்லது அதன் பங்காளி நிறுவனங்களினது கருத்துக்களை அவை பிரதிபலிப்பதாக அமையவில்லை. மின்னஞ்சல்: voelz@careinternational.org***

1. www.humanitarianinfo.org/sumatra
2. www.icva.ch
3. www.humanitarianinfo.org/srilanka/infocentre/reference/docs/care-evaluation.pdf இந்த சர்வதேச என் ஜீ ஓக்கள், சேவ் த சில்ரன், சர்வதேச மீட்புச் சபை, மேர்ஸி கோர்ப்ஸ் ஆகியவற்றுடன் அவசர கால கொள்தகுதிறன் உருவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இணைந்து செயற்படுகின்றன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கானது “தரமான பணி யாளர்களை மீளப்பயிற்சியளித்தலும் அபிவிருத்தி செய்தலும் வினைத்திறன் மூலங்களை முன்னேற்றலும், விளைவுப் பயன் கணிப்பீட்டை மேம்படுத்துதல் என்பனவற்றுடன் அபாயக் குறைப்பு, அவசரகால தயார்நிலை போன்றனவற்றுக்கான கொள்தகுதிறனை அதிகரித்தல், ஐசிரி கொள்தகுதிறனை அதிகரித்தல்.” போன்றனவற்றையும் கொண்டுள்ளது.
4. www.humanitarianinfo.org/sumatra/products/contacts/index.asp
5. www.sphereproject.org

# ஆச்சேயில் சுனாமிக்குப் பின்னான பாதுகாப்புசார் கவலைகள்

மரியன் கௌல்ட்றி, ரிம் மொறிஸ்

*உள்ளக இடம்பெயர்வுசார் வழிகாட்டல் கோட்பாடுகள், இயற்கைப் பேரனர்த்தங்களால் பலாத்காரமாகப் புகலிடம் தேடி ஓடச்செய்யப்படுபவர்கள் உள்ளக இடம்பெயர்ந்தோர் எனக்கருதப்பட வேண்டும் எனத் தெளிவாகக் கூறுகிறது. ஆயினும், சுனாமிக்குப் பின்னான ஆச்சேயில் உள்ள சில நிறுவனங்கள் இச்சொற்பிரயோகத்தை பயன்படுத்தவும் பாதுகாப்புப் பிரச்சனைகள் மட்டில் செயல்படவும் தயங்கி வருகின்றன.*

அண்மைய ஆண்டுகளில், பாசா இந்தோனேசியா மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட கோட்பாடுகள், அரச அதிகாரிகளிடையேயும், யுத்தப் பாதிக்குட்பட்ட சமூகங்களிடையேயும் பரந்த அளவில் வினியோகிக்கப்பட்டன. நோர்வேஜியன் அகதிகள் கவுன்சிலின் சர்வதேச உள்ளக இடம்பெயர்ந்தோர் நிகழ்ச்சித் திட்டம், உள்ளக இடப்பெயர்வுக்கான புரூக்கின்ஸ் - பேர்ன் நிகழ்ச்சித் திட்டம், மனிதநேய அலுவல்களை ஒருங்கிணைக்கும் ஐநாவின் அலுவலகம் என்பன வழிகாட்டல் கோட்பாடுகளை,[1] இந்தோனேசியாவின் தீவுக் கட்டடம் முழுவதுமான இடங்களில் பரப்புரை செய்வதற்கு, இந்தோனேசிய அரச நிறுவனங்களுடனும் சிவில் சமூகத்துடனும் இணைந்து செயற்பட்டுள்ளன.

பண்டா ஆச்சேயில் சுனாமிக் காலப்பகுதியில் ஓ.சி.எச்.ஏ. ஆல் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களில், சமூகந்தரும் பிரதிநிதிகள், உள்ளக இடம்பெயர்ந்தோர் என்ற சொற்பிரயோகத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக “வீடற்றவர்கள்” அல்லது “சுனாமியின் காரணமாகத் தமது வீடுகளை இழந்தவர்கள்” என்று அடிக்கடி விழித்தனர்.

நோர்வேஜியன் அகதிகள் கவுன்சில், மிகவும் அரசியல் மயப்பட்ட சூழ்நிலையிலேயே சுனாமி இடம்பெற்றிருந்தது என்பதை உடனடியாக இனம் கண்டு கொண்டது. இந்தோனேசிய அரசுக்கும் ஜீஏஎம் பிரிவினைவாத அமைப்புக்குமிடையிலான யுத்தத்தின் காரணமாக, ஆச்சே மாகாணம் சர்வதேச சமூகத்துக்கு மூடப்பட்டிருந்தது. சுனாமியுடன் தொடர்புபட்ட மனிதநேயத் தேவைகளுக்குப் பதிலிறுப்பதற்கான அங்கீகாரத்தினூடாக மாத்திரமே, சர்வதேச நிறுவனங்களின் வருகை சாத்தியப்பாடாகியது. உள்ளக இடப்பெயர்வுசார் இந்தோனேசியாவின் வரலாறு என்பது, மனிதநேய நடவடிக்கையுடன் எவ்வித தொடர்பையும் கொண்டிருப்பதாக அநேக சர்வதேச சமூகமும் உள்ளூர் அதிகாரிகளும் இனம்காணவில்லை என்பதைத்தவிர வேறொன்றுமில்லை.

*இந்தோனேசியா, பண்டா ஆச்சேயில், உள்ளக இடம்பெயர் முகாமில் ஓர் தற்காலிக பாடசாலை*

நோர்வேஜியன் ரெப்யூஜி கவுன்சிலானது (என்.ஆர்.சி), இந்தோனேசியாவில் அபிவிருத்தியை நோக்கிய உதவிக்கும் மீட்சிக்குமான இணையம் (கார்டி), டெனிஸ் அகதிகள் கவுன்சில், சர்வதேச மீட்புச் சபை மற்றும் ஸ்ரிச்ரிங் வலுச்ரிலிங் என்பனவற்றின் ஓர் அங்கமே. உள்ளக இடம்பெயர்ந்தோரின் அந்தஸ்தை மறுதலித்தலின் பின்விளைவுகள் பற்றியும், சுனாமியால் பாதிக்கப்பட்டோரினதும் யுத்தத்தால் இடம் பெயர்ந்த ஆச்சேயினரினதும் தேவைகளுக்கிடையிலான பாரபட்சத்தின் அபாயத்தைப் பற்றியும், பரந்த கவலைகளை என்.ஆர்.சி. – கார்டி ஆகிய இரண்டு அமைப்புக்களுமே பகிர்ந்து கொள்கின்றன. உள்ளக இடம்பெயர்ந்தோரின் சட்டபூர்வ உரிமைகள், அவற்றை அமுலாக்குவதற்கான பல்வேறு தரப்பினரின் கடப்பாடுகள், மேலும் அவை உள்ளடங்கலாக சுனாமிக்குப் பின்னான உள்ளக இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்பு என்பனமட்டில் இன்னுமதிகமான அறிவினைக் கொண்டிருக்கும் தேவை உள்ளதென்று, என்.ஆர்.சி. கூறுகிறது. இடப்பெயர்வு வேளையிலும், மீள்திரும்புதல், மீள்ஒன்றிணைப்பு, வேறிடக் குடியமர்த்தல் அல்லது மீள்குடியேற்றம் என்பவற்றின் மீதும், உள்ளக இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கான ஒரு களம், உள்ளக இடம்பெயர்ந்தோருடன் சேர்த்து மனிதநேயச் செயற்பாட்டாளர்களுக்கும் தேவைப்படுகிறது.

வழிகாட்டல் கோட்பாடுகளைப்பற்றி செயலமர்வுகளை, பண்டா ஆச்சேயில் ஒன்றும், சுமாத்திராவின் மேற்கு கரையில் மியூலாபோவில் ஒன்றுமாக இரண்டினைத் திட்டமிட என்.ஆர்.சியும் குளோபல் ஐடிபி வேலைத்திட்டமும் ஆரம்பித்தன. காலத்துக்கும் உரிய தேவைக்குமானதென, இந்தக் கருத்தை அநேக தேசிய, சர்வதேச சமூகங்கள் வரவேற்றன. பங்குனியில் ஆச்சேயில் உத்தியோகபூர்வ அவசரகால நிலைமைப் பிரகடணம் முடிவுக்கு வந்ததனால், மாகாணத்தின் மீள்கட்டுமானத்துக்குப் பொருத்தமானவர்கள் இதில் பங்கு கொள்ள வேண்டும் என என்.ஆர்.சி. விரும்பியது. பங்குபற்றுனர்களை இனங்காணல், அழைத்தல், இணை முன்வைப்பாளர்களை கண்டுபிடித்தல், ஆச்சே சூழ்நிலைக்கேற்றவாறு பயிற்சிக் கூறுகளை ஆயத்தம் செய்தல் போன்ற அதிக நேரத்தை பிடிக்கவல்ல பணிகள் ஆரம்பமாகின. தேசிய, மாகாண அதிகாரி கள், ஐநா, நிதி வழங்குனர்கள், சர்வதேச நிறுவனங்கள், உள்ளூர் நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், உள்ளக இடம்பெயர்ந்தேரின் தலைவர்கள் போன்றோரை உள்வாங்கிய பங்குபற்றுனர் பட்டியல் ஆயத்தம் செய்யப்பட்டது. இந்தோனேசிய சமூகநல அமைச்சு, செயலமர்வின்மட்டில் நேர்தன்மை பொருந்திய ஆர்வத்தைக் காட்டியதுடன் முன்வைப்புக்களைச் செய்யவும் இணங்கினர். ஓ.சீ.எச்.ஏ பால் நிலை, வயது, இட அமைவு போன்ற வேறுபாடற்ற தரவு சேகரிப்பில் உதவிட இணங்கியது.

துரதிஸ்டவசமாக, அரச அமைப்புக்களுடன் இணைந்து செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதிலிருந்து வெளிநாட்டு மனிதநேய உதவி வழங்குனர்களைக் கட்டுப்படுத்தும் புதிய ஒழுங்கு விதி காரணமாக செயலமர்வை நடாத்துவதற்கு தாம் அனுமதியளிக்கப்படவில்லை என்பதை என்.ஆர்.சி. அறிந்துகொண்டது. தற்போதைய சட்டம் ஒழுங்கு விதிகளுக்கமைவாக, பொருத்தமான அரச அமைப்புக்களுடன் இணைந்து செயலமர்வுகளை பின்னர் கொண்டு நடாத்துவதற்கு வாய்ப்பு உள்ளது. இது முக்கியமான பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்கான ஒரு களமாக இருக்குமென நம்பலாம். ஆச்சேயில் உள்ளக இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்பு, உதவி போன்றவற்றுக்கான நீடித்த தீர்வுகளைக் கண்டுபிடிக்க சர்வதேச சமூகமானது உள்ளூர் அதிகாரிகளுடன் செயற்படுதல் என்பது முக்கியமானது.

***எப்.எம்.ஆர் ஆசிரியர்கள், பண்டே ஆச்சேயின் முன்னாள் என்.ஆர்.சி. பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்ட முகாமையாளரான அஸ்ரிட் சோபி ஆர்ன் அவர்களின் உள்ளீட்டுக்கு நன்றிக் கடன்பட்டுள்ளனர். மின்னஞ்சல்: astrid.arne@freewave.cc***

1. www.db.idpproject.org/Sites/IdpProjectDb/idpSurvey.nsf/wViewCountries/4B444626C28A1BBBC1256D10003463C9



UNHCR/J Austin

# வலுவற்ற பாதிப்புற்றோர் அல்லது பலமுள்ள உயிர்பிழைத்தோர்

இன்ங்வைல்ட் சோல்வாங்

தமக்குத் தாமே உதவும் மக்களின் ஆற்றலை ஏற்று மதிப்பது, பொருத்தமான உதவியை வழங்குவது ஆகிய இரண்டுக்கும் இடையில், மனித நேய நிறுவனங்கள் சமநிலையொன்றை காணவேண்டும்.

சுனாமி ஏற்பட்டு ஒரு கிழமையின் பின், பண்டா ஆச்சே மகாணத்தில் உள்ள ஜெசுவிட் அகதி சேவைக்கு (ஜே.ஆர்.எஸ்.) ஒரு ஐரோப்பிய உதவிப் பணியாளர் வருகை தந்தார். இடம்பெயர்ந்த சமூகங்கள் சார்ந்த தனது முதலாவது கணிப்பீட்டில் அவர் இருந்தார்.தனது வருகையின் நிறைவில் தான் தொகுத்த துணிபு-களை எம்முடன் பகிரவிரும்பினர். தமது உடமைகளை உறவுகளை குடும்பங்களை இழந்தோருடனான சந்திப்பு அவரில் ஆழமான மனப்பதிவுகளை ஏற்படுத்தி இருந்தது. அவர்கள் தமது முகாம் சமையலறைக்கு, சமையல் அடுப்பு ஒன்றை எவ்வாறு வாங்கியிருந்தனர் என்பதை தன்னிடம் கூறியவிதத்தை வர்ணிக்கும் போது, அவர்கள் அதை வாங்கக் கூடியவர்களாக இருந்தனர் என்பதை அவர் முதலில் நம்ப மறுத்ததை வெளிப்படுத்தினர். அதேவேளை அவர்களை தொடர்ந்தும் ஏழைகள் என்றே விழித்தார்.

இந்தத் தற்காலிக குடியிருப்புக்களில் இருக்கும் இடம் பெயர்ந்த மக்கள், ஏழைகள் போன்றே தென்படுவர். ஆனால் ஒரு மனிதநேயப் பணியாளருக்கோ அவர்கள் தமக்குத் தாமே உதவிக் கொள்ள எவ்வித வழிகளையும் கொண்டிருப்பதில்லை என எண்ணுவது அவர்களது கௌரவத்துக்கு இழுக்கை கொடுப்பதாகவே தென்படும். மக்கள் அகதிகளாக அடைக்கலம் புகுத்திருந்த ஒரு பாடசாலை கட்டடத்துக்கு நான் ஒருநாள் சென்ற ஒரு சில நாட்களின் பின்னரே எனக்கு இது உறைத்தது. நுழைவாயிலில் ஒரு அடுக்கு துணி குவிந்திருந்தது. ஒருவர் சில உடைகளை எடுத்து எனக்கு அவற்றைக் காண்பித்தார். இவற்றை அணிவதற்கு எமக்கு அவமானமாக உள்ளது என்றார். நானோ கசக்கிப்பிழிந்து தோய்த்த அந்த கிழிந்த ஆடைகளை கூர்ந்து உற்று நோக்கினேன். இன்று நாம் இந்த நிலையில் இருந்தாலும் எமக்கென்று பல பெருமைகளைக் கொண்டே உள்ளோம் என தொடர்ந்தார். போக்குவரத்து செலவினங்களையும் அதற்கான வளங்களினது விரயத்தையும் கவனத்திலெடுக்காமல், தரத்தைப் பற்றி சிந்தியாமல் எண்ணிக்கையை மாத்திரம் கவனத்தில் வைத்துக் கொண்டு இத்தகைய பாவனைக்கு உதவாத பழைய உடுப்புக்களை ஆச்சே மாநிலத்து கொண்டுவந்தது தனி மனிதர்களது பிழையல்ல. நாடுகள் மற்றும் நிறுவனங்களினதாகும். அரசும் மனித நேய அமைப்புக்களும் வழங்கும் உடனடி நூடில்ஸ்க்குப் பதிலாக சொந்த சமயலை செய்ய எண்ணை அடுப்புக்களை வாங்கவோ, தமது உணவுப் பொருட்களை உள்ளூர் சந்தையில் வாங்கவோ, இடம்பெயர்ந்த மக்கள் விரும்புவர் என்ற உண்மையை நிறுவனங்கள் கண்டும் காணாமலும் விட்டுவிடுகின்றன.

## தொடர்பூடகத்தால் பாதிக்கப்பட்டவர்களும் கதாநாயகர்களும்

ஆச்சே மாகாண வாசிகள் பேரழிவிற்கு உலகு கொடுத்த பதிலிறுப்பால் அசந்து போயுள்ளனர். அதேவேளை, அழகான பிராந்தியம் இன்று சுனாமிக்குத்தான் பிரபல்யமாகி உள்ளதே என்று சிலர் துயருறவும் செய்கின்றனர். இந்தோனேசியாவிலும் ஏனைய நாடுகளிலும்கூட, தமது வாழ்க்கைப் பாதையில் கிடந்த அனைத்தையும் அடித்து நொறுக்கிய அலைகள் பற்றிய பயங்கரமான படக்காட்சிகள் நிதிசேகரிப்பில் சாதனையை ஏற்படுத்தின. தமக்குள்ள அனைத்தையும் இழந்தவர்களதும், அனாதை சிறவர்களினதும், தமது கரங்களில் இருந்து அலைகளால் பறித்துச் செல்லப்பட்டதை கூறும் தாய்மார்களினதும், தமது இறந்த மகள் மகன்களது புகைப்படங்களை தாங்கி உலவும் தந்தைமார்களினதும் காட்சிகள் அன்பளிப்பு வழங்கும் விசையை அழுத்திவிட்டன. ஆச்சே வாசிகள் துன்புற்றவர்களாகவும் வெளிநாட்டு புகைப்படக் கலைஞர்களும் மனிதநேய பணியாளர்களும் கதாநாயகர்களாகவும் முன்வைக்கப்படுகின்றனர். வெளிநாட்டுத் தொடர்பூடகத்தினருக்கு உள்ளூர் பதிலிறுப்பாளர்களை இனங்கண்டு உரையாடுவதைக் காட்டிலும் வெளிநாட்டவர்களுடன் பேசுவது, இலகுவானதாக இருக்கலாம். தாய்லாந்து, மேற்குலக நாடுகளில் மிகச்சிறந்த கவன ஈர்ப்பைப் பெற்றதன் இரகசியமும் இதுவே. உள்ளூர் அபிலாசைகளை வெளிக்காட்டும் உள்ளூர் குரல்களை சிதைத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் தமது கதைகளை கூறும் மேற்குலக சுற்றுலாப் பயணிகள் ஏராளம் உள்ளனர்.

தமக்குத்தாமே உதவக்கூடிய இயலுமையற்றவர்களாக மக்கள் உள்ளனர் என எண்ணுவது மக்களுக்கு வெளி உதவி தேவை எனும் முடிவுக்கு ஒருவரை இட்டுச் செல்லலாம். ஆனால் வெளிநாட்டு உதவி உண்மையான தேவைகளுடன் பொருந்தாமல்கூட இருக்கலாம். உதாரணமாக ஆச்சே மாகாணத்துக்கு வெளியில் உள்ள அனேக மக்கள், தமது அடிப்படை பராமரிப்பாளர்களை இழந்த சிறுவர்கள் ஜவாதீவிற்கு அல்லது வெளிநாட்டில் உள்ள சிறுவர் பராமரிப்பு அனாதை இல்லங்களுக்கு அனுப்பப்படல் வேண்டுமென்றோ அல்லது தத்துக்கொடுப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டுமென்றோ எதிர்பார்த்தனர். ஆச்சேயில் இது பண்பாட்டு மட்டத்தில் பொருத்தமற்றது. அத்துடன். ஆச்சேயை விட்டு வெளியே சிறுவர்களை எடுப்பதைக் காட்டிலும் தமது உள்ளார்ந்த சமூகத்துக்குள் வைத்தே அவர்கள் வழர்த்தெடுக்கப்படுவதை ஆச்சே மக்கள் கோருவதால் இது கலகத்துக்கு வழிவகுத்தது.

ஆச்சே வாசிகள், தமது பலம் மற்றும் பெருமை சார் பண்பியல்புகளுக்குப் பெயர் போனவர்கள். பொதுவில், அவர்கள் உதவி நாடி நிற்பதை அவமானமாகக் கருதுபவர்கள். இதன் காரணமாக விரித்த கரங்களுடன் இவர்களால் எப்போதும் மனித நேய நிறுவனங்கள் வரவேற்கப்படப் போவதில்லை. அரசபடைகளுக்கும் GAM எனும் தனிநாடு கோரி போராடும் அமைப்புக்குமிடையில் தசாப்த காலங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் பொதுவாகவே வெளியாரை உள்ளூர் மக்கள் நம்பாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளதுடன் தன்னிறைவைப் பெற்று தம்மிலேயே தங்கி இருக்கும் நிலையையும் போதித்துள்ளது. இருந்தபோதிலும் ஆச்சேயில் தேவைகள் மிகவும் பரந்தது என்பதுடன் முன்னேற்றத்தை காண்பது அரிது. மீள்கட்டுமானம் என்ற களவு நனவாகும் என காத்திருந்த ஆச்சே வாசிகள் பொறுமை இழந்து வருகின்றனர்.

அதேவேளை அனேகர் அரசின் மற்றும் மனிதநேய அமைப்புக்களின் உதவியின்றி சிதைவுகளை துப்பரவு செய்து கொண்டு சொந்த இடங்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றனர். முகாமில் உள்ள அனேக இடம்பெயர்ந்தோர் தமது இருப்பிடங்களுக்கு மீளவும் திரும்பி வீடுகள் அமைப்பதில் உறுதியாய் உள்ளனர். லோகோ கிராமத்திலும் போலே ஆச்சே தீவின் லம்பயாவ் கிராமத்திலும், தமது சமூகத்தினர் திரும்புவதற்கு ஆண்கள் சுழற்சி அடிப்படையில் தீவினை ஆயத்தம் செய்கின்றனர்.

சுனாமி அடித்து ஒரு மாதத்துக்குள் ஒரு கூடாரத்திலான முகாம் அமைக்கப்பட்டு வழிபாட்டுக்கும் சமூக கூட்டங்களுக்கும் ஒரு பொது இல்லமான “மியூனாஸா” எழுப்புவதற்கான வேலைகள் தொடங்கி இருந்தது. இந்த மத்திய கட்டடத்தில் இருந்து ஒரு கிராமம் மீளவும் கட்டி எழுப்பப்படமுடியும். “நாம் அரசின் உதவிக்காக காத்திருக்கமாட்டோம். நாமாகவே திரும்ப வேண்டும் என்ற நிலை வந்தால் நாமாகவே திரும்புவோம்” மனிதநேய நிறுவனங்கள் உள்ளூர் மக்களின் இயலுமையை மதித்து அதிலிருந்து கற்றுக்கொண்டு இத்தகைய ஆரம்பிப்புகளுக்கு ஊக்கம் கொடுத்தல் வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர்.

*இங்வில்ட் சோல்வாங், இந்தோனேசிய ஜேசுவிட் அகதிகள் சேவையின் பரிந்துரை வாதிடலுக்கான முகாமையாளர் ஆவார். மின்அஞ்சல் : solvang@jrs.or.id இணையத்தளம் : JRS இந்தோனேசியா : www.jrs.or.id*




Petteri Kokkonen/FinnChurchAid/ACT International

*சுமாத்ரா மேற்குக் கரையில் மியூலபோ மீன் சந்தையில் சுனாமிக்குப் பின்னர் வியாபாரம் மெதுவாக வழமைக்குத் திரும்புகியது.*

# இன முரண்பாடு, இலங்கை அரசு மற்றும் சுனாமி

ஜயதேவ உயங்கொட

*சர்வதேச உதவிகளை பெறவும் பயன்படுத்தவுமான ஒருங்கிணைப்பு திட்டம் ஒன்றை கண்டுபிடிப்பதில் அரசும் தமிழீழ விடுத லைப் புலிகளும் கடுமையாக போராடிக் கொள்ளும் வேளை, இலங்கையில் சுனாமிக்குப்பின்னான விடையங்களாவன, நாட்டின் அரசியல்மட்ட சிக்கல்களையும் பிரச்சனைகளையும் தீவிரப்படுத்தி உள்ளன. நிதர்சனமான இரட்டை அரசுக் கட்டமைப்பை கொண்ட ஒரு நாட்டுக்குள், ஒரு முரண்பாடு – சமாதானம் - உணர்தகுதிறன் கொண்ட மீட்சித்திட்டம் ஒன்றை உருவாக்குவது சாத்தியமா?*

மாசி 2002 இல் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டினூடாக, கஷ்டமானதெனக் கருதப்படும் சமாதானத்துக்கு, இலங்கையின் வடகிழக்கு மாநிலங்களுக்கு தமிழ் ஈழம் எனும் தனி நாட்டை உருவாக்க முயலும் எல்.ரீ.ரீ. யின் நீண்டகால போராட்டம் ஓரளவு வழி விட்டுள்ளது. சுனாமி அழிவுத்தாக்கத்தின் அப்பழுக்கற்ற பருமன் அல்லது அளவானது அரச படைகளையும் எல்.ரீ.ரீ.யீ போராளிகளையும் யுத்தத்துக்கு தள்ளும் தீப்பொறியை ஏற்படுத்த வல்ல முன்னரங்க பதட்டத்தை விலக்கியிருக்கலாம். 20 நிமிட இடைவெளியில் ஏற்பட்ட கிட்டத்தட்ட 35,000க்குமதிகமான மரணங்கள் 20 வருடசிவில் யுத்தத்தில் விழைந்த மரணங்களின் எண்ணிக்கைக்கு சமமானதாக்கியுள்ளது. சுனாமி நகரங்களையும், கிராமங்களையும், சமூகங்களையும் இல்லாமல் செய்ததுடன் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் ஏழை மக்களை இல்லமற்ற அனாதை களாகவும் மாற்றியுள்ளது. எவ்வித இருகருத்துகளுக்கும் இடமில்லாத வகையில் தேசிய – தேசத்தின் பிரதிநிதிகள் தாமே, சுனாமிக்குப் பின்னர் மீட்சியின் பிரதான செலுத்துனர் தாமே என அரசு கூறும் அதேவேளை, தமிழ் தேசியத்தின் ஏக பிரதிநிதி தாமே என புலிகள் கூறுகின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு சமமான பாதிப்பை கொண்டுள்ளனர் என்ற உண்மை, மீள்கட்டுமானப் படிமுறையில் தம்மை சமமான பங்குதாரர்களாக நடத்தவேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை வலுவாக்கி உள்ளது. யுத்த நிறுத்தம் சமாதான பேச்சுவார்த்தை என்பவற்றில் இலகுபடுத்துனர்களாக செயல்படும் நோர்வே அரசு, மீள்கட்டுமானங்களை மேற்பார்வை செய்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பின் தன்மை, அதிகாரம், தொழிற்பாடு, என்பனவற்றில் புலிகளையும் அரசையும் ஒரு இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர எடுத்த முயற்சிகள் எவ்வித இணக்கப்பாட்டையும் இதுவரை எட்டவில்லை.

இந்தப் பின்னணியில், சுனாமிக்கு பின் உடனடியாக கோரப்பட்ட பாரிய சர்வதேச உதவிகள் வந்தடைவது மெதுவாக உள்ளது. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்க அவர்கள் வாக்களிக்கப்பட்ட நிதியில் ஐந்து சதமேனும் திறைசேரியை வந்தடையவில்லை என பங்குனி இறுதிப் பகுதியில் அறிவித்தார். வெளிநாட்டு மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகள் காசோலை யாகவும் பணமாகவும் உறுதி மொழிகளை மாற்றும்படி சர்வதேச சமூகத்துக்கு முறை யீடு செய்துள்ள போதிலும் அனேக நிதிவழங்குனர்களுக்கு, செலவு செய்தல் என்பது உத்தியோக பூர்வப் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த முயலும் அரசு புலிகளின் கூட்டுமுயற்சி என்றே தோன்றுகின்றது. சர்வதேச சமூகம் இலங்கையின் சுனாமிக்குப்பின்னான மீட்சிப் படிமுறையை, சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதனுடனும் படிமுறையை தொடருவதுடனும் பின்னிப் பிணைந்ததொன்றாகவே பார்க்கிறது.

இரண்டு தசாப்தங்களாக யுத்தத்துக்குட்பட்டு மீள்குடியேற்றம், வேற்றிட குடிஅமர்வுக்காக காத்துக்கொண்டிருக்கும் பெருமளவு உள்ளக இடம்பெயர்ந்தோரைக் கொண்டுள்ள வடகிழக்கு மாகாணங்களில், அழிவுகளில் பெரும் பகுதி இடம்பெற்றுள்ளது. சமமான எண்ணிக்கையில் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்களைக் கொண்டுள்ள கிழக்கு மாகாணம் விசேடத்துவம் மிக்கது. அதன் கலப்புத் தன்மை பொருந்திய இனங்களின் கூட்டமைக்குப் புறம்பே புலிகள் கிழக்கு மகாணத்தை தமது பாரம்பரிய தமிழர் தாயகம் என உரிமை கோருகின்றனர். இலங்கை அரசினால் செல்லமுடியாத, விடுவிக்கப்படாத பிரதேசங்கள் என அழைக்கப்படும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கரையோரப் பிரதேசங்களில் சுனாமி மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்தி உள்ளது.

சுனாமிக்கு முன்னர், யுத்தத்தால் சின்னாபின்னமாக்கப்பட்ட இந்த மாகாணங்களை மீளவும் கட்டியெழுப்ப இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தவல்ல சிக்கலான வேலைத்திட்டத்துக்கூடாக பல முயற்சிகள் செய்யப்பட்டன. நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒரு வேலைத்திட்டத்தை வளர்த்தெடுப்பதற்கான அரசினதும், புலிகளினதும் இயலாமையின் காரணமாக, இம் முயற்சிகள் எவ்வித வெற்றிகளையும் கொண்டுவரவில்லை. புலிகள் சர்வதேச நிதி உதவியாளர்களிடமிருந்தும் மேலைநாட்டு அரசுகளிடமிருந்தும் நேரடியாக சர்வதேச நிதியைப் பெற ஒரு கட்டமைப்பை முன்வைத்தனர். இந்நகர்வை, தமது மத்திய அரசின் அதிகாரத்தை கடப்பதற்கும் தனிநாட்டுக் கோரிக்கையை நிறுவனமயப்படுத்தவுமான ஒரு தந்திரம் என அரசு கருதியது.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்துவிட்டார், கடற்புலிகளின் பிரிவுகள் பாரிய சேதத்துக்குட்பட்டு விட்டன என்ற வதந்திகளால், அரசுக்கு சார்பாக, முன்னர் இருந்த இராணுவ மற்றும் தந்திரோபாயரீதியான சமநிலையை, சுனாமி தற்போது மாற்றியமைத்து விட்டதென்ற ஒரு கருத்து சுனாமி ஏற்பட்டு சில வாரங்களில் காணப்பட்டது. அத்தகைய எதிர்பார்ப்பு அரசு மற்றும் புலிகளிடையேயான ஒத்துழைப்புக்கான திட்டத்தினை வடிவமைக்க உதவியது. இலங்கை படையினரும் புலிகளும் வடகிழக்கு பிரதேசங்களில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஒருவருக்கொருவர் உதவுவதற்கான தன்னார்வத் தளத்தை ஏற்படுத்தி, ஓர் ஒன்றிணைந்த படையாக தன்னியக்கமாக செயல்படுகின்றன என்ற அறிவித்தல், இருதரப்பு ஒத்துழைப்புக்கான ஊக்கம், வலுவைக் கொடுத்துள்ளது. களமட்ட ஒத்துழைப்பையும் ஒன்றிணைவையும் ஒரு உத்தியோகபூர்வ வேலைத்திட்டமாக உருமாற்றி எடுப்பது இரு சாராருக்கும் ஒரு சவாலாகவே இருந்துவருகிறது.

சுனாமிக்கு பின்னான படிமுறையை நிர்வகிப்பதற்கு, அதிகாரம் ஒன்றுகுவிக்கப்பட்ட கட்டமைப்பொன்றை உருவாக்குவதன்மூலம், அரசு, அரச உள்ளூராட்சி திணைக்களங்களை அலட்சியம் செய்துள்ளது. சுனாமி, நாட்டின் அரசியல் சட்டபூர்வ அதிகாரத்துடன் தொடர்புடைய பிரபல்யங்களின் அழுத்தங்களால், தவிர்க்கமுடியாதபடி அதிகார ஒன்றுகுவித்தலை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது. அத்துடன் பாதிப்புற்ற சமூகங்களுக்கு உடனடி உதவியை வழங்குவதற்கான பரவலாக்கப்படா கட்டமைப்பின் கொள்தகு திறனற்ற நிலைமையையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. கொழும்பில் உள்ள அதிகார பீடம், தனது அதிகாரத்தையும் உரிமையையும் கரைந்துபோகச் செய்ததன் விளைவாக மாகாணசபைக்கு உரிய அதிகார பரவலாக்கத்தை கொடுத்து வருகிறது. அதேவேளை மாகாண சபைகளின் வலுவூட்டல், பலப்படத்தலுக்கும் எதிராக வெற்றிகரமாக தடையை ஏற்படுத்தியும் உள்ளது.

தொடர்ந்து கொள்கையில் ஏற்பட்ட தோல்வியானது முஸ்லிம்களின் கோபத்துக்கு இட்டுச் சென்றுள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகத்தினர் பாரிய அழிவுகளுக்கும் இழப்புக்களுக்கும் ஆளாக நேர்ந்துள்ளது. ஆயினும் அரச உதவி மிகவும் குறைவானதாகவே உள்ளது. அரச யந்திரத்தின் வினைத்திறன் இன்மை, மிகவும் ஆளமாக பிளவுபட்டுள்ள முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவத்தின் பலவீனம் இரண்டுமே காரணமாயுள்ளன. முஸ்லிம்கள் தம்மீதான திட்டமிட்ட பரபட்சமாகவே அரசின் செயல்படா நிலைக்கு வியாக்கியானம் கொடுக்கத் தொடக்கி உள்ளனர். அரச அமைப்புக்கள் பொதுவாக பாதிக்கப்பட்ட தமிழ் சகோதரர்களுடன் பணிபுரிந்து வருவதும், இருதரப்புமே அரச புலிகள் பொதுக்கட்டமைப்புக்கான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் அரசியல் தலைவர்களை உள்வாங்கத் தவறியமையும் சேர்ந்து தாம் ஒதுக்கப்பட்டதாக முஸ்லிம்களை உணரச் செய்துள்ளது.

அரசு, புலிகள் இரண்டுமே, மையப்படுத்தப்பட்ட அதிகாரமையை முடிவெடுத்தலையும் மேல் மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்படும் மனித நேய தலையீடுகளையும் நெருக்கமாக பின்பற்றுபவை. இத்தகைய அரச - மைய அணுகுமுறையானதை, மனித நேய உதவிகளின் மட்டில் பாதிப்புற்ற மக்கள் இயங்கு நிலையற்று மௌனமாக பெற்றுக் கொள்பவர்களாக கருத முற்படுகிறது. அரசும் அவ்வாறே புலிகளும் பாதிப்புற்ற மக்களை கலந்தாலோசிக்காது, குறிப்பிட்ட கரையோர எல்லைக்குள் வீடுகளை மீளக்கட்டுவதற்குத் தடைவிதித்தது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அரசு 100 மீற்றர் கரையோர தடை எல்லையை



Paul Jeffrey/ACT International

அறிவிக்க புலிகளோ பல படிகள் மேலேசென்று 300 மீற்றர் கரையோர தடை எல்லையை அறிவித்துள்ளனர். இவை நன்நோக்குடையதாக இருந்த போதிலும், எல்லை வலயத் தடை கொள்கை என்பது, தமது வாழ்வியலுக்கான ஜீவனோபாய பொருட்களை, உபகரணங்களை ஏற்கனவே இளந்துவிட்ட மக்களிடையே பயத்தையும் பேரச்சத்தையும் உருவாக்கியுள்ளது. இலங்கை அரசோ அல்லது தமிழ் சமுதாயத்தின் பிராந்திய அரசியல் மூலங்களோ கொள்கை திட்டமிடலில் பொதுமக்களை கலந்தாலோசிக்கும் எண்ணக்கருவையோ, கட்டமைப்பையோ, படிமுறையையோ கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு.

## சிவில் சமூக பதிலிறுப்பு அரச திறனின்மையை வெளிப்படுத்துகின்றது:

புலிகள், தமது மனிதநேய செயலியக்கப் பிரிவான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு உதவும் வண்ணம் தமது உறுப்பினர்களை அணிதிரட்டுவதன் மூலம் தமது இராணுவ நுட்பத்துடன் அவசரகால நிலைக்கு பதிலிறுத்துள்ளனர். ஆனால் அரசின் பதிலிறுப்போ மிகவும் வினைத்திறனற்றதும் மெதுவானதும் ஆகும். அரச நிர்வாக இயந்திரம் அனேக மாக செயலிழந்திருந்த வேளை, தனி பிரஜைகளும், பிரஜைகள் குழுக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், அனர்த்தம் ஏற்பட்ட ஒருசில மணித்தியாலங்களுக்குள், உயிர் தப்பியவர்களுக்கு உணவு, உடை தங்குமிடம் அளிப்பது, மீட்புப்பணிகளை ஒழுங்குபடுத்துவது, எச்சங்களை துப்பரவு செய்வது, உயிர் தப்பியோரை தேடுவது, இறந்தவர்களை கண்டுபிடித்து நல்லடக்கம் செய்வது இப்படி ஏராளமான பணிகளில் ஈடுபட்டனர். அரசு நேரடியாகவும் உடனடியாகவும் பாதிப்புற்ற மக்களின் தேவைகளுக்கு பதிலிறுத்திருக்கக்கூடிய மேற்கு, தெற்கு மாகாணங்களில், அரச இயந்திரம் அனேக சந்தர்ப்பங்களில் அடிமட்ட மக்களை அடைய ஐந்து தொடக்கம் ஏழு நாட்களை எடுத்துள்ளது. உள்ளூர் அதிகாரிகளை நேர்முகம் கண்டபோது அவர்கள் தாமாகவே முன்வந்து எவ்வித முன்முயற்சிகளிலும் ஈடுபட மிகவும் தயக்கத்துடன் இருந்ததை வெளிப்படுத்தினர். அரசிடமிருந்து கண்டனத்தைக் கொண்டுவரவல்ல தவறுகளை தாம் இழைத்துவிடுவோமோ என்ற பயமே இதற்கு காரணம் என தெரித்திருந்தனர்.

சிவில் சமூக முடிவெடுத்தலானது அரச துறையில் குறைவாக காணப்படும் நெகிழ்ச்சித் தன்மையின் பலமான அம்சங்களை கொண்டிருந்தது. அரச சார்பற்ற நிறுவனங்களிலோ அரச துறையின் சட்டபூர்வ ஒழுங்கு விதிகளின் நெருக்குவாரங்கள் எதுவுமின்றி பணியாளர்களையும், தன்னார்வத் தொண்டர்களையும் ஒருசில மணித்தியாலங்களுக்குள் சேவையிலீடுபடுத்த முடியும். அவர்களால் தனிநபர் தொண்டர் முன்வருதலையும் தனியார் உதவிகளையும்கூட பெற்றுக்கொள்ளமுடியும். இருந்தபோதிலும், இத்தகைய நெகிழ்ச்சித் தன்மை, அரசசார்பற்ற நிறவனங்கள் மீதான அரசின் விமர்சனத்துக்கும், ஊழல், ஒருங்கிணைப்பின்மை, திட்டமிடப்படாத நேர்தன்மை கொண்ட தலையீடு போன்றவற்றுக்கு அரசசார்பற்ற நிறவனங்களினதும் தனிநபர்களினதும் செயற்பாடுகள் இட்டுச் செல்கின்றன என வாதிடும் ஊடகத்துறையினரது பகிரங்க விமர்சனத்துக்கும் வழிசமைத்தது. அவர்கள் சிவில் சமூக நிகழ்ச்சித்திட்டங்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பை அச்சுறுத்துகின்றன எனவும் குற்றம் சுமத்தினர். இக் குற்றச்சாட்டானது புலிகள் இராணுவ யுத்த தளபாடங்கள், உபகரணங்களை நிவாரணப் பொருட்கள் என்ற போர்வையில் கொண்டு சென்றுவிடுவர் என்ற சந்தேசகத்திலேயே எழுந்தது.

சுனாமிப் பேரழிவிற்கான பதிலிறுப்புக்களும் தேக்கநிலையில் உள்ள சமாதான பேச்சுவார்த்தையின் முன்னேற்றமும் நெருக்கமாக ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. சுனாமி பேரழிவிற்கான வினைத்திறன்மிக்கதும் பேண்தகுநிலை பொருந்தியதுமான பதிலிறுப்புக்கள், அரசியல் இன பிழவுகளுக்கப்பால் இணக்கப்பாட்டை கட்டி எழுப்புவதையும் அவ்வாறே அதிகாரப்பரவலாக்கல் சமஸ்டி முறை போன்றவைற்றை நடைமுறை யதார்த்தத்துக்கு கொண்டு வருவதையும் வேண்டி நிற்கின்றன.

மீள் கட்டுமானப் படிமுறையில் பொதுமக்களின் பங்கேற்பை உறுதிப்படுத்தும் மறுசீரமைப்பு இல்லாமல், ‘மேல்மட்டத்திலிருந்து வரும் மீள் கட்டுமானங்களுக்கு’ பரந்த அளவிலான எதிர்ப்பு இருக்கும். பாதிப்புற்றுள்ள சமூகங்கள், ஏற்கனவே நிவாரணப் பொருட்கள் விடையத்தில் அதிகாரிகளுக்கும், சட்டபூர்வு அதிகார பீடத்தின் வினைத்திறனின்மைக்கும் எதிராக போர்க்கொடி உயர்த்தத் தொடங்கிவிட்டனர். சுனாமிக்கு பின்னான மீள்கட்டுமானம் என்பது வெறுமனே கட்டடங்களை கட்டுவதும், வீதி அமைப்பதும் பொருளாதார உள்ளக கட்டுமானங்களை ஏற்படுத்துவதும் மாத்திரமல்ல. தீடீரென கைவிடப்பட்டு ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டதாக உணரும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்களின் சமூகங்கள், சமூக வாழ்வு, ஜீவாதாரம் என்பனவற்றை மீளக் கட்டி எழுப்புவதுடன் தொடர்புபட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் இவ்விடையங்களில் செயல்படுநிலை பங்கேற்பவர்களாக இல்லையெனில் மீள்கட்டுமானப் படிமறை முற்றுமுழுதாக ஜனநாயக மரபுக்கு முரணானதாக இருக்கும்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் உள்ள முட்டுக்கட்டையை விலக்குவதற்கு, சிவில் சமூக அமைப்புக்கள், அரசுக்கும் புலிகளுக்குமிடையில் “யுத்தமும் சமாதான உணர்தகு நிலையும்” எனும் தத்துவத்தால் வழிநடத்தப்படும் ஒத்துழைப்புக்கான ஒரு திட்டவரைபை முன்வைத்துள்ளனர். அவர்கள், யுத்தத்துக்குப் பின்னான மீள்கட்டுமானம், மீள் புனருத்தாரணத்தை சுனாமிக்குப் பின்னான மீட்சி, மீள்புனருத்தாரணம் ஆகிய இரண்டையும் இணைக்கும் தேவையை முதன்மைப்படுத்தி கோடிட்டு காட்டியுள்ளனர். இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தைக்கூடான உத்தியோகபூர்வ செயல்திட்டவரைபு இதற்கு அவசியமாயுள்ளது. ஏனெனில், இருதரப்பாருக்கும் இடையில் இராணுவம் தொடர்பான விடையங்களை வரையறை செய்வதும், முறையான உடன்பாடான யுத்த நிறுத்த ஒப்பந்தம், இருதரப்பு ஒத்துழைப்பின் தன்மை, வளைவு சுழிவுகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்கு போதுமானதல்ல என்பதை காட்டியுள்ளது.

*யுத்தம் சிதைத்த இலங்கையில் அரச இராணுவ நிலைகளையும் ஏனைய பிரதேசங்களையும் சூள புதைக்கப் பட்டிருந்த கண்ணி வெடிகளை சுனாமி அடித்துச் சென்று ஐதாக்கியது. புதைக்கப் பட்டிருந்த கண்ணி வெடிகளை சுனாமி அடித்துச்சென்று ஐதாக்கியது.*

சிவில் சமூக அமைப்புக்கள், பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் யுத்தத்துக்குப் பின்னான புனர்வாழ்வு மீள்கட்டுமானம் என்பன அமைய வேண்டும் என வாதிடுகின்றன.

- சுனாமியை வெறுமனே இயற்கை அழிவாக மாத்திரம் பார்க்கப்படக் கூடாது. நிவாரண, மீள் புனர்நிர்மாண பணிகள், இன முரண்பாட்டையும் சமாதான பேச்சுவார்த்தை படிமுறையையும் கவனத்திலெடுக்க வேண்டும்.
- தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தவர்கள் அனைவரும் சமமாக நடாத்தப்படுவதுடன் அவர்களது பங்கேற்பு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.
- உயிரிழப்பு, அழிவு என்பனவற்றை நோக்குகையில், வடகிழக்கு மாகாணம் உதவி பெறுவதில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.
- அரசும் சர்வதேச சமூகமும் சுனாமிக்குபின்னான படிமுறையில் புலிகளின் பங்கினை கவனத்திலெடுக்காமல் விடாது அவர்களுடனான பங்குதாரர் நிலையை உருவாக்க வேண்டும்.

அரசும் புலிகளும், அரசியல் பங்குகொள்ளலுக்கானதொரு புதிய படிமுறையை ஆரம்பிக்க, சுனாமிக்கு பின்னான சூழலை பயன்படுத்த வேண்டும். மனித நேய ஈடாட்டப்பங்கு கொள்ளலில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு சமாந்தரமான ஒரு உத்தியோக பூர்வ உடன்பாட்டை எட்டுதல் இன்றியமையாதது.

***ஜயதேவ உயங்கொட: கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான மற்றும் பொது கொள்கைகளுக்கான பீடத்தின் தலைவரும், “பொலிட்டி” சஞ்சிகையின் ஆசிரியரும், இலங்கை சமூக விஞ்ஞானிகள் ஒன்றியத்தில் தலைவரு மாவார். மின் அஞ்சல் : uyangoda@cmb.ac.lk (நீண்டதொரு கட்டுரையின் சுருக்கமே இக்கட்டுரை) online at: www.fmreview.org/pdf/uyangoda.pdf***

# சுனாமிக்குப் பின்னான உளச் சமூக வேலை பற்றிய பிரதிபலிப்பு

ஆனந்த கலபதி

*இலங்கையில், சர்வதேச தொடர்பூடகங்களினதும் உதவி நிறுவனங்களினதும் அக்கறை வெளிப்பாட்டினால் பெருமளவில் முன்னெடுக்கப்படும் மனிதநேயப் பதிலிறுப்பில், உளச் சமூக நேர் தலையீடு ஒரு முன்னுரிமை அம்சமாக மாறியது. தலையீடுகள் மிக விரைவாக ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் ஒருங்கிணைவு மிகவும் பலவீனமானதாக இருந்ததுடன் சுனாமிக்கு முன்னான யுத்தத்துடன் தொடர்புபட்ட உளச் சமூக நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து கற்ற பாடங்களில் கவனம் செலுத்தப்படவில்லை.*

சுனாமி அடித்து முதல் இரு வாரங்களின் பின்னர், மனித நேய அமைப்புக்களான இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள், உள்;ர் மற்றும் சர்வதேச அவசரகால பதிலிறுப்பு அணிகள், கிழக்கு மாகாண நகரமான மட்டக்களப்பின் பொதுமக்கள் ஆகியோர் உணவு வினியோகத்திலும், தங்குமிடம், மருத்துவ முதலுதவி என்பனவற்றிலும் கவனம் குவித்தன. பயங்கர அனுபவங்களையும் பாரிய இழப்புக்களையும் சந்தித்திருந்த வளர்ந்தோர் சிறுவர்களது மனவடுக்கள், பாதிப்புக்களைக் கையாளுவதற்கான தேவை, உள்;ர் உளநலப் பணியாளர்களை நேர்முகம் கண்ட சர்வதேச பத்திரிகையாளர்களால் உடனடியாக முன்வைக்கப்பட்டது..

மிகப் பொருத்தமான உளச் சமூகத் தலையீடுகள் பற்றிய கருத்துக்கள் வேறுபட்டுக் காணப்பட்டன. உளச் சமூக வேலைகளில் முன் அனுபவமோ அல்லது தொடர்போ கொண்டிராத உள்;ர் அரச சார்பற்ற நிறுவனங்கள், இலங்கையில் வேறு பாகங்களைச் சார்ந்த இத்துறைசார் ஆர்வலர் குழுக்கள் என்பன சுனாமியில் உயிர் தப்பிப் பிழைத்தோருக்கு உளநல உதவி வழங்குவதில் ஆர்வமாய் இருந்தனர். உள்;ரில் ஏற்கெனவே பணியாற்றிய ஓர் சில உளநல உதவியாளர்களுக்குப் புறம்பாக, இத்தகைய சேவையானது, நாட்டின் ஏனைய பாகங்களைச் சேர்ந்த குழுக்களாலோ அல்லது ஓர் சில நாட்கள் பயிற்சி பெற்ற தன்னார்வத் தொண்டர்களாலோ வழங்கப்பட்டன. குடும்பங்களையும் வீடுவாசல்கள் தொழில் துறைகளையும் இழந்த மக்களுக்கும் தற்காலிக முகாம்களுக்குள் முடக்கப்பட்டுள்ளவர்களாகத் தம்மைப் பார்ப்பவர்களுக்கும், தமது அனுபவங்களையும் உணர்வுகளையும் உளநல உதவியாளர்களிடமோ அல்லது இத்துறையில் திறன்களைக் குறைவாகக் கொண்டவர்களிடமோ பகிர்வதென்பது உள ரீதியில் பிரயோசனம் மிக்கதொன்று என்ற கருத்து பரவலாக எங்கும் காணப்பட்டது..

இத்தகைய பார்வையானது, பேரனர்த்தம் நிகழ்ந்த இரு வாரத்திலேயே, இடம் பெயர்ந்த மக்களுடன் முகாம்களுக்குள் உளநல உதவியாளர்களின் சிறிய அணிகள் பணிக்கமர்த்தப்படக் காரணமாயிருந்தது. அடிக்கடி இடம் மாறும் சனக் கூட்டத்தாலும், மிக மோசமான முகாமைத்துவம் மற்றும் நிவாரண உதவிகளாலும், மிதமிஞ்சிய சன நெருக்கடி, இடநெருக்கடி என்பனவற்றாலும் முகாம்களில் பணிக்கமர்த்தப்பட்ட குழுக்கள், தமது கதைகளைச் சொல்லி ஆறுதல் பெற வேண்டுமெனத் துடித்த பதகளிப்பு கொண்ட பெரும் எண்ணிக்கையான மக்களுடனேயே நீண்ட தமது பணிநேரத்தை செலவிட வேண்டி இருப்பதாக எப்போதும் அறிக்கையிட்டனர். இருப்பினும் இப்பணி அமர்வுகள் தனிநபர்களுக்கு ஆழமான உதவியளித்தலுக்கும் தொடர்ச்சியான சந்திப்புக்களுடனான உதவுதலுக்கும் வாய்ப்பினை வழங்கின. இத்தகைய அனுவபங்கள் உளநல உதவியாளர்களினது விரக்தி, சோர்வு, களைப்பு போன்ற உணர்வுகளுக்கும் இட்டுச் சென்றன.

சுனாமிக்கு முன்னர் பல வருடங்களாகக் காணப்பட்டதும், யுத்தச் சூழ்நிலைக்குள் இம் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதுமான உளச்சமூகத் தலையீடுகளை அமுல்படுத்திய நிறுவனங்களும் தனிநபர்களும் மேற்குறித்த அணுகுமுறைக்கு முற்றுமுழுவதும் மறுதலையானதோர் அணுகுமுறையைப் பரிந்துரைத்து வந்தனர். பேரனர்த்தைத் தொடந்த காலப்பகுதியில் வழமையாக இடம்பெறும் உதவியளிக்கும் அடிப்படை வடிவமான பாதிக்கப்பட்ட மக்களது சமூக மற்றும் பொருட் தேவைகளைக் கவனத்தில் எடுப்பதை இந்தப் பார்வைக் கோணம் முன்னுரிமைப்படுத்தியது.

பாதிப்புற்றோர் தாமாகவே தமது அனுபவங்களையும் கஸ்டங்களையும் பற்றிய கருத்தாடலை ஆரம்பிக்கும் பட்சத்தில், ஆதரவான செவிமடுத்தல் மற்றும் உடனிருத்தல் என்பனவற்றை மேற்கொள்வது ஊக்கமளிக்கப்பட்டதே பாதிலும்கூட, ஆரம்பத் தலையீடாக பாதிப்புற்றோருக்கு உளநல உதவி ஆலோசனை வழங்குவதற்கான முயற்சிகள் எதுவும் ஊக்கப்படுத்தப்படவில்லை. இத்தகைய பார்வையானது, மாவட்டத்தில் ஏற்கெனவே பெறப்பட்ட பணிசார் மட்டிலான அனுபவத்தாலும் தேசிய மற்றும் சர்வதேச வழிகாட்டல்களாலும் உறுதிப்படுத்தப்பட்டது.

இவ் அணுகுமுறையானது, உளநலச் சிகிச்சையளிக்கும் செயல்பாட்டுத் தன்மையை குறைவாகக் கொண்டதென வியாக்கியானம் செய்யப்பட்டது. உதாரணமாக, கைவிடப்பட்ட சிறுவர்களுடன் பணிபுரியும் நிறுவனங்கள், இத்தகைய சிறுவர்களை ஏனைய குடும்ப உறுப்பினர்களுடனோ அல்லது அச்சிறுவர்களுக்கு நன்கு பரிட்சயமான பராமரிப்பாளர்களுடனோ மீள இணைக்கப்படும் முயற்சியை மேற்கொள்வர். முகாம்களுக்குள் பணிபுரியும் சில அமைப்புக்கள், பெண்கள், சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகத்துக்குட்படுத்தப்படும் விடையத்தில், முகாம்களுக்குள் பாதுகாப்பாக நித்திரை செய்வதற்கோ அல்லது குளிப்பதற்கோ பொருத்தமான ஒரு இடத்தை உருவாக்குவதன் மூலம் பெண்களின் பிரச்சனைகள் மட்டில் பதிலிறுப்பர். ஏனையவர்கள் நிவாரணம், நட்டஈடு, வதிவிடம் பெறுதல், மற்றும் இடம்பெயர்ந்தோரை அதிகம் கவலை கொள்ளவும் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கவும் செய்யவல்ல பிரச்சனைகளுடன் தொடர்புபட்ட பொறிமுறைசார் தகவல்களை தெளிவாக எழுத்து மூலம் வெளிப்படுத்த அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பர். சிறுவர்கள் மட்டிலான அனேக தலையீடுகள், அவர்கள் பாடசாலைக்கு மீளவும் செல்லவோ அல்லது இலகுபடுத்தப்படும் விளையாட்டு செயல்பாடுகளில் பங்குபற்றவோ அவர்களுக்கு தேவையான பொருள்சார் உதவிகளை உடன் வழங்குவதன் ஊடாக அவர்களது அன்றாட வாழ்விற்கான ஒரு கட்டமைப்பினை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டதாக வகுக்கப்பட்டுள்ளன.

## ஒருங்கிணைப்பிற்கான தேவை

மட்டக்களப்பு மனித நேயப் பதிலிறுப்பின் உளச் சமூகத்துறை விரிவாக்கம் பெற்று அதிகரித்துக் கொண்டு செல்ல, நிதி வழங்குனர்கள் உதவி நிறுவனங்களின் தலையீடு(வைெநசஎநவெழை) அளவை விஸ்தரிக்க நெருக்கடி கொடுத்தனர். அத்துடன் பெருமளவு புதிய செயற்பாட்டாளர்களும் களத்தில் குதித்தனர். பல்வேறுபட்ட அமுலாக்கல் நிறுவனங்களும் குறிக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்துடன் வேலை செய்வதற்கான ஆர்வத்தை வெளிக்காட்டுவதில் ஒருவர் ஒருவரை முந்திக் கொள்ள முற்பட்டதனால் முரண்பாடுகளும், உடன்பாடின்மையும் பெருமளவில் உருவாகின. உதாரணமாக,

*இலங்கையைச் சூழவும் இருந்து கற்ற கடின பாடங்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.*

ஒரு குறிக்கப்பட்ட முகாமில் ஏற்கெனவே விளையாட்டு முற்ற அணுகுமுறை கொண்ட வேலைத்திட்டத்தில் ஒரு நிறுவனம் இருக்கத்தக்கதாக இன்னுமொரு நிறுவனம் அங்கு அதே மாதிரியான நிகழ்ச்சித் திட்டத்தை செய்ய முற்படுவதைக் கூறலாம். உள்;ர் நிலைமை, கொள்தகுதிறன், தேவைப்பாடுகள் பற்றிய தகவல்களைப் போதியளவு கொண்டிராத நிலையில் வெளி நாட்டிலிருந்தோ அல்லது கொழும்பிலிருந்தோ விமானம் மூலம் வரும் பயிற்றுனர்களும் உதவியாகச் செயற்படும் பணியாளர்களும் காணப்பட்டனர்.

மட்டக்களப்பில் ஒரு ஒன்றிணைந்த உளச்சமூக துறையை அபிவிருத்தி செய்வதில், உலக மட்டத்திலும் இலங்கையிலும் சமூக வேலைக்கான பல்வகைப்பட்ட கொள்கை – கோட்பாடு, நடைமுறைசார் அணுகுமுறைகள் ஒரு பாரிய சவாலை முன்னிறுத்துகிறது. உள்;ரிலும் சர்வதேச மட்டத்திலும், களத்தில் உள்ள சச்சரவுத் தன்மை கொண்ட கருத்தாடல்கள், ஒரு ஒற்றை செயல்திட்டப் பிரச்சனைக்குள்ளேயே வித்தியாசமான பார்வைக் கோணங்களையும் அணுகுமுறைகளையும் உள்வாங்கி உள்ளது. எவ்வாறாயினும், மட்டக்களப்பு மாவட்டத்துக்குள், உளச் சமூகச் செயற்பாட்டாளர்களின் பரந்த ஒன்றிணைவானது பிரிந்து நிற்பதை அனுமதிப்பதைக் காட்டிலும், வலுவூட்டப்பட்ட, இத்தகைய அணுகுமுறையொன்றை அபிவிருத்தி செய்தல் அவசியமானதென்றே படுகிறது. தற்போது, உளச் சமூகச் செயலண-



UNICEF/HQ05-0173/Shehzad Noorani

ஹிக்கடுவைக்கு அருகில், பியாடிகம கிராமத்தில், ஓர் தாயும் அவளுடைய இரு மகன்களும் சுனாமியில் இறந்த அந்த சிறுவர்களின் சகோதரி மற்றும் பாட்டியின் புதையலுக்கு மெழுகுவர்த்தி ஏற்றுகின்றனர்

ிக் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள எண்ணக் கருவாக்க வேலைத்திட்டவரைபு பயன்படுத்தப்பட்டு வருகிறது.[1] உள்;ரிலும் சர்வதேச மட்டத்திலும் வழமையாகக் காணப்படுகின்ற போக்குப் போன்றே, சமூக அபிவிருத்திக்கும் சேவை வழங்கல் சார்ந்த மனநல அணுகுமுறைக்கும் இடையில் ஒரு "இரு கூறாக்கலை" வலியுறுத்துவதை தவிர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்;ர் வளப் பற்றாக்குறை உள்ள ஒரு சூழலில், அதுவும் குறிப்பாக மிகப்பாரதூரமான இடர், நெருக்கடி நிலையில் உள்ள தனியாட்களுக்கான உளநல உதவியளிக்க வேண்டிய சூழலில், தற்போது கிடைக்கக்கூடிய சேவைகள் அனைத்தையும் அணி திரட்டி வலுப்படுத்துவது ஒரு நடைமுறை யதார்த்தம் பொதிந்த அத்தியாவசியமாகும்.

தற்போது மாவட்டத்துக்குள் கிடைக்கக்கூடிய உளச் சமூக நேர் தலையீடுகள் பற்றிய உதாரணங்கள் என்பன தன்னார்வத் தொண்டர்களால் விபரிக்கப்படும் அனுபவ விபரணங்கள், தனித்தனியாக உளநல உதவி பெறுவோரின் உளநல அமர்வுகள், உளப் பிணிக்குட்பட்டவர்களுக்கான உளச் சிகிச்சை, வயது முதிர்ந்தவர்களுக்கான ஓய்வு நேர கலந்துரையாடல் குழுக்கள், சுனாமிப் பயங்கள் பற்றிய கலந்துரையாடல்கள், நடைமுறைச் சாத்தியம் கொண்ட தகவல் உதவ- ிகள், காணாமற் போனோர்களைக் கொண்ட குடும்பங்களுக்கான குடும்பச் சந்திப்பு போன்றவற்றை தம்மகத்தே கொண்டுள்ளன. அத்துடன், பிரிக்கப்பட்ட சிறுவர்களைத் தற்காலிக தத்தெடுத்து பராமரிக்கும் ஒழுங்குகள், சிறுவர்களது தெரிவுகளுக்கமைய நெருங்கிய உறவினர்களிடத்தில் விடல் என்பனவற்றுடன் முகாம்களுக்கு இடம்பெயர்ந்துள்ள பிள்ளைகளுக்கான சீரான விளையாட்டு செயற்பாடுகள், வன்முறை, பாலியல் இம்சைகளின் மட்டிலான பயங்களையும் அபாயங்களையும் நீக்கும் வண்ணம் மலசல கூடம் மற்றும் குடிநீர் என்பனவற்றின் அமைவிடத்தின் மட்டில் பிள்ளைகளுடனும் பெண்களுடனும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதை உறுதி செய்யும் முயற்சிகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், சமூகமையப் பணியாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் போன்றோர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள், அவை ஒழுங்காக வடிவமைக்கப்படாமலோ அல்லது நிலைத்தகு நிலை கொண்டதாக இல்லாமலோ இருந்தபோதிலும் அவை பெரிய விடையமாகவே உள்ளன. உதவிச் சேவைகள், பயிற்சி முன்னெடுப்புக்கள் இரண்டுமே தரத்தின் மட்டிலும் விளைவுத் தாக்கத்தின் மட்டிலும் வேறுபட்டனவாக உள்ளன. வெளியிலிருந்து உந்தப்பட்டு, ஊக்கப்படுத்தப்பட்ட சுய சீராக்கல் கட்டுப்பாட்டுக்குட்பட்ட உளச் சமூக சேவைகளின் வினியோகத்தின் யதார்த்ததை பார்த்தால், வேறு மாற்று வழிகள் ஏதுமில்லாதது போலுள்ளது. ஆயினும் மாவட்டத்துக்குள் வேலையை ஆரம்பிப்பவர்களுடன் ஆக்க பூர்வமாகத் தொடர்புபட்டு இயங்குவதற்கு இது ஒரு வழியாகவே உள்ளது.

குணமாக்கலும் ஆரோக்கியமாக இருத்தலுக்குமான நிபுணத்துவ மற்றும் பாரம்பரிய அணுகுமுறைகள் சிலவேளை ஒன்றுடன் ஒன்று பொருந்தாத சூழ்நிலையானது, முற்று முழுதான பெறுமானத்தையும் வேலைத்திட்ட வரைபுகளையும் பொருந்தச் செய்ய வல்ல அணுகு முறைகளை இணைப்பது பற்றிய நேரிய கவலையை தோற்றுவித்துள்ளன. நிபுணத்துவ நேர் தலையீட்டின் அவசரத் தன்மைக்கும் கிராமிய அல்லது பாமர பார்வைக் கோணத்துக்குமிடையேயான பதட்டம், சுனாமிப் பேரழிவின் மட்டில் நிபுணத்துவ நேர் தலையீட்டுக்கு மாத்திரம் சார்பானதாக தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.

தரமான உளச் சமூக சேவைகளை உருவாக்குவது, பராமரிப்பது, நிலைத்தகுநிலை கொண்டதும் சமூகப் பண்பாட்டியலுக்குப் பொருத்தமானதுமான நேர் தலையீட்டை இனங் காண்பது போன்ற சவால்களின் மட்டில், இலங்கையைச் சூழப் பெற்றுக் கொண்ட - மிகக் கடுமையாகக் கற்றுக் கொண்ட பாடங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. நிதியளித்தல் நெருக்குவாரங்கள், இலங்கையில் உளச்சமூக நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய முன்னறிவு இல்லாத ஆளணியினரின் படையெடுப்பு, உள்; ர் நிறுவனங்களின் ஆவணமாக்கல் இன்மை அல்லது நிறுவனம்சார் நினைவு, பல கலாசாரப் பாங்கான உளச் சமூக சேவைகளை உருவாக்குவதில் அர்ப்பணம் போதாமை என்பன இத்தகைய புறக் கணிப்பு காரணிகளாய் அமைந்துள்ளன. "பாதிப்புற்ற மக்களால் முகம் கொடுக்கப்பட்ட பாரிய உயிர்ச்சேதம், மீண்டும் மீண்டும் இடம் பெயர்தல், ஜீவாதார அழிவு, சமூகப் பாத்திரம் ஏற்றலில் தடங்கல், சிறுவர் பிரிபடல் போன்றன நீடித்துச் செல்லும் இனமுரண்பாட்டுக் காலத்தில் அனுபவிக்கப்பட்டனவற்றின் மீள் வருகையாகவும் அதே போன்ற இழப்புக்களாகவும் உள்ளன" என்ற ஒரு "உணர்ந்து கொள்ளுதலை" தன்னகத்தே கொண்டுள்ள சுனாமி பேரணர்த்தத்தின் வழமைக்கு மாறான இயற் தன்மையாகக்கூட இது இருக்கலாம். நிகழ்ச்சித் திட்டம்சார் பதிலிறுப்புக்களின் விளைவுப்பயன் தாக்கத்தை பரீட்சித்துப் பார்ப்பதில் இருந்தும் பின்னைய கையாள்தலுக்கான கிராமிய நடவடிக்கையில் இருந்தும் சிலவேளை பிரயோசனமானதொன்று பெறப்படலாம். "மிக விரைவாக, குறைந்த வேகத்தில;" என்ற பண்பு, சுனாமி பாதித்த மக்களால் பெறப்படக்கூடிய தரமானதும் உரியதுமான சேவைகளை வழங்குவதில் மிதமிஞ்சிய பொருத்தப் பாங்காக தென்படுகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் பெயரால் நேர் தலையீடு செய்யும் வெளியாரின் அர்ப்பணங்கள், உதவி தேவைப்படுபவர்களுக்கு தொடர்ச்சியான ஒத்திசைவான நேர் தலையீடுகளை வழங்கும் ஆர்வத்தின் மட்டில், திட்டமிடவும் ஒருவர் ஒருவருடன் ஒருங்கிணைக்கப்படவும் தேவையான நிறுவனங்களின் விழிப்புணர்வால் வழிநடத்தப்படுவதுடன் வலுப்படுத்தப்படவும் வேண்டும். அனர்த்தம் ஏற்பட்டு சில மாதங்களிலேயே நேர்த் தலையீட்டுக்கான நீண்ட கால அணுகுமுறையை கொண்டுள்ள முன்னெடுப்புக்கள், விளைவுத் தாக்கத் திறனின் மட்டிலும், அவற்றின் சேவைகளின் நிலைத்தகு நிலையின் மட்டிலும் பலாபலன்களை ஏற்கெனவே அறுவடை செய்கின்றன.

***ஆனந்த கலபத,ி "தலையீடு" என்ற சஞ்சிகையின் ஆசிரியரும் இலங்கையின் மட்டக்களப்பில் இயங்கும் வூந ஆயபெசழளநஇ உளச் சமூக உதவி மற்றும் ஒருங்கிணைப்பிற்கான வலையமைப்பின் ஆலோசகரும் ஒருங்கிணைப்பாளருமாவார். இணையத்தளம்: www.themangrove.blogspot.com மின்னஞ்சல்: agalaps@eureka.lk***

இக்கட்டுரையானது, "சுனாமிக்குப் பின்னான உளச்சமூக வேலை: இலங்கையின் கிழக்கு மட்டக்களப்பில் சேவைகள் வழங்குதலில் சவால்கள்", ஆனந்த கலப்பதி, "தலையீடு", வெளியீடு 3, இல 1, பக்கங்கள் 65–69, 2005 என்பதன் பிரித்தெடுப்பாகும். நேர் தலையீடு என்பது ஒரு சஞ்சிகை என்பதுடன், உள ஆரோக்கியம், உளச்சமூக வேலை, யுத்தம் இடம்பெறும் இடங்களில் உளநல உதவியளித்தல் போன்றனவற்றின் அறிவினை பரவலாக்கம் செய்யவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. தொடர்பு: Guus van der Veer, Editor-in-chief, Intervention, Tulpenburg 31, 1181 NK Amstelveen, The Netherlands. Fax: +31 20 647 4580 மின்னஞ்சல்: intervention@wtfi.nl

1. www.forcedmigration.org/psychosocial

# சுனாமிக்குப் பின்னான இலங்கையில் ஜீவனோ-பாயம்

சைமன் ஹாரிஸ்

*இலங்கையில் ஜீவனோபாயம் என்பது ஆரம்பத்தில் சுனாமியின் அழிவுகளால் மட்டும் பாதிக்கப்படவில்லை. மாறாக அரசி-னதும் மனிதநேய உதவி நிறுவனங்களினதும் சுனாமிக்குப் பின்னான பேரழிவுப் பதிலிறுப்புச் சார்ந்த கொள்கைகளினாலும் நடைமுறைகளினாலும்கூடப் பாதிக்கப்பட்டுள்ளன.*

பின்வரும் கதைகள், சுனாமிக்குப் பின்னான 5 மாதங்களில் இடம்பெயர்ந்தோராலும் உதவிப் பணி யாளர்களாலும் கட்டுரையாளர்களாலும் கூறப்பட்ட அனுபவங்களின் கூட்டு முன் வைப்பினை தருகின்றன. அவை, சுனாமிக்குப் பின்னான இலங்கையில், சில ஜீவனோபாயம் சார்ந்த பிரச்சனைகளை, குறிப்பாக போட்டியில் அமைந்த பன்முக நிறுவனங்களின் மனிதநேயப் பணிசார் தலை யீடுகள், தொழில்துறை மீள் கட்டுமானம், கட்டடங்கள் அமைக்க முடியாத கரையோர தடை செய்யப்பட்ட வலயம், அரச ந்'டஈட்டைப் பெறுவதில் தாமதம் போன்றவற்றின் தாக்கம் பற்றிக் கூறுகின்றன.

## ஒரு மீனவர்

சுனாமியில் அழிந்த படகொன்றின் சொந்தக்காரரான ஒரு மீனவர் நீங்கள். சராசரியான மீன்களைப் பிடிக்க உதவும் ஒரு சிறிய கட்டுமரம்தான் அது. உங்களைப் பணக்காரனாக்க அது போதுமானதல்ல, ஆனால், கௌரவ-மாக வாழச் செய்யவல்லது. அரசு உங்களது படகை மாற்றீடு செய்ய முன் வந்துள்ளது. ஆனால் மாதக் கணக்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒன்றுமே நடக்கவில்லை. இருந்தபோதிலும் சுனாமிக்குப் பின் சர்வதேச மனிதநேய உதவி நிறுவனங்கள் வந்தன. சிலர் சமூகக் கலந்துரையாடல் பங்கேற்பை வழங்கி உங்களது தேவைகள் எந்த வகையில் சிறப்பாக நிறைவேற்றப்படலாம் என அறிய விரும்பினர். ஏனையவர்களோ எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகத் தமது நிதியை கொடுத்து முடித்துவிட முடியுமோ அவ்வளவு விரைவாக கொடுத்துவிட விரும்புவது போன்று தென்பட்டது. அவர்கள் உங்களுக்கு ஒரு கடனையோ, நிதி அன்பளிப்பையோ, கூட்டுறவில் ஒரு பங்கையோகூட தரவிரும்பினர். ஒரு நி-றுவனம் மாற்றீடாக ஒரு கட்டு மரத்தையே தர விருப்பமாக இருந்தது. இன்னுமொன்று ஒற்றைக்கால் படகொன்றை தருகின்றது. இன்னுமொன்றோ வெளி இணைப்பியந்திரப் படகொன்றை தருகின்றது. அது மீன் பிடிப்பதற்கான ஒரு தெரிவு மாத்திரமே. நீங்கள் தச்சனாகவோ மேசனாகவோ தொடர்ந்து இருக்கலாம். அல்லது கணி-னியை இயக்குவதற்கு கற்கலாம் அல்லது சர்வதேச உதவி நிதி வந்து சேரத் தொடங்கியதிலிருந்து பல்கிப் பெருகிய நூற்றுக்கணக்கான உள்;ர் நிறுவனங்களுடன் போட்டிபோட இன்னுமொரு உள்ளூர் நிறுவனத்தைத் தொடங்கலாம். நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் படகு சேதமானது ஆனால் அவ்வளவு பெரிதாக இல்லை. உங்கள் நண்பர்கள் பெரிய படகு-களை இயந்திரங்களுடன் கேட்கின்றனர். அவர்கள் தொலை தூரம் சென்று மேலும் அதிகமான மீன்களைப் பிடிக்க இயலும். ஏற்கெனவே மிதமிஞ்சிய மீன்பிடியால் பாதிக்கப்பட்டுள்ளதென சிலர் கூறுகின்றனர். அவ்வாறென்றாலும் இப்போதுள்ள கையிருப்பை பெருகவிடாமல் மாத்திரம்தான் செய்யும். ஆனால் அது இனிவரும் காலத்தில்தான் நடக்கும். இன்று நீங்கள் உங்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்த வேண்டும். நீங்கள் போட்டியாளராக இருக்க வேண்டியுள்ளது.

## ஒரு வியாபாரி

சுனாமிக்கு முன்னர் நீங்கள் ஒரு வியா-பாரி. ஏழையல்ல ஆனால் நன்றாக இருந்தீர்கள். உங்களுடைய வீட்டை இழந்தீர்கள். பேரழிவு இடம்பெற்ற சில தினங்களில் அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட 100 மீற்றர் கரையோரக் கட்டடத்துக்கான தடை வலயத்துக்குள் உங்கள் நிலம் வருவதால் அவர்கள் உங்களை மீள வும் வீடு கட்ட அனுமதிக்கப் போவ தில்லை. உங்களுடைய வியாபாரம் நஷ்டப்பட்டுவிட்டது. அது கைக்காசு வியா-பாரத் தன்மை பொருந்தியது. உங்கள் சொத்துக்களை ஈடு வைத்து பெருமளவு உதவியை இரவல் பெற்றுள்ளீர்கள். இப்போது உங்கள் வீடு போய்விட்டதனால் உங்களது கடனின் மட்டில் வங்கி முன் தடை போட்டுள்ளது. உங்களது வீட்டுறுதி சுனாமியால் அள்ளுண்டு போனதால் நீங்கள் நஷ்டஈடு கோருவதற்கு இயலாமல் இருக்கப் போகிறது. உங்கள் உரித்துடமையை நிலை நிறுத்துதல் ஒரு நீண்ட மற்றும் சிக்கல் வாய்ந்த படிமுறையாக உள்ளது. ஏனையவர்களைப் போல உங்களுக்கும் காப்புறுதி இல்லை. உங்களது வீட்டைக் கட்டக் கூடியவராக நீங்கள் இருந்தால்கூட, அப்படி உங்களால் செய்யக் கூடியதாக இருக்கப்போவதில்லை. ஏனென்றால் சுனா மியில் இருந்து உள்ளூர் கட்டடப் பொருக-ளின் விலை அதிகரித்துள்ளது. அத்துடன் கட்டுமானப் பணியாளர்களின் சம்பளம்கூட மூன்றுமடங்காகியுள்ளது. கரையோரப் பாதுகாப்புச் சட்டம் அப்பிரதேசங்களில் 1981 இல் இருந்து கட்டடங்களின் கட்டுமானத்தை தடை செய்திருப்பதால் உண்மையில் இந்த நிலம் உங்களுக்குரியதில்லை என்று அரசு சொல்கிறது. (கடந்த 20 வருடங்களாக அச்சட்டத்தை அமுல்படுத்துவதில்லை என்று அவர்கள் தெரிவு செய்திருந்த வேளையிலும்கூட) கிணறுகளில் உள்ள நீர் உவர்ப்பாக இருப்பதால் தினமும் தண்ணீர் எடுத்து வந்து வினியோகிக்கப்பட வேண்டிய சதுப்பு நில விளிம்பிலுள்ள ஒரு நிலப்பரப்பில் அமையவுள்ள இடைத்தங்கல் வீட்டுக்கு மாற்றப்பட காத்துக் கொண்டு, நீங்கள் இப்போது பாடசாலை விளையாட்டு மைதானத்தில் உங்கள் குடும்பத்துடன் வாழ்கிறீர்கள். கடந்த 15 வருடங்களாக யுத்தத்தால் இடம்பெயர்ந்தோர் வாழும் தற்காலிக வீடுகளுக்கு அருகிலேயே இம்முகாம் உள்ளது. உள்ளூர் அரச நிர்வாகத்தினூடாக வழங்கப்படும் மாதாந்த உலர் உணவு, சிறு தொகைப் பணம் போன்றவற்றையும் பெற்று வருகி றீர்கள். உயிர் தங்கி வாழ இது போது மானது. வேறு எங்காவது நீங்கள் இடம்பெயர்ந்தால் உங்களுக்கு இடம் இருக்கும். விற்பனை சார்ந்த அறிவு புதிதாக ஏதோ ஒன்றை ஆரம்பிக்க உங்களுக்கு உதவும். ஆனால் நீங்கள் சென்றால், அரச உதவியோ வேறெந்த உதவியோ உங்களுக்குக் கிடைக்காது. உங்கள் சொந்தக் காலில்தான் வாழ வேண்டும். ஓர் உள்ளூர் நிறுவனமோ, சிறிய வியாபார முயற்சிகளை ஆரம்பிக்க கூடிய வகையில் ஒரு சுழற்சிமுறைக் கடன் திட்டத்தையோ அல்லது இலவச நிதி வழங்கல் திட்டத்தையோ ஆரம்பிக்க உள்ளதெனக் கூறுகிறது. அவர்கள் ஆடு, கோழி வளர்ப்பதற்கான ஒரு சில ஆயிரங்களைப் பற்றியே பேசுகின்றனர். நீங்களோ ஐந்து உதவியாளர்களை வைத்துக் கொண்டு 50,000 ரூபாய் தினப் புரள்வுடன் தொழில் செய்தவர்.

## ஓரளவு அனுபவமும் திறனும் கொண்ட தொழிலாளி

நீங்கள் ஓரளவு அனுபவமும் திறனும் மிக்க கட்டடத் தொழிலாளி. சுனாமிக்கு முன் சிறிது கஸ்டம். அருகில் உள்ள நகருக்கு தினமும் வேலை தேடிச் செல்ல வேண்டி இருந்ததுடன், சில சமயம் வேலை கிடைப்பதும் அரிது. சுனாமிக்குப் பின் திடீ-ரென கட்டட வேலைக்கு பெரும் கிராக்கி. தற்காலிக வீடு, இடைத்தங்கல் வீடு, நிரந்தர வீடென்று ஒரே கட்டட வேலை. பாடசாலை கட்டப்பட, வீதிகள் திருத்தப்பட, பாலங்கள் கட்டப்பட வேண்டியுள்ளன. ஊதியம் திடீரென உயர்ந்துவிட்டது. வேலைக்குத் தட்டுப்பாடே இல்லை. உங்கள் வாழ்வில் நடந்த விடையங்களில் சுனாமிதான் மிகச் சிறந்தது. சுனாமி யுடன் தொடர்புபட்ட கட்டட வேலைக்கு நாளாந்த ஊதியமாக 750 ரூபாவை பெற்ற பின் உங்களால் எப்படி இனி 250 ரூபாவுக்கு திரும்பவும் செல்ல முடியும்? தற்போதுள்ள நிறுவனங்கள் வழங்கும் தொழில்சார் பயிற்சியினால் உருவாகும் மேசன், தச்சுத் தொழிலாளிகளின் தொழில் சந்தையினால் உருவாகும் தாக்கம் எப் படி இருக்கும்? பேரழிவிற்குப் பின்னான மீள்கட்டுமானத் தொழிற்றுறை நீண்ட கால அபிவிருத்தியை தூண்டுமா? அல்லது மனித நேய நிறுவனங்கள் மீளவும் திரும்பிச் செல்லும்போது இவையெல்லாம் திடீரென நின்று விடுமா?

“மேலிருந்து கீழ்நோக்கிய” ஒரு பிரதிபலிப்புப் பதிலிறுப்பு என அனேகரால் கருதப்படும், 100 மீற்றர் எல்லைக்குள் கட்டுமானங்களைத் தடைசெய்யும் 1981 கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தினை அமுலாக்குவதற்கான அரசின் தீர்-மானம், தமது சொந்த இல்லங்களை மீளவும் கட்டியெழுப்புவதற்கான சுனா மியால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களின் வாய்ப்பை உறுதியாக தடைசெய்துள்ளது. சிறந்த சூழல் சுற்றாடல் வாதத்தை வெளிப்படுத்துவதாகவும் (சதுப்பு நிலத் தாவரங்களையும் மணல் மேடுகளையும்



Paul Jeffrey/ACT International

*யாழ்ப்பாணத்துக்கு அருகில், இலங்கையின் வடக்கே தொலைவிலுள்ள ஓர் கிராமமான பருத்தித்துறையில் ஓர் மீனவன் தன்னுடைய வலையை திருத்தப்பார்க்கிறார்*

மீள உருவாக்க ஊக்கப்படுத்தல்) அபாய கால நிலை ஆயத்தம் சார்ந்த வாதத்தை வெளிப்படுத்துவதாகவும் (எதிர்காலத் தாக்கத்துக்கெதிராகப் பௌதீகத் தடை வலயத்தை ஏற்படுத்துவதன் மூலமும் இலகு அபாயத்துக்குட்படு நிலையைக் குறைத்தல்) இக் கொள்கை காணப்பட்டாலும், சொத்து உரித்துடைமைக்கும் ஜீவனோபாயத்துக்குமிடையில் உள்ள பரஸ்பர உறவு, பரந்த அளவில் கண்டும் காணமல் விடப்பட்டுள்ளது. கரையோரக் கட்டுப்பாட்டின் சட்ட பூர்வத் தன்மையை கேள்விக்குட்படுத்தும் உறுதி போன்ற ஆவணங்கள் இன்றி, உரிமை கோரல் பிரச்சினை போன்றவற்றிடையே, இழந்த சொத்துக்கான அரச நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளல் என்பது நீண்டதும் சிக்கல் வாய்ந்த படிமுறையைக் கொண்டதுமாற்போலுள்ளது. அப் படிமுறைக் காலம் முழுவதும் ஜீவனோபாயம் நிறுத்தி வைக்கப்பட்டே இருக்கும்.

சுனாமியால் பாதிக்கபட்ட மிக மேசமான தரப்புக்களில் மீனவச் சமூகமும் ஒன்று. மீனவர்களின் இழந்த ஜீவாதாரத்தை மீள உயிர்ப்பித்தெடுப்பதாக அரசு உறுதி வழங்கியிருந்த போதிலும், நஷ்ட ஈடு வழங்கலில், அரச சட்டபூர்வ ஒழுங்கமைப்புக்குள் நிலவும் கொள்தகுதிறன் போதாமை, மிகப்பாரிய தாமதத்தக்கு இட்டச்சென்றுள்ளது. மனித நேய உதவி நிறுவனங்கள், இந்த இடைவெளிக்குள் தம்மை உட்படுத்திக் கொள்ள, உள்ளே அடியெடுத்து வைத்துள்ளனர். உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களால் அணிதிரட்டப்பட்டுவரும் மிகப் பாரிய நிதியின் காரணமாக, இச் சூழ்நிலை மிகவும் போட்டிமிக்க சூழலாக மாறியுள்ளது. மீன்பிடிப் படகு விடயம் வெளிப்படுத்துவது போன்று, ஜீவாதார உபகரணங்களின் பல்வகைப்பட்டனவற்றைக் வழங்குவதன் மூலம், உதவிசெய்வற்கான ஓர் இடத்தைப்பிடிக்க உதவி நிறுவனங்கள் போட்டியில் குதித்துள்ளன. குறுகியகால அடிப்படையில், அத்தகைய நடைமுறை-றகள் ஜீவனோபாயத்தின் மட்டில், மீனவச் சமுதாயம் உடனடியாக தமது தொழிலை மீளத் தொடங்குவதற்கூடாக, ஒரு பலனைக் கொண்டிருக்கலாம். இருப்பினும் நீண்ட கால அடிப்படையில், பேண்தகு நிலைக்குரிய ஜீவனோபாயத்தின் விளைவுகள் விபரீதமானதாக இருக்கலாம். உள்ளூர் உறவுகளில் ஏற்படக் கூடிய தாக்கங்களை ஆய்வு செய்வதில் சமூகங்களின் கலந்தாலோசனையும் பங்கேற்பும் இல்லாமல், அந்தந்த வேளைகளில் தேவையான உபகரணங்களை மாத்திரம் வழங்குதலானது, சந்தைப்படுத்தல் மட்டில் கொள்தகுதிறன், சூழல் என்பன, கிடைக்கக்கூடிய மீன் கையிருப்புக்களின் மிக விரைவான வீழ்ச்சிக்கு வழிவகுக்கலாம். இது நீண்ட காலத்தில் ஜீவனோபாயத்தை பாதிப்பதுடன், ஏற்கெனவே இன ரீதியான மோதலுக்குள்ளாகி பாதிப்புற்ற சமூகங்களுக்கிடையில் ஜீவனோபாயம்சார் பதட்டங்களை அதிகரிக்கவும் செய்யும்.

சுனாமிக்குப் பின்னான இலங்கையில் வென்றவர்கள் தோற்றவர்கள் என இருதரப்பார் உண்மையில் உள்ளனர். ஓரளவு அனுபவமும் திறனும் கொண்ட கட்டடத் தொழிலாளியின் சம்பளம் காட்டுவதுபோன்று, கட்டுமானத் தொழிற்துறை முன்னெப்போதும் காணாத கிராக்கியை இப்போது அனுபவிக்கிறது. நூற்றுக் கணக்கான புதிய சர்வதேச மனிதநேய நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான போக்குவரத்து தங்குமிடம் போன்ற புதிய வர்த்தகமும் உருவாகியுள்ளது. துரதிஸ்டவசமாக, தற்காலிக முன்னேற்றத்தை சிலருக்கு வழங்கியும் மறுதலையாக பொருட்களும் சேவைகளும், ஏனையவர்களுக்கு நெருங்க முடியாத நிலையை ஏற்படுத்தியும், இத்தகைய புதிய வாய்ப்புக்கள் இரட்டைக் கூர் விளிம்புகளைத் தாங்கிய வாள் போன்றுள்ளது.

சுனாமிக்குப் பின்னான ஜீவனோபாயம், அரச கொள்கையிலும் நிர்வாகத்தாலும் தலையீட்டுக்குள்ளாகி உள்ளது. அத்துடன் அவை தொழிலாளர் தேவைப்பாடுகளின் நகர்வு, வர்த்தக முன்னுரிமைகள், கேள்வி, பாதிப்புற்ற இடங்களில் இயங்கும் சர்வதேச உள்ளூர் நிறுவனங்களின் பெருக்கம் என்பனவற்றாலும் தலையீட்டுக்குள்ளாகி உள்ளது. கொள்கைகளும் நடைமுறைகளும் உள்ளூர் பங்கேற்பு, முடிவெடுத்தல் சூழல் பாதுகாப்பு, பேரனர்த்தம் தொடர்பான இலகு அபாயத்துக்குட்படு நிலையை குறைத்தல் போன்ற அம்சங்களுடன் ஒன்றிணைகின்றன என்பதை உறுதிப்படுத்துவதனூடாக ஜீவனோபாயப் பிரச்சனைகள், உரிய காலத்தில், இசைவுத் தன்மையுடன், தந்திரோபாய சமநிலைத் தன்மையுடன் கையாளப்பட வேண்டிய ஒரு அவசரத் தேவைப்பாடுள்ளது.

***சைமன் ஹாரிஸ், ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகத்தின் அகதிகள் கற்கை நிலையத்தில் பட்டப்பின் படிப்பினை அண்மையில் நிறைவு செய்தவர். அத்துடன் கிறிஸ்டியன் எய்ட்இன் இலங்கைக்கான சுனாமி நிகழ்ச்சித் திட் ஒருங்கிணைப்பாளரும்கூட. மின்னஞ்சல்: sharris@christian-aid.org***

# ஆறுமாதங்கள் கடந்தும், பயத்துக்கு முகம் கொடுத்தல்

லின்டன் ஜெபீல்ஸ்

*1987 இல் இருந்து, இலங்கையில் 21 வருடம் தொடர்ந்த சிவில் யுத்தத்தில் இடம்பெயர்ந்தோருக்கு யூ.என்.எச்.சீ.ஆர் பாதுகாப்பும் உதவியும் வழங்கியுள்ளது. சுனாமிக்குப் பின்னான மனித நேய நெருக்கடிகளுக்கும் உதவும் தனது பாத்திரத்தை யூ.என்.எச்.சீ.ஆர் விசாலப்படுத்தியுமுள்ளது.*

அது 2004 மார்கழி 25ம் திகதி காலை 9.30, மேரி தெரேஸா இராஜேஸ்வரன் ஒரு இராணுவ வாகனம் நெருங்குகிறதோ என எண்ணவைத்த ஒரு பாரிய சத்தத்தை செவியுற்றாள். அவளது சமையலறையில் சமைத்துக் கொண்டிருந்தவேளை, வெளி யில் உறுமிக் கொண்டு பேரிரைச்சலுடன் கூக்குரல்களும் அவலங்களும் சேர்ந்து வந்தபோதே மேரி மிகவும் பதட்டத்துக்குள்ளானாள். ஒரு கை-யில் தனது மகள் நந்தினியை தூக்கிய வண்ணம் என்னதான் நடக்கிறதென்று அறியும் ஆவலுடன் வெளியே வந்தாள்.

வெளியிலோ, ஆட்கள் கூட்டமொன்று மிக விரைவாக பொங்கி எழும் சமுத்திரத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. சில கணப்பொழுதுகளில் பதினைந்தடி உயரமான அலையொன்று இடி முழக்கத்துடன் அவளை நெருங்குவதை மேரி கண்டாள். அவளது வீட்டுக்கு முன்னால் உள்ள கட்டடம் முதல் தாக்கத்தை எதிர்வு கொண்டு பாதுகாக்க, மேரி நந்தினியை இழுத்துக் கொண்டு எதிர்த்திசையில் ஓடினாள். மரணத்தின் இறுதிப் பிடியில் மேரி தப்ப எத்தனித்தாள். ஆனால் முதலாவது அலை ஏற்கனவே அவளை தனக்குள் பிடித்துக் கொண்டது. அவளை யும் இரண்டு வயது மகள் நந்தினியையும் பாதுகாப்பு வேலியின் கம்பிச் சுருளில் தூக்கி எறிந்தது. ஒரு கையால் தனது குழந்தையை பிடித்துக் கொண்டு, மறுகை யால் கூரிய முனைகள் தாங்கிய கம்பிச் சுருளை பற்றிக்கொண்டு, மேரி அரை மயக்க நிலையானபோது அலை மிக விரைவாக பின்வாங்குவதை உணர்ந்தாள்.

களைப்புடனும் காயத்துடனும், மேரி நந்தினியை பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் சென்ற பின் தனது ஆறு வயது மகனை தேடத் தொடங்கினாள். கடைசி யாகத் தான் அவனைக் கண்ட இடத்துக்கு நடக்கத் தொடங்கவும், இரண்டாவது அலை மீண்டும் பாதுகாப்பு வேலியின் கம்பிச் சுருளில் அவளை தூக்கி வீசியது. 'எனது உடலில் ஒரு துளிகூட உணர்வைத்தானும் நான் காணவில்லை' 'எனது மகனின் இறப்பின் வேதனைப்பயத்தைத் தவிர எனக்கு எதுவுமே தெரியவில்லை' அவள் கூறினாள். சுனாமியி-னால் ஒரு மணி நேரம் இழுத்துச்செல்லப்பட்ட வேளை தான் கண்ட. சாம்பல் வர்ணத்தையும் மடித்துச் சுருட்டி உள்ளிழுத்த கடலின் உள்ளாழத்தையும் நினைவுக்கழைக்கிறாள். அவளுக்கு மேலே 'கறுப்பும் அடை காக்குமாப்போன்ற வானமும், தொடர்ந்து கொட்டித் தீர்க்கும் மழையும்" அவள் விபரித்தாள்.

சில மணிகளுக்குப் பின் அவளது குடும்பம் அவளை கண்டுபிடித்தபோதும் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு செல்ல மறுத்தாள் மேரி. எனது மகனின் பாதுகாப்புத்தான் எனக்கு முக்கியமான விடையம். 'அவன் பாதுகாப்பாயுள்ளான் என அறிந்து கொள்ள முதல் என்னால் அவ்விடத்தை விட்டு நகர முடியவில்லை" அவள் விளக்குகிறாள். சுனாமி ஏற்பட்ட காலை வேளையில், பாடசாலையில் புகலிடம் அடைந்ததன் பின் அன்று பின்னேரம் மேரியின் மகன் இல்லம் திரும்பினன். ஒரு நிம்மதி. மேரி பின்னர் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். மோசமான உராய்வுக் காயங்கள், கீறல்கள், முறிந்த கை கால், வெட்டுக்கள் இப்படி ஏராளமான வையுடன் மேரிக்கு ஏழு தையல்களும் போடப்பட்டன.

'எனது கணவர் இப்போது தொழில் புரிவதில்லை வள்ளம் சேதமாகிவிட்டது" மேரி கூறினாள். சுனாமி அடித்ததிலிருந்து எமக்கெல்லாம் கடலுக்கு அருகில் மீண்டும் வாழச் செல்ல பயமாக இருக்கிறது. 'நாம் இப்போது 750 மீற்றர் கரைக்கப்பால் உள்ளோம். இது இனிவரும் சுனாமிக்கு பாதுகாப்பானது" மேரியின் குடும்பத்தினருக்கும் அவர்களைப்போன்ற ஏனையவர்களுக்கும் காலம் காலமாக ஜீவனோபாயத்துக்கு நம்பியிருந்த சமுகத்தினருக்கும் மீளவும் செல்வதா இல்லையா என்பதும் தமது அன்னை இல்லம் என பெருமையுடன் அழைத்த அந்த கடலை விட்டுவிட்டு, நம்பகரமான வருமானத்துக்கான வழியை துறந்துவிட்டு, கடற்கரையிலிருந்து தொலை-லவில் ஆனால் பாதுகாப்பான இடத்தில் தங்கி விடுவதா என்பது பெரிய மனக்குழப்பமான விடயம்.

அம்பாறை, இலங்கை



UNHCR Sri Lanka/Kara Waxman

## யூ.என்.எச்.சி.ஆர் இன் பதிலிறுப்பு

சுனாமியின்பின் யூ.என்.எச்.சி.ஆர் 160,000க்குமதிகமான மக்களுக்கு 500,000 மதிகமான உணவு அல்லாத நிவாரண பொருட்களை வினியோகம் செய்துள்ளது. இவற்றில் பிளாஸ்டிக் சீற், கூடாரம், நுளம்பு வலை, சமையலறைப் பொருட்கள், பாத்திரங்கள், வாளிகள், சவர்க்காரம், துவாய், உடைகள் மற்றும் ஏனைய அடிப்படை பொருட்கள் சிலவாகும். அத்துடன் இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கும் இலங்கை அரசின் ஒருங்கிணைப்பு முயற்சிக்கு உதவுவதில் எமது முன்னணி பாத்திரத்தை சிறப்பாக முன்னெடுத்துள்ளோம். பருவ கால மழை வருமுன்னர் தற்காலிக வீடுகள் அமைத்தல், அவசரகால தங்குமிடங்கள் மற்றும் மீள் கட்டுமானம் என்பவற்றுக்கிடையிலான இடைவெ-ளிகளை இணைக்கும் வண்ணம் பங்காளி நிறுவனங்களுடன் செயல்பட்டுள்ளோம்.

யூ.என்.எச்.சி.ஆர் பயனாளிகளுடனும் இலங்கை அதிகாரிகளுடனும் மனித நேய அமைப்புக்களுடனுமான கலந்தாலோசனைக்கூடாக உருவாக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் உறைவிடங்கள் சார்ந்த பலவகை வழிகாட்டல் ஆவணங்களையும் கணிப்பீட்டு பட்டியலையும் உருவாக்கி உள்ளது. யூ.என்.எச். சி.ஆர் கட்டிய வீடுகள் மற்றும் குடியமர்வு மக்கள் மன்றம் என்பன பால்நிலை, சுற்றாடல் மற்றும் ஏனைய அக்கறைகொள் விடயங்கள், சுனாமியால் இடம்பெயர்ந்தவர்களுக்கான இடைநிலை மற்றும் நிரந்தர வீடமைப்புக் கட்டுமான வேலையின்போது கவனத்தில் எடுக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தின.

இத்துறையை ஒருங்கிணைப்பதற்குப் புறம்பே, யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களில் யூ. என்.எச். சி.ஆர் 3,000 தற்காலிக வீடுகளை


UNHCR/M Sivanesan

*யாழ்ப்பாணத் துக்கு அருகில், இலங்கையின் வடக்கே தொலைவி லுள்ள ஓர் கிராமமான பருத்தித் துறையில் ஓர் மீனவன் தன்னுடைய வலையை திருத்தப் பார்க்கிறார்*

அமைத்து வருகி றது. வித்தியாசப்படும் காலநிலை, சமூகம் மற்றும் உள்ளூர் வளங்கள்சார் காரணிகளின் நிமித்தம் இட அமைவுகளுக்கிடையில் கட்டுமான மாதிரிகள் வேறுபடுகின்றன. யாழ்ப்பாணத்தில் 1408 வீடுகள் ஜுன் 2005 இலும், 2442 இடைநிலை வீடுகள் அம்பாறையில் செப்டெம்பர் 2005 இலும் அமைத்து முடிக்கப்பட உள்ளன. அம்பாறையில் 3 x 4 மீற்றரை கொண்டதும் கல்வனைட் இரும்புச் சட்டங்களுக்குள் அமைந்த பிரிக்கப்பட்ட 2 அறைகளைக் கொண்டதுமான இடைத்தங்கல் வீடுகள் அமைக்கப்படுகின்றன. இவை சர்வதேச மட்டத்தில் ஸ்பியர் பிரமாணங்கள் எனப்படும் ஒழுங்குவிதிகள் கூறும் ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்று வாழ்வதற்கேதுவானதும்கூட. பலமான அடித்தளத்தை செங்கல் அத்திவாரம் கொடுப்பதுடன் மேற் சுவர்களாக ஒட்டுப்பலகை அமைகிறது. தேவையேற்படின் இவ் வீடுகளை கழற்றி இன்னுமொரு இடத்தில் மீள்பொருத்த முடியும். கூரைகள் செப்பு முலாமிலான அலுமினியத் தகடுகளால் ஆக்கப்படுகிறது. தகரத்தை விட இது செலவு அதிகம் என்றாலும் அவ்வீட்டினுள் வாழ்வோர் சௌக ரியமாக இருப்பதை உறுதிப்படுத்தும் வகை யில் அது வெப்பத்தை உட்கடத்துவதில்லை. செப்பு முலாமிட்ட அலுமினியக் கூரைக்கும் மேற்சுவர்களுக்குமிடையில் இடைவெளி விடப்படுவதால் குடியிருப்போர் குளிர்ச்சியாக இருக்க வேண்டிய தேவை கவனத்தில் கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பூர்த்தியாக்கப்பட்டவை, மேரிக்கும் கல்லடி பருத்தித்துறையிலுள்ள ஏனைய அவரது சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பாதுகாப்பானதும் கௌரவமானதும் தாக்குப்பிடிக்கக்கூடியதுமான வீட்டை வழங்குகின்றன. பயன்பெறும் ஏனைய பயனாளிகளில் சுனாமியில் தனது மனைவி, இரட்டைக் குழந்தைகள், மாமியார், மைத்துனர், மைத்துனி அவர்களது மகள் அனைவரையும் இழந்து துயருறும் மேரியின் சகோதரர் தமிழழகனும் ஒருவர்.

யாழ்ப்பாணத்தில் மதுரங்கேணியில் யுத்தத்தால் மூன்றுமுறை இடம்பெயர்ந்தவர் 30 வயது தமிழழகன். கரையில் இருந்து 50 மீற்றருக்கு அப்பால் இருக்கும் அவர் கிராமம் 189 பேரை சுனாமிக்கு பறிகொடுத்து. சுனாமியன்று 'பாரிய பட்டாசு வெடியோசை போன்று மேலெழுந்து வந்த சத்தம்" வீட்டுக்கு வெளியே கேட்டது என அந்த ஒலியை தமிழழகன் விபரிக்கிறார். வீட்டின் முற்பகுதியில் இருந்த கதவு யன்னல்களை சுற்றி ஏற்பட்ட வெடிப்புக்கள் நீரை படிப்படியாக உள்ளே விட்டன. 'என்ன நடக்கிறது என்பதை நான் உணருமுன்னரே சுவர்கள் உள்ளே சரிந்து நீரை உள்ளே விட கணப்பொழுதில் வீட்டில் இருந்த அனைத்தும் கழுவி எடுத்துச் செல்லப்பட்டனர்" என விபரித்தார். எனது மாமனார் இரட்டை குழந்தைகள் இருவரையும் பற்றி இழுத்தெடுத்தார். ஆனால் நீரின் விசை மிக பலமாக இருந்ததால் அவர்களை தொடர்ந்து பிடித்திருக்க முடியவில்லை.

தனது வீட்டில் இருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் மிதந்து சென்று இறுதியில் தனது இடத்தை மீண்டும் தமிழழகன் அடைந்தார். ஆனால் உடைந்து விழுந்த செங்கற்கள் அவரது காலை உடைத்து விட்டதனால் அவரால் நடக்க இயலவில்லை. மாலை பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பயங்கர செய்தியை அவரது உறவி னர் எடுத்துக்கூறும் முன் தனது குடும்பம் எங்குள்ளதென்று அறியாத நிலையில் வாட்டில் இடமும் இல்லாமல் 3 நாள் அங்கு கழித்திருந்தார். இப்போது பயங்கர பயம், அச்சம், துயரத்தாலும் வேதனையாலும் உயிர் தப்பிய எஞ்சியோருக்குரித்தான குற்ற உணர்வு மனச்சோர்வு என்பவற்றால் ஊனமாக்கப்பட்ட தமிழழகன் 'ஏன் நான் மாத்திரம் தனியே உயிர் தப்ப வேண்டும்?" என வினவுகி-றார். ஒரு மீனவராக தனது வாழ்வுக்கு உழைத்த தமிழழகன் பயன்படுத்தக்கூடிய தோணியொன்றை இப்போது வைத்துள்ளார். துறைமுகத்தை தடைசெய்யும் உடைந்த சிதைவுகளை துப்பரவு செய்யும் வேலை இப்போது நடந்துகொண்டிக்கிறது. ஆனால் கடலுக்கு செல்லும் போதெல்லாம் துயரம் மிகு நினைவுகள் மாத்திரம்தான் இழந்தவர்களை நினைவூட்டிக்கொண்டே இருக்கும். சுனாமியால் நாடெங்கும் பாதிப்புற்ற சமூகங்களின் இரண்டக நிலையை இவை எதிரொலிக்கின்றன. நீண்ட காலமாக வாழ்வழித்த சமுத்திரத்தால் சிதறடிக்கப்பட்டவர்களின் வாழ்வுக்கு உதவவும் செவிமடுக்கவுமே யூ.என்.எச்.சி.ஆர் போன்ற நிறுவனங்களால் இப்போது முடியும்.

***விண்டன் ஜெபிஸ்ஸ், கொழும்பில் யூ.என். எச்.சி.ஆர்ருடன் இணைந்த தகவல் அதிகாரி ஆவார். மின் அஞ்சல் : jeffels@unhcr.ch***

***யூ. என். எச். சி. ஆரின் ஏனைய வேலை கள் மற்றும் இடைத்தாக்கல் வீடுகள் பற்றிய தகவல்களுக்கு செல்க. www.unhcr.lk***

# சேவைகள் வினியோகம் ஒழுங்குபடுத்தலில் சவால்கள்

ஸ்ரீவ் மத்தியூஸ்

*ஆசிய சுனாமியின் தாக்கம் முன்னென்றுமில்லாததும் இதனால் பாதிக்கப்பட்டவர்களது தேவைகளை பூர்த்தி செய்வதில், சேவைகள் வினியோகம் ஒழுங்குபடுத்தல் முகம்கொடுக்கும் சவால்கள் சொல்லில் அடங்காதவை. ஐந்து வருடங்களுக்கு முன்னர் சுனாமி ஏற்பட்டிருந்தால்கூட, உலக தரிசன நிறுவனம் எந்தளவுக்கு வினைத்திறனுடன் தற்போது செயற்பட்டதோ அந்தளவிற்கு அது பதிலிறுக்கக் கூடியதாக இருந்திருக்காது.*

1990 களின் இறுதிப் பகுதியில், அதிகரித்துவரும் பல்வேறு வகையான மனித நேய அவசர நிலைமைகள், நிவாரண உதவியளித்தலின் சிக்கல் தன்மைகளின் விரிவாக்கம் போன்றனவற்றின் நிமித்தம் உலக தரிசன நிறுவனம் பாரிய பேரழிவுகளுக்கு உடனடியாக பதிலிறுக்கும் தனது பாணியை மாற்றியது. அவசர கால நிலையின் தொடக்க வேளைகளில், அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் உள்ள பணியாளர்களை இரவல் வாங்குவதற்குப் பதிலாக உடனடியாக செயற்பட்டு பதிலிறுக்க வேண்டிய நாட்களை இழக்காமல் இருக்க, உலக தரிசன நிறுவனம், முன்கூட்டியே பேரழிவுகளை எதிர்வு கூறவும், தகுந்த ஆயத்தங்களை மேற்கொள்ளவும் மிகப் பரந்த அளவிலான அவசரகால நிலைமைக்கு பதிலிறுக்கவும் தம்மை அர்ப்பணித்த ஒரு முழு நேர உலகளாவிய அதிவிரை பதிலிறுப்பு அணியொன்றை உருவாக்கி உள்ளது.

தனது கொள்தகுதிறனின் கடைசி எல்லைக்கு சென்று சுனாமியை பரீட்சித்துப் பார்க்க வேண்டியிருந்தது. “முதல் 30 நாட்களுக்குள் இலங்கைக்கும் ஆச்சேக்கும் (இந்தனோசியா) விமானம் மூலம் 32 தொகுதி பொருட்களை நாம் ஏற்றினோம்” முன்கூட்டிய தயார் நிலையெடுப்புப் பிரிவின் சர்வதேச இயக்குனர் பென்டன் கூறினார். இதேபோன்றதொரு பாரிய அளவிலான வேலையை நாம் முன்னர் செய்திருக்கவில்லை, அத்துடன் அது அவ்வளவு இலகுவானதுமல்ல. சில சந்தர்ப்பங்களில் சட்டபூர்வ சிவப்பு பட்டி நடைமுறைகள் பாரிய தடைகளை உருவாக்கியிருந்தன. அநேகமான பொருட்கள் மிக விரைவாக இறக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும், யுத்தச் சூழ் நிலைக்குப்பட்டிருக்கும் நாடுகளில், பாதுகாப்பு சார்ந்த அபாய எதிர்வுகொள்ளலுக்கு உதவவல்ல வாகனங்கள், கொலைக் கொடர்ப கருவிகள் போன்ற சில குறிப்பிட்ட உணவுசாரா பொருட்கள், இத்தகைய சிவப்பு பட்டிக்குள் சிக்கி, பின் நீண்ட முயற்சியினால், நிறுவன அலுவலர்களின் வேலை நேரத்தை செலவிட்டு அவற்றை நகர்த்த வேண்டி ஏற்பட்டது.

இந்திய மற்றும் தாய்லாந்து உலக தரிசன நிறுவனம், தனது பாரிய பணியாளர் கொள்தகு திறனுக்கூடாக வெளி உதவிகள் இன்றி உடனடி பதிலிறுப்பு நடவடிக்கைகளில் தனது காத்திரமான பங்கை வகிக்கக்கூடியதாக இருந்தது. இதனூடாக பாரிய சர்வதேச முயற்சி என்ற மட்டில் இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகளில், பூரண கவனத்தை குவிக்கக்கூடியதாகவும் இருந்தது. இலங்கையில் உலக தரிசன நிறுவனத்தின் சுனாமி பதிலிறுப்பானது, நாட்டை இராட்சத அலை தாக்கி ஒரு சில மணித்தியாலங்களில் ஆரம்பிக்கப்பட்டது. உடனடியாக உணவு, நீர், உடை, படுக்கை விரிப்புக்கள், பாய், சுகாதாரப் பொருட்கள் போன்றவற்றை பகிர்ந்தளிக்கத் தொடங்கிய உள்ளூர் பணியாளர்களின் வினைத்திறனையும் இரக்கத்தையும் பாராட்டுதல் அவசியம். உலக தரிசன நிறுவனத்தின் 55 வருட வரலாற்றில் மிகப் பெருமளவு கொள்கலன்களில் உதவிப் பொருட்கள் மிகக்குறுகிய காலத்துக்குள் கொண்டு செல்ல இவர்களது விரைவான செயற்பாடுகள் வழிவகுத்தன.

உலக தரிசன நிறுவனம் தனக்கென முன்கூட்டியே பொருள் சேகரித்து மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையங்களை டென்வர், கனோவர், பிரின்டிஸி, துபாய் போன்ற இடங்களில் கொண்டிருந்தது. இத்தகைய வசதி வாய்ப்புக்கள் உடனடியாக பயன்படுத்தப்பட்டதுடன் கென்யா, கனடா, இந்தியா, பாக்கிஸ்தான், தாய்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் விநியோகத்தர்கள், போக்குவரத்து கம்பனிகளுடனான முன்திட்டமிட்ட ஆயத்தங்களும் விடுபட்டிருந்த ஏனையவற்றை சீர்செய்து இடைவெளிகளை நிரப்பின. முன்கூட்டியே நிவாரணக் கையிருப்புக்கள் சார்ந்த திட்டமிடலை இயக்குவித்த இந்த திறன் ஜீவாதாரமானதாக இருந்தது என்பது நிரூபணமானது.

நன்கு அனுபவம் பெற்ற பணியாளர்களின் தொடர்பும் பங்களிப்பும்கூட மிக முக்கியமான காரணியாகும். ஈராக்கில் தொடர்ச்சியாக தேய்ந்துவரும் பாதுகாப்பு சூழ்நிலையின் பின்னணியில், உலக தரிசன நிறுவன நிவாரணப் பணியாளர்களின் மரணம் மூசோவில் சம்பவித்ததைத் தொடர்ந்து, ஐப்பசி 2004 இல் தனது ஈராக் அலுவலகத்தை மூடியிருந்தது. ஆனால் மிகவும் அனுபவம்மிக்க உயர் திறன்மிக்க நிவாரணப் பணியாளர்கள் பாரிய பொறுப்பை மீண்டும் ஏற்க தயாராக முன்வந்தனர். இத்தகைய அனுபவசாலிகள் தம்முடன் இருந்த ஏனைய நிவாரணப் பணிசார் விற்பன்னர்கள், நிறுவனங்களுடனான உறவு தொடர்புகளை கொண்டு வந்தனர். அச்சுறுத்தும் அவசரகால நிலைமையின் ஆரம்ப நாட்களில், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. அமைப்புக்களுடனான சிறந்த பணித் தொடர்பையும் உறவையும் ஏற்படுத்தும் திறன் மிக்க வினைத்திறனுடன் நிவாரணத்தை விநியோகிக்க உதவியது.

## எதிர்காலம் என்ன?

உலக தரிசன நிறுவனம் ஆகக்குறைந்தது 5 வருடத்துக்கு தனது சுனாமி நிகழ்ச்சித் திட்டங்களை தொடர விரும்புகிறது. சிறிய வியாபாரத்துக்கான சிறு வர்த்தக அபிவிருத்தி, வீடுகளின் மீள் கட்டுமானம், வர்த்தகம், வீதிகள், பாலங்கள், கரையோர பிரதேசங்களின் புதிய நீர் மலசலகூட முறைகள், பாடசாலைகள், கிராமங்களில் விரிவுபட்ட சிறுவர் பாதுகாப்பு போன்றனவற்றை உள்ளடக்கிய மிகப்பரந்த வேலைத்திட்டங்கள் அவற்றில் அடங்கும். முன்னைய பேரழிவுகளில் கற்றுக் கொண்ட சில பாடங்கள் சுனாமி வேலைத் திட்டத்தில் உதவியாக உள்ளது என்பது நிரூபணம்.[1] கடந்த 2 வருடங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட சிறுவர் பாதுகாப்பு முன்வரைவு ஆவணங்களின் விளைவாக, சிறுவர் சிநேக மையங்கள் இலங்கை, இந்தியா, மற்றும் ஆச்சேயில் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய அலுவலகமட்ட அதிகாரப் பரவலாக்கத்துக்குட்பட்ட முடிவெடுக்கும் படிமுறையினூடாக, குறிப்பாக இலங்கை இந்தியாவில், விரவான உடனடி பதிலிறுப்புக்குப் புறம்பே எதிர்காலம் பற்றியதொரு புதிய கவலை எழுந்துள்ளது. இன்னுமொரு பாரிய பேரழிவு அண்மையில் ஏற்படுமானால் என்ன நடக்கும்? எல்லா நிறுவனங்களினதும் மிகச் சிறந்த கொள்தகுதிறனில் இருந்து ஆழமாக உருவெடுத்ததே சுனாமி உடனடி பதிலிறுப்பு முயற்சிகள். இன்னுமொரு பாரிய அளவிலான, மிக விரைவான ஒரு அவசரகால நிலை வெகுவிரைவில் ஏற்பட்டுவிட்டால், அநேகமான நிறுவனங்கள், அதுவும் பாரிய, பெரிய நிறுவனங்கள் பொருத்தமான பதிலிறுப்பை உடனடியாக மேற்கொள்வதற்கு மிக கடின அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டி இருக்கும்.

***ஸ்ரீவ் மத்தியூஸ் - உலக தரிசன நிறுவனத்தின் பூகோள அதிவிரை பதிலிறுப்பு அணியின் அவசரகால தொடர்பாடல்களின் முகாமையாளர். மின்னஞ்சல் : stephen_matthews@worldvision.ca***

1. See After Action Review (involving World Vision International, CARE, OXFAM GB and Catholic Relief Services) at www.hmanitarianinfo.org/srilanka/infocentre/referance/docs/Care_Evaluation.pdf




Steve Matthews

# சிறிய மீன் சுனாமிக்குப் பின்னான நெருக்குவாரத்தில் நசியுண்டது

ஜரின் பிறேசர்

*இலங்கையில், பங்கேற்பு மற்றும் பரவலாக்கம் என்பனவற்றின் பெறுமானம் சுனாமிக்குப் பின்னான அவசர விரைவில் ஏராளமான சர்வதேச நிறுவனங்களால் பலவீனப்படுத்தப்பட்டுள்ளன.*

அவசரகால நிலைமையின் முதல் நாளில் இருந்து மட்டக்களப்பில், சர்வதேச தேசிய நிறுவனங்கள் ஒன்றாக இணைந்தன. ஒருவர் ஒருவரை ஏற்கனவே அறிந்திருந்தவர்களின் பங்குபற்றலில் குறுகிய ஆனால் வினைத்திறன்மிக்க கூட்டங்கள் இடம் பெற்றன. உடனடித் தேவைகளால் தூண்டப்பட்டு, வாகனங்கள், நிவாரணப் பொருட்கள், பணியாளர் என ஏராளமான வளங்களை நிறுவனங்களுக்கிடையே பகிர்வதற்கான ஆர்வத்திலிருந்தும், முகம் கொடுத்த சுய அபாயத்தின் தூரத்திலிருந்தும், ஒரு கூட்டிணைவு இலங்கை மற்றும் வெளிநாட்டு சகபணியாளர்களினிடையே உருவானது.

மார்கழி 30இல், நீர்மட்டம் உயர்ந்ததன் காரணமாக அம்பாறை இங்கினியாகல நீர்த்தேக்கம் திறந்து விடப்பட்டு, அதன் முதலாவது பாச்சல் கரையோரத்தை நோக்கி பாய்ந்து சென்று பாதிப்புற்ற மக்களை மீண்டும் முகாம்களுக்குள் நகர வைத்தது. உணவுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்த பாடசாலைகள் இடம்பெயர்ந்த குடும்பங்களின், முகாமாக மாற்றம் பெற்றன. ஒரு வாரத்துக்குள் மறு முறையும் நீர் மக்களுக்கெதிராகத் திரும்பியபோது, அவர்கள் பய அதிர்ச்சியில் மேசைகளுக்கு மேல் ஏறிக் கொள்ள நேர்ந்தது. நான் அவதானித்துக் கொண்டிருக்கும் போதே, உலை வைக்கப்பட்டிருந்த சோற்றுப் பானைக்குக் கீழ் எரிந்து கொண்டிருந்த நெருப்பு திடீரென அணைந்து எங்கும் இருள் பரவியது. எங்கு ஓடுவதென்று எமக்கே தெரியவில்லை. நாம் இடுப்புமட்ட நீரில் அமிழ்ந்திருந்தோம். நீர்த்தேக்கம் உடைப்பெடுத்து இன்னுமதிகமான தண்ணீர் வந்து எம்மை அடித்துச் சென்றுவிடுமோ என்று பயந்து அஞ்சினோம். மழை தொடர்ந்து இடைவிடாமல் பொழிந்து கொண்டிருந்த அந்த இரவில் எனது இதயம் படபடத்துக் கொண்டே இருந்தது. எமது அலுலகம் ஒரு நிறுவனக் கட்டடத்தின் 1ம் மாடியில் இருந்ததால் நாம் அதிஸ்டசாலிகள். எண்ணற்றவர்கள், மிதமிஞ்சிய ஆட்களால் நிரம்பியிருந்த முகாம்களிலும் மரங்களுக்குக் கீழும் சிலவேளை வெள்ளத்திலும் இருக்க, நாம் உடலைச் சாய்ப்பதற்கோ எம்மிடம் பாய்கள் இருந்தன. சுனாமி இதைவிடப் பரவாயில்லை போலும் என எமது பணியாளர்கள் நகைச்சுவையாக பேசிக்கொண்டனர்.

இத்தகைய சூழலில், அடுத்த அதிர்ச்சி வந்தது. இயற்கையிடமிருந்தல்ல மாறாக எமது மேலிடத்திலிருந்தே. எவ்வித காரணமுமின்றி, எமது இலங்கைக்கான அவசர நிலை அணி ஒருங்கிணைப்பாளர் அவரது கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு உடனடியாக தமது உடைமைகளை எடுத்துக் கொண்டு கொழும்புக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளார் என எனக்குக் கூறப்பட்டது. முகாமைத்துவத்தை கலந்தாலோசிக்காது, “முறையற்ற வகையில்” நிறுவன வாகனங்களை பயன்படுத்தியதைக் கண்டித்ததோடு, மேட்டு நிலங்களுக்கு மக்களை பாதுகாப்பாக ஏற்றி இறக்குவதன் பொருட்டு நிறுவன ஊழியர் அல்லாதோரை வாகனங்களில் ஏற அனுமதித்ததையும் நிர்வாகம் சுட்டிக் காட்டி இருந்தது. நாம்கூட ஒரு தன்னார்வ தொண்டரை (சர்வதேச மட்டத்தில் அவசரகால பணியில் போதுமான அளவு அனுபவமுள்ள) எம்முடன் இயங்க அனுமதித்ததன் வாயிலாக மனித வளக் கொள்கையை மீறியுள்ளோம் என அறியப்படுத்தப்பட்டோம். அத்துடன் அவசரகால நிலை சார்ந்த நிபுணர்கள் வந்து கொண்டிருக்கின்றனர் எனவும் எமக்குக் கூறப்பட்டது. முன்னொருபோதுமில்லாதவாறு அவசரகால நிலை நடவடிக்கைகளுக்கு 5 நாட்களும்

*இலங்கை, பள்ளத்தடிச் சேனைக்கு அருகில் உள்ள ஓர் அகதி முகாமிற்கு வெளியில், மக்கள் மீளவும் சொந்த வீடுகளுக்குத் திரும்பத் தொடங்குகின்றனர்*



Paul Jeffrey/ACT International

30,000 பேருக்கு உணவும் மருந்தும் வழங்க 20 மணித்தியால வேலை நாட்களைச் செலவு செய்துள்ள வேளை, நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறும் வந்து கொண்டிருக்கும் நிபுணர்களின் அறிவுறுத்தல்களுக்காக காத்திருக்குமாறும் கேட்கப்பட்டோம்.

### நம்பிக்கை பற்றிய பிரச்சினை

பொதுவாகவே, பங்கேற்பு சார்ந்த தொலை நோக்கினாலும் அதிகாரப் பரவலாக்கத்தின் பெறுமானத்தாலும் தமது வேலைகள் வடிவம் கொடுக்கப்படுகின்றன என நிறுவனங்கள் பேசுகின்றன. ஆனால், உள்ளூர் பணியாளர்கள், உள்ளூர் அறிவு மற்றும் உள்ளூர் மக்களின் கொள்தகுதிறன் போன்ற அம்சங்களில் ஒரு பெரிய மனிதநேய நிறுவனம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பதில் வேறென்ன சான்று இருக்க முடியும். அவசரகால நிலை நிபுணர்கள் வந்திறங்கியதும் அவர்க-ளிடம் ஏராளம் வினாக்கள் தொடுக்க விரும்பினேன். இரண்டு தசாப்தங்களாக இங்கு ஆயுத மோதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதென்பதை நீங்கள் அறி வீர்களா? எப்போதாகிலும் இடம்பெயர்ந்து, நேசித்தவர்களை யுத்தத்தில் இழந்து, உங்களது நிலங்களையும் உடமைகளை யும் இழந்து பறிகொடுத்து அனுபவம் உண்டா? இலங்கை பற்றியும், அதன் மக்கள் பற்றியும், ஆயுத மோதல் பற்றியும், அவற்றின் சமூகக் கட்டமைப்புக்கள் பற்றியும், ஆயுத மோதல் பின்னணி பற்றியும், அதில் அகப்பட்டுள்ளவர்களின் எதிர்வு கொள்ளல், தந்திரோபாயங்கள் மற்றும் அதிலிருந்து மீழுதல் பற்றியும் அவர்களுக்கு தெரியாதென்பது விரைவிலேயே தெளிவானது. சுனாமியால் பாதிப்புற்றோர் ஏற்கெனவே எத்தகைய துயரங்களுக்கூடாக வாழ்ந்தனர் என்பது பற்றிய புரிந்துணர்வை அவர்கள் ஓரளவே-னும் கொண்டுள்ளனர் என்பதை அவர்கள் பேசிய விதம் வெளிப்படுத்தவில்லை.

அவசரகால நிலை நிபுணர்கள் வந்த வண்ணமிருந்ததினால், சுனாமிக்குப் பின்னான வாழ்வு என்பது கூட்டுக் கையேற்பு போன்று தென்பட்டது. சிறிய மீன்கள் பெரிய மீன்களால் விழுங்கப்பட்டுக் கொண்டிருந்தன. தமது சுய நடவடிக்கைகளை உதை கொடுத்து ஆரம்பிக்குமாப்போன்று புதிய நிறுவனங்கள் பணியாளர்களைத் திருடியதால் சமூக, நிறுவனக் கட்டமைப்புக்கள் தாழ்த்தப்பட்டு கீழ் நிலைக்குச் சென்றன. உள்ளூர் வீட்டு வாடகைச் சந்தையில், வீட்டு வாடகை திடீரென உச்சத்துக்குப் பறந்தது. வெளி நாட்டுப் பணத்தின் ஊடுருவல் வேலைத் துறைச் சந்தையை தகர்த்தது. ஒருசில நாட்களிலேயே, தாம் பல ஆண்டுகளாக இலங்கையில் வேலை செய்து வருவதுபோன்று நிறுவனங்கள் பேசத் தொடங்கிவிட்டன. தமது விரைவான ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர், உடன-டியாக என்ன செய்யப்பட வேண்டும் என அவர்கள் அறிந்து கொள்வார்கள் என்று எமக்கு உறுதியளிக்குமாப் போன்றும் பேசத் தொடங்கினர். அவர்களது தன்னம்பிக்கை மூச்சை உள்ளே எடுப்பது போன்றது. ஒரு சர்வதேச நிறுவனம், மூன்று மாதத்துக்குள் மாவட்டத்தின் அனைத்து புனர்வாழ்வு வேலைகளையும் முடித்துவிடுவோம் என்று மார்தட்டியது.

நிவாரணப் பொருட்கள் விரைவாகவும் கடும் பரபரப்புடனும் வினியோகிக்கப்பட்டன. சிலவேளைகளில் செயற்கைத்தனமாக பயனாளிகளின் தொகையை அதிகரிக்கச் செய்யும்பொருட்டு பொருட்கள் பதுக்கப்பட்டன அல்லது கொட்டப்பட்டன. தமது இணையத்திலும் செய்திக் குறிப்புக்களிலும் நிறுவனங்கள் பெருமையடித்துக் கொண்டன. பாவித்த உடைகள் பயன்பாட்டு ரீதி யில் பொருத்தமானவையா அல்லது தரம்மிக்கனவா என யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. பெண்களின் உயர்-குதி காலணிகளும், நீச்சல் உடைகளும் எவ்வித வினாக்களுமின்றி பொதிகளில் பிரசன்னமாயிருந்தன. தமது உறவி னர் நண்பர்கள் வீடுகளில் இருந்தோர் கவ னிப்பாரற்று விடப்பட்ட அதேவேளை முகா-மில் இருந்தவர்களுக்கு மீண்டும் மீண்டும் உதவிப் பொருட்களை வினியோகிக்க நிறுவனங்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடின. யாருக்கும் வேண்டாம் என்று கூற விருப்பமில்லை. சில குடும்பங்கள் தமக்குக் கிடைத்த அளவுக்கதிகமான உணவல்லாத பொருட்களை சேமித்து வைக்க இடம் இல்லாது திண்டாடினர். வகை தொகையற்ற வினியோகத்தால் குடும்பங்களுக்கிடையே முரண்பாடுகள் தலை தூக்கின. தமக்குக் கிடைத்த புதிய பைகள், புத்தகங்கள், பொருட்கள் பற்றி சில சிறுவர்கள் பெருமைப்பட்டுக் கொள்ள, ஒன்றுமே கிடைக்காதவர்கள் மௌனத்தில் புழுங்கினர். இலவசமாக வழங்கப்பட்ட மருந்துப் பொருட்கள், பல்வேறு வெளிநாட்டு மொழிகளில் லேபல் செய்யப்பட்டு வந்து குவிந்தன. வித்தியாசமான மருந்துகளை வினியோகித்த வெவ்வேறு மருத்துவக் குழுக்களின் பணியால் மக்கள் மிதமிஞ்சிய மருந்தூட்டத்துக்குட்பட்டனர்.

பணத்தை செலவு செய்வதற்கும், பொருட்களை வினியோகிப்பதற்குமாக விரைந்ததில், உள்ளூர் மக்களுடன் ஆறஅமர இருந்து, பிள்ளைகளையும் குடும்பங்களையும் தேற்றி, அவர்களுக்கு தேவையான நேரத்தில் உடனிருந்து கடல் பற்றிய பயப் பிராந்தியை போக்கும் வண்ணம் எதிர்க்கருத்துக்களை இதமாக முன்வைத்து உதவி அளித்திட அங்கு யாருக்கும் நேரமிருக்கவில்லை. இன்னுமொரு சுனாமி பற்றிய அல்லது அரசின் திட்டம் பற்றிய பிழை-யான அவசர சமிக்கைகளால் மக்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டதுடன், பயத்தில் தங்கியிருக்கவும் மன அழுத்தத்தைக் கூட்டிக் கொள்ளவும் வழிசமைக்கப்பட்டது. யாரும் வசிக்க அனுமதிக்கப்படாத 100 அல்லது 300 மீற்றர் கடற்கரையோர எல்லை வலயம் பற்றிய விடயம் தெளிவில்லாமல் இருந்தது. கடற்கரையை அண்டி வாழ்ந்து வந்த மீனவர்கள், தமது ஜீவனோ-பாயப் பொருட்களுடன் பயணிக்கவோ அல்லது அவற்றைப் பாதுகாக்க, பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களை வேலைக்கமர்த்தவோ வேண்டிய தேவைக்கு முகம் கொடுக்கின்றனர். மக்களது பிரசன்னமோ அல்லது மன ஒப்புதலோ இன்றி அவர்களது வீட்டின் எச்ச சொச்சங்களை உடைத்துத் தகர்த்து கரையோரங்களில் இருந்து சிதைவுகளைத் துப்பரவு செய்யும் வெளியாரது பாத்திரம், தாம் முன்னர் வேலை செய்த, வாழ்ந்த இடங்களில் சொகுசு ஹொட்டல்கள் அமைப்பதற்கு அபிவிருத்தியாளர்கள் திட்டமிடுகின்றனரோ என்ற பயத்தைக் கூட்டி உள்ளது.

*ஜரின் பிரேசர் ஒரு பாரிய சர்வ-தேச நிறுவனத்துக்காக இலங்கையில் பணிபுரிந்தவர். மின்னஞ்சல்: irene_fraser@yahoo.co.uk*

---

# பர்மிய புலம்பெயர் தொழிலாளர்கள் மட்டில் மனித நேயப் பதிலிறுப்பு

பியா ஒப்ரோய்

*தென் மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் சுனாமி நெருக்கடியில் சிக்கியுள்ள பெருமளவு எண்ணிக்கையானவர்களுக்கு, அனைத்துவகை மனித நேய பலிலிறுப்புக்களுக்கும் அடிப்படையாய் அமையவேண்டிய மனித உரிமைகளின் அவசியம் மறுதலிக்கப்பட்டுள்ளது.*

பொதுவாக அழுக்கு ஆபத்து அசிங்கம் என எண்ணப்படும் வீட்டு பணியாளர்களாக பண்ணை தொழிலாழிகளாக வீதியை துப்புரவு செய்பவர்களாகப் புலம்பெயர்ந்தவர்களைக் காணலாம். இவர்கள் உரிய முறை யில் அல்லது ஆவணங்களற்ற புலம்பெயர்ந்தவர்களாக உள்ளனர். சுனாமிக்கு முன்னர் தாய்லாந்துக் கரை யோர பிரதேசங்களைச் சேர்ந்த பர்-மிய புலம் பெயர்ந்தோர் கட்டுமானம் மீன்பிடி மற்றும் உல்லாசத்துறை உள்ளடங்கலாக பல்வகைப்பட்ட தாள் திறன் துறைகளில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டனர். நடைமுறையில், குறிப்பிடத்தக்க அளவு கொள்கையைப் பொறுத்த வரையில், தாய்லாந்து அதிக ரிகளின் நடவடிக்கையானது பர்மிய புலம் பெயர் தொழிலாளர்கள் மீது பாரபட்சம் காட்டுவதாகவும் அவர்களது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவும் இருந்தது.

சுனாமியால் பாதிப்புற்ற நான்கு தென் தாய்லாந்து மாகாணங்களில் தொழில் புரியும் 120,000 பர்மியர்களில், மொத்தம் 700 தொடக்கம் 2500 வரையிலான பர்மிய புலம் பெயர் தொழிலாளர்கள் சுனாமியால் கொல்லப்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டது. காயமுற்ற அல்லது காணமாற்போன பர்மியர்களின் எண்ணிக்கை பற்றிய சரி யான தரவுகூட தெளிவற்றதாயுள்ளது. சில அறிக்கைகளோ ஆக கூடியது 4000 பேர் காணாமற்போயிருக்கலாம் என குறிப்பிகின்றன. ஐஒஎம், உலக வங்கி, ஐநா அமைப்புக்கள் இணைந்து தை மாத்தில் செய்த கணிப்பீட்டின்படி தாய்லாந்தில் சுன-ாமியால் ஆகக் குறைந்தது 7000 பர்மிய புலம் பெயர் தொழிலாளர்களும் அவர்களை நம்பியிருந்தவர்களும் பாதிக்கப்பட்டனர் என முடிவுக்கு வரமுடிந்தது. தொழில் புரிந்தும் வாழ்ந்தும் வந்த பல ஆயிரக்கணக்கான பர்மிய தொழிலாளர்கள், பதிவு செய்யப்படாதவர்கள் என்பதுடன் இதன் விழைவாக உத்தியோக பூர்வ

உதவிகளில் இருந்து விலக்கப்பட்டனர் என்பதும் பிரதானமான குழப்பத்துக்குரிய காரணியாக இருந்தது. மேலும் பல அடையாள ஆவணங்களும் வேலை அனுமதிப்பத்திரங்களும் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டன.

### உதவிப்பொருட்களில் பாரபட்சம்

உதவிசார் அம்சங்களில் சுனாமியைத் தொடர்ந்து பாராபட்சம் பயமுறுத்தும் சூழலில் பர்மிய புலம்பெயர் தொழிலா-ளர்கள் அவசரகால மனிதநேய உதவி களை பெறுவதில் கடைசி வரிசையி-லேயே இருந்தனர். அதுவும் அவர்கள் அதற்குத் தகுதியாக இருந்தால் மாத்திரமே அது சாத்தியம். நாட்டில் தொடர்ச்சியாக இருந்தவர்கள் என்பதை நிருபிக்கக் கூடிய புலம் பெயர் பணியாளர்கள் மாத்திரமே மனித நேய உதவிகளைப் பெற தகுதியா-னவர்கள் என தாய்லாந்து அதிாரிக-ளால் அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டன. தை 2005 இல் சட்டத்துக்குப் புறம்பான புலம் பெயர்ந்தோர் சமூகங்கள் மலை-லகளில் ஒளித்துக் கொண்டிருந்தன. அநேகர் காயமுற்றிருந்ததுடன் பசிய-ால் பலவீனமுற்றும் இருந்தனர். சட்டதுக்குப்புறம்பான புலம் பெயர்ந்தோர் தாய்லாந்து பொது சுகாதார ஒழுங்கமைப்புக்கூடாக அவசரகால சுகா தார தேவைகளைக் கூட பெற முடியா-மல் இருந்தனர். உணவுக்கும் ஏனைய உதவிகளுக்கும் உள்ளூர் நிறுவனங்களின் தர்மத்திலேயே அதிகம் தங்கி இருக்க வேண்டி இருந்தது.

பாரபட்சம் அற்ற ஒரு வேலைத்திட்டத்துக்குள், மானிடத் தேவைகளை பூர்த்தியாக்கும் மற்றும் மனித கௌரவத்தை மீளக் கொண்டு வரும் அவசியத்தின் அடிப்படையில் மனித நேய பதிலிறுப்பு பொதுவாக அனுமதிக்கப்படுகிறது. ஆனால் பர்-மிய புலம் பெயர்ந்தோரின் தேவைகள் மட்டிலான பதிலிறுப்பு நடவடிக்கைகள் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்யவும் இல்லை அவர்களது கௌரவம் மீளக் கொண்டுவரப்படவுமில்லை. சட்டபூர்வ அந்தஸ்து இருக்கிறதோ இல்லையோ எல்லா மனித உயிர்களும் பொருளாதார சமூக உரிமைகள் உள்ளடங்கலாக தமது அனைத்து அடிப்படை உரிமைகளுக்கும் உரித்துடையவர்கள் என்பதை சர்வ-தேச மனித உரிமைகள் சட்டம் நிலை நிறுத்துகின்றது. சுனாமியைத் தொடர்ந்து அவசரகால சுகாதார பராமரிப்பைப் பெறும் பர்மிய புலம் பெயர்ந்தோரின் திறமையைப் பொறுத்தமட்டில் தாய்லாந்து அரச தரப்பு கையொப்பமிட்டுள்ள சமூக பொருளா-தார கலாசார உரிமைகளுக்கான சர்வ-தேச ஒப்பந்தத்தின் 12ம் சரத்தானது[1] உயர்மட்ட உடல் உள ஆரோக்கியத்தின் உயர் மட்ட அடைவுப் பிரமாணத்துக்கான ஒவ்வொருவரினது உரிமையையும் மதிக்கிறது.

மனித நேய உதவிகள் மறுக்கப்பட்டதற்குப் புறம்பே பர்மிய புலம்பெயர் தொழிலாளிகள் சுனாமிக்குப் பின்னான காலத்தில் வேறு பாரபட்சத்துக்கும் துஷ்பிரயோகத்துக்கும் முகம் கொடுக்கின்றனர்.

*நூற்றுக்கணக்கான சிலவேளை ஆயிரக்கணக்காகக்கூட இருக்கக்கூடிய பர்மிய புலம்பெயர்ந்தோர், பர்மாவுக்கு அதிகாரிகளால் பலோத்காரமாகத் திருப்பியனுப்பப்பட்டனர்.*

கரையோரங்களில் நாசப்படுத்தப்பட்டதுடன் அலைகளுக்கு பறிகொடுத்த வேலை அனுபதிப்பத்திரங்களை மாற்றி எடுக்க முடியாத சிக்கல் உருவாகி உள்ள நிலையில் இத் தொழிலாளிகள் மிகச் சாதாரணமாகவே அவர்களது தொழில் கொள்வோர்களால் கைவிடப்பட்டனர்.

புலம் பெயர்ந்தோரால் செய்யப்படும் குற்றச் செயல்கள் பல நூறு பர்மிய புலம்பெயர்ந்தோரை வகைதொகையற்று கைது செய்யவும் தடுத்து வைக்கவும் தாய் அதிகாரிகளை தள்ளியுள்ளதென தொடர்பூடகங்கள் கூறுகின்றன. நூற்றுக்கணக்கான சிலவேளை ஆயிரக்கணக்கான பர்மிய தொழிலா-ளர்கள் மிகக்கடுமையான மனித உரிமை மீறல்களின் அபாயம்மிக்க பர்மாவுக்கு தாய் அதிகாரிகளால் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்களது சட்டபூர்வமற்ற குடியியல் அந்தஸ்து என்பது வேலை கொள்வோராலோ அல்லது சட்டத்தை அமுலாக்கும் உள்; ர் அதிகாரிகளினாலோ செய்யப்படும் துஸ்பிரயோகங்களை முறையிடுவதற்கு ஒரு புலம் பெயர்ந்தவரையாவது துணியச் செய்வதில்லை.

தனது எல்லைகளை கட்டுப்படுத்தும் சகல சுதந்திரமும் தாய்லாந்தின் தனிப்பட்ட உரிமையாக இருக்கும் அதேவேளை தொழிலின் நிமித்தம் தங்கியிருக்கும் சட்டபூர்வ உரிமையில் குறைவுபட்டுள்ள புலம்பெயர்ந்தோர் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. கண்மூடித்தனமான கைதுகள் தடுத்துவைப்பு, மிகமோசமான சூழ்நிலைகளில் தடுத்து வைத்தல் என்பன சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வ-தேச ஒப்பந்தத்தின் உறுப்பு 9(1) க்கும் 10க்கும் எதிரான மீறல்களாகும்.[2] இவ்ஒப்பந்தத்திலும்கூட தாய்லாந்து கையொப்பம் இட்டுள்ளது. அதேவேளை அதற்கு சம-மாகவும் அடிப்படையாகவும், சித்திரவதை உள்ளடங்கலாக பாரிய மனித உரிமை மீறல்களுக்கு உட்பட்டு ஒருவர் துன்புறும் சாத்தியம் உள்ள ஒரு சூழ்நிலைக்கு எவரையும் திருப்பி அனுப்பாதிருக்கும் கடப்பாட்டை சர்வதேச வழக்காற்று சட்டத்திற்கு கீழ் தாய்லாந்து அரசு கொண்டுள்ளது.

### புலம் பெயர்ந்த அனைவரது மனித உரி மைகளையும் பாதுகாத்தல்

உள்ளூர் அதிகாரிகளாலும் வேலை கொள்வோராலும் புலம்பெயர் தொழிலா-ளிகள் இழிவுபடுத்தும் வகையில் நடத்தப்படுதல் என்பது, குறிக்கப்பட்ட பிராந்தியத்தில் மாத்திரம் பரவியுள்ள ஒருவகை வியாதியாகத்தென்படும் இந்தப் பிரச்சனையை இன்று பொது உல-கின் கண்களுக்கு சுனாமி நெருக்கடி கொண்டு வந்துள்ளது. ஒட்டுமொத்தமாக உள்ளூர், தேசிய மட்ட அதிகாரிக-ளால் எவ்வாறு மனிதநேயப் பணி கள் முன்னெடுக்கப்படுகின்றன என்ற வினாக்களையும் எழுப்பியுள்ளன. இலங்கையிலிருந்து இந்தியா தாய்லாந்துக்கூடாக இந்தோனேசியா வரையும் பாரிய தேவைகளை எதிர் நோக்கும் அதேவேளை இலகுவாய் அபாயத்துக்குட்படு நிலையிலுள்ள குழுக்களுக்கு மனித நேய உதவிகளை விநியோகிப்பதில் இளைக்கப்படும் பாரபட்சம் பற்றி அறிக்கைகள் பரவலாக வந்துள்ளன.[3]

புலம் பெயர்ந்தோர் சட்டபூர்வமற்ற பிரவேசச் சூழ்நிலையில் உள்ளவேளை, இன்னும் சிறப்பாக கூறுவதாயின் முறையற்றவகையில் புலம் பெயர்ந்தோர் பெண்கள், சிறுவர்கள், முதியோர் அல்லது நோயுற்றோராக இருப்பார்களாயின் இலகுவாக அபாயத்தை தழுவும் அவர்களது நிலை இன்னும் மோசமாகிறது. உலகெங்கிலுமுள்ள நாடுகள் வழமையாக முறையற்ற வகையில் புலம் பெயர்ந்தோரின் மட்டில் பாரபட்சமான கொள்கைகளையே பிரயோகிக்கின்றன. மிகச்சில நாடுகளே தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முறையற்றவகை புலம்பெயர் சூழ்நிலைக்குட்பட்வர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் சட்டபூர்வமான தேவைப்பாடுகளையோ அல்லது நிர்வாகக் கொள்கைகளையோ கொண்டுள்ளன.

குறிப்பாகக் கூறுவதாயின் 29 நாடுகள் மாத்திமே புலம்பெயர்ந்தோரின் புலம்பெயர் அந்தஸ்தை கருதாது அவர்களது அடிப்படை மனித உரிமைகளை பாதுகாக்க விஷேடமாக உருவாக்கப்பட்டுள்ள சர்வ-தேச மனித உரிமைச் சாசனம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளன. இது எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களது குடும்ப உறுப்பினர்களதும் உரிமைகளை பாதுகாப்பதற்கான ஐ.நா. வின் சாசனமாகும்.[4] இச்சாசனமும் புலம் பெயர்ந்தோருக்கான அடிப்படை மனித உரிமைகள் ஒப்பந்தங்களும், புலம்பெயர்ந்தோரின் உரிமைகளை பாதுகாக்கும் முக்கிய கருவிகளாகும். இன்று அவை, புலம்பெயர்வு பற்றிய ஏராள-மான கருத்தாடல்களை உருவாக்கியுள்ள உள்வரவுக் கட்டுப்பாடுகள், உள்வாங்கிக்கொள்ளல் என்பனவற்றில் மாத்திரம் அழுத்தத்தை கொடுக்கவில்லை என்பதுவும் கண்கூடு.

மனிதநேயப் பணிகளின் மட்டில் புலம் பெயர்ந்தோர் மறக்கப்படமாட்டார்கள் அல்லது பாரபட்சத்துக்குள்ளாக மாட்டார்கள் அல்லது துஸ்பிரயோகத்தை எதிர்கொள்ள மாட்டார்கள் என்பதை உறுதிசெய்யும் முக்கிய அம்சமாக மனித உரிமை-களை தம்மகத்தே கொண்டுள்ள எல்லா புலம்பெயர்ந்தோரும் மனித உயிர்களே என்ற உயர் கணிப்பு உள்ளது.

***பியா ஓப்ரோய் ஜெனிவாவை மையமாகக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் அகதிகள் அதிகாரியாவார். இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் கண்டிப்பாக சர்வதேச மன்னிப்புச் சபையின் கருத்தை பிரதிபலிக்க வேண்டுமென்பதல்ல. மின்னஞ்சல்: POberoi@amnesty.org***

*www.saydanatsunami.org அல்லது tagmigrants@yahoo.com எனும் இணையத்தனத்தில் சுனாமியால் பாதிப்புற்ற பர்மிய புலம்பெயர் தொழிலாழிகளில் அக்கறை கொண்ட சமூக மைய நிறுவ-னமான சுனாமி அக்ஸன் குருப் பற்றி காணலாம்*

1. www.unhcr.ch/html/menu3/b/a_cescr.htm
2. www.ohchr.org/english/law/ccpr.htm
3. See for example Human Rights Watch, 'End caste bias in tsunami relief', 14 January 2005 http://hrw.org/English/docs/2005/01/14/india10019.htm;Amnesty International, Indonesia-Human Rights are Paramount in the relief and reconstruction effort, 18 January 2005 http:// news.amnesty.org/index/ENGASA210032005
4. www.ilo.org/public/english/employment/skills/recomm/instr/un_9.htm

# இந்திய கருத்தரங்கு சுனாமி பதிலிறுப்பை மீளாய்வு செய்கிறது

அறிக்கை சமர்ப்பிப்போர் போலா பனர்ஜி, சப்யாசாச்சி பாசு ராய் சவுத்ரி

*கல்கத்தா ஆய்வு வட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட புத்திஜீவிகள் மனிதவுரிமை ஆர்வலர் ஆய்வு கட்டுரைத் தொகுப்பானது, சாதி சமய, பால் நிலை அடிப்படையில் பாரபட்சம் இன்றி உதவிகளை பெறுவதற்கான பாதிக்கப்பட்டவர்களது உரிமைகள் தமிழ்நாடு, அந்தமான் நிக்கோபார் தீவுகளில் முன்னெடுக்கப்பட்ட நிவாரண மற்றும் புனர்வாழ்வு முயற்சிகளில் மதிக்கப்பட்ட அளவை கணிப்பிட்டது.*

## தமிழ் நாடு

கருத்தரங்கில்[1] பேசியோர் இராட்சத அலைகளால் பாதிப்புற்ற 2.73 மில்லியன் மக்களின் தேவைகளுக்கு இந்திய மத்திய அரசினதும் தமிழ்நாடு மானில அரசினதும் முதல் பதிலிறுப்பு தாமதமாக இருந்தது என குறிப்பிட்டனர். ஆரம்ப மீட்பு மற்றும் நிவாரண பணிகள் சிவில் சமூக அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டதனால், அரசு திசைகோட்படுத்திய நிவாரணப் பணியானது, குழுக்களது நிலைமை ஏனையவர்களை விட மிக மோசமாக இருந்ததை கவனத்திலெடுக்கத் தவறிவிட்டது. அரச நிகழ்ச்சித்திட்டங்களாவன நிவாரண மற்றும் புணர்வாழ்வு தேவைகள் பற்றி ஏற்கனவே கொண்டுள்ள முன்சார்பு எண்ணங்களால் வடிவமைக்கப்பட்டிருந்தன. மிகவும் அபாயத்துக்குட்படு நிலைக்குட்பட்ட தரப்பாருக்கு உணவளிக்கும் அவசர தேவைகளுக்கு மத்தியில், உதவி நிறுவனங்கள் நிரந்தரமற்ற அரச கொள்கைகளால் உருவான குழப்பத்துக்குள் மூழ்கடிக்கப்பட்டன. இதனால், சுனாமியால் மோசமாக பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள், தீண்டத்தகாதவர்கள் என அழைக்கப்படும் தலித்துக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையினர், பாரபட்சத்துக்குட்பட்டவர்களது தேவைகள் இன்றும் பூர்த்தியாக்கப்படவில்லை.

ஏனைய பாதிப்புற்றவர்களைவிட மீனவ சமூகங்கள் உரிய விகிதாசாரத்துக்குப் புறம்பான அளவில் உதவிகளை பெற்றிருந்த போதிலும், தமழ்நாட்டில் மூன்றில் ஒரு மடங்கு மீனவர்களே கடலுக்கு மீன்பிடிக்க திரும்பியிருந்தனர். மீன்பிடி சமூகங்களின் புனர்வாழ்வு ஒரு குறுகியகால பார்வையிலிருந்தே கவனத்திற் கொள்ளப்படுகின்றது. மீன்பிடிச் சமூகங்களுக்கு வழங்கப்படும் உதவிகளில் ஐந்தில் நான்கு கடன் அடிப்படையிலே உள்ளன. தமது உடமைகளில் அனேகமானவற்றை தாம் இளந்துள்ளதால், மீனவர்கள் இக்கடனை திருப்பி செலுத்த முடியாதவர்களாகவே இருக்கப் போவதாக பயப்படுகின்றனர். மண்சேகரிப்பு நடவடிக்கைகளில் இடுபட்டுள்ள சுரங்கக் கூட்டுத்தாபனங்கள், தமது செயற்பாடுகள் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தப்படாதது போன்றும் தாம் தொழிற்படும் பிரதேசங்களில் எவ்வித இடம்பெயர்வுகள் இடம்பெறாதமாதிரியும் நடந்து கொள்கின்றன. தொடர்ந்தும் மணல் அகழ்வதற்கு இக் கம்பனிகளுக்கு அனுமதியளிக்காமல் விட்டிருந்தால் தமது நிலங்கள் பல பாதுகாக்கப்பட்டிருக்குமென்று பலர் கூறுகின்றனர். சதுப்பு நிலத் தாவரங்களின் அழிவுகூட மண் அரிப்பை அதிகரிக்கச் செய்துள்ளது.

நிதிக்கு கட்டுப்பாடு இல்லாத போதிலும்கூட, பொறுப்புக் கூறுதல் மிகவும் மோசமானதாகவே உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி, மானில அரசுக்கும் பிரதமர் நிவாரணநிதிக்கும், மானில முதல்வர் நிவாரண நிதிக்கும் கிடைக்கும் வண்ணம் ஏராளமான வளங்களை அளித்திருந்தது. அரச நிறுவனங்களாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் கையாளப்படும் நிதியின் பயன்பாடு பற்றிய ஒழிவு மறைவற்ற வெளிப்பாட்டிற்கான கோரிக்கை பெருமளவில் பெருகிக்கொண்டு வருகிறது.

நிவாரணப்பணிகளின் நடவடிக்கைகள் பலதடவைகளில் உணர்தகு திறன் அற்றவை:

- லொறிக்கணக்கில் கம்பளங்கள் வட இந்தியாவில் இருந்து வந்து இறங்கின. ஆனால் சூடும் வெப்பமுள்ள தமிழ்நாட்டில் அவையால் எவ்வித பயனுமிருக்கவில்லை.
- பாவித்த தரம்குறைந்த உடைகள் நன்கொடையாக வழங்கப்பட்டபோது மீன்பிடிச்சமூகங்கள் கோபத்துடன் நிராகரித்தன.
- மாவட்ட அலுவலகங்களும் உள்ளுர் பஞ்சாயத்தும் பெண்களை ஓரங்கட்டி வைத்தனர். பெண் சிவில் பணியாளர்கள், நிவாரணப்பணிகளுக்கு உதவிட ஈடுபடுத்தப்பவில்லை பெண்கள் பிள்ளைகளின் தேவைகளின் மட்டில் ஆண் பணியாளர்கள் உணர்தகு


Peter Hovring/DanChurchAid/ACT International

இந்தியா, இனித்தகரை கடற்கரையில் தற்காலிக வசிப்பிடங்கள்

திறனை கொண்டிருக்கவில்லை. உதாரணமாக பெண்களுக்கு சாறிகள் வழங்கப்பட்டன. ஆனால் உள்ளாடைகள் வழங்கப்படவில்லை.

- நிவாரணப் பணம் ஆண் தலைமை தாங்கும் குடும்பத்துக்கே கொடுக்கப்பட்டது. இழந்த குடும்ப உறுப்பினர்களுக்கான நட்டஈடு ஆண்களுக்கே கொடுக்கப்பட்டது. அதுவும் பிழையான வழிகளில் அவை செலவளிக்கப்பாடாதிருப்பதை உறுதிப்படுத்தாமல் கொடுக்கப்பட்டது.
- படப்பிடிப்பாளர்கள் ஆதரவிழந்த உதவி இல்லாத பெண்களை படம் பிடிக்க ஒருவர் ஒருவருடன் அடிபட்டுக்கொண்டனர்.
- சோற்றை பிரதான உணவாக கொள்பவர்களுக்கு சப்பாத்தி கொடுக்கப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு அமைப்பதையும், ஜீவனோபாயத்துடன் தொடர்புட்ட பொருட்களை வழங்குவதையும், சுனாமிக்கு முன்னர் கரையோர ஒழுங்கு விதிகளை அமுலாக்கம் செல்வதில்இந்திய அரசு கொண்டிருந்த பேராவல் தடுத்ததினால், போதுமான அளவு நிதிவளத்துடன் இருந்த அனேக உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் அந்நிதியை பயன்படுத்த முடியாது திண்டாடுகின்றன. கடற்கரையில் இருந்து 200 மீற்றருக்கப்பால் மக்களை மீள் குடியேற்றும் தீர்மானம் வாதப்பிரதிவாதத்துக்குட்பட்டது. கரையோர ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துதல் பற்றிய ஒழிவு மறைவற்ற தன்மையில் குறைபாடு உள்ளது. அனேகர் கரையோர தடையின் சட்டபூர்வ தன்மைபற்றி கேள்வி எழுப்பும் அதேவேளை கரையோர பிரதேசங்களின் கட்டுப்பாட்டினை பல்தேசிய கம்பனிகள் பெறவதற்கான கதவுகளை கட்டாய மீள்குடியேற்றம் திறந்து விடுமோ என்றும் பயப்படுகின்றனர்.

அரச திணைக்களங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு அனைத்தையும் உள்வாங்கிய புனர்வாழ்வு கொள்கையும் இல்லாமல் இருந்து வருகின்றது. உதவிபெறுவதற்கான உரித்துடமை அத்தாட்சியை வழங்குவது பாதிக்கப்பட்டவர்களின் மீது சுமையாக விழுந்துள்ளது. அரசியல் கட்சிகளும் மகளிர் அமைப்புக்களும் சுனாமி நிவாரண செயல்பாடுகளில் பெண்கள்மீது காட்டப்படும் பாரபட்சம் போன்ற பிரச்சனைகளை கண்டும் காணாதது போல் இருக்கும் நிலை நிலவுகின்றது. நிவாரணப்பணிகளில் முஸ்லிம் அமைப்புக்கள் எடுத்த பங்கு கவனத்தில் கொள்ளப்படவில்லை. சிவில் சமூக அமைப்புக்களுக்கு அரசு செவிமடுக்கின்ற அதேவேளை அவர்களது ஆலோசனைகளை ஒரு போதும் ஏற்றுக்கொள்வதில்லை.

அரச அதிகாரிகள் தமது பெயரை தொடர்பூடகங்களில் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் தேவையினால் உந்தப்படுமாற்போலவும், எதிர்மறை விமர்சன நிலையை அங்கு தவிர்ப்பதற்கு கூடிய கவனம் செலுத்துவது போலவும் தென்படுகின்றது. ஏராளமான அரசசார்பற்ற நிறுவனங்கள் தமக்கு சாதகமான தொடர்பூடாக பிரபல்யத்தை தம்மீது ஏற்படுத்துவதில் ஆர்வமாய் இருப்பது போன்றும் உள்ளது. ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்தவர்களில் ஒருவர் பேரழிவினால் மூன்று வகையானவர்கள் பலன் பெற்றுள்ளார்கள் என குறிப்பிட்டார். முதலாவது வகையினர் தங்கக உணவக உரிமையாளர்கள், இரண்டாம் வகையினர் வாடகை வாகன கம்பனிகள், மூன்றாம் வகையினர் பேரழிவுச் சுறறுலா வழிகாட்டிகளாக செயல்பட்டு பணமீட்டிய மனச்சாட்சியே இல்லாத சில உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள்.

யார் உதவி அளிப்பார்கள் யார் அளிக்கமாட்டார்கள் என அரசு இன்றும் உறுதியாய் தீர்மானிக்க முற்படுகிறது. சிவில் சமூக நிறுவனங்கள் தமது பங்கேற்பை இன்னும் நீட்டலாம். இந்தி மத்தியதர வர்க்கத்தினரும், இந்தியாவில் வாழாத இந்தியர்களும் குறிப்பிடப்படும்படியான வளங்களை வழங்கி உள்ளனர். ஆனால் சிவில் சமூகத்தை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் அரசு இன்னும் அவ்வாறு செயல்படவில்லை.

### அந்தமான் நிக்கோபாரின் உதவிகளை வடிவமைப்பதில் உபகண்ட மனநிலை.

அந்தமான் நிக்கோபார், இந்திய பெருகுலத்திலிருந்து 1200 கி.மீ. கிழக்காக வடக்கிலிருந்து தெற்காக பரந்து 700 கி.மீ தூரத்திற்கு வியாபித்திருக்கும் ஒரு தீவுக்கூட்டமாகும். சுமாத்திராவுக்கு சமீபமாக, இந்திய அதிகார பீடத்தால் உட்பிரவேசம் கடுமையாக கட்டுப் படுத்தப்படும் நிக்கோபார், சுனாமியால் மிகவும் கடுமையாக பாதிப்புற்றுள்ளதுடன் 3000 ஆதிவாசிக் குடிகள் இறந்திருக்கக்கூடும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ள தீவுகளாகும். இத்தீவுகள் உள்ளூர் சனநாயக முறை, சட்டமியற்றும் கட்டமைப்பு போன்றவற்றில் குறைவாக உள்ளதுடன் பெருநிலப் பரப்பினரால் திணிக்கப்படும் பொருத்தமற்ற அபிவிருத்தித் திட்டங்களுக்குட்படும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளன. நுட்பமான கரையோர சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், உள்ளூர் பிரபல்யங்களாலும் இந்திய விமானப்படையாலும் கரையோரக் கட்டடங்களின் கட்டுமானத்தை தடைசெய்யும் ஒழுங்குவிதிகள் மீறப்படுவதினூடாகவும் இன்னுமதிகமாக மோசமாக்கப்பட்டுள்ளன. அரசியல் அமைப்புக்கள் சிவில் சமூகம் ஆகியவை அங்கு இல்லாததால், அதிகாரத் தரப்பாரது நிவாரணத் தேவைப்பாடுகளுக்கான பதிலிறுப்புக்கள் தவிர்க்க முடியாததாக இருந்தது. இறப்புக்களையும் சேதங்களையும் கணிப்பிட இந்திய அரசு ஐ.நாவையோ அல்லது சர்வதேச உதவிகளையோ அழைக்கவில்லை. நிவாரண பணிகளுக்கு வெளிநாட்டு நிதி உதவிகளைபெற இந்தியா மறுத்துவிட்டது. ஆனால் உள்ளூர் நிர்வாகத்துக்கு நிதியை அனுப்புவதற்கு இந்திய அரசசார்பற்ற நிறுவனங்களை ஊக்கப்படுத்தியது. ஐநாவின் சிறுவர் நிதியம் மாத்திரமே இங்கு பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு சர்வதேச நிறுவனமாகும். பிளேயர் இறங்கு துறையில் இறக்கும்போது தனது பொருட்களை கைப்பற்றியதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் முறையிட்டது. வெளிநாட்டு நிருபர்களையும் நிவாரண பணியாளர்களையும் பிளேயர் இறங்குதுறைக்குள் மாத்திரமே செயல்பட வரையறை செய்ததுடன் தீவுகளுக்குள் செல்வதற்கான அனுமதியை வழங்க மறுத்தது.

உள்ளூர் சமூகங்களுடனான கலந்தாலோசனை செய்தல் சிவில் நிர்வாகத்துடன் வினைத்திறன்மிக்க இணைவு என்பன இல்லாத நிலையில் நிவாரண புனர்வாழ்வு பணிகளை இந்திய பாதுகாப்பு படையே முன்னெடுக்கின்றது. இருந்தபோதிலும். உள்ளூர் மக்களின் கருத்துக்கள், தேவைகள் கவனத்திலெடுக்கப்படல் என்பதும், அவர்களது ஞானமும் அனுபவமும் மதிக்கப்படுதல் என்பதும் ஜீவதாரமானது. உதாரணமாக நிக்கோபார் தீவு மீனவர்கள் சுனாமிக்கு பின்னான காலப்பகுதியில் பெருநிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்ட, தமக்குப் பொருந்தாக மீன்பிடி உபகரணங்களை ஏற்க மறுத்துள்ளார்கள்.

பேரழிவின் விளைவாக தீவுகளில் உள்ள மீன்பிடிச் சமுதாயம் பெரும் பாதிப்புள்ளானதாக தெரிகிறது. சதுப்பு நிலக் காடுகள் வெட்ட வெளியாகியுள்ளன. பவழப்பாறைகளும் பாதிப்படைந்துள்ளன. தீவுகளின் மொத்த சனத்தொகையில் தற்போது 12% மாகவுள்ள பழங்குடி சமூகங்களுக்கும் வெளியாருக்குமிடையில் ஒரு பாரிய இனமுரண்பாடு ஏற்படும் அபாயமும் உள்ளது.

### கற்ற பாடங்கள்

நிவாரணப்பணிகளின் மட்டில் எதிரும் புதிருமாகவுள்ள அரசு, சிவில் சமூகம் மற்றும் ஏனைய சமூகங்களின் பாத்திரம் பற்றி மீளவும் சிந்திக்க வேண்டிய அவசர தேவையை சுனாமி கோடிட்டுக் காட்டி உள்ளது. ஆய்வுக் கட்டுரைகளின் முன்வைப்பு அரங்கத்திலிருந்து வெளிப்பட்ட பிரதானமான கொள்கைசார் பரிந்துரைகளாவன.

- நிவாரண நிறுவனங்களிடையே பலமான ஒருங்கிணைவும், பேரழிவின் தாக்கங்கள், பாதிப்புற்றோரின் தேவைகள் பற்றிய தகவல் பரிமாற்றமும் இருத்தல் வேண்டும்.
- பாதிப்புற்ற சமூகங்களுக்கான வினியோகத்தை மையமாகக்கொள்ளாமல் அவர்களது தேவைகளை மையமாகக் கொண்டு இயக்கப்படுவதாக நிவாரணம் அமையவேண்டும்.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் தமக்கு எத்தகைய நிவாரணம் பொருத்தமானது என்பதை தீர்மானிக்க வேண்டும். பஞ்சாத்துக்கள் பேரழிவுகளுக்கு பதிலிறுப்பதிலும் ஆயத்தம் செய்வதிலும் பெரிய பாத்திரத்தை வகிக்க வேண்டும்.
- நிவாரண புனருத்தாரன பணிகளின் சகல அம்சங்களிலும் பெண்களின் குரலுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.
- நிவாரண பணிகளில் சாதி, சமய, பால் நிலை. பொருளாதார அந்தஸ்து நிலை பாரபட்சங்கள் உரியமுறையில் கையாளப்படல் வேண்டும்.
- அந்தமான் நிக்கோபார் தீவுகளின் விசேட குணாதிசயங்கள் கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.
- பேரழிவுக்குப் பின்னான வளங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பது பற்றிய ஒழிவு மறைவற்ற தன்மையை அரச நிறுவனங்கள் வெளிப்படுத்த வேண்டும்.
- புனர்வாழ்வைத் திட்டமிடுபவர்கள் அரச நில கொள்கைகளையும் கிராம பொருளாதார முயற்சிகளையும் கண்காணிக்க வேண்டும்.

***போலா பானர்ஜி: FMR இன் ஆசிரியர் பிட ஆலோசகர் சபை உறுப்பினரும் மகாநிர்பான் கல்கத்தா ஆய்வு குழுவின் ஆய்வு ஒருங்கிணைப்பாளருமாவர் www.mcrg.ac.in மின் அஞ்சல் paula@mcrg.ac.in***

***சப்யாசாச்சி பாசு ராய் சௌத்ரி : MCRG இன் உறுப்பினரும், கொல்கொத்தா ரவீந்திர பாரதி பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான பீடத்தின் ஆசிரி யருமாவார். மின்னஞ்சல்: sabyasachi@mcrg.ac.in***

முன்வைப்பு அரங்கத்தின் முழு அறிக்கையும் பின்வரும் இணையத்தளத்தில் உள்ளன: www.mcrg.ac.in/tsunami.htm

1.முன்வைப்பு அரங்க பேச்சாரளர்கள்: காயத்ரி லூயில் (பீப்பிள் வோர்ச் - தமிழ்நாடு) பிம்லா சந்திரசேகர் (எக்தா சோஸ் சென் யோ-லிமன்- தமிழ்நாடு) K.M. பரிவேலன் (தமிழ்நாடு, சென்னை UNHCR அலுவலகத்தில் பணிபுரியும் மனித நேய ஆர்வலர்) பரத் குகா (ஊாடைன னை நேநன ஐளெவவைரவநஇ முழடமயவய றறற.உனைெ-னைெயை.ழசப) சமிர் ஆச்சார்யா (ஞழஉநைவல கழச யுனெயஅயெ யனெ ஷைழடியச நுஉழடழபல றறற. யனெயஅயெ.ழசப.ீ.டிழழம.ீ.ஞயநெ.ீ.ஸயநெவநஒவ.ாவஅ) சுபைர் பௌவ்மிக் (ஊசுப அநஅடிநசஇ யனெ மஉஊ நஜிடழலநந).

# தமிழ்நாட்டில் பலவீனமான, குழுக்களுக்கான ஒரு குரல்

மெகஸ் மார்ட்டின்

*இந்திய மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில், பலவீனமான அதேவேளை இலகுவாக அபாயத்துக்குட்படும் நிலையிலுள்ள அனேக மக்கள் சுனாமிக்குத் தமது வீடுகளையும், ஜீவனோபாயத்தையும் பாடசாலை செல்வதற்கான வசதிகளையும் இழந்தனர். ஏற்கனவே ஓரம்கட்டப்பட்டுள்ள இத்தகைய தரப்பினருக்குரிய உதவிகள் அவர்களது குறித்த தேவைகளின் மட்டில் உணர்தகு நிலை பொருந்தியதாக இருத்தல் வேண்டும்.*

மாரியம்மாள் வசித்த சிறிய கிரமத்தை சுனாமி தாக்கிய போது தனது கட்டுமரத்தையும் வலைகளையும் இழந்தாள். இருளா குலக் குடிகளைக் கொண்ட அவள் கிராமம், வங்காள விரிகுடாவுக்கும், 60 கி.மீ வடக்காக சென்னை தலைநகரில் அமைந்துள்ள புளிகட் வாவிக்கும் இடையில் உள்ள ஒரு சிறிய நிலப்பரப்பில் அமைந்துள்ளது. ஆதிவாசி, அல்லது தலித் அல்லது தீண்டத்தகாதோர் என அழைக்கப்பட்ட இந்த சமூகங்களில் இருந்து ஒருவர் கூட கடலுக்கருகாமையில் நெருங்க விடாமல், இவர்களது குலக்குடிகளைச் சேராத மீனவர்கள் பாரம்பரியமாக பாதுகாப்பாகக் கூடிக் கொண்டு தடுத்தனர். இரண்டு வருடங்களுக்கு முன் சில இருளா குலத்தவர் இந்தத் தடைக்கு சவால் விட்டு கடலுக்கு மீன்பிடிக்க சென்றவேளை ஏற்பட்ட மோதலானது இரு உயிர்களைக் காவுகொண்டது. "எமது ஆட்கள் தாம் கடலில் மீன்பிடிக்க மாட்டோம் என மாவட்ட அலுவலகர்களுக்கு உறுதிமொழி கொடுக்க வேண்டியிருந்தது" என மரியம்மாள் கூறினார்.

பெண்கள் இங்கு பாரம்பரியமாகக் கடலை அண்டிய நீரேரியில் இரால், வாவி நண்டு, சிறு மீன்கள், மட்டி மற்றும் கூனி போன்றவற்றை பிடிப்பது வழக்கம். மாரியம்மாளின் கிராமத்தில், 40 கட்டுமரங்கள் இருந்தன. அவற்றில் 28 பெண்களுக்குச் சொந்தமானவை. அனேகமாக அனைத்துக் கட்டுமரங்களும் சுனாமியில் அழிந்து சிதைந்து போயின.

மாரியம்மாள் இப்போது உள்ளூர் திருச்சபையொன்றில் தரும சேவையின்மூலம் வாழ்ந்தாலும் அவள் ஓர் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் சிறு சேமிப்புக் கடன் திட்ட குழுவொன்றில் செயலாளராக உள்ளதுடன் தனது கிராமத்தின் ஜீவனோபாயத்தை மீளவும் உயிரூட்டி உதவத்தக்க இதே மாதிரியான முன்னெடுப்புக்கள் இருக்க வேண்டுமெனவும் விரும்புகிறாள். அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் வழங்கும் உதவிகள் பெண்களின் தேவைகளை தீர்க்கவல்லது என்றும் அவள் நம்புகின்றாள். வழமையாகவே மீன்பிடி உபகரணங்களும் வலைகளும் ஆண்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றன. கடலை அண்டிய நீரேரியைக் கடந்து அரசசார்பற்ற நிறுவனங்கள் மீனவ சமூகங்களுக்கு உதவும் முகமாகச் செல்கின்றனர். ஆனால் அவர்கள் இந்தப் பழங்குடி மக்களின் குடியிருப்புக்களையோ அல்லது அருகில் உள்ள தலித் சமூகத்தையோ கடப்பதில்லை.

தமிழ்நாட்டின் கரையோரம் நெடுகிலும் உள்ள கடல் வளத்தை சில சாதிச் சமூகங்களின் ஆண்களும் பெண்களும் பயன்படுத்துதல் மறுக்கப்பட்டுள்ளது. தலித்துக்களினதும் பழங்குடி மக்களதும் பாத்திரமானது மீன்பிடிச் சமூகங்களின் மட்டில் உதவுவது மாத்திரமே. அவர்களது மீன்பிடி உபகரணங்களைத் துப்பரவு செய்து பராமரித்தல், மீன்களை ஏற்றுதல், கொண்டு செல்லுதல், விற்றல், மீன்பிடி வாடி கட்டுதல் மற்றும் அவற்றை சுத்தம் செய்தல் போன்ற வேலைகளையே செய்கின்றனர். அவர்களது ஜீவனோபாயத்தை உயிர்ப்பிக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள்கூட இன்றும் அவர்களுக்கு பாரம்பரியமாக ஒதுக்கப்பட்ட இழிவான பாத்திரங்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மாரியம்மாள் போன்ற பெண்கள், பெண்களாய் இருப்பதனாலும் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனாலும் இரட்டைப் பாரபட்சத்துக்கு முகம் கொடுக்கின்றனர்.

## வீதிகளில் வசித்தல்

சென்னையின் இயற்கைமிகு மரினா கடற்கரைக்கு இட்டுச் செல்லும் வீதியின் நடைபாதை ஒவ்வொரு நாளும் சூரிய அஸ்தமனத்தில் உயிர்பெறுகிறது. இரண்டு மின்விளக்குக் கம்பங்களுக்கிடையில் உள்ள நடைபாதையில் தனது குடும்பத்தின் திறந்தவெளி இல்லத்தில் இளம் கிறிஸ்ணமூர்த்தி தனது பாடப்புத்தகங்களை பரப்பி வைத்திருப்பதை ஒருவர் காணமுடி யும். கடந்த இரண்டு மாத காலமாக பட்டினபாக்கம் என்னுமிடத்தில் 500க்குமதிகமான குடும்பங்கள் சுனாமியில் இடம்பெயர்ந்து குடியிருப்புக்கள் இன்றி பரபரப்பான வீதிக்கருகில் வாழ்ந்தனர்.

> *குறைந்த பட்ச பெறுமானம் பற்றிய கோரிக்கைகூட உதாசீனம் செய்யப்பட்டுள்ளது.*

கடற்கரையில் அவர்களது வீட்டின் சிதைவுகளை காணலாம். தற்செயலாக சேதத்தை மதிப்பிட அதி காரிகள் வந்தால் வீட்டைக் காட்டுவதற்கு சில தடிகளும் கயிறுகளும் எல்லைகளாக போடப்பட்டுள்ளன. வீதியோர நடைபாதையில் வாழ்ந்தவர்களில் அரை வாசிக் குடும்பங்கள் 12 கி.மீக்கு அப்பால் உள்ள தற்காலிக இருப்பிடங்களுக்குச் சென்றபோதிலும் கிறிஸ்ணமூர்த்தியின் குடும்பம் தொடர்ந்து இவ்வீடுகளில் வாழவே விரும்பினர். கஸ்டமானாலும் அவன் படிப்பான் என்று நாம் உறுதியாகக் கூறுவோம் என்று கிறிஸ்ணமூர்த்தியின் தாயார் பானு கூறினார். தமக்கு முதலில் ஒரு தற்காலிக வீடும் பின்னர் ஒரு நிரந்தர வீடும் கிடைக்கும் என்று நம்புகின்றனர். புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெயர்ந்த சிறுவர்களின் கல்வித் தேவைகளைக் கவனத்தில் கொள்ளவில்லை. முறையாக மீள்குடியேற்றம் செய்யப்படாதவர்களது கல்விக்கான பரிகாரமாக மாற்று வழிகள், பாடசாலைகள், அதற்கான இடங்கள் பற்றி இப்போதுதான் கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

இரண்டு மாதத்துக்குப் பிறகு வீதிகளில் இருந்து அனேகமாக அனைத்துக் குடும்பங்களும் தொலைவில் தற்காலிக வதிவிடங்களுக்கு மாற்றப்பட்டன. இக்கட்டுரை எழுதப்படும் ஆனி மாதத்தின் ஆரம்பத்தில், அவர்கள் வெப்பத்தில், புழுக்கம் மிக்க மறைப்புக்களில் போதிய தண்ணீர் வசதியின்றி, மிகமோசமான மலசலகூட வசதிகளுடன் அங்கு வாழ்கின்றனர். கோடை மழை காலத்தில் முகாமில் வெள்ளம் பிடித்தது. இன்னுமொரு மாதத்தின்பின் பருவகால மழையில் இன்னுமதிகமான வெள்ளம் ஏற்படும். அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அவர்களை மீண்டும் அங்கிருந்து இன்னுமொரு நல்ல இடத்துக்கு நகர்த்தத் திட்டமிடுகின்றனர்.

## ஒரு குளிர்ச்சியான இடத்துக்கான தேடலில்

இந்தியாவின் தென்முனையில் உள்ள கன்னியாகுமாரி மாவட்டத்தின் முத்தம் எனும் கிராமத்தில், 4 பிள்ளைகளின் தாயான மேரி, அங்கு ஒரு உள்;ர் அரசசார்பற்ற நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 24 தற்காலிக இருப்பிடங்களில் ஒன்றில் வசிக்கிறார். கோடை அதிகரிக்க அதிகரிக்க வெப்பமும், புழுக்கமும் தற்காலிக வீட்டின் சௌகரியத்தை இல்லாமல் செய்கின்றன. மேரி தற்காலிக வீட்டுக்கு வெளியேயே தனது நேரத்தை செலவிடுகிறாள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று அனைவருமே இரவில் வீட்டுக்கு வெளியே திறந்தவெளியிலே உறங்குகிறோம் என மேரி கூறினார். மாலையிலும், இரவிலும் சரியான வெப்பம் என்பதனால் இவ்வீட்டில் இரவில் தங்கவைக்காது எனது கடைசி 2 வயது மகளை தெரிந்த அயலவர் வீட்டிலேயே தங்கவைக்கின்றேன் என்றும் கூறினார்.

பொதுவாக வேறு வேலை எதற்கும் செல்வதற்கு இயலாத நிலையில் ஆண்கள் சுற்றிக் கொண்டிருக்கும் வேளைகளில் மேரி வெளியில் தனது நேரத்தை செலவிடுவதற்கு விரும்புவதில்லை. தனிநபர்களின் அந்தரங்கத் தன்மை பாதுகாக்கமுடியாத ஒரு நிலை இருந்தபோதும் அது பற்றி அவள் முறையிடமுயல்வதில்லை. தினமும் தனது குழந்தையை அயலவர் வீட்டுக்கு எடுத்துச் செல்வது அவளுக்கு மிகவும் அவமானமான விடையம். இவற்றையெல்லாம்விட மோசமானது, இரவில் மிதமிஞ்சிய வெப்பமும் புழுக்கமும் உண்டாகின்ற வேளை, அவர்கள் பொது இடங்களில் நித்திரை செய்ய வேண்டி இருப்பதே. தார் பூசப்பட்ட தற்காலிக வீடுகள் வெப்பத்தை தொடர்ந்து தக்கவைப்பதுடன் மிகக் குறைவான காற்றோட்ட வசதிகளையும் கொண்டுள்ளன. பாரமற்ற கூரைத்தகடுகளைப் பறக்கவிடாமல் கூரை மீது போடப்பட்டுள்ள கறுப்பு பிளாஸ்டிக் தடுப்புக்கள், இன்னுமதிகமாக அவ்வீடுகளை சூடாக்குகின்றன. மிதமிஞ்சிய வெப்பநிலையின் நிமித்தம் பெண்கள் தமது சமையலைப் பொதுத் திறந்த வெளிகளிலோ அல்லது இன்னுமொருவரின் சமையலறையைப் பங்குபோட்டோ முடித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தற்காலிக வீடுகளை மிகவிரைவாக அமைக்கும்வேளை, குறிப்பாக பெண்கள் மீது தாக்கத்தைச் செலுத்தவல்ல, சௌகரியம் மற்றும் தனிமனித அந்தரங்கம் சார்ந்த ஆகக்குறைந்தளவுப் பிரமாணங்கள், கவனத்தில் எடுக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. பல நிறுவனங்கள் இத்தகைய வீடுகளுக்கு மின் விசிறிகளைத் தருவதாக வாக்குறுதி அளித்தன. ஆனால் இத்தகைய நெருக்கமான கட்டுமானங்களுக்குள் மின் விசிறிகள் வெப்பமான காற்றை மாத்திரமே தரக்கூடியவையாக இருக்கும்.

கட்டடப் பொருட்களை தெரிவதில் அரச ஒப்பந்தக்காரர்கள் சிலரின் முறைகளை பின்பற்றியது, தமது பிழை என்பதை இப்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் உணரத்தொடங்கி உள்ளன. "அவர்கள் எதை கூறினரோ அதையே செய்தோம்" "நாம் அதைத் திருத்த வேண்டும்" என "அக்ஸன் எய்ட் இந்தியா" எனும் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி கூறினார்.

இலகு கூரைத்தகடுகளை பெற நாம் கேரளாவின் அரன்குளம் என்னுமிடத்துக்கு தரைவழியில் 6 மணித்தியாளங்கள் செலவிட்டுச் செல்ல வேண்டியிருந்தது என சமூக கல்வியும் அபிவிருத்தியும் எனும் உள்ளூர் நிறுவனத்தின் இயக்குனர் கிறிற்றஸ் உபாலட் கூறினார். “தென்னோலை அல்லது பனை ஓலைகள் போன்ற உள்ளூர் மூலப்பொருட்களை வைத்து சிறு ஓலைக் கொட்டகைகளை அமைத்து உள்ளூர் வேலை வாய்ப்பை நாம் அதிகரித்திருக்கலாம் என நிறுவன பிரதிநிதிகள் கூறினர். அத்துடன் மாவட்ட அலுவலர்கள் பாரம்பரிய ஓலை வீட்டுக்கட்டமைப்புக்கள் ஏற்படுத்துவதை தடுத்ததாகவும், ஓருசில வருடங்களுக்கு முதல் ஓலைக் கொட்டகைகளில் ஏற்பட்ட தீ விபத்தில் ஏராளமான சிறுவர்கள் கொல்லப்பட்டது இன்னும் மாறாத மனக்காயங்களாக உள்ளமையே இதற்கு காரணம் என்றும் கூறினார்.

indiadisasters.org[1] எனும் இணையத்தளம் தற்காலிக வீடுகளை “அவண்” சூடாக்கி வெதுப்பிக்கு ஒப்பிட்டு கட்டுரை வடித்திருத்தது. இன்டபிரஸ் சேவிஸ் (IPS)[2] கூட இத் தற்காலிக கொட்டில்களை “சைளனா” சூடாக்கிக்கு ஒப்பிட்டு இப்பிரச்சனையை ஆவணப்படுத்தியிருந்தனர். வெப்பத்துக்குத் தாக்குப்பிடிக்கும் கலசங்கள், சிறந்த காற்றோட்ட நுட்ப சாதனங்கள் போன்ற சிறந்த தொழில் நுட்பத் தீர்வுகள் கிடைக்கக்கூடிய இக்காலப்பகுதியில் இத் தற்காலிக வீடுகளுக்குள் பெண்களுக்கான ஒரு தனி இடம் எனும் பிரச்சனை வினைத்திறனுடன் இன்றும் அணுகப்படாததாகவே உள்ளது. ஆக மிகவும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களே சமையல், குளியல், உடுப்பு சலவை செய்தல் போன்ற விடையங்களுக்கு பெண்களுக்குத் தனியான இடங்களை வழங்குகின்றன. ஒக்ஸ்பாம் நிறுவனம் குளிர்ச்சியான ஓலை வீடுகளை கூடலூரில் இத்தகைய செயற்பாடுகளுக்கென தனியான இடங்களை ஒதுக்கீடு செய்து கட்டிக் கொடுத்துள்ளது. கோடேய்ட் நிறுவன உதவியால் அமைக்கப்பட்ட வீடுகள் வயது வந்த பெண்களுக்கான பிரத்தியேக அறையை கொண்டதாக உள்ளது. பொருத்தப்பாடும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டுமாயின் வீடுகள் அமைக்கப்படும்போதே சௌகரியம் மற்றும் தனிமனித அந்தரங்கம் சார்ந்த தேவைப்பாடுகள்மீது ஆகக்குறைந்தளவிலேனும் கவனம் செலுத்தப்படுவதுடன் திட்டமிடலும் அவசியம்.

## முடிவுரை

பேரழிவுக்குப் பின்னான காலத்தில் சமூகக் கலாசார உடலியல்சார் காரணிகள், பெண்களையும் சிறுவர்களையும் குறிப்பாக வயது வந்த பெண்களையும், எதிர்மறைச் சுகாதாரப் பாதிப்புக்களுக்கும் வன்முறைக்கும் மிகமோசமான முறையில், அபாயத்துக்குட்படுபவர்களாக ஆக்கிவிடுகின்றன. போதுமான வீட்டு வசதி இன்மை இவர்களை இன்னும் அதிகமான அபாயத்துக்குட்படுபவர்களாக மாற்றி விடுகிறது. பாரம்பரியத் தென்னாசிய சமூகவியலில் பெண்கள் பாதுகாப்பான முறையில் உதவி-களைப் பெறவும் தமது தேவைகளை வெளியே தெரியப்படுத்தவும் இயலாதவர்களாக இருக்கலாம். சிறுவர்களுக்கு கல்வியை மறுதலித்தல் என்பது எதிர்-காலச் சந்ததியை இன்னுமதிகமாக அபாயத்துக்குட்படபவர்களாக மாற்றும். இத்தகைய பிரச்சனைகள் அனைத்தையும் கையாள்வதற்கு மேற்கொள்ளப்படும் பேரழிவுக்கான பதிலிறுப்பு அணுகுமுறையும், பால்நிலைத் தன்மையின் மட்டிலும் பெண்கள் சிறுவர்களின் குறிப்பிட்ட தேவை-களில் மட்டிலும் உணர்தகு தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும். உதவி வழங்கும் விடையங்களுடன் தொடர்புபட்டவர்கள் உள்ளூர் சூழ்நிலை மட்டில் தெளிவான புரிந்துணர்வை கொண்டிருப்பதுடன், சமூகத்தின் எல்லா தரப்பினரதும் குறிப்பான தேவைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியம்

***மக்ஸ் மாட்டின் (அகதிகள் கற்கை மையத்தின் முன்னால் மாணவர்) இவர் பெங்களுரைத் தளமாகக் கொண்டவர் www.indiadisasters.org மின் அஞ்சல் maxmartin@rediffmail.com***

1. www.indiadisasters.org
2. www.ips.org/

*இந்தியாவின் தென்முனை கன்யாக்குமரி மாவட்டத்தில் தற்காலிக வசிப்பிடங்கள்*



Max Martin

# பதிலிறுப்பின் வினைத்திறன்மிகு விளைவுத் தாக்கம்: பாதிப்புற்ற மக்களின் எண்ணங்கள்

அனிஸ்யா தோமஸ், விமலா இராமலிங்கம்

*"சுனாமிக்குப் பின்னான தமது நடவடிக்கைகளை தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் மீளாய்வு செய்யும்வேளை, ஒரு சில மீளாய்வுகளே பன்முகப் பாங்கான நிறுவனங்களை உள்வாங்குகின்றன. மறுமுனையில் மீட்பு மற்றும் நிவாரண உதவி-களைப் பெறுபவர்கள் பயன்பெறுபவர்களின் பார்வையைக் கணிப்பீடு செய்வது இன்னும் அரிதாகவே உள்ளது."*

பிரிட்ஸ் நிலையத்தால் சுனாமி பாதிப்புக்குட்பட்ட இலங்கை, இந்தியாவில் செய்யப்பட்ட அண்மைகால கணிப்பானது உதவி களின் வினைத்திறன்மிக்க விளைவுத் தாக்கம் பற்றிய பயன் பெறுபவர்களின் பார்வையை ஆராய்ந்தறிந்துள்ளது. இலங்கையில் பாதிப்புற்ற மக்கள் தாம் பெற்ற உதவி களின் மட்டில் கொண்டுள்ள பார்வைக் கோணங்களைக் காட்டிலும் இந்தியாவில் பாதிப்புற்ற மக்களின் பார்வைக்கோணங்கள் உதவிகளின் மட்டில் நேர்தன்மையுடன் இருப்பதாகவே ஆரம்பக் கணிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கையும் இந்தியாவும் உதவி பற்றிய வித்தியாசமான கதைகளைக் கொண்டிருந்தன. ஏற்கனவே தமது உள்ளூர் பங்காளி நிறுவனங்களையோ அல்லது நேரடியான செயல் திட்டத்திலோ ஈடுபட்டு பிரசன்னமாயிராத சர்வதேச மனித நேய நிறுவனங்களுக்கோ இந்தியா உத்தியோக பூர்வமாக தனது கதவை மூடியது. இந்திய மத்திய அரசு, மானில அரசுகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் இராணுவம் ஆகியவற்றின் நிவார ணப் பொருட்கள் யாவும் அரசினாலேயே ஒருங்கிணைக்கப்பட்டன. இலங்கையில் சர்வதேச, தேசிய, பிராந்திய, அரச சார்பற்ற நிறுவனங்களின் கைகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் இலகு பயன்பாட்டுப் பொருட்களாக கையளிக்கப்பட்டனர். (அரசியல் ரீதியில் உணர்தகு நிலை கூடிய வடகிழக்கு இதற்கு விதிவிலக்கு) ஏராள-மான பெரிய அனுபவம்மிக்க அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கேற்பிருந்த போதி லும் இலங்கையில் பாதிப்புற்ற மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் திருப்திகரமாக அமையவில்லை என்ற பார்வையே உள்ளது. இத்தகைய வித்தியாசமான பார்வைக் கோணங்களுக்குப் பின்னால் உள்ள சாத்தியமான காரணங்களை கணிப்பீட்டறிதலானது சில வினாக்களை எழுப்புகிறது. இந்தியாவில் காணப்படும் ஒருமுகப்படுத்தப்பட்ட இணைப்பு, ஒழுங்கமைப்பு மற்றும் இலங்கையில் காணப்படும் முறைசாரா இறுக்கமற்ற ஒழுங்கமைப்பு என இரு வேறுபட்ட அபிப்பிராயங்களின் மட்டில் உதவிகளின் வித்தியாசமான தாக்கத்திறன் எத்தகையது என்பதைப்பற்றியே அவ்வினாக்கள் எழுகின்றன.

கணிப்பீட்டில் கலந்து கொண்ட பதிலிறுப்பாளர்கள், ஒன்றில் சுனாமிக்குப் பின்னான உதவிகளை பெறுபவர்களாக அல்லது சுனாமியால் பாதிப்புற்று தமது குடும்ப உறுப்பினர்களை இழந்த வளர்ந்த குடும்ப உறுப்பினர்களாக இருந்தனர். பேரனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்களின் பல்வேறு தரப்பினரையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாகவும் பதிலிறுப்பாளர்கள் காணப்பட்டனர். இந்தியாவில் 12 மாவட்டங்களில் முதலில் 100 கிராமங்களில் இருந்து 800 பேரும் இலங்கையில் 97 கிராமங்களைச் சேர்ந்த 600 பேரும் கலந்து கொண்டிருந்தனர். அவர்களில் இந்தியாவில் 93% மானவர்களும் இலங்கையில் 58% மானவர்களும் மீன்பிடித்துறையை சார்ந்தவர்களாக இருந்தனர். ஒவ்வொரு பாதிப்புற்ற குடும்பத்திலும், ஒரு வழர்ந்த உறுப்பினர் பிரதானமான பதிலிறுப்பாளராக செயல்பட ஏனையவர்கள் அதற்கு பங்களிப்பு செய்ய ஊக்கப்படுத்தப்பட்டனர். இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளி லுமே பெரும்பான்மை பதிலிறுப்பாளர்கள் பெண்களாக இருந்தனர். திறந்த வினாக்கள் மூலமாக, பயிற்றப்பட்ட நேர்முகம் காண்பவர்களின் ஒரு குழுவால், உள்ளூர் மொழியில் நேர்முகம் காணலுக்கூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## முதல் 48 மணித்தியாலங்கள்

சுனாமி ஏற்பட்டு முதல் 48 மணித்தியாலங்களின்போது காணப்பட்ட விடயங்கள், பார்வைக் கோணங்கள் மற்றும் மனப்பதிவுகள் பற்றி நேர் முகம் காண்பவர்கள் முதலில் வினவினர். இந்தியாவில் 48% மான பதிலிறுப்பாளர்கள் மாத்திரமே தாம் மீட்புதவிகளை பெற்றதாக கூறினர். இலங்கையிலோ அது 31% மாக குறைந்து காணப்பட்டது. "இங்கு எம்மைத் தேடி ஒருவரும் வரவில்லை ....... நாங்கள் எல்லோருமே ஒருவருக்கொருவர் உதவி செய்யவோ அல்லது உடனடியாக எமது எதிர்வினையை வெளிப்படுத்தவோ முடியாதளவுக்கு பாரிய அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தோம்" என ஒரு இந்திய மீனவப் பெண் கூறினார். மீட்பு முயற்சிகளின் பயன் மற்றும் வினைத்திறன்கூட கேள்விக்குட்பட்டதே. "தனி நபர்களாக ஏராளமானோர் அயல் கிராமங்களில் இருந்து ஓடோடிவந்தனர். ஆனால் அவர்கள் பெரிதாக ஏதும் செய்ய முடியவில்லை" என இன்னுமொரு பதிலிறுப்பாளர் கூறி-னார். மீட்பு முயற்சிகளிலும் உடனடி நிவாரணம் வழங்கியதிலும் அதிகம் பங்களிப்பு செய்தவர்கள் அயலவர்களும் பயிற்சி பெறாத உள்ளூர் தன்னார்வத் தொண்டர்களுமே என அறிக்கைகளும் கள நேர்முகம் காணல்களும் வெளிப்படுத்துகின்றன.

முதல் 48 மணித்தியாலத்துக்குள் கிடைத்த உதவிகளின் வகைகள் சார் பான பதிலிறுப்புக்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் மிகக் குறிப்பான வித்தியாசங்கள் இருப்பதை காட்டுகின்றன. கணிப்பில் குறிப்பிட்ட மீட்பு, இறந்தவர்களை இனங்கண்டு புதைத்தல், கழிவுகளை சுத்தம் செய்தல், மருத்துவ சேவை, பாதுகாப்பான இடங்களின் இருத்துதல் உள்ளடங்கலான 11 வகை உதவி கள் சார்பாக ஒப்பீட்டில் இலங்கையுடன் நோக்குகையில் தாம் பெற்றிருந்ததாகவே பெரும்பாலான இந்திய மக்கள் கூறினர். இந்தியாவில் 49% மானவர்களுக்கு முதல் இரு நாட்களுக்குள்ளும் ஏதோ ஒரு வகையில் மீள் தங்குமிட வசதிகள் அமைப்பதற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையிலோ அதுவும் மிகவும் பாதிக்கப்பட்ட நாட்டில் 3% மாத்திரம் காணப்பட்டது. குடிநீர் விநியோகத்தின் மட்டில் 15% மாக உள்ள இலங்கையுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் 35% மானவர்கள் பயன் அடைந்துள்ளனர். இந்தியாவில் 66% பதிலிறுப்பாளர்கள் அவசரகால மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இலங்கையிலோ 33% மானவர்களே பெற்றுள்ளனர்.



Peter Høvring/DanChurchAid/ACT International

வெவ்வேறு வகையான உதவிகள் சென்றடைந்த வேகத்தில் முரண்பாடுகளும் வித்தியாசங்களும் இருந்தன. இந்தியாவில் 15% மானவர்களும் இலங்கையில் 8% மானவர்களும் மாத்திரமே தமது காணாமற்போன உறவினர்களை தேடும் முகமாக சிதைவுகளை அகற்றும் துப்பரவு பணிகள் இடம்பெற்றதாக கூறினர். மறுதலை யாக நோக்கின், உணவு இந்தியாவில் 90% மானவர்களையும் 78% மானவர்களை இலங்கையிலும் 48 மணித்தியாலத்துக்குள் சென்றடைந்துள்ளது. உண்மையில், சில தருணங்களில் மிதமிஞ்சிய உணவுகள் சென்றடைந்ததுமுண்டு. ஒரு இந்திய பதிலிறுப்பாளர் "அனைத்து வகை சமைத்த உணவுகளும் எம்மை வந்தடைந்ததுடன் அவை மிதமிஞ்சியும் காணப்பட்டன" எனக் கூறினார்.

ஆரம்ப வழங்குனர்களின் விபரக்குறிப்புக்களில் ஒரு தத்ரூபமான வேறுபாடு இருந்தது. முதல் 48 மணித்தியாலங்களில் கிட்டத்தட்ட 36% மான இந்திய பதிலிறுப்பாளர்களுக்கு உள்ளூர் அரச சார்பற்ற இயக்கத்தின் ஏதோ வகையான உதவிகள் கிடைத்துள்ளதுடன் இலங்கையிலோ 4% மானவர்களுக்கே கிடைத்துள்ளன என்பதை பதிலிறுப்பவர்களினூடாக அறியப்பட்டது. இந்தியாவில் உள்ளூர் அரச நிர்வாகம் குறிப்பாக தமிழ் நாட்டில் தமது கொள்தகு திறனுக்கு மேலாக செயற்பட்டனர். "நாமோ அல்லது மாவட்ட நிர்வாக அலுவலகர்களோ நித்திரை செய்யவில்லை" என உயிர்பிழைத்தோரில் ஒருவர் குறிப்பிட்டது இதற்கு உதாரணம். இந்தியாவில் அரைவாசிக்குமதிகமான பதிலிறுப்பாளர்கள், தாம் அரச சார்பற்ற நிறுவனங்களாலும், சமூக நிறுவனங்களாலும் 12% ஆயுதப்படைகளாலும் உதவியளிக்கப்பட்டதாகக் கூறினர். இலங்கையிலோ ஆயுதப்படைகள் பதிலிறுப்பாளர்களில் 39%தினருக்கு உதவிவழங்கியுள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்கள் வழங்கிய உதவிகளை 39% மான பதிலிறுப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இலங்கை அரசின் உதவிகளை 4% மான பதிலிறுப்பாளர்களே உறுதிப்படுத்தியுள்ளனர். 'இவையெல்லாம் இடம்பெற்றபோது அரசு எங்கே போயிருந்தது? அனைத்துமே தாறுமாறு' என உயிர்பிழைத்தோர் கருத்துத்தெரிவித்தனர்.

## நீண்டகால உதவி

நீண்டகால அடிப்படையில் உதவி நாம் மேலதிகமாக முதல் 60 நாட்களுக்கிடையிலான நிவாரண வேலைத்திட்டங்கள் பற்றி வாய்மொழிக் கருத்துக்களைக்கேட்டோம். இலங்கை இந்தியா இரண்டிலுமே,நேர்முகம் காணப்பட்ட அரைவாசிப்பேர் அணவு வினியோகம் சராசரி தரத்துக்கு மேலாக இருந்ததாகவும், அண்ணளவாக 40%மானவர்கள் தாம் உணவை பெறும் தேவை ஏற்பட்டதன் நிமித்தமும் உணவு பகிரப்பட்ட விதத்திலும் அவமான உணர்வுக்குட்பட்டதாகக் கூறினர். 'சிலவே ளைகளில் உணவு பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் ஒருங்கமைக்கப்பட்ட முறைகளி னால் தாம் பிச்சைக்காரர் ஆகிவிட்ட உணர்வு ஏற்பட்டதென ஒரு பதிலிறுப்பாளர் கூறினார். இந்தியாவில் நிவாரணம் சார்ந்த அனைத்து அம்சங்களிலும் வழிவடத்தும் பங்கினை அரசு எடுக்க இலங்கையிலோ அதனை சர்வதேச நிறுவனங்கள் செய்தன. இந்தியாவில் தனியார் துறை குறிப்படத்தக்க வழமைக்குமாறான உரியபாத்திரம் தாங்கி செயல்பட்டது போன்று தென்படுகிறது.

இங்கு முன்வைக்கப்பட்ட ஆரம்ப முடிவுகள் பெற்ற பதிலிறுப்புக்களைக் காட்டிலும் மேலதிகமான வினாக்களையே தொடுத்துள்ளன. இருந்தபோதிலும் அவை உப விளைவுத்தாக்கம் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களில் முன்னேற்றம் என்பனவற்றின் மட்டில் கணிப்பீடுகளில் பாதிப்புற்றவர்களும் உள்வாங்கப்படவேண்டிய தெவையை அழுத்தி கோடிட்டுக்காட்டி உள்ளன.

*அனிஸ்யா தோமஸ் பிறிட்ஸ் நிலையத்தின் நிர்வாக இயக்குனர் ஆவார்.(www.fritzinstitute.org) மின் அஞ்சல்: anisya.thomas@fritzinstitute.org*

*விமலா இராமலிங்கம் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் நாயகமாவார். மின் அஞ்சல்: vimalaramalingam@yahoo.com*

*இந்தியா, இனித்தகரையில் சுனாமி, ஓலைக் குடிசைகளை அடித்துச் சென்றதுடன் செங்கல்லால் அல்லது காங்கிறிட்டால் கட்டப்பட்ட வீடுகளையும் பலமாகச் சேதப்படுத்தி யுள்ளது.*



# தொலைந்த அப்பாவித்தனம் மாலைதீவில் சுனாமி

ஹிடி பிரவுண்

*2004 மார்கழிச் சுனாமி வெளி உலகின் விழிகளுக்குள் தேனிலவின் அமைவிடம் என்ற மாலைதீவின் தோற்றப்பாட்டை பேரழிவு வலயம் என்ற மன உருவாக ஓர் இரவுக்குள்ளேயே செருகியது.*

இந்த 1200 பவளத் தீவுகளைக் கொண்ட தீவுக் கூட்டம் உலகிலேயே 2.4 மீற்றருக்கும் தாழ்நிலையில் உள்ள எந்த ஒரு நாட்டையும்விட உயர் தாழ்நிலை கொண்டவை என்றால் மிகையாகாது. பேரழிவில் குறிப்பிடப்படும்படியாக இறந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் அலைகள் தேசிய அளவில் பாரிய அழிவுகளை உருவாக்கி உள்ளன:

- 108 பேர் ஒன்றில் இறந்தோ அல்லது காணாமலோ போயுள்ளனர்.
- குடியிருப்புக்களைக் கொண்ட 199 தீவுகளில் 13 இலிருந்து முற்றுமுழுதாக அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.
- பெறுமதிமிக்க மேல்மண் கடலுக்குள் கழுவப்பட்டு போய்விட்டது.
- 100 விகிதத்திற்கும் அதிகமான தீவுகள் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொடர்பாடல் ஆகிய துறைகளின் பிரதானமான உள்ளக கட்டுமானங்களை இழந்துள்ளன.
- 10 விகிதத்துக்கும் அதிகமான வீட்டுக் கழஞ்சியங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் ஏராளமானவை பழுதடைந்துள்ளன.
- 15,000 தொடக்கம் 30,000 க்கும் இடைப்பட்ட அதாவது 5% தொடக்கம் 10% மான மக்கள் ஆரம்பத்தில் இடம்பெயர்ந்தனர்.
- சனத்தொகையில் மூன்றில் ஒன்றின் வாழ்க்கையிலோ அல்லது வாழ்வாதாரங்களிலோ பாரதூரமான இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

பங்குனி நடுப்பகுதிகளில் அரசின் உள்ளக இடம் இடம்பெயர்ந்தோர் பிரிவு, ஆகக்குறைந்தது 12,000 உள்ளக இடம்பெயர்ந்தோர் நாட்டில் நீண்ட கால அடிப்படையில் இருந்ததாக கணிப்பிட்டது. இருந்தபோதிலும் மக்கள் பொதுவாக இடத்துக்கிடம் இடம் பெயர்ந்து சென்று வாழ்வதனாலும் அனேகமானவர்கள் தமது நெருங்கிய உறவினர்கள் இல்லங்களில் உறைவிடத்தைத் தேடிக் கொண்டதனாலும், உண்மையான இடம் பெயர்ந்தோர் பற்றிய தவகல்கள் மிக மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகளைப் போலல்லாது, மாலைதீவு அண்மைக்கால ஆயுத முரண்பாடுகளிலோ அல்லது இயற்கை அழிவுகளிலோ அனுபவத்தைக் கொண்டிராததனால், இந்த அளவிலான அவசரகால நிலைமையைக் கையாள ஆயத்தமாயிருக்கவில்லை. பேரழிவுக்கு முன்னர் ஐ.நா. அபிவிருத்தி திட்டம், ஐ.நா. நிறுவர் நிதியம், உலக சுகாதார நிறுவனம் என்பன மாத்திரமே சிறிய அலுவலகங்களைக் கொண்டிருந்தன. இதனால் ஐ.நா.வின் பிரசன்னம் மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சுனாமிக்கு முன் இருந்ததனால், எதிர்நோக்கிய சவால்கள் பாரியதாக இருந்தன. ஐக்கிய இராட்சியத்தின் வீ.எஸ்.ஓ மாத்திரமே ஒரே ஒரு சர்வதேச நிறுவனமாக மாலைதீவில் இருந்துள்ளதுடன் உள்ளுர் அரச சார்பற்ற நிறுவனத் துறையும் மிகச் சிறியதாக இருந்தது. சர்வதேச சமூகத்தின் சேவைகள் வேறு நாடுகளில் மிகப் பெருமளவில் வேண்டப்பட்டதினாலும் உள்ளக இடம்பெயர்ந்தோரை கையாளும் தேசிய திட்டம் ஒன்று வகுக்கப்படாததினாலும் மாலைதீவு அரசாங்கம் பேரழிவின் ஆரம்ப கட்டங்களில் பரிதாபமான கற்றல் படிமுறைகளுக்கு முகம் கொடுத்தது.

அவசரகால நிவாரணக் காலகட்டத்தில், நீர், உணவு விநியோகம், மருத்துவ உதவி, மின்சார விநியோகத்தை சீர்செய்தல், தகவல் திரட்டல் போன்ற அம்சங்களை கட்டுப்படுத்துவதில் போக்குவரத்து குறிப்பிடப்படும்படியான பிரதான காரணியாக இருந்தது. மாலைதீவின் நில அமைவானது வடக்கிலிருந்து தெற்காக 850 கீ.மீ க்கு மாத்திரம் பரந்துள்ள ஒரு நிலப்பரப்புக்குள் 199 தீவுகளின் குடியிருப்பாளர்களைச் சிதறச் செய்து பாரிய சவாலை விடுக்கிறது. அத்துடன் அநேக போக்குவரத்து உள்ளக கட்டுமானங்கள் குறிப்பாக விமான நிலைய, துறைமுக, இறங்கு துறை, படகு சேவை போன்றவை சுனாமியில் அழிந்து போயின. ஓட்டுமொத்த லாமு அற்றோல் (தீவு) பல நாட்களாகத் தொலை தொடர்பு வசதியின்றி இருந்தது.

## சவால்களும் தீர்வுகளும்

மேற்குறித்த இத்தகைய சூழ்நிலைகளுக்குள்ளும், நிவாரணப் பதிலிறுப்பு நடவடிக்கைகள் வினைத்திறன் மிக்கதாகவே இருந்தன. குறிப்பாக, உணவு, நீர் மற்றும் சுகாதார வசதிகள் என்பனவற்றில் அதிவிரைவான விநியோகம், சுனாமியின் நேரடி பாதிப்புக்களால் ஏற்பட்ட பாதிப்புக்குப் புறம்பே எவ்வித தொற்று நோய் பரவலையோ அல்லது மரணங்களையோ சம்பவிக்கவிடாமல் செய்திருந்தது. இருப்பினும் நீண்ட கால நோக்கில் நாடு பாரிய சவால்களை முகங் கொடுக்கத் தொடங்கியது. அலைகளால் ஏற்படுத்தப்பட்ட உடல், உள, சமூக, பொருளாதார பாதிப்புக்களை சீர் செய்வதிலும் சுனாமிக்கு முன்னான வாழ்க்கைத் தரத்தை மீண்டும் கொண்டு வருவதிலும் ஆற்றப்படும் பணிகளுடன் சேர்த்து, எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பேரழிவுகளுக்கு, குறிப்பாக பூகோள சமநிலை மாற்றத்தால் கடல் மட்ட உயர்ச்சியை முன்கூட்டியே கணித்து இந்த சிறிய தீவுகள் இலகுவாக அபாயத்துக்குட்படும் நிலையை குறைப்பதற்கு, மிகப் பரந்த அளவில் ஏராளமான வேலைகளையும் செய்ய வேண்டியுள்ளது. உள்ளக இடம் பெயர்ந்தோரின் பிரச்சினைகள், ஒட்டு மொத்த நாட்டின் நீண்ட கால அடிப்படையிலான அபிவிருத்தி இலக்குகளை, கவனத்தில் உள்வாங்கிய வண்ணம் குடும்பங்களினதும் சமூகங்களினதும் சுனாமிக்குப் பின்னான தேவைகளுக்கு பதிலிறுப்பதுடன் தொடர்புபட்டதுமான மிகவும் கவனத்துக்குட்பட்ட சமநிலை தன்மை பொருந்திய நடவடிக்கை ஒன்றையே வெளிப்படுத்துகின்றன.

ஒவ்வொரு தீவுமே தனக்கென விசேட குணாம்சத்தையும் மிகப்பலமான சமூகக் கணிப்பையும் கொண்டுள்ள ஒரு தேசியத்தை இணைப்பதற்கு வித்தியாசமான தீர்வுகள், தற்காலிக வீட்டுக்கான வசதியை ஏற்படுத்துவதில் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒரு சில தீவுகளில் பொது படுக்கை வசதிகளும் மலசலகூட வசதிகளும் கொண்ட வெளி மண்டபமும் அனைத்து உணவுகளையும் சமைக்கக்கூடிய ஒரு மத்திய சிற்றுண்டிச் சாலையையும் உள்ளடக்கிய விடுதி மாதிரியை ஒத்த தங்குமிடங்கள் முதலில் கட்டப்பட்டன. பேரழிவு முகாமைத்துவ தேசிய மையத்தைச்[1] சேர்ந்த மௌரூப் ஜமீல் அவர்களின் கருத்துப்படி, இடம் பெயர்ந்தவர்களில் அநேகமானவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வசதிகளை ஏனைய குடும்பங்களுடன் பகிர்வதில் அவ்வளவு மகிழ்ச்சி இல்லையென்றும் தமது உணவுகளைத் தாமே சமைக்கவும் விரும்புவதாக கூறினார். மீன்பிடி, மீள்பதப்படுத்துதல், உல்லாசப்பயணம் போன்ற வருமானமீட்டற் செயற்பாடுகளுக்கான வசதியை இழந்த இடம் பெயர் சமூகத்தவர்கள் சுதந்திரம் போதாதென்ற உணர்வை இது மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. இதன் பெறு பேறாக, மூன்று அறைகளைக் கொண்ட வீட்டு அலகுகள் அதாவது தனி சமையல் மற்றும் குளியலறை, கழியலறை வசதிகள் கொண்ட ஒவ்வொரு அலகும் ஒரு குடும்பத்துக்கு என்ற அடிப்படையில் கிடைக்கும் வண்ணம் ஒரு அணுகுமுறை உருவானது.

ஏனைய தீவுகளில், இடம்பெயர்ந்தோரை தமது இல்லங்களுக்குள் வந்து வாழ மன ஒப்புதலுடன் பொறுப்பேற்கும் குடும்பங்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இத்தகைய சூழ்நிலை இன்னும் பல மாதங்களுக்கோ அல்லது வருடங்களுக்கோகூட தொடரலாம் என்பது இப்போது தெளிவாக தென்படத் தொடங்கியுள்ளதால், குடும்பங்களின் மீது ஏற்றுக் கொள்ள முடியா சுமையை ஏற்றிய நிலையே உள்ளது. சிறுவர் உரிமைக்கான அரச மையத்தின் ஏளுழு சிறுவர் பாதுகாப்பு ஆலோசகர் ரேஸி லாமன் கூறுகையில் "அளவுக்கதிகமான ஆட்கள் அதன் விளைவாக தொடர்ச்சியான அழுத்தம், கவலை என்பன பொறுப்பேற்ற குடும்பங்களுக்கும் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கும் ஏராளமான பிரச்சனைகளைக் கொண்டு வந்துள்ளதுடன் சிறுவர் பாதுகாப்பின் மட்டில் பாரிய சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளன. மாலைதீவின் பொறுப்பேற்றுள்ள வீடுகளில் அந்தரங்கம் பேணல் குறைவாகவுள்ளதுடன், தற்காலிக தங்குமிடங்களில் பெண்களுக்கு அதிலும் குறிப்பாக வயது வந்த இளம் பெண்களுக்கெதிரான வன்முறை பாலியல் துஸ்பிரயோகம் என்பனவற்றின் அபாயநிலை அதிகரித்துள்ளதையும் யூ.என்.எப்.ரீ.ஏ. சுட்டிக்காட்டி எச்சரித்துள்ளது. மாமிகிலி தீவின் அற்றோல் தலைவர் அலிப் டால் அவர்களால் தீட்டப்பட்ட ஒரு தீர்வு முறையானது உள்ளக இடம் பெயர்ந்தோரை ஏற்றுக் கொள்ளும் குடும்பங்கள் தமது வீட்டுடன் இன்னுமொரு பிரத்தியோக அறைகளை அதே வளவிற்குள் கட்டுவதும், அதனூடாக அளவுக்கதிகமானோரால் ஏற்படும் நெருக்கடியை குறைப்பதும் ஆகும். ஆத்துடன் பொறுப்பேற்ற குடும்பங்களின் தாராள மனதுக்குக் கைமாறாக நிரந்தரமானதொரு சிறிய பலனை வழங்குவதுமாகும். அரசுகூட பொறுப்பேற்கும் குடும்பங்களுக்கு அடிப்படை உணவு விநியோகத்தையும் செய்து வருகிறது.

பங்குனித் தொடக்கத்தில், மனித நேய அலுவல்களை ஒருங்கிணைக்கும் ஐ.நா. வின் பணிமனை (ஓ.சீ.எச்.ஏ) உள்ளக இடம்

பெயர்ந்தோருக்கான நிபந்தனைகளை மாலைதீவு பெறுவதற்கான ஒரு செயற்திட்டத்தை கொண்டு நடத்தியது. அவர்களது ஆரம்ப அறிக்கையானது வியக்கவைக்கும் அளவில் தற்காலிக இல்லங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை கோடிட்டுக்காட்டியது. இருந்தபோதிலும் சர்வதேச வழிகாட்டல்களின் மட்டில் தேசிய மட்ட விழிப்புணர்வு குறைவு என்பதனால், ஸ்பியர் பிரமாணங்களை[2] பூர்த்தி செய்வதற்கு கொள்தகுதிறன் தவறிவிட்டது. இதனால் தற்காலிக வீடுகளை அமைக்கும் பணி, இந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்கும் முகமாக தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

தமது எதிர்காலம் தொடர்பான தகவல்கள் குறைவாக உள்ளதன் நிமித்தம், உள்ளக இடம்பெயர்ந்தோரிடையே ஏக்கம் ஏற்பட்டுள்ளதை ஓ.சீ.எச்.ஏ. வின் அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது. மாலைதீவு அரசு பங்குனி 2005[3] இல் வெளியிட்ட தேசிய மீட்சி மற்றும் நல்லிணக்கத்துக்கான திட்டத்தில், நீண்ட கால அடிப்படையில் இடம்பெறும் திட்டமிடலுக்கு சமூகத்துடன் கலந்து ஆலோசிப்பதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளதை வெளிப்படுத்தி உள்ளது. மிகவும் நெருடலான மீள்குடியேற்றம் பற்றிய விடையத்தை முன்னெடுக்கும்வேளை வித்தியாசமான இடம்பெயர்ந்த தீவுச் சமூகங்களின் மிகக்குறிப்பிட்ட தேவைப்பாடுகளை தாம் கையாளுவார்கள் என மக்ரூப்ரி ஜமீல் எதிர்வு கூறுகின்றார்.

1998 இல் குடியிருப்புக்குட்பட்ட தீவுகளின் எண்ணிக்கையை குறைக்கும் பொருட்டு சுயமான உள்ளகக் குடிபெயர்வினை ஊக்கப்படுத்தும் முகமாக குடிசனம் மற்றும் அபிவிருத்திக்கான திரட்டிய கொள்கையை அறிமுகம் செய்தது. இத்தந்திரோபாயத்தின் அடிப்படையாக உள்ள காரணங்கள் பின்வருவனவற்றை உள்வாங்குகின்றன.

- வாகனப் போக்குவரத்து, குளிரூட்டி மற்றும் மீள்பதப்படுத்தும் உள்ளக வசதி என்பன கிடைக்கக்கூடியதாக உள்ளதனால், மீன் பிடிப்பதற்கான தளங்களின் நெருக்கம் உள்ளடங்கலாக கலைந்து விலகிச் செல்வதற்கான வரலாற்றுத் தேவைகள் இல்லை என்ற உண்மை.
- 199 தீவுகளில் அதுவும் 59% மானவைகளில் 1000 பேருக்கும் குறைவான மக்கள் சனத் தொகையைக் கொண்டுள்ள சூழ்நிலையில் உள்ளகக் கட்டுமானங்களையும் பொது சேவைகளையும் பிரதி செய்தல் என்பது அரச வளங்களையும் மனித வலுவையும் நலிவான நிலையில் விஸ்தரிக்கின்றது.
- ஒன்றிணைந்து பலப்படுத்துதல் விசேடத்துவம் பொருந்திய உயர்மட்ட சேவைகளை முன்னேற்றகரமாக பெறுவதற்கு மக்களை அனுமதிக்கின்றது.

பலமான தீவு அடையாளங்கள் காரணமாக, மக்களை குடிபெயரச் செல்வதற்கு ஊக்கப்படுத்துதல் மிகவும் கடினமானதென முன்னர் நிரூபிக்கப்பட்டது. பல தீவுகளில் ஒட்டுமொத்த சமூகங்களை இடம்பெயரச் செய்வதன் மூலமும் உள்ளக கட்டுமானங்களை தகர்த்ததன்மூலமும், சுனாமி இந்தப்பிரச்சனையை நீண்ட கால அடிப்படையான கட்டுமான திட்டமிடல்சார் கருத்தாடலின் முன்வரிசை நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. பலநூற்றாண்டுகளாக மனித குடியிருப்புக்கள் இருந்த அதேவேளை இலகுவாக அபாயத்துக்குட்படும் நிலை உயர்வாக காணப்படும் தீவுகளை, அரசு மீண்டும் கட்டியெழுப்பவேண்டுமா? அல்லது சிறப்பான சேவைகளையும் அபிவிருத்தி செய்யப்பட்ட சூழல் பாதுகாப்பினையும் கொண்ட தீவுகளில், இடம்பெயர்ந்த சமூகங்களை மீள் குடியேற்றலுக்கு தேவையான கட்டுமான நிதிகளையும் முயற்சிகளையும், அரசு இலக்காக்க வேண்டுமா?

தேசிய மீட்சி மற்றும் நல்லிணக்கத்திட்டத்தின் ஒரு அங்கமாக இடம்பெயர்ந்த மக்களை, மீள் குடியேற்றும் முகமாக அபிவிருத்தி செய்ய 5 தீவுகளை அரசு தெரிவு செய்துள்ளது. மீள்குடியேற்றத்துக்கான முன்னுரிமை வீடுகளின் பாரிய சேதங்களை சந்தித்த தீவுகளைச் சேர்ந்த சமூகங்களுக்கே கொடுக்கப்படும். அதேவேளை, இலகுவாக அபாயத்துக்குட்படவல்ல சிறிய தீவுகளைச் சேர்ந்த ஏனைய மக்களுக்கும், அவர்களது வேண்டுகோளின் அடிப்படையில் மீள்குடியேற்றம் கிடைக்கக்கூடியதாக இருக்கும். மீள்குடியேற மக்களை ஊக்கப்படுத்துமுகமாக அவர்களை பொறுப்பேற்க முன்வரும் தீவுகள் பின்வருவனவற்றில் அபிவிருத்தி செய்யப்படும்.

- குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள்
- முழு அளவிலான பொதுசேவைகள்
- பொருளாதாரத் துறைகளின் பன்முகப்பாங்கு
- வேறு தீவுகளுடன் சிறந்த போக்குவரத்து இணைப்பு
- இன்னுமதிகமான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் உள்ளகக் கட்டுமானம்.

இந்த தீவுகள் எதிர்கால சுனாமியின் தாக்கத்தை குறைக்கவல்ல பாதுகாப்பு முன் அணைகள், பாதுகாப்பு தேடக்கூடிய பல மாடிக்கட்டடங்கள், ஈற்றில் நாடுமுழுவதும் பிரயோகிக்கத்தக்க தந்திரோபாயங்கள் இப்படி ஏராளமான முன்னேற்றகாரமான அம்சங்களை இலக்குவைத்த முதல் தீவுகளாக திகழும்.

தேசிய மீட்சிக்கும் நல்லிணக்கத்துக்குமான திட்டம், மீள்குடியேற்றம், புதிய இடங்களில் குடியமர்த்தல் முற்றுமுழுதாக கோரிக்கைமையமானதாகவும் சுயவிருப்பை அடிப்படையைக் கொண்டதாகவும் உள்ளதெனக் கூறுகிறது. இருந்தபோதிலும், வெளியேற்றப்பட்ட சமூகங்களைப் பொறுத்தமட்டில் மீள்குடியமர்த்தல் என்பது ஒரு பொருட்டானதாக இருக்கப்போவதில்ல. ஒரு தீவின் பெரும்பான்மையான குடியிருப்பாளர்கள் மீண்டும் இருப்பதற்கு விரும்பவில்லை என்றால் அத்தீவுக்குரிய ஏனையவர்கள் தமது சிதைந்த இல்லங்களுக்கு திரும்பி, உள்ளக கட்டுமானங்களை மீளவும் கட்டியெழுப்புதல் என்பது நடவாதவொரு காரியம். அதேவேளை, பேரளிவுகளை உண்மையில் அனுபவித்த அதேவேளை மனவிருப்புடன் வெளியேறுபவர்கள் கூட


Scott Leckie

தமது புதிய இல்லங்களுக்கு தம்மை பழக்கப்படுத்த பெரிய சமாளிப்பினை மேற்கொள்ளவேண்டும். இதனால் அனைத்தையும் உள்வாங்கிய உளச் சமூக ஆதரவுக்கான தேவைப்பாடு தொடர்ந்து கொண்டே இருக்கும்.

சுகாதாரக்கல்விக்கான சங்கத்தின் உளநல உதவித்துறை இணைப்பாளராகவும் பேரழிவு முகாமைத்துவ தேசிய நிலையத்தில் இயக்குநராகவும் சமூக உளநல ஆதரவு பிரிவின் பதில் இணைப்பாளருமாகவும் ஆய்ஸத் ஸகுவா அகமட் உள்ளார். ஒரேஒரு உளச்சிகிச்சையாளரையும் ஒருசில பயிற்றப்பட்ட உளநல உதவியாளர்களையும் நாட்டில் வைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான மனம்பாதிப்புற்ற மக்களுக்கு உளநல உதவியளித்தல் என்பது ஒருபாரிய சவாலாக உள்ளதென அவர் கூறினார். சம்பவம் நடத்தபின் உடடியாக உள்ளூர் தொழில்சார் உளநல விற்பனர்களின் தன்னார்வத்தொண்டின் அடிப்படையில் பணி ஆரம்பிக்கப்பட்டது.

யூ.என்.எப்.பீ.ஏயின் உதவியுடன் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் உளச்சமூக முதலுதவி பயிற்சிப்பட்டறை ஒன்றை நடத்தியதில் இருந்து, மாலைதீவு அணியினர் 70க்குமதிகமான தீவுகளுக்கு சென்று இதயபூர்வ செவிமடுத்தல் செயல்பாடுகளையும் கடுமையான உளச்சமூக பாதிப்புற்றவர்களுக்கு தேவைப்படும் உடனடி சேவைகளையும் வழங்கி உள்ளனர். அன்றாட உயிர் வாழ்தலுக்காக போராடுவதில் கவனம் செலுத்தும் பெற்றோருக்கு மத்தியில் உளத்தாக்கங்களை வெளிப்படுத்த முடியாத சிறுவர்கள் தம்மை வெளிப்படுத்த உதவும் முகமாக விளையாட்டு, கைவினைகளினூடாக குணமாக்கல் போன்ற முறைகளை இவர்கள் ஐநாவின் சிறவர் நிதியத்தின் உதவியுடன் பயன்படுத்தி உள்ளனர்.

சமூக உளநல உதவிப்பிரிவு அரச அமைச்சின் உத்தியோகபூர்வ பிரிவாக கூடியவிரைவில் மாறிவிடும் சூழல் உள்ளது. முன்னர் பரிட்சயமில்லாத பல்வேறு பேரழிவு பதிலிறுப்பு அம்சங்களுடன் கூடியவிரைவில் சமூக உளநல உதவியும் மாலைதீவில் அரசு மற்றும் சிவில் சமூகத்தின் நாளாந்த பேச்சில் ஒரு அங்கமாக மாறிவிடும். மிக அண்மையில் இடம்பெற்ற அல்லது இறந்தகாலத்தின் மனத்தாக்கங்களை நினைவுக்களைக்காமல் மறுதலித்துக் கொண்டு எதிர்காலத்தை திட்டமிடுவது இயலாத காரியம். எதிர்காலத்தில் இயற்கை எதனையெல்லாம் மாலைதீவின் மீது பேரழிவாக வீசியெறிய முற்படுமோ அதையெல்லாம் கையாளும் சிறந்த ஆயத்தநிலையில் மாலைதீவு இருக்கும் என நம்பலாம்.

*ஹிடி பிரவுண் - மாலைதீவு சுகாதார அமைச்சில் பணிபுரியும் வீஎஸ்ஓ தன்னார்வப் பணியாளர். மின்னஞ்சல்: heids_on_ tour@yahoo.com இக்கட்டுரை அவரது தற்றுணிவில் எழுதப்பட்டது.[4]*

1. www.tsunamimaldives.mv
2. www.sphereproject.org
3. www.undp.org/bcpr/disred/documents/tsunami/maldives/md_nrrp.pdf
4. மளளாலைதீவின் யூஎன்எவ்பிஏயின் எமா புழு, சிறுவர் உரிமைகளுக்கான பிரிவின் றேசி லாமன், எஸ்எச்ஈயின் அஸ்யத் ஸாகுல்லா, தேசிய பேரனர்த்த முகாமைத்துவ மையத்தின் மௌருப் ஐமில், ஒக்ஸ்பாம் ஜிபியின் மாக் இவன்ஸ், வீஎஸ்ஓ மாலைதீவின் ஸிவா ஆர்யல், மாலைதீவு யுநிசெப்இன் உன்னி சில்கோசெற், மாலைதீவு பயன்மிகு ஐடிபி மையத்தின் ஆய்ஸத் ஸிகாம் ஆகியோருக்கு ஆக்கியோனின் நன்றி.

# சுனாமி பற்றிய ஓர் ஆபிரிக்க கருத்து நிலை

பகாமி ரொம் நயன்டுகா

*உலகு, இலகுவாக பொதுவில் அபாயத்துக்குட்படு நிலை கொண்ட ஒரு பூகோளக் கிராமம் என்பதையும் ஆபிரிக்காவின் தேவைகள் எப்போதுமே இரண்டாம் நிலையையே பெறுகின்றது என்பதையும் சுனாமி எமக்கு நினைவுபடுத்தியுள்ளது.*

சர்வதேச சமூகத்தின் கவனம் தென் ஆசிய நாடுகளில் ஏற்பட்ட சேதங்களில் குவிக்கப்பட்ட வேளை, மத்திய கோட்டிலிருந்து 6000km க்கு அப்பால் இந்து சமுத்திரத்தின் மேற்குப் பக்கத்தில் சுனாமி ஏற்படுத்திய தாக்கத்திற்கு எவ்வித கவனமும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தன்சானியா 10 பேர் இறந்ததாக அறிவித்தது. கென்யாவில் இருவர். ஆனால் 14 வருட யுத்தத்தாலும் வரட்சியாலும் வலுவிழந்துபோன மத்திய அரசைக் கொண்டதும் அதிகம் பாதிப்புக்குள்ளானதுமான சோமாலியாவில் 290 மரணங்களும் கிட்டத்தட்ட 54,000 பேரின் இடம்பெயர்வும் இடம்பெற்றது. கரையோர மக்களின் 75% வீதமான வருமானத்தைக் கொடுத்த 600 மீன்பிடிப் படகுகள் சேதமாக்கப்பட்டன. வடகிழக்காக ஹாபுன் இல் இருந்து கரகட் வரையான 650 கி.மீ. பரந்து விரிந்த கரையோர மக்களின் வாழ்வும் தெற்காக கீழ் ஜீபா பிரதேசம், அதேபோன்று மொகடிசு வின் தெற்கு என்பனவும் பாதிக்கப்பட்டன. சுயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட சுயாட்சிப் பிராந்தியமான புன்ட்லான்ட் இலும் பாரிய சேதம் ஏற்பட்டது. ஹாபுன் நகரின் உள்ளகக் கட்டுமானங்கள் அனைத்தும் அனேகமாக அழிக்கப்பட்டுள்ளன. உதவி நிவாரணத்துக்காகப் பரிந்துரைக்க, சோமாலியா ஒரு அரசை கொண்டிராதது ஐநாவின் தயவில் தங்கியிருக்கும் நிலையை ஏற்படுத்தி உள்ளது. ஐநா சிறுவர் நிதியமும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டமும் வரையறுக்கப்பட்ட தமது வளங்களுக்குள் நிறையவே செய்துள்ளனர். ஆனால் நிதி நிறுவனங்கள் நாட்டின் தேவைகளின் மட்டில் பொறுப்பற்றவர்களாக இருந்து வருகின்றன. சித்திரை மாத ஆரம்பத்தில் ஐநாவின் சோமாலியாவிற்கான 2005ம் ஆண்டின் திரட்டிய விண்ணப்பத்தில் கோரப்பட்டிருந்த நிதியில் 3 வீதமானதே உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இந்து சமுத்திர நாடான செய்ச்சில்லிஸ் இல் 2 பேர் இறந்தும் 900 குடும்பங்கள் தமது வீடுகளை இழந்தும் இருந்தன. அலைகள் பாரிய வெள்ளத்தைத் தோற்றுவித்ததுடன் குறிப்பிடப்படும் படியான சேதத்தை துறை முகம் உள்ளடங்கலாக போக்குவரத்து, உள்ளக கட்டுமானம், வீதி வலைப்பின்னல், பாலங்கள், பொது வசதிகள், வீடுகள், மகி மற்றும் பிரஸ்டின் தீவுகளின் தனியார் சொத்துக்கள் என்பனவற்றுக்கு ஏற்படுத்தி இருந்தன. அரசு ஏற்பட்ட சேதத்தைத் திருத்த 30 மில்லியன் அமெரிக்க டொலர் களைக் கணிப்பிட்டிருந்தது. இருப்பினும் சர்வதேச சமூகங்கள் பதிலிறுப்பதில் மிக தாமதமாகவே இருந்தன. வைகாசியின் ஆரம்பத்தில் ஐநாவின் இந்து சமுத்திர அவசர விண்ணப்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த 11.5 மில்லியன் அமெரிக்க டொலரில் 4.4 மில்லியனையே செய்ச்சில்லிஸ் பெற்றது. இதனால் திட்டமிடப்பட்ட புனர்வாழ்வு வேலைத்திட்டத்தினை தாமதமாக ஆரம்பிக்கப்படவேண்டி இருந்தது.

கென்யாவும் தன்ஸானியாவும்தான் சுனாமியால் இறுதியாகத் தாக்கப்பட்ட இருநாடுகள். உல்லாசப் பயணிகள் கடற்கரை உல்லாச விடுதிகளில் இருந்து அகற்றப்பட்டனர். இருப்பினும் இறந்தவர்களை இச்செய்தி எட்டியிருக்கவில்லை. இராட்சத அலைகளின் அழிவுத்திறன்பற்றி ஏனைய நாடுகளிடமிருந்து கிடைக்கும் தகவல்களைக் கடத்துவதற்கான உதவும் இயங்குநுட்பம் அதிகாரிகளுக்கு இருக்கவில்லை. ஆபிரிக்காவில் சிவில் பாதுகாப்பு தயார்நிலைக்கும் பேரழிவைக் குறைக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்குமான தேவையை சுனாமி வெளிப்படுத்தி உள்ளது. இதனை மதித்ததன் விளைவாக, சீன செஞ்சிலுவைச் சங்கமும் சீன அரசும் பேரழிவுக்கான பதிலிறுப்புக் கொள்தகு திறனை மேம்படுத்தும் முகமாக, தன்சானிய செஞ்சிலுவை சங்கத்துக்கு நன்கொடை அளித்துள்ளனர்.

சர்வதேச சமூகம் ஆபிரிக்காவில் சுனாமி யால் மோசமாகப் பாதிப்புற்ற மக்களுக்கும், சமூகங்களுக்கம், நாடுகளுக்கும் உதவுவதற்கு ஏராளம் செய்ய முடியும். ஆபிரிக்காவில் சுனாமி மற்றும் எதிர்கால பேரழிவுக்கான எல்லா வித பதிலிறுப்பு நடவடிக்கைகளும் உள்ளக இடம்பெயர்வு சார்ந்த ஐநாவின் வழிகாட்டல் கோட்பாடுகளின் பொருத்தப்பாட்டினை மதிப்பதனூடாக வடிவமைக்கப்படவேண்டும்.

*பகாமி ரொம் நயன்டுகா, மானிட மற்றும் மக்களின் உரிமைகளுக்கான ஆபிரிக்க ஆணையத்தின் உறுப்பினரும், ஆபிரிக்காவின் உள்ளக இடம் பெயர்ந்தவர்கள், அகதி அந்தஸ்து கோருவோர், அகதிகள் ஆகியோருக்கான விசேட தொடர்பாளருமாவார். மின்னஞ்சல்: btomn@yahoo.com*

# சோமாலியாவின் தற்போதைய பிரச்சினைகளை சுனாமி மேலும் மோசமடையச் செய்கிறது

மனித நேய அலுவல்களை ஒன்றிணைக்கும் ஐ. நா. அலுவலகம், சோமாலியா

*சுனாமியானது, ஏற்கனவே மனித அவலச் சூழ்நிலையான தொடர் வரட்சியின் விளைவு, உறைய வைக்கும் எதிர்பாராத மழை, சூறாவளி, கிளர்ந்தெழும் வன்முறை, சமயாசமய வெள்ளம் போன்றனவற்றுடன் கூட்டுச்சேர்ந்தள்ளது.*

வரட்சி முடிவுக்குவரும் அந்தத் தருவாயிலும், பன்மடங்காகி நின்ற இத்தகைய அதிர்ச்சிகளில் இருந்து ஜீவனோபாயத் துறைகள் மீளத் தொடங்கும் அந்த வேளையிலே சுனாமி தாக்கியுள்ளது. 'கரகாட்'க்கு வடக்கில் தென்பகுதிக்குச் சற்றுத் தொலை வில் ஹாபுன் இல் இருந்த புன்ட்லான்ட் பிராந்தியத்தில் பெரும் கரையோரப் பகுதியை, குறிப்பாக 650 கி.மி. பரந்த கரையோரப் பகுதியை சுனாமி தாக்கியுள்ளது. சுனாமியின் தாக்கம், மனித உயிர்ச்சேதம், உள்ளக கட்டுமானங்களில் அழிவு, நீர் வளங்கள் அசுத்தமடைதல், ஜீவனோபாய உபகரணங்களின் இழப்பு என பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. கிட்டத்தட்ட 44,000 மக்களுக்கு அதாவது அண்ணளவாக 7,300 குடும்பங்களுக்கு குடிநீர், உணவு, மருத்துவம் மற்றும் வீடுகள், தங்குமிட புனர்நிர்மாணம் அல்லது கட்டுமானம் என்பன உள்ளடங்கலான அவசரகால மனித நேய உதவிகள் தேவையாக இருந்தன. கரையோரத்தை அண்டிய கிராமங்களில் வாழ்ந்த அனேகமானவர்களின் ஜீவனோபாயம்கூட பாதிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவிலான சோமாலியர்கள் உச்ச மீன்பிடிக் காலத்தில் (கார்த்திகையிலிருந்து மாசி வரையிலான காலப்பகுதி) மீன் பிடிக்கவும், பதனிடவும், விற்பனை செய்யவும் கரையோரம் செல்வது வழக்கம். சுனாமி தாக்கிய வேளை வழமைக்கு மாறாக சன அடர்த்தி, கரையோரம் எங்கிலும் மிக உயர்வாக இருந்தது. இதன் விளைவாக 289 மீனவர்கள் இறந்தோ அல்லது காணாமற் போயோ உள்ளனர். கரையோர சமூகங்களின் பிரதான வருமானம் ஈட்டும் தொழிற்பாடான மீன்பிடித் துறைக்கு இழைத்த சேதம் மிகப் பெரியது.

மந்தை மேய்க்கும் சமூகங்களில், சில குடும்ப உறுப்பினர்கள் தமது கால் நடைகளுடன் நீர் மற்றும் புல் தரைகளை நாடி ஒவ்வொரு வருடமும் நீண்ட காலம் இடம் பெயர்ந்து செல்வதும் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் அடிப்படை சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்களில் தங்கி இருப்பதும் ஒரு பொதுவான விடயம். தொடர்ச்சியாகவும் விடாப்பிடித்தனமாகவும் 4 வருடங்கள் நீடித்திருந்த வரட்சி, பெருமளவு மந்தைகளை கணக்கில்லாமல் அழித்ததின் விளைவாக ஆதரவற்றவர்களாக மாறியிருந்த மந்தை மேய்ப்பர்கள்கூட மாற்று ஜீவனோபாய வழிகளை தேடி கரையோரக் கிராமங்களுக்கு நகர்ந்திருந்தனர். அவர்களது, இறுதியாக எஞ்சி மிஞ்சியிருந்த வளங்கள் கூட சுனாமியில் இழக்கப்பட்டுவிட்டன. அநேக மந்தை மேய்ப்பவர்களுக்கு, பாரம்பரிய எதிர்வு கொள்ளல் தந்திரோபாயங்களின் சிதைவுக்கு இட்டுச் செல்லும் இறுதி அறிகுறியாக சுனாமி உள்ளது.

சர்வதேச சமூகமானது சுனாமிக்கு மிக விரைவாக பதிலிறுக்கத்தக்கதாக இருந்ததுடன் பொதுவான பாதுகாப்பின்மை, மிக மேசமான கவனிப்பாரற்ற வீதி, உள்ளகக் கட்டுமானம், பொருட்களைப் பெறுவதில் காணப்பட்ட பாரதூரமான பிரச்சினைகள் என்பவற்றுக்கு மத்தியிலும் பாதிப்புற்ற சமூகங்களுக்கு நிவாரணத்தை வழங்கியது. மாசி 2005 இல், நிறுவனங்களுக்கிடையிலான பல்பிரிவுக் கணிப்பீட்டுப் பணிக்குழு, தனது ஆய்வில் முன்னேற்பாடாக நிவாரணப் பொருட்கள் சேமித்து வைத்திருந்ததினாலும் இந்து சமுத்திர விரைவான வேண்டுகோளுக்கூடாகப் பெற்ற நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட மேலதிக கையிருப்பின் நிமித்தமும் பாதிப்புற்ற மக்களின் சிக்கல்மிக்க மனித தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை கண்டறிந்தனர். அத்துடன், இப்பணிக் குழுவினர், ஆகக்குறைந்தது 40% மான பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியான ஆதரவையும் ஜீவனோபாய உதவியையும் அடுத்த மீன்பிடி காலப்பகுதியான ஐப்பசி 2005 வரை பெற்றுக் கொண்டிருக்கும்போதே பதிலிறுப்புத் திட்டமானது அவசர கால நடவடிக்கையிலிருந்து மீட்சி மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கு மாற்றப்பட வேண்டுமென்று ஆலோசனையும் வழங்கினர்.

*அனேக இடையர்களுக்கு, பாரம்பரிய எதிர்வுகொள்ளல் தந்திரோபாயத்தின் சிதைவுக்கு அவர்களை இட்டுச் செல்லும் இறுதிக் காரணியாகச் சுனாமி உள்ளது*

தற்போது ஐ.நாவின் சோமாலியாவிற்கான குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான ஒன்றிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தைத் தீர்மானிக்கும் படிமுறையில் உள்ளனர். இது சோமாலியாவில் காணப்படும் பரந்த கடுமையான மனித நேய சூழ்நிலையுடன் மேலதிகமான சுனாமிசார் பதிலிறுப்புக்களை ஒன்றிணைக்க உதவலாம். அத்துடன் சுனாமி பதிலிறுப்பு என்பது ஒரு பகுதி மாத்திரம் என்பதுடன் ஏனைய மானிட தேவைகளையும் கவனத்திலெடுத்து செயற்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தவும் செய்யும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிராந்தியத்துக்கப்பால், சோமாலியாவின் ஏனைய பல்வேறு பிராந்தியங்களிலும் உணவு, ஜீவாதார பாதுகாப்புத்தன்மை, ஒட்டுமொத்த ஆபத்துக்குள்ளாகும் நிலை என்பன கடுமையாகப் பீடித்துள்ளன.

*"உங்களது றக் வண்டிகள் விட்டுச்செல்லும் புழுதிதான் நாம் உண்ணுக்கூடிய ஒரேயொரு பொருள்"*

2005ம் ஆண்டு தொடக்கத்தில் குயுழு இன் உணவுப் பாதுகாப்புப் பகுப்பாய்வுப் பிரிவால், சிறு மழைக்கு முன்னர் வெளியிட்ட கணிப்பீட்டில் 500,000 க்கும் அதிகமான மக்களுக்கு சூழல் சீரழிவுக்கு காரணமான பிரச்சனை, வரட்சியின் தொடர்ச்சியான தாக்கம், வெள்ளம், சிவில் யுத்தம், வர்த்தகத்துக்கு தொடர்ச்சியாக இருந்துவரும் தடை என்பனவற்றின் விளைவாக தொடர்ச்சியாக மனித நேய உதவிகள் தேவையாக உள்ளன என்பதை சுட்டிக்காட்டியிருந்தது. அத்துடன் அண்ணளவாக 370,000 இடம் பெயர்ந்தோர், அடிப்படைச் சேவைகள், வருமான ஈட்டலுக்கான வாய்ப்பு, போன்றனவற்றை பெறுவதில் தாழ்நிலையிலும், மிகக்கடுமையான வறுமையிலும் வாழ்கின்றனர்.

உள்ளூர் முரண்பாடுகள், வரட்சியின் தாக்கம் என்பனவற்றில் துன்புறும் பிரதேசங்களில் 20% இற்கும் அதிகமான போசாக்கின்மை பதிவாகி உள்ளது. குறிப்பாக ஜுவா மற்றும் ஜுடு பிராந்தியங்களில் இந்நிலை காணப்படுகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசரகால தேவைகள் பெருமளவில் பூர்த்தியாகும் வேளையில், ஏனைய அபாயத்துக்குள் இலகுவாக உட்படும் அல்லது எதிர்நோக்குவோரின்மீது இனி கவனம் குவிக்கப்படல் அவசியம். சுனாமியை நோக்கி கவனம் திருப்பப்படும்போதே, ஏனைய அதேவேளை அதற்கு சமமானவற்றின் மீதும் இலக்கு வைத்த உயிர்காக்கும் வேலைத்திட்டங்களும் கவனத்தில் கொள்ளப்படல் அவசியம். இல்லையெனில் இன்னுமதிகமான அபாயத்துக்குள் இலகுவாக உட்படும் தரப்புக்களின் அபாய நிலையை அதிகரிக்கும். வள ஒதுக்கீட்டில் சமநிலை மற்றும் விகிதாசாரம் பேணலுக்கான தேவை பற்றிய உணர்வு, ஆதரவின்றி உள்ள மந்தை மேய்ப்பவர்களின் குரலில் தொனித்தது.

சுனாமியால் பாதிப்புற்ற கரையோரத்தை நோக்கிச் செல்லும் உதவிகளை பார்த்த அவர்கள் 'நாம் உண்பதற்கென்று இருப்பது உங்களது றக் வண்டிகள் விட்டுச்செல்லும் புழுதி மாத்திரமே' என முறையிட்டனர்.

***இக்கட்டுரையானது, சோமாலியாவிற்கான மனித நேய அலுவல்களை ஒன்றிணைக்கும் ஐ. நா. அலுவலகப் பணியாளர்களால் எழுதப்பட்டது. மேலதிக தகவல்களுக்கு மின் அஞ்சல் : dilorenzoa@un.org or nduta@un.org***

இந்தப் படங்கள் யாவும் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் சிறுவர்களால் வரையப்பட்ட 62 சித்திரங்களின் தொகுப்புகளில் காணப்படுபவை. 5 வயது தொடக்கம் 16 வயது வரையான சிறுவர்கள் சுனாமியின் துயர்மிகு நினைவுகளை அழிப்பதற்கு உதவியாக இவற்றை வரைந்தனர். இவை பிருத்தானிய வேல்ஸ் இன் தேசிய காட்சியத்தில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன. மார்கழி 2005 இல் அவை இணையத் தளத்துக்கூடாக ஏலத்தில் விடப்பட்டு திரட்டப்படும் நிதி கதிரவெளி எனும் கிராமத்திலுள்ள சிறுவர் அனாதை இல்லத்திற்கு வழங்கப்படும். (இக்கிராமத்திலேயே இரண்டு தசாப்த கால யுத்தத்தால் அனாதையாக்கப்பட்டவர்களுடன் அனேகர் இங்கு ஒன்றாக இன்று வாழ்கின்றனர்) லிவ்விங் கெரிடேஜ் றஸ்ட் எனும் உள்ளூர் நிறுவனம், உலகின் பல்வேறு இடங்களையும் சேர்ந்த தொண்டர்களின் உதவியுடன் சுனாமியால் உயிர் பிழைத்தோரின் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப உழைத்து வருகின்றனர்.



எப்.எம்.ஆர் இன் வாசகர்கள் ஏலத்தில் கலந்து கொள்ளவதைப்பற்றி கவனத்தில் கொள்ளலாம்.. அதேவேளை நன்கொடை அனுப்புவதென்றால்

*Llanwrtyd Wells Tsunami Appeal, HSBC, 35 High Street, Builth Wells, Powys LD2 3DL, Wales, UK. Account number 41390856. Sort code 40-15-14*

சித்திர வேலைப்பாடு மற்றும் ஏலம் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு Gwyneth Keeble: Tel + 44 (0)1591 610645; மின்னஞ்சல் Terry9254@aol.com



லிவ்விங் கெரிடேஜ் றஸ்ட் சிறுவர் கலைஞர் பற்றிய தகவல்களுக்கு இணையதளம்: http://livingheritage.org மற்றும் http://news.websfor.com/lankarelief/home/home.asp?A969 அல்லது கடிதத் தொடர்புக்கு 46-C, Fisherman Road, Tiruchendur, Kallady, Batticaloa, Sri Lanka. Tel: +94 77 318 4484



FORCED
MIGRATION
review

www.fmreview.org